IIIT

# தொழுகையை மீளக் கண்டடைதல்





அஹ்மத் பஸ்ஸாம் ஸாஈ

தமிழாக்கம்:
கலாநிதி பீ. எம். எம். இர்பான் (நளீமி)

# தொழுகையை மீளக் கண்டடைதல்

(‘தொழுகையை நிர்வகித்தல்’ என்ற நூலின் சுருக்கம்)

**அஹ்மத் பஸ்ஸாம் ஸாஈ**

தமிழாக்கம்:

கலாநிதி பீ. எம். எம். இர்பான் (நளீமி)

**Tholukaiyai Meelak Kandadaithal**
Tamil edition of the abridged version of
Idarathus Salat

By
**Bassam Saeh**

Translated from the Arabic by
**Dr. P.M.M. Irfan (Naleemi)**

ISBN 978-955-8398-42-5

With the permission of
The International Institute of Islamic Thought
P.O.Box 669, Herndon, VA 20172, USA
www.iiit.org
London Office
P.O.Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

Published by
Fuzin Texts
23/3 Market Road, Dharga Town – 12090, Sri-Lanka.

Cover design by Azar Wazeer
Printed by Millennium Graphics - Maharagama.
©Abd-al-Jabbar Muhammad Zaneer - 2016

இது அல்லாஹ்வின் திருப்தியை நாடி ஆக்கப்பட்ட நூல். இதனை வாசிக்கும் அனைவரும் தங்களது அவதானங்களையும், சிந்தனைகளையும், அபிப்பி ராயங்களையும், ஆலோசனைகளையும் தெரியப்படுத்து மாறு நூலாசிரியர் வேண்டிக் கொள்கிறார். அவை -எந்த மொழியில் அமைந்திருந்தாலும்- இனிவரும் பதிப்புகள் மேலும் செழுமையாகவும் பூரணத்துவமாகவும் சரியாகவும் வெளிவர உதவும். வாசகர்கள் இது தொடர்பாக நூலாசிரிய ருக்கோ வெளியீட்டாளருக்கோ எழுதியனுப்ப முடியும். ஒவ்வொரு புதிய சேர்க்கையும் உரியவரது பெயருடன் இணைத்தே குறிப்பிடப்படும்; அதன் மூலமாக இந்த நிலையான தர்மத்தில் அவரும் பங்கேற்றவராவார்-
இன்ஷா அல்லாஹ்!

***நூலாசிரியர் பற்றி...***

1941 ஆம் ஆண்டு ஸிரியாவின் 'லாதிகிய்யா' நகரில் பிறந்தார். அரேபிய மற்றும் பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் ஆசிரியப் பணி புரிந்ததுடன், 1991 ஆம் ஆண்டு 'உயர் கல்விக்கான ஆக்ஸ்போர்ட் அகடமி'யை நிறுவினார். பல பிரித்தானிய கல்விசார் அமையங்களில் பணிபுரிந்தார்; இன்றும் பணிபுரிந்து வருகிறார். 'பல்கலைக்கழகங்களையும் கலாநிலையங்களையும் அங்கீகரிப்பதற்கான பிரித்தானிய சபை'யில் (British Accreditation Council) முதல் நிலைப் பரிசோதகராக தற்போது செயற்பட்டு வருவதுடன், வேல்ஸ் பல்கலைக்கழக பட்டப் பின் படிப்பு மாணவர்களுக்கு மேற்பார்வையாளராகவும் இருந்து வருகிறார். இலக்கிய வரலாறு, திறனாய்வு, இஸ்லாமியம் தொடர்பான வேறுபல நூல்களையும் எழுதியுள்ளார்.

தொடர்புகளுக்கு: bassamsaeh@hotmail.com

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# பிரார்த்தனை

*யா அல்லாஹ்! இந்நூலின் பக்கங்களாலும் சிந்தனைகளாலும் நான் விரும்பியது உனது திருப்தியும் எனது மறுமை வாழ்வுமே என்பதை நிச்சயம் அறிவாய்.*

*வரையறுக்கப்பட்ட, பலவீனமான என் மானிட மொழியோடு உன்னை நாடி நிற்கிறேன். நான் ஒரு சாதாரண மனிதன்; சாதாரண மனி தர்களை நோக்கிப் பேசுபவன். என் மனித மொழியில் எனக்குக் கிடைத்தவை பலவீனமான இந்த வார்த்தைகளே. இவற்றினால் உனது கண்ணியத்தின் அளவுக்கு உயர முடியாது; உனது மாட்சிமையையும் மகத்துவத்தையும் தழுவ முடியாது. எனவே என் புரவி சறுக்கியிருந்தால், உன்னை நோக்கி வரும் வழியிலேயே அது நிகழ்ந்தது. நான் பிழை விட்டிருந்தால், அல்லது நாத் தடுமாறியிருந்தால், தொழுகை மூலமாக உண்மையாக நீ என்ன விரும்புகிறாய் என்பதைக் கண்டடைவதே அப்போதும் எனது முதலும் முடிவுமான நோக்கமாக இருந்தது என்பதை அறிவாய். உனது ஞானத்தின் அதியுயர் நோக்கங்களையும், எல்லையற்ற பரப்புகளையும் மனிதர்களாகிய நாம் முற்றாய்த் தழுவுதல் எங்கனம்? மகத்தான வானகப் பயணத்தின் மூலமாக உனது நபி ஐந்து நேரத் தொழுகை மீதான புனிதக் கட்டளையை ஏற்க உன்னிடம் வந்தபோது அதற்குப் பின்னாலிருந்த ரகசியங்*

*களையும், பிறகு பூமிக்கு அன்னார் சுமந்து வந்த தன்னிகரற்ற புதையல்களின் நுண்ணிய செய்திகளையும் முழுவதும் நாம் எப்படிப் புரிந்து கொள்வோம்?*

*யா அல்லாஹ்! நான் சரியாக எழுதியவற் றுக்காக நல்லடி யார்களுக்கு நீ வழங்கும் கூலி யில் சிறந்ததை எனக்கும் வழங்கு வாயாக! சிந்திப்பதில் அல்லது அளவீடு செய்வதில் அல்லது விளங்குவதில் அல்லது வெளிப்படுத்து வதில் நான் தவறி இருக்க லாம்; உன் மாட்சிமையை உண்மையாக உரைக்க முடியாமல் என் மொழி தடுமாறி இருக்கலாம்; உனது ஞானப் பெருவெளியை அடைய முடியாமல் என் எழுதுகோல் களைத்து எங்கோ நின்றி ருக்கலாம். ஆயினும், அப்போதும் எனது நோக்கம் உனது நேர் பாதையிலிருந்து ஒளி பெறுவதாகவும், அகிலங்கள் மீதான உனது கருணையின் ஊற்றிலிருந்து பருகுவதாகவுமே இருந்தது என்பதை நீ அறிந்தவன் என்ற வகையில் நற்கூலி வழங்கு வாயாக!*

*நீ என்றுமே மன்னிப்பவன்; பொறுத் தருள்பவன்; அன்பாளன்; கொடையாளன்; கருணையின் ஜீவ ஊற்று...*

இப்படிக்கு

*என்றும் உன் கருணையில் அபயம் கோரும் அடியான்*

***பஸ்ஸாம் ஸாஈ***

வெள்ளி வைகறை

15 ஜுமாதா அல்-ஊலா 1436

6 மார்ச் 2015

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| அல்லாஹ்வுடன் ஒரு பொழுது | 09 |
| ''நிச்சயமாக அது பெரும் சுமையானது''... ஏன்? | 18 |
| கடமையிலிருந்து சலுகையை நோக்கிய பயணம் | 21 |
| கடமைக்கும் உரிமைக்கும் இடையிலான பிரிகோடு | 26 |
| தொழுகைக்காக துயில் கலைத்தெழும் இன்பம் | 29 |
| பொறுத்தலின் இன்பம் | 35 |
| தொழுகை பொறுமையின் பள்ளி; பொறுமை நாகரிகத்தின் பள்ளி. | 38 |
| ஏன் தொழுகிறோம்? | 43 |
| தொழுகை நம்மை மீள்செயல் வரைவுக்கு உட்படுத்துகிறது | 45 |
| தொழுகையின் லயமும் வாழ்வின் லயமும் | 58 |
| பல்வகைத் தன்மை: முதல் நாகரிகப் பாடம் | 62 |
| உள்ளச்சத்தை ஏற்படுத்தும் பல்வகைத் தன்மை | 67 |
| தொழுகையில் வேறுபட்ட நிலைமாற்றங்கள் ஏன்? | 70 |
| 'அதான்' ஒலியும் பத்து அதிசயங்களும் | 73 |
| இரு 'வுழூ'க்கள் | 84 |
| கூட்டுத் தொழுகை: நாகரிக முன்னேற்றத்தின் ரகசியம் | 91 |

| | |
|---|---|
| வெள்ளிப் பிரசங்கம்: அபிவிருத்திக் கற்கை நெறி | 104 |
| இங்கிருந்து ஆரம்பிப்போம் | 111 |
| தொழுகையின் ஐந்து கோடுகள் | 119 |
| சிவப்பு விசை இலக்கம் 1: ‘அல்லாஹு அக்பர்’ | 129 |
| மனன வாசிப்பும் முறையான பாராயனமும் | 133 |
| அல்-குர்ஆனின் புதிய மொழி | 136 |
| திறந்த மொழியும் பசுமை வெளியும் | 139 |
| ‘அல்-ஃபாத்திஹா’வின் பாத்திரம் என்ன? | 143 |
| சிவப்பு விசை இலக்கம் 2: | 156 |
| ‘றுகூஉ’ம் ‘ஸுஜூது’ம் பெறும் மைய முக்கியத்துவம் | 167 |
| சிவப்பு விசை இலக்கம் 3: | 173 |
| சிவப்பு விசை இலக்கம் 4: | 179 |
| பிரார்த்தனைக்கான அமர்வு | 183 |
| கையிருப்பும் கணக்கும் | 187 |
| தொழுகையில் கண்டெடுத்த வைரங்கள் | 191 |
| தொழுகையில் தவற விட்ட வைரங்கள் | 196 |
| வாழ்வே தொழுகையாகட்டும்! | 199 |

# அல்லாஹ்வுடன் ஒரு பொழுது

*‘தொழுகையை நிர்வகித்தலா? அப்படியும் ஒன்று உள்ளதா?’ என என்னிடம் கேட்டார்கள்.*

*நான் சொன்னேன்:*

*உலக விவகாரங்களை நிர்வகித்தல் பற்றி மனிதர்கள் கற்ப தில்லையா? மிகச் சிறப்பாக அவற்றை முதலீடு செய்து, அழிந்து விடக்கூடிய செல்வத்தை இலாபமாக ஈட்ட முயல்வதில்லையா?*

*அப்படியிருக்க- மறுமை விவகாரங்களை நாம் ஏன் முகாமை செய்யக் கூடாது? ஏன் அவற்றை மிகச் சரியாக முதலீடு செய்து பெரும் இலாபம் ஈட்டக் கூடாது? அதுவன்றோ அழி வற்ற இலாபமும் குறைவற்ற பரிசும்!*

*அழகிய முறையில் முதலீடு செய்யவும், நிர்வகிக்கவும், சேமிக் கவும் மிகத் தகைமை கொண்ட செயல் தொழுகையை விட வேறொன்று இருக்க முடியுமா? இம்மை, மறுமை ஆகிய இரண் டின் பேறுகளையும் ஒன்றாய் அவாவும் செயலல்லவா அது!*

*ரமழான் மாதத்தின் ஒரு நாள். ஆக்ஸ்போட் பல்கலைக்கழகத் தின் ஸஊதி அரேபிய மாணவர் கழகம் இஃப்தார் உரையொன் றுக்காக என்னை அழைத்திருந்தது. ‘தொழுகையை முகாமை செய்தல்’ பற்றிப் பேசுவதாக தீர்மானித்துக் கொண்டேன்.*

உரிய வேளை வந்ததும் பிரசங்க மேடையை நோக்கிச் சென்றேன். எனது கையில் தொழுகை பற்றிய இரு திருமறை வசனங்களும் இரு நபிமொழிகளும் எழுதப்பட்ட காகிதம் இருந்தது. வழக்கம் போன்று முகமன் கூறி காகிதத்தைப் பிரித்தேன்; பார்வையாளர்களால் கிரகிக்க முடியாத அசுர வேகத்தில் அதில் எழுதியிருந்ததைப் படிக்கலானேன். ஒரேயொரு நிமிடம்தான்... காகிதத்தை வாசித்து முடித்தாயிற்று!

பிறகு காகிதத்தை விரைவாக மடித்தவாறு ‘அவசரத்துக்கு என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்; இங்கிருந்து நான் செல்ல வேண்டியுள்ளது; உங்களை விட முக்கியமான சிலரைச் சந்திக்க நான் நேரம் கொடுத்திருக்கிறேன்... அஸ்ஸலாமு அலைக்கும்’ எனக் கூறினேன். பிறகு பையை தூக்கிக் கொண்டு வாயிலை நோக்கி விரைந்தேன். போகும் போதே அவர்களது முகங்களின் அதிர்ச்சி ரேகைகளை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டேன். அவர்கள் வாயடைத்துப் போயிருந்தார்கள்.

அதிருப்தி, திகைப்பு, ஆச்சர்யம், கண்டனம், கோபம்... என்பவற்றின் கலவையொன்று அவர்களது முகங்களில் முகாமிட்டிருந்தது. சந்திப்புக் கென்று நேரம் ஒதுக்கிய மனிதர்களோடு நான் நடந்து கொண்ட பண்பற்ற விதம் குறித்த அவர்களது இயல்பான எதிர்வினை அது.

அப்படியாயின், அல்லாஹ்வுடனான நமது சந்திப்பில் இவ்வாறு நாம் நடந்து கொண்டால் அதன் எதிர்வினை எப்படியிருக்கும் என்பதைச் சற்று கற்பனை செய்து பாருங்கள்!

சில வினாடிகள்தான். எனது செயலுக்காக உடனடியாக அந்த மாணவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டே திரும்பிய நான் இப்படிக் கூறினேன்:

‘‘என் மீது நீங்கள் ஆத்திரம் கொண்டிருப்பீர்கள் அல்லவா? நல்லது. இப்படி நான் உங்களோடு ஒரேயொரு முறைதான் நடந்து கொண்டேன். அதற்காக இதோ திரும்பி வந்து மன்னிப்புக்

*கேட்கிறேன். ஆனால் இப்படி நாம் அல்லாஹ்வுடன் தினமும் ஐந்து தடவை நடந்து கொள்கிறோம். அதற்காக நாம் அவனிடம் மன்னிப்புக் கேட்பதும் இல்லை.''*

*எத்துணை அற்புதமான வாய்ப்பு! எத்துணை மகத்தான நேரம்! நேரத்தில் கஞ்சத்தனம் காட்டி இது போன்றதொரு அவசரத் தொழுகையை (அவ்வாறு அதை அழைப்பது சரியாயின்) அல்லாஹ்வுக்கு முன்னால் நிறைவேற்றும் போது எவ்வளவு கண்ணியமான சந்தர்ப்பமொன்றை நழுவ விடுகிறீர்கள்!*

*அந்த மாணவர்களுக்கு முன்னால் அல்குர் ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் எனது நினைவிலிருந்து கூறாமல் கையில் வைத்திருந்த காகிதத்திலிருந்தே வாசித்தேன் என்பதைக் கவனித்தீர்களா? கேட்போர் மீது அதிக தாக்கம் செலுத்தக் கூடியது எது: காகிதத்திலிருந்து படிப்பதா அல்லது சொல்ல விரும்பியதை இயல்பாக எடுத்துரைப்பதா?*

*தொழுகையின் பாராயனங்களை அனேகமாக நாம் காகிதத்திலிருந்து படிப்பது போன்றுதான் ஓதுகிறோம். எனவே அவை நமது உள்ளங்களிலிருந்து பிறக்காமல் உதடுகளிலிருந்தே பிரிகின்றன. தொழுகையை அல்லாஹ்வுக்கு முன்னால் 'உதடுகளால் வாசித்தல்' என்பதற்கும், உள்ளத்தினால் 'இயல்பாக வெளிப்படுத்தல்' என்பதற்கும் இடையிலான வேறுபாடுதான் எவ்வளவு பெரியது!*

*மாட்சிமை நிறைந்த அல்லாஹ் தங்கத் தட்டில் வைத்து நமக்குத் தந்திருக்கின்ற பிரமாண்டமான முதலீட்டுத் திட்டம் அது. ஆனால் நாமோ அதனைப் பொறுப்பற்ற விதத்தில் விட்டெறிந்து விட்டு எதுவும் இன்றி வெளியேறி விடுகிறோம்.*

*எதுவுமே இல்லை!*

*தர்க்க நியாயத்துடன் சிந்தித்துப் பார்த்தால், நமது செயலுக்குப் பகரமாக நாம் எதிர்பார்க்க முடியுமானது மறுப்பையும் புறக்கணிப்பையும் தவிர எதுவுமில்லை. மட்டுமன்றி, ஏறக்குறைய*

கேலிக்கூத்தாகவே அமைந்து விட்ட 'அத்-தஹிய்யாத்' என்னும் அந்த இறுதி வாழ்த்துக்குப் பிரதியுபகாரமாக நாம் பெறக் கூடியது தண்டனையன்றி வேறன்ன?

யாரோடு இந்த விளையாட்டு?

நம்மையும், நமது வணக்கங்களையும், நம்மைச் சூழ உள்ள அனைத்தையும் மீளவும் நாம் தேடிக் கண்டடைய வேண்டியுள்ளது.

நமது இளைய பரம்பரை தன்னைச் சூழ்ந்து கிடக்கும் அனைத்தையும் -முன்னால் குவிந்து கிடக்கும் நவீன கண்டுபிடிப்புகள் உள்ளடங்களாக- மீளவும் ஆய்ந்தறிய உதவும் வகையிலான சிந்தனா முறைமை ஒன்றின் மீது வளர்த்தெடுக்கப்பட வேண்டும். வெறுமனே மனனமிட்டு ஒப்பிப்போரையும் பாரம்பரிய சிந்தனைப் பாங்கு கொண்டோரையும் தாண்டி, புலமைவாதிகளதும் புத்துயிர்ப்பாளர்களதும் அணியில் அவர்கள் இணைந்து கொள்ள வேண்டும் என நாம் விரும்பினால், கண்டிப்பாக இதனைச் செய்ய வேண்டும்.

நாற்பதுகளின் பிற்கூற்றில் என நினைக்கி றேன். அப்போது எனக்கு ஏழு அல்லது எட்டு வயது இருந்திருக்கும். எனது தாயார் (அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக!) 'லாதிக்கியா'விலுள்ள அவரது நட்புக்குரிய கிறிஸ்தவக் குடும்பமொன்றைச் சந்தித்து விட்டு வந்திருந்தார். ஃபிரான்ஸில் கல்வி கற்றுத் திரும்பிய அவர்களது புதல்வர் கொண்டு வந்த ஓர் 'அதிசய வானொலி' பற்றி பிறகு எங்களுக்கு விபரிக்கலானார். அவரது வார்த்தைகள் இன்னும் எனக்கு நினைவில் உள்ளன:

''அந்த வானொலிப் பெட்டிக்கு முன்புறமாக ஒரு சாளரம் உள்ளது. அதன் வழியாக அதில் பேசுபவரை உங்களால் பார்க்க முடியும்.''

அன்றிரவு என்னால் தூங்க முடியவில்லை; அந்தச் சிறிய பெட்டிக்குள் அவர்கள் 'அடைத்து' வைத்திருக்கும் அப்பாவி அறிவிப்பாளரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்: 'எப்படி

அவரை உள்ளே வைக்க முடிந்தது? பெட்டியின் அளவுக்கேற்ப சிறிய உடல் கொண்ட ஒருவரை யல்லவா அவர்கள் தேர்ந் தெடுத்திருக்க வேண் டும்? நல்லதுதான். ஆனால் பாவம்; எப்படித் தான் அவரால் உள்ளே இருக்க முடிகிறது?'

மன்னித்துக் கொள்ளுங்கள்; குழந்தையாக இருந்த நான் சிந்தித் துக் கொண்டிருந்தது இப் படித்தான்!

'இரவில் கழிப்பறைக்கு அவர் எப்படி வெளியேறிச் செல்வார்?'

'தனது இயற்கை உபாதையை எங்கே கழிப்பார்?...'

இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள். அன்றிரவு நான் தூங்க வில்லை.

பின்னரும் அக்கேள்விகள் எனது சிந்தனையில் உழன்று கொண்டே இருந்தன. அது 'தொலைக்காட்சிப் பெட்டிதான்' என்பதை அறிந்து கொள்ளும் வரை நீண்ட காலத்துக்கு அவை என்னைத் துரத்திக் கொண்டிருந்தன.

இன்று நமது குழந்தைகள் பிறக்கும் போதே அவர்களுக்கு முன்னால் தொலைக்காட்சியும் வானொலியும் கணினியும் 'ஐ பேட்' உம் செயற்கைக் கோளும் விமானமும் புதுமையான மின் உபகரணங்களும் -வீட்டிலும் வெளியிலும்- நிறைந்திருக்கக் காண்கிறார்கள். எனவே இக் கண்டுபிடிப்புகளின் மகத்துவம் பற்றியோ, கண்டுபிடித்தவர்களின் மாண்பு பற்றியோ, மனித இனம் இவற்றைக் கண்டுபிடித்த கணத்தின் முக்கியத்துவம் பற்றியோ அவர்கள் உணர்வதில்லை.

இப்பொருட்களின் உன்னத சிறப்புகளையும், இவற்றைக் கண்டு பிடித்தோரின் உயர்வையும் மீளவும் தேடிக்கண்டடைய நம் குழந்தைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்; அப்போதுதான், தம்மிலும் தம்மைச் சூழவும் உள்ள படைப்பின் பெறுமானத்தை அவர்கள் தேடிக் கண்டடைவர்; படைப்பின் மீதுள்ள அல்லாஹ் வின் மகோன்னத ஆற்றலையும் கண்டு கொள்வர்.

விளைவாக- தங்களையும் தங்கள் சன்மார்க் கத்தையும் தங்கள் வணக்க வழிபாடுகளையும் மீளக் கண்டடைய அவர்களுக்கு சந்தர்ப்பம் கிட்டும்; அவற்றின் மீது படிந்திருக்கும் பரிச்சயம், பழக்கம், திரும்பத் திரும்ப -இயந் திரத்தனமாகச்- செய்தல் என்ற படிவுகளைத் தூசுதட்டி, முதல் தடவையாகக் காண்பது போன்றும் புதிதாக அறிவது போன்றும் ஈடுபாடு காட்ட வழி பிறக்கும்.

அல்குர்ஆன் தனது பல வசனங்களில் ‘மீளக் கண்டடைதல்’ தொடர்பாக நம்மை (நாம் உண்மையாகவே ‘குர்ஆன்’வாசிகளாக இருக்கும் பட்சத்தில்) இப்படித்தான் பயிற்றுவிக்கிறது:

> *‘‘அவன் ஏழு வானங்களை தட்டடுக்காய் படைத்தான். அருளாளனின் படைப்பில் எந்தக் குறையையும் (நீர்) காண முடியாது. மீளவும் (ஒருமுறை) பாரும்; ஒரு பிளவை யேனும் உம்மால் காண முடிகிறதா? பின்னும் இரு முறை பாரும்; பார்வை மங்கிப் பலவீனமடைந்து உம்மிடமே திரும்பி விடும்!’’ (அல்-முல்க்: 3-4)*

> *‘‘அவர்களுக்கு மேலால் (இறக்கைகளை) விரித்தும் ஒடுக்கி யும் பறக்கும் பட்சிகளை அவர்கள் கவனிக்கவில்லையா? (விழுந்து விடாமல்) அவற்றைப் பிடித்திருப்பது அருளாளன் அன்றி வேறில்லை’’. (அல் முல்க் :19)*

> *‘‘(நபியே அவர்களிடம்) கேளும்: உங்களது நீரெல்லாம் பூமிக்குள் சட்டென்று வற்றி விட்டால், ஊற்றெடுக்கும் நீரை உங்களுக்குக் கொண்டு வருபவர் யார் என நீங்கள் கவனித் தீர்களா?’’ (அல் முல்க்: 30)*

அனேக அத்தியாயங்களிலும் வசனங்களிலும் இந்த அணுகு முறைதான் ஊடுபாவி நிற்கிறது. பிரமிக்க வைக்கும் இந்த அணுகு முறையால் வளர்த்தெடுக்கப்படும் சமூகம் தன்னையும் தன்னைச் சூழ உள்ளவற்றையும் ‘மீளக் கண்டடைதல்’ என்ற பண்புட னேயே தொடர்ந்து செயலாற்றும்; தலைமுறை தலைமுறையாக சங்கிலித் தொடரான இறைவிசுவாச-நாகரிகப் பண்புடனேயே அது நகர்ந்து கொண்டிருக்கும்.

ஒவ்வொரு காலை புலரும் போதும் கண்களில் புதிய கண் ணாடிகளை அணிந்து நம்மையும் சூழவுள்ள உலகையும் பார்க்கு மாறு நாம் அழைக்கப்படுகிறோம். முதல் முறை பார்ப்பது போன்றே ஒவ்வொரு முறையும் பார்க்க வேண் டும்; அப்போது தான் நாம் அல்லாஹ்வுக்கு எவ்வளவு அருகிலிருக்கிறோம் என் பதைக் கண்டுகொள்ள முடியும்!

நமது பொது வாழ்விலும், கல்வி மற்றும் பல்கலைக்கழக வட்டாரங்களிலும் நிர்வாக அறிவியல் பரப்பில் பல்வேறுபட்ட பாடங்களும் துறைகளும் காணப்படுகின்றன. கைத்தொழில், வணிக, விவசாய, குடியியல் திட்டங்களை மட்டுமன்றி, இலாப மும் பயனும் ஈட்டித் தரக்கூடிய -பொதுவான அல்லது குறிப் பான- அனைத்துத் திட்டங்களையும் முதலீடு செய்வதற்கான மிகச் சிறந்த வழிகளை ஆராய்வதில் இப்பாடங்களும் துறைகளும் கவனம் செலுத்து கின்றன.

ஆனால், அனைத்துத் திட்டங்களையும் விடச் சிறந்த, அதிக பயனுள்ள, நீடித்து நிலைக்கக் கூடிய, பெறுபேற்று உத்தரவாதம் கொண்ட, இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையானதாக மட்டு மன்றி, மேற்சொன்ன அனைத்து லோகாயத திட்டங்களதும் வெற்றிக்கு அடிப்படையாக அமையக் கூடிய ஒரு சிறப்புக் கற்கையை அல்லது பாடத்தை நமது பாடசாலைகளிலோ கல்விக் கூடங்களிலோ பல்கலைக்கழகங்களிலோ உருவாக்குதல் பற்றி ஒரு முறையேனும் சிந்தித்திருக்கிறோமா?

வணக்க வழிபாடுகளை நிர்வகித்தலும், அவற்றை மீளக் கண்ட டைதலும் என்பதே அந்த சிறப்புக் கற்கை. அல்லாஹ்வுடனான பொழுதாகிய தொழுகை அந்த வணக்கங்களின் தலையாய பாத்திரத்தை ஏற்றிருக்கிறது. எத்துணை அற்புதமான பொழுது அது!

நமது வணக்க வழிபாடுகளின் பட்டியலில் அல்லது உலகம்-மறுமை சார்ந்த முதலீடுகளில் அதியுச்ச அந்தஸ்தைப் பிடித்திருக் கும் சந்திப்பல்லவா அது!

இஸ்லாமிய சட்டவாக்கத்தில் சிரமமும் செலவும் அபாயமும் கொண்டது 'ஜிஹாத்' கடமை. ஆனால் அது முதலாம் இடத்தையோ இரண்டாம் இடத்தையோ பிடிக்காமல் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருப்பது ஆச்சரியம்தான். அதற்கு முன்னால் பெற்றோருக்கு உபகாரம் புரிவதும், அதற்கும் முன்னால் தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவதும் இடம் பிடித்திருப்பது இன்னும் ஆச்சரியமானது:

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (றழி) அறிவிக்கிறார்:

'எந்தச் செயல் அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்துக்குரியது?' என இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் நான் வினவியபோது, ''தொழுகையை அதற்குரிய வேளையில் நிறைவேற்றுதல்'' எனக் கூறினார்கள். ''பிறகு எது?'' என கேட்டதற்கு, ''பிறகு, பெற்றோருக்கு உபகாரம் புரிதல்'' என்றார்கள். ''பிறகு எது?'' என மீண்டும் கேட்டதற்கு, ''பிறகு, அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் புரிதல்'' என்றார்கள்'. (முஸ்லிம்)

இது ஓர் அபூர்வ நபிமொழி. ஆயினும் நம்மில் பலர் இதனை சட்டை செய்யாமல் நகர்ந்து விடவே பழகியிருக்கிறோம்.

தொழுகை அதன் முக்கியத்துவத்தினாலும் பொறுமையாலும் சிறப்பினாலும் கூலியாலும் நம்மிடம் ஆழ்ந்த சிந்தனையை வேண்டி நிற் கிறது. அதிலும் விஷேடமாக அது 'பாரமான தொன்று' என நமது ரட்சகன் வர்ணித்து விட்டு, 'ஆனால் உள்ளச்சம் கொண்டோருக்கல்ல' என விதிவிலக்கும் சொல்கிறான். ஏனெனில் உள்ளச்சம் கொண்டோர் அதனை பாரமானதாகவோ கடினமானதாகவோ கருத மாட்டார்கள். தங்களது உள்ளச்சத்தின் காரணமாக தொழுகையில் அவர்கள் சுவையை, அமைதியை, மன நிறைவைக் காண்பார்கள்; வாழ்வியல் பிரச்சினைகளில் தங்களது பலமான தாங்கு சுவராக அதனைக் கொள்வார்கள்.

மட்டுமன்றி, பாராயனங்களிலும் அசைவுகளிலும் ஆழ்ந்த சிந்தனையிலும் உள்ளச்சத்தையும் அமைதியையும் நிதானத்தையும்

பேணுவதற்கு அப்பால், அது ஓர் ஆன்மீகப் பள்ளியாகவும் செய லாற்றுகிறது. பொறுமை, கவனக் குவிப்பு, காது தாழ்த்திக் கேட்டல், பணிவு, பிறரை அழகிய முறையில் அங்கீகரித்தல், அவர்கள் கூறுவதைக் கேட்டல், அமைதி, தீர்மானம் எடுப்பதில் நிதானம், நிலைப்பாடுகளில் நடுநிலைத் தன்மை, சட்டங்களில் தீவிரத் தன்மையோ அவசரப் பண்போ காட்டாமை, மனிதர்களை அறிவார்ந்த முறையில் அணுகுதல்... என்பவற்றைப் பயிலும் பள்ளி அது.

அந்த வகையில், பொறுமையையும் தொழுகையையும் அல் லாஹ் பல வசனங்களில் இணைத்துப் பேசியிருப்பதில் ஆச்சர்யம் ஒன்று மில்லை:

> ''பொறுமையையும் தொழுகையையும் கொண்டு உதவி தேடுங்கள். நிச்சயமாக அது உள்ளச்சம் கொண்டவர்கள் தவிர்ந் தோருக்கு பெரும் பாரமாகவே இருக்கும்'' *(அல்-பகறா: 45)*

> ''மேலும், உமது குடும்பத்தினரை தொழுமாறு ஏவி, அதன் மீது பொறுமையும் காப்பீராக!'' *(தாஹா: 132)*

# ''நிச்சயமாக அது பெரும் சுமையானது''... ஏன்?

**தொழுகை ஏன்?**

தொழுகையை நிறைவேற்றுவதற்காக நமது பிற சந்திப்புகளை ஏன் ரத்துச் செய்கிறோம்? நமது சோலிகளை ஏன் விட்டு விடுகிறோம்? வியாபாரத்தை இடைநடுவில் ஏன் நிறுத்துகிறோம்? அன்றாட வாழ்வின் அனைத்து அம்சங்களையும் ஏன் தள்ளி வைக்கிறோம்?

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விசுவாசத் துக்கும் நிராகரிப்புக் கும் இடையிலான தீர்மானகரமான பிரிகோடாக தொழுகையை ஏன் குறிப்பிட்டார்கள்?

அன்னார் மரணப் படுக்கையில் இருந்தபோது, ''அல்லாஹ்வைத் தொழுவதை விட்டு விடாதீர்கள்...! அல்லாஹ்வைத் தொழுவதை விட்டு விடாதீர்கள்...!'' என திரும்பத் திரும்ப நினைவூட்டியதும், இறுதி வார்த்தைகளாக வலியுறுத்தியதும் எதற்காக?

தொழுகை என்பது அடிப்படையில் தண்டனையா அல்லது பரிசா? உண்மையாகவே அதில் சிரமமேதும் இருக்குமாயின், எவ்வகையான சிரமம் அது? அல்லது உண்மையாகவே இன்பமேதும் இருக்குமாயின், எப்படியான இன்பம் அது?

ஏன் அது இந்தக் குறிப்பிட்ட நேரங்களில் விதிக்கப்பட்டது? இந்த அசைவுகளும் 'றக்அத்' எண்ணிக்கைகளும் ஏன்? இந்த வாசகங்களும் பாராயனங்களும் எதற்கு?

முன்னைய எல்லா மதங்களிலும் கூட அது கடைப்பிடிக்கப் பட்டது ஏன்?

எப்படி அது ஜிஹாதையும் போர்க்களங்களில் உயிர்த் தியாகம் புரிவதையும் மிகைத்து, அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் இவ்வளவு உயரிய அந்தஸ்தையும் முக்கியத்துவத்தையும் பெறுகிறது?

தொழுகையின் மூலமாக மிகப்பெரும் வியாபாரத் திட்டமொன்று என் வசம் உள்ளது; நான் முதலீடு செய்ய வேண்டும் என்பதற்காக அதற்கான பாதீட்டு மூலதனத்தை எனது வங்கிக் கணக்கில் அல்லாஹ் வைப்புச் செய்திருக்கின்றான். எனவே, உலகில் ஒரு மனிதன் கனவு காணக்கூடிய மிகப்பெரும் அறுவடையையும் மகத்தான இன்பத்தையும் பெறும் வகையில் அதனை நிர்வகிக்கவும், செயற்படுத்தவும் மிகப் பொருத்தமான வழிமுறையொன்றை நான் பாடுபட்டுத் தேட வேண்டும்.

இந்த உண்மைகளைக் கண்டடைய முன்னர் நானும் ஐம்பது ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தொழுது வந்திருக்கிறேன் என்பதையும் இங்கு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

சிறியதொரு வெல்லக் கட்டிக்காக இரண்டு எறும்புக் கூட்டங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதைக் காணும் சந்தர்ப்பமொன்று உங்களுக்குக் கிட்டுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்: ஒவ்வொரு கூட்டமும் அது தனக்கே கிடைக்க வேண்டும் என பிரயத்தனம் செய்கிறது. ஒன்று மற்றதன் முதுகில் பாய்கிறது; மற்றொன்று தனது எதிரி வெல்லக் கட்டியிடம் செல்வதைத் தடுக்க நகங்களால் அதன் காலில் பிராண்டுகிறது; வேறு இரண்டு ஒன்றை யொன்று கவ்விப் பிடித்திருக்கின்றன... இரண்டு சிறு படைகளுக்கிடையிலான இச்சமரைக் கண்டுகளிக்க நிச்சயமாய்

நீங்கள் அங்கு நின்று விடுவீர்கள். ஆனால் அந்தச் சமரோ எதற்கும் பெறுமதியற்ற ஓர் அற்ப வெல்லக் கட்டிக் காகவே நிகழ்கிறது!

இப்போது இப்படி வைத்துக் கொள்ளுங்கள்: உண்மையான பரிபூரணத் தொழுகையொன்றை நீங்கள் தொழுகிறீர்கள்; அதன் மூலமாக உலகத்தை விட்டு உயர்ந்து அல்லாஹ்வை நெருங்கி நிற்கிறீர்கள். அந்த வானளாவிய உயரத்தில் இருந்தவாறே சற்று முன் நீங்கள் கீழே விட்டு வந்த பூமியைப் பார்க்கிறீர்கள். உங்கள் சாதாரண உலகப் பார்வைக்கு எவ்வளவோ பிரமாண்டமாகத் தெரிந்தவையும் இப்போது வெற்றுக் கண்ணால் பார்க்க முடியாத வாறு சிறிய தாக இருக்கின்றன.

எறும்புகள் தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்வதற்காக மோதிக் கொண்ட அந்த அற்ப வெல்லக் கட்டி உங்களது அற்பமான உலகமே என்பதும், அதற்காக முட்டாள்தனமாக மோதி அழிந்து கொண்டிருக்கும் எறும்புகள் நீங்களும் நீங்கள் பகைமை பாராட் டும் அல்லது உங்களோடு பகைமை பாராட்டும் மனிதர்களுமே என்பதும் அப்போது புலனாகும். அந்தப் பகைமையில் நீங்கள் அவர்களுடன் போரிடுகிறீர்கள்; அல்லது அவர்கள் உங்களுடன் போரிடுகிறார்கள். இறுதியில், நீங்கள் அவர்களையும் வெல்லக் கட்டியையும் வென்றெடுக்கிறீர்கள்; அல்லது அவர்கள் உங்களை யும் வெல்லக் கட்டியையும் வென்றெடுக்கிறார்கள்.

# கடமையிலிருந்து சலுகையை நோக்கிய பயணம்

ஆம்; தொழுகை என்பது நமது சன்மார்க்க சட்டவாக்கத்தில் கடமை (வாஜிப்) என்ற நிலையிலிருந்தே ஆரம்பிக்கிறது. ''உங்கள் பிள்ளைகள் ஏழு வயதை அடைந்து விட்டால் தொழும்படி ஏவுங்கள்; பத்து வயதை அடைந்த பிறகும் அதனை அவர்கள் விடும்போது அடியுங்கள்.''[1] அந்த வகையில்தான், 'ஒரு மனித னுக்கும் அவனது இறை நிராகரிப்புக்கும் இடையில் இருப்பது தொழுகையை விடுவதே'[2] எனவும் கூறப்பட்டது.

ஆனால் இந்தக் 'கடமை' மனித ஆயுளின் இரண்டாம் கட்டத் திலும் அதே நிலையில் தொடர்வதில்லை; சிறுவன் வளர்ந்து பெரியவனாகி, தொழுகையின் இயல்பையும் இயங்கி யலையும் புரிந்து, தனது ரட்சகனுடனான இந்த நேரடித் தொடர்பின் முக்கி யத்துவத்தைக் கண்டுகொள்ளும் போது, 'கடமை' என்ற புரிதல் படிப்படியாகப் பின்னகர்ந்து 'சிறப்புரிமை' என்ற புரிதல் அங்கு இடம்பிடிக்கத் தொடங்குகிறது.

---

1) அறிவிப்பவர்: (தனது தந்தை மற்றும் பாட்டன் வழியாக) அம்ர் பின் ஷுஐப். பதிவு செய்தவர்: அஹ்மத்.

2) அறிவிப்பவர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ். பதிவு செய்தவர்: முஸ்லிம்.

மருந்தை உட்கொள்ள குழந்தை மறுத்த போதும் நாம் கட்டா யப்படுத்துகிறோம். ஆனால் காலப்போக்கில், வளர்ந்த ஆணா கவோ பெண்ணாகவோ மாறி விட்ட பிறகு மருந்து என்றால் என்ன என்ற புரிதல் வந்து விடுகிறது; 'கடமை' என்ற கட்டத்தி லிருந்து 'சிறப்புரிமை' என்ற கட்டத்திற்கு அப்போது அதன் புரிதல் நிலை மாற்றம் பெறுகிறது; அந்த மருந்தில்தான் தனது உயிர்க்காப்பும் ஆரோக்கியமும் தங்கியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள ஆரம்பித்து விடுகிறது.

நீங்கள் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு பெறப் போவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள்: அந்த வீடு உங்களுக்கு மிகவுமே பிடித்துப் போயிற்று. அதன் அழகும், விசாலமும், ரம்மியமான அமைவிடமும், சொகுசான தளபாடங்களும், இதர சாதனங்களும் உங்களை வசீகரித்து விட்டன. வீட்டை வாடகைக்குப் பெறுவ தென தீர்க்கமாக முடிவு செய்து விட் டீர்கள். இப்போது வீட்டின் உரிமையாளருடன் அமர்ந்து வாடகைத் தொகை பற்றி பேரம் பேச அமர்கிறீர்கள். ஆனால் அவரோ பின்வரும் பெறுமதியைக் கேட்டு உங்களைத் திகைப்பில் ஆழ்த்துகிறார்: 'நீங்கள் என்னுடன் தினமும் எனது செலவில் ஐந்து தடவை சுவை மிகுந்த ஆகாரம் பருக வேண்டும். எனக்கு இதனை விட அதிகமாகவும் வேண் டாம்; குறைவாகவும் வேண்டாம்!'.

எத்துணை தாராளமான சலுகை இது!

இத்தகையதொரு தாராளமான சிறப்புச் சலுகையைத்தான் அல்லாஹ் நம் முன்வைத்திருக்கிறான். அவனது பூமியில் நாம் வசிக்கலாம்; அதன் செல்வங்களை அனுபவிக்கலாம்; சுகங்களில் திளைக்கலாம்; அதனை இன்னும் வளப்படுத்தும் பணியிலும் பங்கேற்கலாம்.

நிலை இவ்வாறிருக்க- உடலின் உணவுக்கென்று நேரம் ஒதுக் கித் தருவது போன்று அன்றாடத் தொழுகை என்ற ஆன்மீக உணவுக்கு நேரம் ஒதுக்கித் தராதிருப்பது நமக்கு நாமே இழைக்கும்

அநீதி அல்லவா? உணவு வேளைகளை அனுபவிப்பது போன்று தொழுகை நேரங்களையும் அனுபவிக்காதிருப்பது நமக்கு நாமே செய்யும் மாச்சர்யம் அல்லவா? வயிற்றின் உணவுக்கு தாராளமாக நேரம் ஒதுக்கும் நாம் ஆன்மாவின் உணவுக்கு நேரம் ஒதுக்கு வதில் ஏன் கஞ்சத்தனம் காட்டுகிறோம்? உண்மையில் நமக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்தது எது?

ஒரு மிகப்பெரும் பரிசு; ஆனால் அதனை வழங்குபவர் முன் நிபந்தனை ஒன்றையும் விதிக்கிறார்: 'குறித்த பரிசைப் பெற விரும்புபவர் அதற்கு முன்னால் மற்றொரு பெரும் பரிசையும் பெற வேண்டும்!' இதுதான் அந்த நிபந்தனை.

அது என்ன வகையான பரிசாக இருக்க முடியும்?

தொழுகைதான் அந்தப் பரிசு.

ஒரு கடமையாகவோ சுமையாகவோ அன்றி சிறப்புரிமையாகக் கொண்டு அந்த மாபெரும் ஆன்மீகப் பரிசைப் பெற்றுக் கொள் ளாமல், அதற்கான மற்றைய மாபெரும் பரிசை அல்லாஹ்விட மிருந்து உங்களால் பெற முடியாது.

'அல்லாஹு அக்பர்' என்று கூறி தொழுகையைத் தொடங்கும் போது நீங்கள் எத்துணை பேரின்பத்தை அடைகிறீர்கள்!

உங்கள் பாவங்கள் அனைத்தையும் சுமந்து கொண்டு வானவர் கள் வருவதை மனக்கண்ணில் நிறுத்துங்கள். உங்கள் இரு புஜங் களிலும் இரு பெரும் கோபுரம் போன்று அவற்றை அவர்கள் நிறுத்துகிறார்கள். ஒவ்வொரு முறை நீங்கள் 'றுகூஉ' அல்லது 'ஸுஜூது' செய்யும் போதும் இரு கோபுரங்களிலுமிருந்து பாவங் கள் தட்டுத் தட்டாக சரிந்து வீழ்கின்றன. இந்நிலையில் றுகூஐயும் ஸுஜூதையும் நீட்டுவதும் குறுக்குவதும் உங்கள் இஷ்டம்:

- ''ஓர் அடியான் தொழுகைக்காக நின்றதும் அவனது அனைத்துப் பாவங்களும் கொண்டு வரப்பட்டு இரு தோள்களிலும் வைக்கப் படுகின்றன. அவன் 'றுகூஉ'க்கும் 'ஸுஜூது'க்கும் செல்லும்

*போதெல்லாம் அந்தப் பாவங்கள் படிப்படியாக சரிந்து விழு கின்றன.''*[3]

- *ஒரு முஸ்லிம் நிறைவாக 'வுழூ' செய்து, தொழுகைக்காக எழுந்து நின்று, சொல்ல வேண்டியதை மனதால் உணர்ந்து சொல்லும் போது, அவர் பிறந்த தினத்தில் இருந்தது போன்ற தூய்மை நிலைக்குத் திரும்புகிறார்.''*[4]

*இத்தகைய 'சிறப்புச் சலுகை' எவ்வளவு எளிதாக நம் முன் 'கடமை'யாக மாறி விடுகிறது! சிலபோது நாம் மிக விரைவாகவே விடுபட்டு விட முயலும் பாரமான கடமையாகக் கூட அது மாறி விடுகிறது. ஒரு சில 'றக்அத்'துகள் தொழப்படும் அந்த வேளை தனது பெறுமதியான நேரத்திலிருந்து 'நுகரப்பட்டு விடுவதாக' அல்லது 'இழக்கப்பட்டு விடுவதாக' அல்லது 'தொலைந்து விடுவதாக' உணர்வோரின் நிலை இதுதான்.*

*'கடமை' என்ற புரிதல் எப்போதும் நமது மனவெளியில் 'சுமை' என்பதுடன் தொடர்புபட்ட ஒன்று. 'சுமை' என்பது மனதுக்கு மிகப் பாரமானது. மனது அதனை 'கொடுக்கும்' கூறாக அன்றி 'பறிக்கும்' கூறாகவே பார்க்கிறது. ஏனெனில் நேரத்திலும் ஓய்விலும் தனக்குள்ள உரிமையின் ஒரு பகுதியை அந்தக் கடமை தடுத்து விடுவதாக அது எண்ணுகிறது. கடமை பற்றிய விகார மனப்பாங்கு ஆரம்பிப்பது இங்கிருந்துதான். தொழுகையானது பலரைப் பொறுத்தவரை ஒரு சுமையாக மாறுவதும், அதனை அவர்கள் 'விரைவாக முடித்து' தங்கள் தோள்களிலிருந்து 'இறக்கி வைக்க' முயல்வதும் இதனால்தான்.*

3) அறிவிப்பவர்: இப்னு உமர். இதனை அல்பானீ தனது 'ஸஹீஹ்' தொகுப்பில் குறிப்பிடுகிறார்.

4) உக்பா பின் ஆமிர். இந்த அறிவிப்பை அல்பானீ 'ஸஹீஹ் அத்-தர்ஙீப்' இல் 'ஸஹீஹ்' என குறிப்பிடுகிறார்.

*ஆனால் இறைத்தூதர் (ஸல்) இதற்கு மறு கிடையாக, ''பிலாலே! அதன் மூலமாக எமக்கு நிம்மதி தாரும்!''[(5)] என்றுதான் கூறினார்கள்.*

*ஆக- 'நான் தொழுகையை நிறைவேற்றி னேனா இல்லையா?' என்பதல்ல இங்கு கேள்வி. (அந்தக் கேள்வி மிக முக்கியமானதாக இருந்த போதிலும் கூட!) ஒவ்வொரு தொழு கையின் பிறகும் நமக்கு நாமே கேட்க வேண்டியது இதுதான்: 'இந்தத் தொழுகை மூலமாக எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த பரிசைப் பெற்றுக் கொண்டேனா? தொழுகை எனக்குத் தரக் கூடிய உலகப் பேறுகளையும் மறுமைப் பேறுகளையும் கற்பனையில் சுவைத்து, உண் மையாகவே -இந்தத் தொழுகையின் இடை யிலும் முடிவிலும்- இன்பத்தில் திளைத்தி ருந்தேனா?'*

*இன்பகரமான பயணமொன்றுக்கான இல வசச் சீட்டாக உங்கள் தொழுகையை ஆக்கிக் கொள்ளுங்கள். அந்தப் பயணம் வெறுமனே உலகைச் சுற்றியதல்ல. முழுப் பிரபஞ்சத்தையும் சுற்றிய பயணம் அது. அதன் மூலமாகத்தான் எல்லையற்ற பேரண்டத்தின் நாயகனை நீங்கள் சென்றடைய முடியும்.*

5) அறிவிப்பவர்: பிலால் பின் றபாஹ். பதிவு செய்தவர்: அல்-இறாக்கீ.

# கடமைக்கும் உரிமைக்கும் இடையிலான பிரிகோடு

நமது அன்றாட வாழ்வில் கடமையும் உரிமையும் பெருமளவு ஊடுபாவியே நிற்கின்றன. எனவே, இரண்டுக்கும் இடையிலான தெளிவான பிரிகோடு எது என்பதோ, எந்த இடத்தில் கடமை முடிந்து உரிமை ஆரம்பிக்கிறது என்பதோ, எந்த இடத்தில் உரிமை முடிந்து கடமை ஆரம்பிக்கிறது என்பதோ நமக்குத் தெரிவதில்லை.

ஹஜ் என்பது ஒரு கடமை; சங்கற்பம்; பயணம்; பிரயாசை; செலவு. ஆனால் அதற்காக நாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டும் சுமந்து வருகின்ற நற்கூலியை எண்ணிப் பார்க்கும்போது, 'கடமை' என்ற உணர்வு கரைந்து போய், அது ஓர் உரிமையும் சலுகையும் என்ற உணர்வே மேலிடுகிறது.

தர்மம் ஒரு கடமை; செலவு; யத்தனம். ஆனால் அதனை நாம் முழுத் திருப்தியோடும், அது தரக்கூடிய நற்கூலியையும் அதனைப் பெறுவோர் அடையும் ஆனந்தத்தையும் பற்றிய புரிதலோடும் நிறைவேற்றும் போது நம் மீது அமைதியும் சாந்தமும் இறங்கு வதாக உணர்கி றோம். ஏனெனில் அதன் மூலமாக ரட்சகனை நாம் திருப்திப்படுத்துவதுடன், தேவையுடை யோருக்கு உதவியும் அடைக்கலமும் பாதுகாப்பும் வழங்குகிறோம்.

நோன்பு ஒரு கடமை; பசி; தாகம்; சிரமம்; பொறுமை. ஆனால் அதில் கடந்து செல்லும் ஒவ்வொரு நிமிடமும் நற்கூலியின் இன்பத்தையும், அல்லாஹ்வை நெருங்கும் சுவையையும் உணர்கி றோம். ஏனெனில் அங்கு நாம் அல்லாஹ்வின் ஏவல்களுக்கும் விலக்கல்களுக்கும் கட்டுப்பட்டிருக்கிறோம்; அல்லாஹ் நமக்கு வாக்களித்த வெகுமதிக்கான நேரமும் மிக அருகில் இருக்கிறது. அந்த வெகுமதி வெறுமனே பசியோடும் தாகத்தோடும் ஒரு நீண்ட நாளைக் கழித்து விட்டு நோன்பு திறப்பதற்கானது மட்டு மல்ல. உள்ளத்தை அதன் இச்சைகளிலிருந்து விலக்கி வைக்கும் போராட்டத்தில் வெற்றி பெற்ற இன்ப உணர்வும், சாஸ்வதமான தெய்வீக வங்கிக் கணக்கில் இன்னும் அதிகமாக வைப்புச் செய்த மகிழ்ச்சியும் அங்கு தலையாய பாத்திரத்தை வகிக்கின்றன.

அனுமதிக்கப்பட்டதற்கும் (ஹலால்) தடுக்கப்பட்டதற்கும் (ஹராம்) இடையிலான வேறுபாடும் இத்தகையதுதான். மகத் துவம் மிக்க நாயன் ஏதாவதொன்றை விட்டு நம்மைத் தடுத்தி ருந்தால் அதன் தீங்கிலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்கே அந்த ஏற்பாடு. குறித்த தீங்கு எத்தகையது என்பதை நாம் அறிந்திருந் தாலும் சரி; அறியாவிட்டாலும் சரி! மறுபுறத்தில், ஏதாவதொன்றை அவன் நமக்கு ஆகுமாக்கியிருந்தால் அல்லது ஏவியிருந்தால், அதன் பயனை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்த ஏற்பாடு. குறித்த பயன் எத்தகையது என்பதை நாம் அறிந்தி ருந்தாலும் சரி; அறியாதிருந்தாலும் சரி! அந்த வகையில், நமது விவேகத்தை சற்றே பயன்படுத்தி 'ஹலால்', 'ஹறாம்' ஆகிய இரு பதங்களுக்கும் பகரமாக பொருளியல் அல்லது உளவியல் அல்லது மருத்துவம் சார்ந்த பயனொன்றைத் தேடிப் பார்ப்போமாயின், 'பயன்தருவது', 'தீங்கிழைப்பது' ஆகிய இரு கருத்தாக்கங்ளையும் அங்கு கண்டு கொள்ள முடியும்.

நம் கரங்களில் இருக்கும் எல்லா உரிமைகளும் கடமைகளாக மாறிவிடுவது மிக எளிது. அவ்வாறே, நம்முன் உள்ள கடமைகளை உரிமைகளாக மாற்றிக் கொள்வதும் மிக இலகுவானது. அது இன்பமானதும் கூட.

ஒரு நிறுவனத்தின் பெரும் பணப் பரிசொன்றை நீங்கள் வென்றெடுத்து, அதனைப் பெறுவதற்காக உடன் புறப்பட்டு வரு மாறு உங்களிடம் கேட்கப்பட்டால், மகிழ்ச்சியோடும் உத்வேகத் தோடும் விரைந்து செல்ல மாட்டீர்களா? வழியில் எதிர்ப்படும் சிரமங்களை இலகுபடுத்தி, உங்கள் நேரத்தையும் முயற்சியையும் அந்தப் பயணத்துக்காகச் செலவிட மாட்டீர்களா? தொழுகை என்ற பரிசு அத்தகைய முயற்சிக்கு அல்லது அதனை விட அதிக முயற்சிக்கு தகுதி பெறாதா? லோகாயத வெகுமதிகள் -எவ்வளவு பிரமாண்டமாக இருந்தாலும்- தொழுகை என்ற வெகுமதிக்கு முன்னால் எம்மாத்திரம்?

மரத்திலிருந்து கனியைப் பறிக்க கையை நீட்டாமல் எப்படி அதன் சுவையை அனுபவிக்க முடியும்? தூங்கும் இடத்தையும், சொகுசான படுக்கையையும், பொருத்தமான போர்வையையும், அமைதியான சூழலையும், மங்கலான ஒளியையும் தயார்படுத் தாமல் இன்பமான உறக்கம் எப்படிச் சாத்தியமாகும்?

'பறவைகளுக்கு அல்லாஹ்வே உணவளிக்கிறான் என்பது உண்மைதான் எனினும், அந்த உணவைப் பெற அவை பறந்து செல்லத்தான் வேண்டும். அப்போதுதான் அந்த இன்பத்தை அவற்றினால் அனுபவிக்க முடியும்' ... எவ்வளவு பெரிய உண்மை இது!

## தொழுகைக்காக துயில் கலைத்தெழும் இன்பம்

*நான் சிறுவனாக இருந்தபோது, -அப்போதைய எனது புரிதலின் படி- ஸுப்ஹுத் தொழுகைக்காக 'நள்ளிரவில்' தூக்கம் கலைத்து எழ வேண்டியிருந்த அக்காலத்தில், என்னுள் நானே இப்படி கேட்டுக் கொண்டதுண்டு:*

*'இந்த நடுநிசி நேரத்தில் எதற்காக?'*

*'தினமும் ஐந்து தடவை தொழ வேண்டும் என நம்மிடம் எதிர் பார்க்கும் அல்லாஹ், இந்தக் கடினமான வேளையிலும் அதனை ஆக்கி வைத்திருப்பது ஏன்? தூக்கத்தின் மிக இன்பமான பொழுதில் தொழுவதற்காக எழ வேண்டும் என அவன் ஏன் கேட்கிறான்? இதே தொழுகையை காலை ஏழு மணிக்கு அல்லது எட்டு மணிக்கு அல்லது பத்து மணிக்கு கூட நாம் நிறைவேற்றினால் என்ன தவறு? தொழுகை எந்த நேரத்தில் வந்தாலும் அது தொழுகைதானே! நேரகாலத்தோடு தொழும் தொழுகையின் ஓதல்களைத்தானே தாமதித்துத் தொழும் தொழுகையிலும் ஓதப் போகிறோம்?'*

*'தொழுகை என்பது அல்லாஹ்வுடனான நமது 'தொடர் பாடலை' பாதுகாக்கவும், நம்மை விட்டு ஷெய்த்தானை விரட்டி யடிக்கவுமே வருகிறது என்றால், நாம் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது ஷெய்த்தானால் நமக்கு என்ன செய்து விட முடியும்?'*

'தொடர்பாடல்' பற்றியோ 'தொடர்பற்றிருத்தல்' பற்றியோ நன்மைக்கு அல்லது தீமைக்குத் திட்டமிடுதல் பற்றியோ சிந்திப் பதற்கு எவ்வித சக்தியும் அற்று நாம் உறங்கிக் கொண்டிருக்கும் நிலையில், அல்லாஹ்வுடனான தொடர் பாடலை இழந்து விடு வது குறித்து அல்லது ஷெய்த்தானின் மாய வலையில் சிக்கிக் கொள்வது குறித்து ஏன் அஞ்ச வேண்டும்?'

இந்தக் கேள்விகளெல்லாம் சிறுவர்களிடம் மட்டுமன்றி பெரிய வர்களின் சிந்தனையிலும் கூட எழ முடியும். ஆனால் தொழுகை என்பது அல்லாஹ்வுடன் சுழற்சி அடிப்படையில் மேற்கொள்ளப் படும் தொடர்பாடல் மட்டுமன்றி, அது வாழ்வுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றும் கூட என்பதை பெரியவர்கள் இறுதியில் புரிந்து கொள்கிறார்கள்.

அதிகாலைக் கருக்கலில் கண் விழித்து, அதன் மெல்லிய ஒளி யிழைகள் பிரியும் முன்பே மஸ்ஜிதுக்குச் சென்று, பின்பு கதிரவ னின் உதயத்தோடு தனது அன்றாடப் பணியை -அது எத்தகைய பணியாக இருப்பினும்- ஆரம்பிக்கின்ற மனிதன்தான் அதிகாலை யின் பெறுமதியை அறிவான். அதிகாலைத் தென்றலின் சுவாசம், அந்த நேரத்து நிசப்தம் தருகின்ற இன்பம், அந்தப் பொழுதில் அல்லாஹ்வுடன் கிட்டும் நெருக்கம் என்பவற்றின் பெறுமதி அவனுக்கே தெரியும். இவையெல்லாம் தொழுகையின் போது மட்டும் கிடைப்பவையல்ல; தொழுகைக்கு முன்னரும், இடை யிலும், தொழுத பின்னரும் கூட கிடைப்பவை.

ஆழ்துயிலின் பிறகு வாழ்வு மீண்டும் ஒரு முறை விழித்தெழு வதை அவன் காண்கிறான். இரவின் இருளிலிருந்து பகல் பொழுது இழை பிரிகிறது; இரவின் கர்ப்பப் பையிலிருந்து அதிகாலையின் இழைச் சிசுக்கள் அவனது கண்களுக்கு முன்னே பிரசவமாகின் றன; வானமும் பூமியும் புற்களும் பூக்களும் தங்கள் போர்வையை விலக்கிப் புதிய வாழ்வுக்குத் தயாராகின்றன.

மொத்தத்தில் அவன் ஆதிப் படைப்பின் அற்புதமான தெய்வீக நுண் காட்சியின் முன் நிற்கிறான்; அந்தப் படைப்பு எப்படி

ஆரம்பித்தது... இரவுக்குள் பகல் நுழையும் அதிசயம் எப்படி நிகழ்ந்தது... என்பதைப் பார்க்கிறான்; பிரபஞ்சத்தின் நாடி நரம்பு களில் பரவிச் செல் லும் உயிர்மையின் முதல் துடிப்பை ஸ்பரிசிக் கிறான்.

தனித்துவமான அந்தப் பொழுதைக் காண்பவனது அறிவும் சிந்தனையும் புலன்களும் தகதகத்துக் கொண்டே கண் விழிக்கின் றன; புத்தாக்கத்துக்காக உத்வேகம் கொண்டெழுகின்றன.

அந்தப் பொழுது அவனுக்குப் பலத்தையும் வளத்தையும் உற்சா கத்தையும் உற்பத்தியையும் புத்தாக்கத் திறனையும் பரிசாகத் தருகிறது.

மொத்தத்தில்- கறைபடாத புதியதொரு வாழ்வு வழங்கப்பட்ட வனாய் அவன் மாறுகிறான்.

பேரண்டத்தின் ரகசியங்களைப் பார்க்கவும், படைப்பின் அற்பு தங்களைக் கண்டடையவும் அந்த அதிகாலை உங்களுக்கு ஒரு புதிய பார்வையைத் தருகிறது. அந்த நாளின் வேறெந்தப் பொழு திலும் உங்களால் அவற்றைக் கண்டுகொள்ள முடியாது.

அந்த நேரத்தின் இரண்டு அல்லது மூன்று மணித்தியால உழைப்பின் வினளவு ஏனைய பொழுதுகளில் மேற்கொள்ளப் படும் பல மணி உழைப்புக்குச் சமமானது என்பதை அந்த அதி காலையில் எழுந்து உழைத்த அனுபவம் உள்ளவரே அறிவார்.

தனித்துவமான அந்த நாழிகையை வென்றெடுப்பதற்குத் தடை யாக நிற்பது உங்கள் தூக்கத்தின் ஷெய்த்தான் மட்டுமே. முதலாம் நாளிலும் இரண்டாம் நாளிலும், அடுத்து வரும் சில நாட்களிலும் அவனை எதிர்த்து மிகைப்பதில் நீங்கள் சித்தியடைந்து விட்டால், நேர காலத்தோடு துயிலெழுவது பழக்கமாகி விடும். அதன் பிறகு உங்களது கிரமமான நேரச் செயற்பாடாகவும் அது மாறிவிடும். ஒரு நோன்பாளி றமழான் மாதத்தின் கடினமான ஆரம்ப நாட்களில் முயன்று தன்னை நோன்புக்குப் பழக்கப்படுத்திக் கொள்வது போன்றதே இதுவும். இவ்வாறு செய்து விட்டால் பிறகு அது

*உங்களது உடல் கட்டமைப்பில் ஆழப் பதிந்த பழக்கமாகி விடும்; உங்கள் அன்றாட நிகழ்ச்சி நிரலில் கைவிட முடியாத இன்பப் பாகமாகவும் ஆகிவிடும்.*

*இதோ படுக்கையில் கிடந்தவாறே கண் விழிக்கிறீர்கள். ஆனால் ஷெய்த்தான் உங்கள் தலையைப் பிடித்து தலையணைக்கு இழுக் கிறான். 'கண்ணை மூடித் தூங்கு; இந்த அதிகாலைப் பொழுதின் இனிய உறக்கத்தைத் தொலைத்து விடாதே; தளர்வுக்கும் சோம்ப லுக்கும் ஆழ்ந்த உறக்கத்துக்கும் உரிய மிக இனிமையான பொழுது இது. அமைதியாகத் தூங்கு... என்ன அவசரம்?' என்கிறான் அவன்.*

*இதுதான் ஷெய்த்தான் நமக்கு திரும்பத் திரும்ப அலுக்காமல் சொல்லும் கதை. அவனது மயக்கும் வார்த்தைகளையும் ஊச லாட்டங் களையும் எப்படி எதிர்க்கப் போகிறீர்கள்? அதனைத் தான் இறைத்தூதர் (ஸல்) விளக்கு கிறார்கள். ஷெய்த்தானின் பசப்பு வார்த்தைகளை மிகைப்பதில் உங்களுக்கு உதவ அன்னார் இப்படி முயல்கிறார்கள்:*

*''உங்களில் ஒருவர் தூங்கியதும் ஷெய்த்தான் அவரது பிடரியில் மூன்று முடிச்சுகளை இட்டு, 'தூங்குவதற்கு உனக்கு ஒரு நீண்ட இரவு உள்ளது...' எனக் கூறி முத்திரையிடுவான். எனினும் அவர் கண்விழித்து அல்லாஹ்வை நினைவுகூர்ந்ததும் ஒரு முடிச்சு அவிழ்ந்து விடுகிறது; 'வுழூ' செய்ததும் இன்னொரு முடிச்சு அவிழ்கிறது; தொழுது விட்டால் மூன்றாவது முடிச்சும் அவிழ்ந்து விடுகிறது. பின்னர் காலையில் நல்ல மனதுடன் உற்சாகமாய் இயங்கத் தொடங்குவார். அவ்வாறு எழவில்லையெனில், பார மான மனதுடன் சோம்பேறியாக காலைப்பொழுதை எதிர் கொள்வார்.''(6)*

6) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. பதிவு செய்தவர்: புஹாரி.

ஸுப்ஹுத் தொழுகைக்கு நேரகாலத்தோடு எழுவதற்காக முன்னிரவிலேயே தூங்கி விடுவோரது முகங்களை எப்போதாவது கூர்ந்து கவனிக்க முயன்றிருக்கிறீர்களா? அந்த முகங்களை பின்னிரவு வரை கண் விழித்து விட்டு ஸுப்ஹுத் தொழுகையின் நேரம் கடந்த பிறகு தூக்கத்திலிருந்து எழுவோரது முகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறீர்களா? அப்படிப் பார்த்திருந்தால், 'மனிதன்' என்ற அதிசயக் கருவியின் சில ரகசியங்களைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். அதனை வடிவமைத்தவன் ஆரம்பம் முதலே அதற்கென்று அதிசயமான பௌதீக விதியொன்றை ஏற்படுத்தி வைத்திருக்கின்றான். அந்த விதி இதுதான்: அந்த 'இயந்திரம்' இரவில் ஓய்வுக்குச் சென்ற பிறகு அதனை 'மீளியக்கம்' பெறச் செய்ய மிகச் சிறந்த நேரம் சூரியோதயத்திற்கு முன்னரே அன்றி பின்னரல்ல.

ஏதோ ஒரு காரணத்தின் பொருட்டு அதன் வடிவமைப்பு அதனை உருவாக்கியவனிடம் இருந்து இப்படித்தான் வந்திருக் கிறது... நம்மால் புரிந்துகொள்ள முடிந்தாலும் சரி; முடியா விட்டாலும் சரி! இந்த மனித இயந்திரத்தின் -கண்டறியப்பட்ட மற்றும் கண்டறியப்படாத- அனைத்து ரகசியங்களையும் அதன் சிருஷ்டிகர்த்தாவை விட அதிகமாக யார்தான் அறிவார்?

> ''படைத்தவன் அறிய மாட்டானா? அவனோ நுணுக்கமானவன்; தேர்ச்சி மிக்கவன்'' (அல் முல்க்: 14)

இயற்கை தன்னையும் நம்மையும் படைத்தவன் திட்டமிட்டு வைத்ததற்கு இயைபாக தன் படுக்கையிலிருந்து எழுந்து விடு கிறது. அதிகாலையின் முதல் கீற்றுடன் உங்களைச் சூழ உள்ள வாழ்வின் அனைத்துப் புதுமைகளையும் வெளிச்சம் போட்டுக் காட்ட அது எழுகிறதே தவிர நீங்கள் தூங்க வேண்டும் என்பதற்காக அல்ல. நீங்கள் எழ வேண்டும்; உழைக்க வேண்டும்; உற்பத்தி செய்ய வேண்டும்; பூமியை வளப்படுத்த வேண்டும். எனவே இந்த தெய்வீக அருட்கொடையின் பெறுமதியை வீணாக்கி விடாதீர்கள்; புதிய நாளை ஆரம்பிப்பதற்காக உங்களுக்கும்

அனைத்துப் படைப்புகளுக்கும் அவன் வசப்படுத்தித் தந்திருக்கும் இந்த ஆற்றலைப் பாழ்படுத்தி விடாதீர்கள்.

சூரிய அஸ்தமனத்துடன் இமைகளை மூடிக் கொள்ளும் பூக் கள் வைகறை ஒளியின் முதல் கீற்றுடன் மீண்டும் மலர்வதை நீங்கள் கவனிக்கவில்லையா? பறவைகள் பள்ளியெழுச்சி பாடிக் கொண்டே வானத்தில் வட்டமிட்டு இரை தேடிப் பறக்க வில்லையா?

ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் இந்தப் பூமிப் பந்தில் அல்லாஹ் படைத்து விட்ட அனைத்து ஜீவராசிகளும் வைகறை யின் முதற் கிரணங்களிலேயே துயிலெழுந்து வாழ்க்கை வட்டத் தைத் தொடங்கவில்லையா?

வாழ்வைப் புரிந்து கொள்ளுங்கள்; அதன் கனிகளைப் பறித்துக் கொள்ளுங்கள்.

தவற விட்டீர்களானால், அந்த ரயில் என்றுமே திரும்பப் போவதில்லை.

# பொறுத்தலின் இன்பம்

ஒரு குறிப்பிட்ட பணிக்கு அல்லது இடத்துக்கு வாகனத்தைச் செலுத்தும்போது, முடியுமானவரை அதியுச்ச வேகத்தில் -சில போது அனுமதிக்கப்பட்ட வேக எல்லையைத் தாண்டிக் கூட- அதனை அடையவே அனேகமாக நாம் முயற்சிப்போம். சிந்தையில் கடமைப்பாடுகள் ஒன்றோடொன்று அலைமோதி நாடி நரம்புகள் களைப்படைவதற்கும் அது காரணமாகி விடுகிறது.

இதற்கு மாற்றமாக- வாகனம் செலுத்துதல் என்பதை அனுபவித்து மகிழத்தக்க ஒரு சிறப்புச் சலுகையாக நாம் எடுத்துக் கொண்டால் என்ன? பொறுமையாக நேரத்தை முகாமை செய்து, வாகனத்தை ஆறுதலாகச் செலுத்துவதற்குப் போதிய அவகாசம் கிட்டும் வகையில் சற்று நேரகாலத்தோடு நாம் வெளியேறிச் சென்றால் என்ன?

அவ்வாறு செய்யும்போது சூழவுள்ள வீதிக் காட்சிகளில் பார்வையை ஓட விடவும், முன்னைய பயணங்களில் நாம் காணாதவற்றைக் கண்டு கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது; கடந்து சென்ற நேரம் பற்றியோ எஞ்சியுள்ள தூரம் பற்றியோ சிந்தித்து நாடி நரம்புகளை சோர்வடையச் செய்யாமல், வாகனம் செலுத்தலையும் சுற்றுச் சூழல் பற்றிய கூர்ந்த அவதானத்தையும் ரசனையோடு மேற்கொள்ள வாய்ப்புக் கிட்டுகிறது.

இப்படி பயணத்துக்கென்று போதுமான நேரத்தை ஒதுக்கி, உங்களுக்கும் உடன் செல்ப வர்களுக்கும் அதனை ஓர் இன்பப் பயணமாகவும், பாரமானதொரு கடமையாக அன்றி, ரசனை யோடு ஈடுபடும் உரிமையாகவும் ஆக்கிக் கொள்ள மாட்டீர்களா?

தொழுகை விடயத்தில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டியதும் இதுதான்.

பொறுமை காப்பதற்கு உதவக் கூடிய வகையில் காலத்துடன் ஒரு சிறிய போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்வதே இங்கு உங்களிடம் வேண்டப்படும் பணி. அந்தப் பொறுமையைக் கூட இன்பமான ஒன்றாக எடுத்துக் கொள்ளும் வகையிலேயே குறித்த உடன்பாடு எட்டப்பட வேண்டும்.

நோன்பு திறக்கும் வேளை வரை காக்கும் பொறுமை...

துன்பங்கள் விலகும் வரை சகித்திருக்கும் பொறுமை...

நோய் குணமாகும் வரை கடைப்பிடிக்கும் பொறுமை...

விழா மண்டபத்தின் நுழைவுச் சீட்டுக்காக வரிசையில் காத்தி ருந்து வாங்கிக் கொள்ளும் பொறுமை...

கல்வியில் சித்தியடையும் வரை காட்டப்படும் பொறுமை...

இப்படியெல்லாம் பொறுமை கொள்வதிலுள்ள சுவையை நீங்கள் அனுபவித்ததில்லையா?

ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்வதற்கு சக்தி இருந்தும், உள்ளத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமை காக்கும் இன்பத்தை முயன்று பார்த்திருக்கிறீர்களா?

ஓர் இனிப்புப் பண்டத்தை அல்லது ஒரு புதிய ஆடையை அல்லது ஒரு புதிய வாகனத்தை வாங்கப் பணமிருந்தும், ஒரு கொள்கைக்காக அல்லது ஒரு வாக்கைக் காப்பாற்றுவதற்காக அல்லது எளிமை பேணுவதற்காக அல்லது அத்தகைய ஒன்றை வாங்க முடியாத நிலையில் உங்களோடு இருப்பவர்களது உணர்வை மதிப்பதற்காக வாங்காமல் தவிர்த்துக் கொள்ளும் அற்புத உணர்வை என்றாவது அனுபவித்திருக் கிறீர்களா?

*பொறுத்தலின் இன்பம் என்பது இதுதான்!*

*தொழுகையும் இப்படிப்பட்ட ஒன்றுதான்:*

> *''மேலும், உமது குடும்பத்தவரை தொழுமாறு ஏவி, அதன் மீது பொறுமையும் காப்பீராக!'' (தாஹா: 132)*

*தொழுகை தொடர்பாக பொறுமையாக இருத்தல் என்பது அல்லாஹ்வின் சோதனையோ தண்டனையோ அன்று. எந்த இன்பத்தை அடைவதற்கும் நீங்கள் காட்டும் பொறுமை போன்றதே தொழுகைக்காக காட்டப்படும் பொறுமையும். கிட்டுகின்ற இன்பத்தின் அளவுக்கும் பரிசிலின் பருமனுக்கும் ஏற்ப கொடுக்கப்படும் விலையும் காட்டப்படும் பொறுமையும் அமைய வேண்டியது தவிர்க்க முடியாதது.*

*படைத்தவனுக்கு முன்னால் நிற்கும் இன்பத்தை விட மகத்தான எதுவும் இருக்க முடியுமா? முறையீடுகளையும் தோளில் கனத்துக் கொண்டிருக்கும் சோகங்களையும் துயரங் களையும் அவனது ரட்சணிய வாயிலில் இறக்கி விட்டு, அன்றுதான் பிறந்தவர்கள் போன்று பாவத்தூய்மை பெற்று வெளியேறும் சந்திப்பல்லவா அது!*

# தொழுகை பொறுமையின் பள்ளி; பொறுமை நாகரிகத்தின் பள்ளி

'பொறுமை' என்ற பண்பு பற்றிய உரையாடலை மேற்குலக இலக்கியங்களில் ஏறக் குறைய முற்றாகவே காண முடியாதுள் ளமை எனக்கு திகைப்பூட்டுகிறது. மனிதனின் அடிப்படையான விழுமியங்கள் பற்றி அவர்கள் பேசும்போது பொறுமை என்ற பண்புக்கு அங்கு எந்த இடமும் இருப்பதில்லை. இத்துறையில் என்னை விட அதிகமாக வாசிப்புச் செய்வோர் கூட இந்த உண்மைக்குச் சான்று பகர்கின்றனர். துணிச்சல், வாய்மை, திடவுறுதி, உழைப்பு, தயாளம், தைரியம், ஆபத்தில் உதவுதல், நேர்மை, இதய சுத்தி, அன்பு, நீதி, சமத்துவம், சுதந்திரம், ஜனநாயகம், வறியோருக்கும் தேவையுடையோருக்கும் உபகாரம் புரிதல், பணிவு... என ஏராளமான பண்புகள் பற்றி மேற்கத்தியர் பேசுகின்றனர். ஆனால் ஆச்சர்யமான வகையில், 'பொறுமை' என்ற பண்பு பற்றி -அது ஏனைய எல்லாப் பண்புகளுக்கும் அடிப்படையான பண்பாக இருந்த போதிலும்- அவர்கள் பேசுவ தில்லை.

மறுபுறத்தில், 'பொறுமை' என்ற பதத்தையும் அதிலிருந்து பிறந்த பதங்களையும் அல்குர் ஆனில் தேடிப் பார்த்தபோது 103 தடவைக்கும் அதிகமாக திரும்பத் திரும்ப அது இடம்பெற்றி

ருப்பதைக் கண்டுகொண்டேன். இது தவிர, நபியவர்களது வாக்கு களில் அது பலநூறு தடவை இடம் பிடித்திருக்கிறது.

தனது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் உலகின் மீது மேலாண்மை செலுத்திக் கொண்டிருக்கும் மேற்கு நாகரிகத்தை கவனத்தில் கொண்டுதான் இங்கு நான் அதனை 'ஆச்சர்யம்' என்றேன். ஏனெனில் பொறுமை என்பது எந்த ஒரு கண்டு பிடிப்பாளனும் சுமந்திருக்கக் கூடிய முதல்தர ஆயுதம் என்பதை நாமனைவரும் அறிவோம். தனது நேரத்தின் பெரும்பகுதியை இரவு பகலாக ஆய்வுகூடத்தில் கழித்துக் கொண்டு, புதிய உண்மைகளைத் தேடி நீண்ட பல ஆய்வுகளை மேற்கொண்டு, பிறரால் கண்டுகொள்ள முடியாமல் போனவற்றைக் கண்டடை வதற்கு பெரும் பிரயத்தனம் செய்யும் ஆய்வாளன் விடாமுயற்சி யும் திடஉறுதியும் தொடர் யத்தனமும் பொறுமையும் இன்றி தனது இலக்கைச் சாதிப்பது எங்கனம்? அவர்கள் உண்டுபண்ணிய தனித்துவமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், உலக மாந்தரின் சிந்தனையிலும் மொழியிலும் நிலத்திலும் அவர்கள் பெற்ற மேலாண்மையும் அவர்களது இயல்பிலேயே ஆழப்பதிந்திருக்கும் பொறுமை, விடாமுயற்சி, நிலைகுலையாமை என்பவற்றின் கார ணமாகவே கைவரப் பெற்றிருக்க வேண்டும். அதனால்தான் என்னவோ அந்தப் பண்புகள் பற்றி தங்களது இலக்கியங்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய தேவையை அவர்கள் உணர வில்லை போலும்!

ஆனால், இஸ்லாத்தின் மிக முக்கியமான மூன்று கடமை களான தொழுகை, நோன்பு, ஹஜ் ஆகியவற்றை நீங்கள் கவனித் துப் பார்த்தால், அவை ஒவ்வொன்றும் பொறுமைக்குப் பயிற்சி யளிப்பதற்காகவும், பொறுமையாளர் களை உருவாக்குவதற்காக வும் விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பள்ளிகளைப் போன்று தோற்றமளிப்பதைக் கண்டுகொள்வீர்கள். இங்கு நீங்கள் இப்ப டிக் கேட்கலாம்: 'நோன்பிலும் ஹஜ்ஜிலும் பொறுமை வகிக்கும் இடம் தெளிவானது. ஆனால் தொழுகையும் பொறுமையும் எங்கே சம்பந்தப்படுகின்றன?'

பொறுமையைக் கற்பிப்பதற்கும் அதில் பயிற்சியளிப்பதற்கு மான ஒரு கலாநிலையத்தின் பயிற்சி நெறியொன்றில் நீங்கள் இணைவதாக எண்ணிக் கொள்ளுங்கள். அந்தப் பயிற்சி நெறியில் எந்த வகையான நிகழ்ச்சிகளும் பயிற்சிகளும் உங்களுக்கு வழங் கப்படலாம் என நினைக்கிறீர்கள்?

தொழுகை என்பது 'உள்ளச்சம்' (அல் ஃகுஷூஉ) இன்றி நிறை வேறுவதில்லை. தொழுகையாளி தான் 'சொல்வதை உணர்ந்து' சொல்லிய நிலையிலேயே அந்த உள்ளச்சத்தைப் பேண வேண் டும். நபிகளார் (ஸல்) நமக்கு வலியுறுத்திக் கூறியதும் அதுவே. எனில், இத்தகைய உள்ளச்சம் பொறுமை என்ற பண்பின்றி சாத் தியமாக முடியுமா?

ஓதல்களையும் 'தஸ்பீஹ்'களையும் 'தக்பீர்' களையும் 'மனதால் உணர்ந்து உச்சரிக்காமல்' அவசர அவசரமாகக் கூறி நிறைவேற்றப் படும் தொழுகை எவ்வளவு இலகுவானது! ஆனால் எவ்வளவு இலாபம் குறைந்த மலிவான வியாபாரம் அது!

மறுபுறத்தில்- ஏராளமான பணிகளும் சோலிகளும் வாசலில் காத்திருக்கும் நிலையிலும் ஒவ்வொரு வசனத்தையும் வார்த்தை யையும் 'மனதால் உணர்ந்து' ஓதி, சிந்தனையை வேண்டி நிற்கும் ஒவ்வோர் இடத்திலும் நின்று நிதானித்து தொழப்படும் தொழுகை எவ்வளவு சிரமமானது! ஆனால் எவ்வளவு இலாபம் கூடிய மகத்தான வியாபாரம் அது!

தொழுகையில் 'அல்லாஹுஅக்பர்' (அல்லாஹ் மிகப் பெரிய வன்) என்பது போன்ற திறந்த நிலை வாசகமொன்றை கூறிவிட்டு -பல நூறு பணிகள் வாசலில் காத்திருக்கும் நிலையிலும்- நின்று நிதானித்து, உங்கள் சிந்தனையில் தோன்றக் கூடிய 'அல்லாஹ் யாரை விடப் பெரியவன்? எதனை விடப் பெரியவன்?' என்ற அந்த அனுமான இடைவெளியை நிரப்புவதற்கு நீங்கள் எடுத்துக் கொள்ளும் பிரயத்தனம் உண்மையில் பொறுமையை -அதீத பொறுமையை- வேண்டி நிற்கும் பணி.

அவ்வாறே, 'ஸுப்ஹான றப்பீ அல்-அழீம்' (மகத்தான எனது ரட்சகனைத் துதிக்கிறேன்) என்றோ 'ஸுப்ஹான றப்பீ அல்-அஃலா' (மிக உயர்ந்த எனது ரட்சகனைத் துதிக்கிறேன்) என்றோ கூறிவிட்டு -பலநூறு பணிகள் வாசலில் காத்திருக்கும் நிலையிலும்- நின்று நிதானித்து, 'எனது ரட்சகனை நான் துதிப்பதும் தூய்மைப் படுத்துவதும் மகத்துவப்படுத்துவதும் எப்படி?' என சிந்தையில் தோன்றும் அனுமான இடைவெளியை நிரப்ப நீங்கள் எடுக்கும் யத்தனத்துக்கு அதீத பொறுமை அவசியம்.

'பிஸ்மில்லாஹ்', 'அர்ரஹ்மான்', 'அர்ரஹீம்' முதலிய பதங்கள் ஒவ்வொன்றும் தாங்கி நிற்கின்ற தனித்துவமான அர்த்தத்தையும் ஆளுமையையும் ஆழ்ந்து புரிந்து கொள்ளும் வகையில் -ஏராள மான சோலிகள் வாசலில் காத்திருக்கும் நிலையிலும்- நபி(ஸல்) அவர்கள் போன்று நீட்டி உச்சரித்துத் தொழுவதற்கு அதிக பொறுமை தேவை.

ஏராளமான வேலைகள் வாசலில் காத்திருக்கும் நிலையிலும், 'அத்-தஹிய்யாத்து லில்லாஹி' (வாழ்த்துரைகள் அல்லாஹ்வுக்கே), 'அஸ்-ஸலவாத்து அத்-தய்யிபாத்து' (அழகிய ஆசிர்வாதங்கள்) முதலிய ஒவ்வொரு வாசகத்தையும் உச்சரித்த பிறகு அந்த ஒவ் வொன்றுக்குமான பதிலை அல்லாஹ்விடமிருந்து பெறும் இன் பத்தை உய்த்துணரும் வகையில் தாமதித்து நிற்பதற்கும், 'அஸ் ஸலாமு அலைக்க' என நபியவர்கள் மீது ஸலாம் கூறிய பிறகு பதில் பெறும் இன்பத்தை எதிர்பார்த்து தாமதித்திருப் பதற்கும், 'வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்' என அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீது ஸலாம் கூறிய பிறகு அதற்காகக் கிடைக்கும் கூலியை எண்ணி இன்புற்று நிற்பதற்கும் கூட நிறைவான பொறுமை வேண்டும்.

ஏராளமான பணிகள் வாசலில் காத்திருந்த போதும், அல்லாஹ் வின் அங்கீகாரத்தைப் பெறும் வகையில் தொழுகையின் ஒவ் வோர் அசைவுக்கும், அல்குர்ஆன் வசனத்துக்கும், பிரார்த்தனைக் கும் உரிய மதிப்பையும் கவனத்தையும் வழங்குவதற்காக

*அவற்றிடையே தாமதித்து நிற்பதற்கு உங்களுக்கு அபரிமிதப் பொறுமை தேவை.*

*உங்களது எல்லா வெற்றிகளையும் சாதனைகளையும் நல்லம் சங்களையும் உற்றுக் கவனித்தீர்களானால், அவற்றுக்குப் பின்னா லிருந்த பொறுமையைக் கண்டுகொள்வீர்கள். உங்களது எல்லாத் தோல்விகளையும் தவறுகளையும் பாவங்களையும் உற்றுக் கவ னித்தீர்களானால், அவற்றுக்குப் பின்னாலிருந்த பொறுமையீனத் தைக் கண்டுகொள்வீர்கள். பொறுமை என்பது வெற்றிக்கும் விமோசனத்துக்குமான அற்புதப் பள்ளி; தொழுகை என்பது பொறுமைக்கான அற்புதப் பள்ளி.*

*சங்கை மிகு நபிகள் (ஸல்) கூறினார்கள்: ''இந்த உம்மாவிலி ருந்து முதலில் உயர்த்தப் படுவது உள்ளச்சமே''. நமது தொழுகை களிலிருந்து உள்ளச்சம் உயர்த்தப்பட்டபோது பொறுமையும் சேர்த்து உயர்த்தப்பட்டு விட்டது போலும்! பொறுமை உயர்த்தப் பட்டபோது இந்த உம்மாவின் நாகரிகமும் சேர்த்து உயர்த்தப்பட்டு விட்டது போலும்! பூமியில் நாம் அடையும் வெற்றிக்கும், வானு லகுடன் நாம் பேணும் உள்ளச்சத் தொடர்புக்கும் இடையிலுள்ள உறவு பற்றிய சாஸ்வத உண்மையை அல்லாஹ் இப்படி உறுதிப் படுத்தவில்லையா:*

> *''தங்கள் தொழுகையில் உள்ளச்சத்துடன் ஈடுபடும் விசுவாசி கள் வெற்றியடைந்து விட்டார்கள்.'' (அல்-முஃமினூன்: 1-2)*

*ஒவ்வொரு கடமையான தொழுகைக்குப் பிறகும் உங்களை நீங்களே இப்படிக் கேட்க முயலுங்கள்:*

*'இந்தத் தொழுகையிலிருந்து நான் பொறுமை என்ற சக்தியை எவ்வளவு பெற்றேன்?'*

# ஏன் தொழுகிறோம்?

***தொழுகை எதற்காக? பொறுமைக்காக மட்டுமா?***

*சில வினோதமான அசைவுகளை மேற்கொள்வதற்காகவும், முன்னர் பலநூறு தடவை கூறிய அதே வார்த்தைகளை திரும்பத் திரும்ப கூறுவதற்காகவும், தினமும் நமது நேரத்தில் ஒரு மணித்தி யாலத்தை அல்லது இரண்டு மணித்தியாலத்தை ஏன் செலவிடுகி றோம்? அந்த நேரத்தை பிறருக்கு உதவுவதிலோ அல்லது வேறு பயனுள்ள பொதுநலப் பணிகளிலோ செலவிடுவது சிறந்ததில் லையா? தொழுகை என்ற ஒன்றே இல்லாவிட்டால்தான் என்ன?*

*இப்படிக் கற்பனை செய்து பாருங்கள்:*

*உலகிலுள்ள அனைத்துத் தொலைபேசிகளும் அலைபேசிகளும் திடீரென்று செயலிழந்து விட்டன; எல்லா விதமான தொடர்பு களும் அறுந்து விட்டன; அனைத்து செய்மதி மற்றும் இணையம் தொடர்பான நிலையங்களும் சட்டென்று தொழிற்படாமல் நின்று விட்டன; எல்லா தரை, கடல், வான் வழிப் பாதைகளும் இயக்க மற்றுப் போய்விட்டன..! இப்போது உலகில் என்ன நிகழும்? ஏற்படக்கூடிய அவ நம்பிக்கையும் விரக்தியும் சமூக, பொருளா தார, அரசியல், கலாசார, நாகரிக வீழ்ச்சியும் களேபரமும் எத்த கையதாக இருக்கும்?*

நமக்கும் நமது ரட்சகனுக்கும் இடையில் தொழுகை வகிக்கும் பாத்திரமும் இத்தகையதுதான். அவ்வாறான தொழுகையை விட்டு ஒரு நாளாவது நாம் விலகியிருக்க முடியுமா? நமக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலான அவசரத் தொடர்பு வழி துண்டிக் கப்பட்டால் என்ன செய்வது? அப்படி நிகழ்ந்து விட்டால், அல் லாஹ் நமக்குத் தந்த அதிசயத் தொடர்பு சாதனத்தை மீண்டும் கண்டடைவது நமது கடமை அல்லவா?

இந்நிலையில், தொழுகை கட்டமைக்கப்பட்டுள்ள இந்த 'முறைமையையும்' 'சேர்மா னத்தையும்' விட சிறந்த வடிவ மொன்றை நாம் கண்டடைய முடியுமா? எத்துணை தனித்துவ மான அசைவுகளாலும், நுணுக்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளாலும் அது வடிவமைக்கப்பட்டிருக்கிறது?

# தொழுகை நம்மை மீள்செயல் வரைவுக்கு உட்படுத்துகிறது (Reprogramming)

*திரும்பத் திரும்பக் கரை தொடும் அலைகள் கால ஓட்டத்தில் கரையிலுள்ள பாறைகளை அரித்து விடுகின்றன. வாழ்க்கையும் அப்படித்தான். காலம், பரிச்சயம், வழக்கம், திரும்பத் திரும்பச் செய்தல் என்பன தொழுகை நமக்குள் விதைத்த பலத்தையும் சம நிலையையும் அன்றாட வாழ்வியல் அழுக்குகளிலிருந்து பெற்ற தூய்மையையும் கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கின்றன; லோகாயத விவகாரங்களின் இடைவிடாத அலைகள் தமது இஷ்டத்துக்கேற்ப நம்மை தகவமைக்க முயல்கின்றன.*

*நாழிகைக்கு நாழிகை, நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு இது நடந்துகொண்டு தான் இருக்கிறது. கால ஓட்டத்தில் நாம் மாறித்தான் போனோம் என்பதையோ, நமக்கென ஏற்படுத்தப் பட்டிருந்த 'வைரஸ்' தாக்கங்களற்ற தெய்வீக நிரலொழுங்கின் அசல் பிரதியிலிருந்து தூரமாகி விட்டோம் என்பதையோ நாம் உணராத படியே இது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.*

*இதைத்தான் இறைத்தூதர் (ஸல்) இப்படிக் கூறினார்கள்:*

*''ஆடை இற்றுவிடுவது போன்று உங்களுக்குள்ளிருக்கும் விசுவாசம் இற்றுப் போகிறது; அந்த விசுவாசத்தை உள்ளங்களில்*

*புதுப்பித்துத் தருமாறு அல்லாஹ்விடம் கேளுங்கள்!''[1]*

*பிற சமுதாயத்தவர்களையும் மதத்தவர்களையும் போலன்றி, நமது விசுவாச செயல்வரைவின் அசல் 'ஒளிவட்டு'* (Compact Disc) *பிரதி இன்றும் பாதுகாக்கப்பட்டிருப்பது அல்லாஹ்வின் அருளே. அந்தவகையில் அதனைக் கொண்டு நம்மை மீள்செயல்வரைவுப் படுத்தவும், புனரமைத்துக் கொள்ளவும், நமக்குள் ஊடுருவிய 'வைரஸ்'களையும் பிறழ்வுகளையும் ரோகங்களையும் அகற்றவும் நம்மால் இப்போதும் முடிகிறது.*

*அல்குர்ஆனை எந்த மாற்றமோ திரிபோ கூட்டல் குறைத்தலோ இன்றி இன்றுவரை நமக்குப் பாதுகாத்துத் தந்திருப்பதும், நபிவழி அறிவிப்புகளை பல்வேறு மூலாதாரப் பனுவல்களோடும் அறிவிப் பாளர்களோடும் அட்சரம் பிசகாமல் பாதுகாத்துத் தந்திருப்பதும் கூட இந்த அசல் பிரதிதான்.*

*மட்டுமன்றி இதே பிரதிதான், கண்ணியமிக்க நபியின் தொழுகை என்ற செயல் வரைவை -சொல்லாலும் செயலாலும்- பல்வேறு மூலா தாரப் பனுவல்களூடாகவும் அறிவிப்பாளர்கள் மூலமாகவும் பாதுகாத்துத் தந்திருக்கிறது. அத்தகைய தொழுகையின் சாரத்தை கண்ணிய மிக்க நபிகளார் நான்கே வார்த்தைகளில் இப்படிக் கூறினார்கள்:*

*''நான் தொழக் கண்டவாறே தொழுங்கள்!''[2]*

*என்ன விந்தை! தொழுகை என்ற ஒன்றே இல்லாது இருந் திருக்குமானால், நமது வாழ்வையும் நமது உலகத்தையும் பிரபஞ்சப் பேரண்டத்தையும் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும்*

---

1) அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர். 'ஸஹீஹ் அல்-ஜாமிஇ'ல் அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

2) அறிவிப்பவர்: மாலிக் இப்னுல் ஹுவைரித் அல்-லைதீ. 'ஸஹீஹ் அல்-ஜாமிஇ'ல் அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

அந்த மாபெரும் சக்தனுடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய தொழுகையொன்றை நம்மால் ‘கண்டுபிடிக்க’ முடிந்திருக்குமா? தொலைத் தொடர்பு சாதனங்களுள் அடங்கக் கூடிய அந்த முக் கியமான மனிதக் ‘கண்டுபிடிப்பு’ எந்த வடிவத்தில் அமைந்திருக் கும் என நினைக்கிறீர்கள்? இது பற்றி நிறையச் சிந்தித்து நீங்கள் களைப்படைய வேண்டாம்; ஏனெனில் நம்மைச் சுற்றியுள்ள பலர் அதனையே செய்திருக்கிறார்கள்.

மூஸா (அலை) அல்லது ஈஸா (அலை) ஈடுபட்ட தொழுகை எப்படி அமைந்திருந்தது என்ற விவரத்தை இன்று நம் முன் உள்ள தவ்றாத்திலும் இன்ஜீலிலும் தேடிப் பார்த்தீர்களானால், அவர்களது பின்பற்றாளர்கள் முன்மாதிரியாகக் கொண்டு பின்பற் றத்தக்க எதனையும் அவற்றில் கண்டுகொள்ள முடியாது. எனவே, அந்தப் பின்பற்றாளர்கள் இன்று ஈடுபடுகின்ற முறையிலான தொழுகைகளை தாங்களாகவே ‘கண்டு பிடித்து’ வைத்திருப்பது இயல்பானதொரு விளைவுதான்.

ஆனால் இத்தகையதொரு ‘கண்டு பிடிக்கப் பட்ட’ தொழுகை யில் அவர்களால் அடைய முடியாத ஒன்று உள்ளது. அது என்ன? ஒரு முஸ்லிம் தொழுகையாளி அடைகின்ற அற்புதமான இன்பப் பரவசத்தை அவர்களால் அடையவே முடியாது என்பது ஐயத் துக்கிடமற்றது. உண்மையில் அந்த இன்பத்துக்கு நிகராக எதுவுமே இல்லை. தான் ஈடுபட்டிருக்கும் தொழுகை தனது நபி நேரடி யாகவே தூயவன் அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொண்ட தொழுகை என்ற உணர்வில் கிட்டும் பரவசம் அது.

கண்ணியமிக்க அந்த இரு நபிகளது தொழுகை பற்றிய எந்த வர்ணனையும் -அவர்களது பின்பற்றாளர்கள் ஆதாரமாகக் கொள் ளத்தக்க வகையில்- தவ்றாத்திலோ இன்ஜீலிலோ கிடையாது. இன்ஜீலில் இருப்பதெல்லாம் இதுவொன்று மட்டும்தான்:

மஸீஹின் (அலை) சீடர்களுள் ஒருவர் அவரிடம், ‘ஜோன் (யஹ்யா) தனது சீடர்களுக்கு கற்றுத் தந்தது போன்று எங்களுக்கும்

தொழ கற்றுத் தாரும்' என கேட்டுக் கொண்டார். அதற்கு யஸூஉ (நபி ஈஸா), ''நீங்கள் தொழும் போதெல்லாம் இப்படிக் கூறுங்கள்...'' எனக் கூறி, 35 சொற்கள் அடங்கிய பிரார்த்தனை யொன்றை கூறிக் காட்டினார்.

(இது லூக்காவின் அறிவிப்பின் படியானது. ஆனால் மத்தேயு அறிவிப்பின் படி அந்தப் பிரார்த்தனையில் 42 சொற்கள் அடங்கியிருந்தன. மத்தேயு: 6:9-13; லூக்கா: 11:2-4)

நோன்பிலும் அவர்களது நிலை இதுவே; ஒவ்வொரு பிரிவி னரும் அதில் தங்களுக்கென்று பிரத்தியேகமான நிபந்தனைகளை யும், வழிமுறைகளையும், கால அளவையும், நேரங்களையும், அனுமதிக்கப்பட்டவற்றையும், தடுக்கப்பட்டவற்றையும் கொண் டுள்ளனர். நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம் அவை தொடர்ச் சியாக மாறிக் கொண்டே இருக்கின்றன.

சில முஸ்லிம்கள் தங்களது தொழுகையிலுள்ள சில நுணுக்க மான விபரங்கள் தொடர்பாக சீற்றத்தோடு மோதிக் கொள்வதை யும், பரஸ்பரம் சவால் விட்டுக் கொள்வதையும் நாம் அடிக்கடி காண்கிறோம். கைகளை ஒவ்வொரு தக்பீரின் போதும் உயர்த் துவதா அல்லது சில தக்பீர்களின்போது மாத்திரம் உயர்த்துவதா அல்லது ஆரம்பத் தக்பீரில் மாத்திரம் உயர்த்துவதா? நிற்கும் நிலையில் இரு கைகளையும் எங்கே வைக்க வேண்டும்: தொப்பு ளுக்கு அருகிலா அல்லது மேலா அல்லது அதனை விட சற்று உயர்த்தியா?... இப்படி தொழுகையிலுள்ள சிறு விபரங்கள் தொடர்பாகத் தோன்றும் முரண்பாடுகள் அனேகமாக சண்டை யிலும் கைகலப்பிலும் பகைமையிலும் கூட சென்று முடிவதுண்டு. ஆனால் இந்நிலை கண்டு நான் மகிழ்ச்சியே அடைகிறேன் என் பதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். இவ்வாறான சிறிய, நுணுக்கமான விவரங்களில் கூட சிலபோது முரண்பாடு தோன்று மளவுக்கு நபிகளாரின் தொழுகையின் வடிவம் பற்றிய செய்திகள் நபித்தோழர்கள் வாயிலாக முழுமையாகவும் விரிவாகவும் ஏராள மான அறிவிப்புகளிலும் வந்திருக்கும் போது எப்படி நாம்

மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியும்? தொழுகை யைத் தவிர இஸ்லாத்தின் அனைத்துச் சட்டங்களும் வானத்திலிருந்து பூமிக்கு இறங்கியவை; தொழுகையை மட்டும் தான் தனது நபி வானத் துக்கு உயர்ந்து வந்து அசல் தெய்வீகப் பிரதியாகப் பெற்று பூமிக்குத் திரும்பி முஸ்லிம்களுக்கு அன்பளிப்புச் செய்ய வேண்டும் என அகிலங்களின் நாயன் விரும்பி யிருக்கிறான்.

எத்துணை அற்புதமான வானுலகப் பரிசு அது!

நமது மூலாதாரப் பனுவல்களில் நிறைந்திருக்கும் இப்புதை யல்கள் நமக்கு இன்பப் பரவசம் ஊட்டுவது மட்டுமன்றி, அவற் றின் நுணுக்கமான சில விபரங்கள் இங்குமங்கும் கருத்துவேறு பாட்டையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அந்தப் பரிசை ரட்சகனிடமிருந்து நேரடியாகப் பெற்று, பெற் றது போன்றே முழுமையாக நம்மிடம் சுமந்து வந்த நபி எப்பேர்ப் பட்ட நம்பிக்கையாளராக இருந்திருக்க வேண்டும்! பேரண்டத் தின் உயர் அடுக்குகளை ஊடறுத்து அல்லாஹ்வின் சன்னிதிக்கு நம்மைச் சுமந்து செல்லத் தக்கதான, -மானிட வரலாற்றிலேயே- மிக அதிசயமானதும் இலகுவானதுமான ஒரு வாகனத்தின் வரை படத்தையும், அதன் தயாரிப் புப் பற்றிய நுணுக்கமான தகவல் களையும் அந்த நபிகளார் நமக்கு அக்கறையோடு நகர்த்தியிருக் கிறார்கள்.

நபிகளார் விண்ணுலக யாத்திரை செய்த இரவில் தமது ரட்சக னிடமிருந்து பெற்ற தொழுகை பற்றிய நுணுக்கமானதும் பூரண மானதுமான வடிவமொன்று இன்றும் நம் மிடம் உள்ளது. அதன் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக -சிலபோது நுணுக்கமான விவரங்கள் தொடர்பாகக் கூட- முஸ்லிம்களது எல்லா சட்ட மரபுப் பள்ளிகளும் உடன்பட்டிருக்கின்றன. இதன் பெறுமதியை உங்களால் உணர முடிகிறதா?

ஒருவர் தான் தொழுகையில் உச்சரிக்கும் வார்த்தைகளும், ஈடுபடும் அசைவுகளும், கடைப்பிடிக்கும் நேர ஒழுங்குகளும்,

தொழுகைக்கு முன்னரும் இடையிலும் பிறகும் மேற்கொள்கின்ற செயற்பாடுகளும் மகத்தான அல்லாஹ்விடமிருந்து அவனது நம்பிக்கைக்குரிய தூதரினால் அதியுச்ச நுணுக்கத்தோடும் நேர்மை யோடும் நகர்த்தப்பட்டவை என உணர்ந்து தொழுகிறார். மற்றொ ருவரோ தான் ஈடுபடும் வணக்கமானது மனிதனை அவனது கடவுளோடு தொடர்புபடுத்தக் கூடிய வழிமுறையொன்றை ஏற் படுத்தும் நோக்கில் மனிதர்கள் தமது அற்ப யத்தனத்தினால் கண்டு பிடித்த ஒரு மானிடக் கிரியையே என அறிந்த நிலையிலும் அதில் ஈடுபடுகிறார். இந்த இருவரது உணர்வு நிலைகளுக்கும் இடையிலான வேறுபாடு உங்களுக்குப் புரிகிறதா?

முஸ்லிம் தொழுகையாளியின் பரவசமும், தொடர்பாடலின் மறுமுனைக்குத் தனது குரல் சென்றடைகிறது என்ற ஆழ்ந்த நம்பிக்கையும், அதனால் கிட்டும் திருப்தியும் மன அமைதியும் அற்புதமானவை. ஏனெனில், தவறு நிகழ முடியாத தெய்வீகக் கருவியொன்றினூடாக அல்லாஹ்வுடன் அவன் தொடர்பாடுகின் றான். அகிலங்களின் ரட்சகனான அல்லாஹ்வே அதனை வடி வமைத்து, இப்படித்தான் நீ தூய்மை பெறவேண்டும்... இந்தத் திசையில் தான் நிற்க வேண்டும்... இப்படித்தான் தயாராக வேண்டும்... இப்படித்தான் தொடங்க வேண்டும்... இதைத்தான் பாராயனம் செய்ய வேண்டும்... இப்படித்தான் இயங்க வேண்டும்... இப்படித்தான் நிறைவு செய்ய வேண்டும்... என அவனுக்கு சொல்லித் தந்திருக்கிறான். இந்தப் பேருணர்ச்சிப் பரவசத்தை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

எல்லாவற்றுக்கும் மேலாக, நமது வாழ்வின் அனைத்து நுணுக்க மான விவகாரங்களையும் உள்ளடக்கும் வகையில் நபிகளாரது வாழ்வியலின் முழு அம்சங்களையும் விபரிக்கும் 'ஸுன்னா' என்ற அம்சம் நம்மிடம் காணப்படுவதன் முக்கியத்துவத்தை சற்றுக் கவனியுங்கள்.

பிற மதங்களில் இத்தகைய -'ஸுன்னா'வுக்கு நிகரான- எதுவும் கிடையாது என்ற உண்மையைப் புரிந்து கொண்டவரால் மட்டுமே

இதன் பெறுமானத்தை உணர்ந்து கொள்ள முடியும். அத்தகைய மதங்களால் தங்களையறியாமலே தாக்கமுற்ற சிலர், ஒரு முஸ்லி முக்கு ஸுன்னா அவசியமில்லை... அல்குர்ஆன் மாத்திரம் போது மானது என்று கூறுவதைப் பார்த்து நான் மிகுந்த ஆச்சர்யம் அடைகிறேன்; அவர்கள் மீது பரிதாபமும் கொள்கிறேன்.

எத்துணை அரிய புதையலொன்றிலிருந்து... எத்துணை தனித் தன்மையிலிருந்து... எத்துணை கதகதப்பான போர்வையொன்றி லிருந்து... எவ்வளவு தெளிவான -பாதுகாப்பான பாதையொன்றி லிருந்து இஸ்லாத்தைக் களைந்து விட இவர்கள் விரும்புகி றார்கள்! அல்லாஹ் தனது சங்கையான வேதத்தின் ஏராளமான வசனங்களில் 'ஸுன்னா' குறித்துப் பேசாதது போலவும், அதனைப் பற்றுறுதியோடு கடைப்பிடிக்கு மாறும், அதன் சொந்தக்காரரைப் பின்பற்றி ஒழுகுமாறும் நமக்கு அழுத்தமாக அழைப்பு விடுக் காதது போலவும் அல்லவா இவர்களது செயல் அமைந்திருக்கிறது?

அவன் கூறுகின்றான்:

> ''இன்னும், தூதர் உங்களுக்குத் தந்ததை எடுத்துக் கொள்ளுங் கள்; தடுத்ததை தவிர்த்துக் கொள்ளுங்கள்''. (அல்-ஹஷ்ர்: 7)

> ''இன்னும், அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள்; தூதருக்கும் கட்டுப்படுங்கள்!'' (அல்-மாயிதா: 92)

மட்டுமன்றி, அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதையும் அவனது தூதருக்குக் கட்டுப்படுவதையும் சமப்படுத்தியும் அவன் கூறி யுள்ளான்:

> ''எவர் தூதருக்குக் கட்டுப்படுகிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு விட்டார்'' (அந்-நிஸாஉ: 80)

தனது நபியின் ஸுன்னாவோடு பிணைந் திருக்குமாறு வலி யுறுத்திய அவன் அந்த ஸுன்னாவை ''அழகிய முன்மாதிரி'' எனவும் நமக்குச் சொல்லித் தருகின்றான்:

> ''அல்லாஹ்வின் தூதரிடம் நிச்சயமாக உங்களுக்கு அழகிய முன்மாதிரி உள்ளது''. (அல்-அஹ்ஸாப்: 21)

இங்குதான் ஸுன்னாவின் முக்கியத்துவம் அதீதமாய் துலங்கு கிறது. தொழுகையின் முக்கியத்துவமும், அதனை அதற்கேயுரிய பரிபூரண அசைவுகளோடும் வசனங்களோடும் நுணுக்கங்களோ டும் நிறைவேற்றுவதன் முக்கியத்துவமும் நன்றாக நமக்குத் தெளிவாவது இங்குதான்.

அந்தத் தொழுகை பரிபூரணமான தெய்வீக செயல்வரைவொன் றின் அசல் பிரதி. அது கனதி மிக்கது; விரைவான தாக்கம் கொண்டது; குறுகிய கால அளவுடையது; நம்மை மீண்டும் மீண்டும் செயல்வரைவுப் படுத்துவதற்காக தினமும் ஐந்து தடவை நிறைவேற்றப்படுவது. இரவிலும் பகலிலும் நமது வாழ்வு என்ற கணினிக்குள் ஊடுருவக் கூடிய எத்தகைய 'வைரஸ்'களையும் அழித்தொழிக்கப் போதுமானளவு திரும்பத் திரும்ப அதனை நாம் நிறைவேற்றுகிறோம். நம் மீதும் நமது மாசற்ற இயல்பின் மீதும் தாக்குதல் தொடுக்கின்ற நெறிபிறழ்வு என்ற வைரஸை தடுக்கும் காவற் சுவரை (Fire Wall) நமக்கு அது ஏற்படுத்தித் தருவதோடு, நமது லோகாயத வாழ்வின் திசையெங்கும் பற்றியெரிகின்ற பாவங் களையும் துன்பங்களையும் கூட அணைத்து விடுகிறது:

''நீங்கள் பற்றியெரிகிறீர்கள்... பற்றியெரிகிறீர்கள்..!

ஆனால் உங்கள் வைகறைத் தொழுகை அதனை அணைத்து விடுகிறது.

பிறகும் பற்றியெரிகிறீர்கள்... பற்றியெரிகிறீர்கள்..!

ஆனால் உங்கள் நண்பகல் தொழுகை அதனை அணைத்து விடுகிறது.

பிறகும் பற்றியெரிகிறீர்கள்... பற்றியெரிகிறீர்கள்..!

ஆனால் உங்கள் பிற்பகல் தொழுகை அதனை அணைத்து விடுகிறது.

பின்னரும் பற்றியெரிகிறீர்கள்... பற்றியெரிகிறீர்கள்..!

ஆனால் உங்கள் மாலைநேரத் தொழுகை அதனை அணைத்து விடுகிறது.

*பின்னரும் பற்றியெரிகிறீர்கள்... பற்றியெரிகிறீர்கள்..!*

*ஆனால் உங்கள் முன்னிரவுத் தொழுகை அதனை அணைத்து விடுகிறது.*

*அதன் பிறகு தூங்கச் செல்கிறீர்கள். காலையில் கண் விழிக்கும் வரை உங்கள் மீது பாவம் எதுவும் எழுதப்பட்டிருக்காது.'*[3]

'முஸ்லிம்கள் தினமும் ஐந்து தடவை தொழுகிறார்கள் என்பது உண்மையா?' என ஜப்பானிய மருத்துவ யுவதியொருவர் என்னிடம் கேட்டார். நான் 'ஆம்' என்றதும், திகைப்பும் ஆட்சேபிக்கும் பாவனையும் கொண்ட தொனியில் அவர், 'எப்படி உங்களால் அது முடிகிறது? அது மிக அதிகமில்லையா?' எனக் கேட்டார். நான் கேட்டேன்: ''நீங்கள் ஒரு மருத்துவர். உங்கள் பணியின் போது ஏராளமான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கிறீர்கள். இதன்போது தினமும் எத்தனை தடவை உங்கள் கைகளைச் சுத்தம் செய்து கொள்கிறீர்கள்?'' அதற்கு, 'முப்பது... ஐம்பது...' எனக் கூறிக் கொண்டே என்னைப் பார்த்தார். நான் கூற வருவதை அவர் புரிந்து கொண்டார் என்பதை அவரது பார்வை யிலேயே படிக்க முடிந்தது.

*''எழுந்து தொழுவீராக; ஏனெனில் தொழுகையில் நிவாரணம் உள்ளது''.*[4]

'வைரஸ்'களால் நிறைந்தது நம்மைச் சூழ உள்ள வாழ்வு. இச்சையின் தூண்டுதல்கள், மோக மயக்கங்கள், மனிதப் பல வீனங்கள், நெறிபிறழ்வுகள், ஷெய்த்தானிய ஊசலாட்டங்கள்... என ஏராளமான வைரஸ்கள். இந்த அனைத்தையும் சுத்தி செய்வது தண்ணீரல்ல; தொழுகை. தண்ணீர் நமது புற உடலைத்தான் சுத்தம் செய்யும். அகமியத்தைத் தூய்மைப் படுத்த முடிந்த சாதனம் தொழுகைதான்.

---

3) 'ஸஹீஹ் அல்-தர்ஈப்' இல் அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

4) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. பதிவு செய்தவர்: இப்னு மாஜா.

எனவே ஒரு தொழுகையாளி எந்த மாற்றத்தையும் தனக்குள் உணராமல், அல்லது தன்னில் ஒட்டியிருந்த பல பாவக்கறைகளி லிருந்து விடுபட்ட உணர்வைப் பெறாமல், அல்லது தான் புதிதாகப் பிறந்திருப்பதாக உணராமல் தொழுகையிலிருந்து -நுழைந்தது போன்றே- வெளிவருவாராயின், அவர் அந்தத் தொழுகைக்கான மீள்செயல்வரைவு வட்டினை (Reprogramming Disc) உரிய முறை யில் செயற்படுத்தவில்லை என்பதே அதன் பொருள். ஏனெனில், அவரது அகத்தின் ஆழத்தில் 'வைரஸ்கள்' இன்னும் அகற்றப் படாமல் அப்படியே உள்ளன. இந்நிலையில், தொழு கைக்கு முன்னர் காணப்பட்ட பலவீனங்களையும் விகாரங்களையும் பிறழ் வையும் நோக்கியே அவர் மீண்டும் வந்து சேர்கிறார்.

ஒரு தொழுகையாளியின் வாழ்வையும் தொழாதவரின் வாழ் வையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, தொழாதவர் மீது அனு தாபமே ஏற்படுகிறது. ஏனெனில், தினமும் வாழ்வில் எதிர்கொள் ளும் துன்பங்களிலும் சோதனைகளிலும் எதிர்பாராத நிகழ்வு களிலும் அவருக்கு உறுதுணையாக இருக்கக் கூடிய மிக முக்கிய மான ஆயுதத்தை அவர் இழந்து நிற்கிறார். அத்தகைய நிகழ்வு களும் சோதனைகளும்தான் எத்தனை? மறுபுறத்தில், தொழுகை யாளியை -உண்மையான தொழுகையாளியை- பார்க்கும்போது நமக்கு ஆச்சரியம் மேலிடுகிறது; எத்தனை துன்பங்கள் அடர்த்தி யாய் திரண்டு வந்தாலும் அவரது முகத்தில் எப்போதும் ஓர் ஒளி விகசித்துக் கொண்டே இருக்கும். எத்தனை சோதனைகள் அவர் மீது இடியாய் இறங்கினாலும், அன்பும் பணிவும் மென்மையும் குடி கொண்டிருக்கும் அவரது கண்களைப் பார்க்கும் போது நாம் குழம்பித்தான் போகிறோம்!

சுற்றியுள்ள மனிதர்களை அவதானித்துப் பாருங்கள்; தொழுகை யாளியை பிறரிடமிருந்து இலகுவாக உங்களால் பிரித்தறிந்து விட முடியும். தொழுகையாளியின் கண்களில் எப்போதும் தவழுகின்ற அந்தக் கிருபைதான் தொழுகையாளிகளது முகங்களின் ஸுஜூதின் 'அடையாளம்' இருப்பதாகப் பேசும் இத்திருவசனம் சுட்டுகிறது போலும்:

> *‘‘அல்லாஹ்வின் அருட்கொடையையும் திருப்தியையும் நாடி ‘றுகூ’இலும் ‘ஸுஜூ’திலும் இருப்போராக அவர்களை நீர் காண்பீர். ஸுஜூதின் தாக்கத்தினால் அவர்களது முகங்களில் அவர்களுக்கேயுரிய அடையாளம் இருக்கும்’’.*
> *(அல்-ஃபத்ஹு: 29)*

நம்மில் பலர் வசதியாகப் புரிந்து வைத்திருப்பது போன்று, சில மனிதர்களது நெற்றியில் தெரியும் கறுப்பு அடையாளமல்ல இது; ஏனெனில் இங்கு நாடப்பட்ட பொருள் அதுவாகத்தான் இருக்குமெனில், ‘‘அவர்களது நெற்றிகளில்’’ என வந்திருக்க வேண்டும். தொழுகையாளி மட்டுமே தனது முகத்தில் பெறக் கூடிய விரிந்த பிரகாசத்தைத்தான் இவ்வசனம் குறிக்கிறது. ஒரு சக விசுவாசி தனது ‘சாமுத்திரிகா’ (Physiognomy) அறிவால் தொழுகையாளியின் முகத்தில் அதனை நிச்சயம் கண்டுகொள்வான் (அல்லாஹ்வே எப்போதும் நன்கறிந்தவன்!).

நம்மிடம் வேண்டப்பட்டுள்ள வணக்கங்கள் தொழிற்பாட்டிலும் கால அளவிலும் வேறுபட்டிருந்த போதிலும், அவையனைத்தும் யதார்த்தத்தில் நம்மை மீள்செயல்வரைவுப்படுத்தும் ஏற்பாடுகளே.

நோன்பு என்பது நமது ஆன்மா என்ற கணினியில் நீண்ட நேரம் ‘பதிவிறக்கம்’ செய்யப்படுகின்ற ஒரு நீண்ட செயல்வரைவு (Program). அதன் தாக்கத் திறனும் மிக நீண்டது: அதனைப் பதிவிறக்கம் செய்ய ஒரு மாத காலம் தேவை. ஆனால் அதன் செயல்திறன் முழுமையாக ஓராண்டு நீடிக்கக் கூடியது.

கடந்த வருடம் முழுவதும் ‘வைரஸ்’களால் நிறைந்திருந்த நமது இச்சைகளை நோன்பின் மூலமாக நாம் மீள்நிரற் படுத்துகிறோம்; கால ஓட்டத்தில் ஷெய்த்தானின் தூண்டல்களுக்கு முன்னால் பலவீனப்பட்டிருக்கும் நமது பார்வையை மீள்நிரற்படுத்துகிறோம்; கடந்து சென்ற மாதங்களில் சரியானதையும் தவறானதையும் அனுமதிக்கப்பட்டதையும் தடுக்கப்பட்டதையும்

நல்லதையும் கெட்டதையும் சத்தியத்தையும் அசத்தியத்தையும் கலந்து பேசிய நமது நாவை மீள்நிரறப்படுத்துகிறோம்; ஓராண்டு காலப் பகுதியில் பல்வேறு வடிவிலான சாத்தானிய நோய்களின் ஊடுருவலால் இரக்கம், உண்மை, நீதி, நல்லெண்ணம், திருப்தி, போதுமென்ற மனம், பணிவு, பொறுமை, உபகாரம், நன்றி யுணர்வு, ஈமானின் சுவை, அழகிய சொல்லாடல் முதலிய வற்றைப் பறிகொடுக்கும் நிலையிலிருந்த நமது ஆன்மாக்களை மீள் நிரறப்படுத்துகிறோம்.

ஹஜ் கிரியையின் பணியும் இதுதான். ஆனால் அது முன்னை யதை விட அதிக காலமும் ஆழமும் கொண்டது. உரிய முறையில் நிறைவேற்றப்படும் ஹஜ் பெற்றுத் தருகின்ற கூலி வேறெதிலும் கிடைக்காது. எவரது ஹஜ்ஜை அல்லாஹ் அங்கீகரிக்கின்றானோ அவர் தனது பாவங்களிலிருந்து விடுபட்டு, -நபிகளார் (ஸல்) வாக்களித்தது போல்- 'அன்று பிறந்த குழந்தையாய்' மாறுகிறார்.

இந்த வகையில்தான், அன்றாட வாழ்வின் ஷெய்த்தான்கள் ஒரு நாளில் தொடுக்கும் தாக்குதல்களின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் அன்றைய தொழுகைகளின் நேரமும் அடுத்தடுத்து வேகமாக நெருங்கி வரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது; முதலில் ஃபஜ்ர் தொழுகையை தொழு கிறீர்கள். பின்னர் ளுஹர் தொழுகையில் ஈடுபட பாதிப் பகல் பொழுது காத்திருக்கிறீர்கள். ஆனால் அடுத்து வரும் கால அவகாசம் முன்னரை விடக் குறுகியது; ஏனெனில் பின் அரைப் பொழுதின் பாதியிலேயே அஸர் தொழுகை; மறுபாதியின் முடி வில் மஃரிப் தொழுகை; பிறகு சுமார் ஒரு மணி நேரத்திலேயே இஷா தொழுகை. பிறகு தூங்கச் செல்கிறீர்கள்.

தொழுகையின் தனித்தன்மை இதுதான். அதன் நேரங்கள் அடுத்தடுத்து நெருங்கி வருவது மட்டுமன்றி, தினமும் ஐந்து தடவை திரும்பத் திரும்ப வருவதன் ரகசியங்களுள் இதுவும் ஒன்று.

*இப்போது சொல்லுங்கள்: இந்த ஆயுதத்தைப் போன்று வினைத்திறனும், குறி தவறாத நுணுக்கமும், வெற்றி குறித்த உத்தரவாதமும், எதிர்பார்க்கத்தக்க பெறுபேறும் கொண்ட ஆயுத மொன்றை உலகின் எந்த அதி நவீனத் தொழிற் சாலையில் கண்டு கொள்வீர்கள்?*

# தொழுகையின் லயமும் வாழ்வின் லயமும்

குளிர் காலத்தில் மனிதன் கதகதப்பைத் தேடுகிறான்; கோடையில் குளிர்ச்சி தேடுகிறான்; நோய்க்கு மருந்து தேடுகிறான்; பசிக்கு உணவு தேடுகிறான்; தாகித்தால் தண்ணீர் தேடுகிறான்; சந்தடியில் அமைதி தேடுகிறான்; அச்சத்தில் அபயம் தேடுகிறான்...

வாழ்வுச் சக்கரம் விரைவாக சுழன்று கொண்டிருக்கிறது. அதிலும் இன்றைய இயந்திர, இலத்திரனியல் யுகத்தில் அது இன்னும் படுவேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்தச் சக்கரம் நம்மை மிதித்து, அதன் கடின மான இரும்புப் பற்கள் நம்மைப் பதம் பார்த்து விடாமல் பாதுகாக்கும் அபயமாக நமது தொழுகை விளங்க வேண்டுமாயின், அது நமக்குத் தரும் எதிர்ச் சக்கரம் அதிக அமைதியும் சாந்தமும் தளர்வும் கொண்டதாய் அமைவது அவசியம்.

நமது அன்றாட வாழ்வு சுழலும் அதே அசுர வேகத்தில் -சிலபோது பைத்தியக்காரத் தனமான வேகத்தில்- நமது தொழுகையும் நகர்ந் தால் என்ன நிகழும் என்பதை கற்பனை செய்து பார்த்திருக்கிறீர்களா? அப்படியொரு நிலை ஏற்படுமானால் -பலருக்கு நிகழ்வது போன்று- தொழுகையும் ஏனைய பல இயந்திரத் தனமான சுமைகள் போன்ற சுமையொன்றாக மாறித் தான் போகும்; மேலதிக நேரத்தையும், யத்தனத்தையும்,

இயக்கத்தையும், சகிப்புத் தன்மையையும் வேண்டுகின்ற சுமை யாக அது நம் தோள்களில் கனக்கத் தொடங்கி விடும். இந் நிலையில், அதனையும் பிற இயந்திரத்தனமான செயல்களைப் போன்று மிக விரைவாக முடித்துக் கொள்ளவே முயற்சிப்போம்.

மட்டுமன்றி, எந்த விதத்திலும் உற்சாக மளிக்காத இத்தகைய பெறுபேற்றினால் நமது வாழ்வின் மற்றுமொரு இயந்திரத்தன மான இந்தக் 'கடமை'யை முற்றாக ரத்துச் செய்து விடவும் சிலபோது முயற்சிப்போம். ஏனெனில், இந்த வகையான நெரிசல் மிக்க 'கடமைகளை' நிறைவேற்ற நமது வாழ்வில் அதிக நேரம் இருப்பதில்லை. முஸ்லிம்களில் பலருக்கு உண்மையில் நடப்பது இதுதான்!

மாற்றத்தை ஏற்படுத்துவது ஆரம்பத்தில் அவ்வளவு எளிதாக இருக்காது என்பதை நானறிவேன்; ஆயிரம் சோலிகளும், கடமை களும், பொறுப்புகளும், நிகழ்ச்சிகளும், கூட்டங்களும், விஜயங் களும், வரவேற்புகளும், படிப்புகளும், தீர்மானங்களும் வாசலில் காத்திருக்கும் போது எப்படித்தான் நாம் ஆற அமரத் தொழ முடியும்?

ஆனால் மறுபுறத்தில்...

தொழுகையின் அண்டப் பெருவெளியில் சஞ்சரிக்கத் தயாராகும் போது நாம் சிந்திக்கும் முறை உண்மையாகவே இப்படித்தான் இருக்குமாயின், அந்தத் தொழுகையின் விண்கலம் வளிமண்ட லத்தைக் கடந்து ஒரு போதும் பயணிக்க முடியாது; மட்டுமன்றி புறப்பட முன்பே அது எரிந்து சாம்பலாகி விடும். அப்போது நமது நிலை இறைத்தூதர் (ஸல்) பின்வருமாறு கூறிய நபரின் நிலை போன்றாகி விடும்:

''திரும்பிப் போய் தொழுவீராக; ஏனெனில் நீர் தொழவே இல்லை!''[1]

---

1) அறிவிப்பவர்: அபூஹுறைறா. பதிவு செய்தவர்: புஹாரி.

இந்த அடிப்படையில்தான், -ஏலவே நாம் கூறியது போல்- பகல் நேரத் தொழுகை சப்தமிட்டுப் பாராயனம் செய்யாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த மௌனப் பண்பின் மூலமாக சந்தடி நிறைந்த பகல் வாழ்வின் உச்ச ஸ்தாயிக்கு எதிர்நிலை அங்கு பேணப் படுகிறது; பகல் பொழுதில் மனிதர்களது ஓசைகள், சூரியஒளி, வெப்பம், நம்மைச் சூழவுள்ள இயக்கம், செயற்பாடுகள், உழைப்பையும் லோகாயத தேட்டத்தையும் நோக்கிய உத்வேகம், நெரிசல், அலைச்சல் முதலிய அனைத்தும் உச்ச ஸ்தாயியில்தான் இருக்கும்.

இரவு நேரத் தொழுகையோ நிசப்தம், அமைதி, இருள், அந்தரங்கப் பண்பு, வாழ் வியல் தேட்டங்கள் மீதான யத்தனங்களின் மந்தகதி, வாழ்வு யந்திரத்தின் இரைச்சலான சுழற்சி நின்றிருத்தல் என்பவற்றுடன் முரண் நிலையாக ஒத்திசையும் வகையில் சப்தமான பாராயனம் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக ஆன்மாக்கள் என்னும் நெகிழ் வுத்தன்மை கொண்ட பாத்திரங்களின் வெறுமை நிரப்பப்பட்டு சமநிலை பேணப்படுகிறது; வாழ்வின் லயம் சீராக பாதுகாக்கப்படுகிறது; ஒலியும் விம்பமும் இயக்கமும் நியமப்படுத்தப்பட்டு உளச் சமநிலை பெற்றுத் தரப்படுகிறது.

இஷா தொழுகையுடன் அன்றைய நாளை நிறைவு செய்கிறீர்கள். நீளமான, பல்வேறுபட்ட செயற்பாடுகள் கொண்ட தொழுகை அது. நான்கு நீளமான 'றக்அத்'துகள். உங்கள் குரலால் அல்லாஹ்விடம் வெளிப்படையாக மன்றாட இடம் விட்டு பகல் பொழுது பின்வாங்கிக் கொண்டதால், முதல் இரண்டு 'றக்அத்'துகளை இரவின் அமைதிக்கும் அந்தரங்கத் தன்மைக்கும் எதிர் இசைவாக சத்தமிட்டுப் பாராயனம் செய்து நிறைவேற்றுகிறீர்கள்.

இஷாவுக்குப் பிறகு இரண்டு 'றக்அத்' ஸுன்னத்தான தொழுகை. அதன் பிறகு ஒன்றாக அல்லது பலவாக அமையக் கூடிய 'வித்ரு'த் தொழுகை. ஒன்றாக அல்லது மூன்றாக அல்லது ஐந்தாக அல்லது

இன்னும் அதிகமாக ஆக்கிக் கொள்ளும் சுதந்திரம் உங்களுக்கு அதில் உள்ளது. -நமது பிற பல வணக்கங்களிலும் தரப்பட்டிருப்பது போன்ற- இத்திறந்த நிலை எண்ணிக்கை, தொழுகையை நீட்டிக் கொள்வதற்கான நெகிழ்வுத் தன்மை கொண்ட சலுகையே. பகற்பொழுதின் அழுக்குகளின் சுமைக்கேற்பவும், இரவுச் சாத்தான்களது ஊசலாட்டங்களிலிருந்தும் தாக்குதல்களிலிருந்தும் தற்காத்துக் கொள்ள வேண்டிய தேவைக்கேற்பவும் பொருத்தமான வகையில் தொழுகையை நீட்டியமைத்துக் கொள்ளவே இந்த ஏற்பாடு.

‘ஃபர்ழு’த் தொழுகை எங்கெல்லாம் அதிகமான ‘றக்அத்’துகளுடன் அமைக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் ‘ஸுன்னத்’ தொழுகையும் அதிகமாக்கப்பட்டிருப்பதையும், எங்கெல்லாம் குறைவான எண்ணிக்கையில் அமைக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் ‘ஸுன்னத்’ தொழுகையும் குறைவாக அமைக்கப்பட்டிருப்பதையும் கவனிக்கத் தவறாதீர்கள். ஒவ்வொரு தொழுகையிலும் உள்ள ‘றக்அத்’துகளின் எண்ணிக்கை நமது வாழ்வியல் நிலைமைகளின் போக்குடன் பொருந்தி வரவேண்டிய தேவையை இது ஓரளவு விளக்குகிறது. அதாவது, பகலில் அல்லது இரவில் அல்லது அவ்வப்போது நம்மைக் கடந்து செல்லும் நெருக்கடிகளில் அல்லாஹ்வுடனான தொடர்பு எந்தளவு நமக்கு அவசியமாகிறதோ அதற்கேற்பவே அவை அமைக்கப்பட்டுள்ளன.

# பல்வகைத் தன்மை: முதல் நாகரிகப் பாடம்

'றக்அத்'துகளின் எண்ணிக்கை, அசைவுகள், பாராயனங்கள், நேரங்கள், பெயர்கள், வகைகள் என நமது தொழுகைகள் வேறு பட்டனவாய் அமைக்கப்பட்டிருப்பது ஏன் என்று -நான் யோசித் தது போன்றே- நீங்களும் யோசித்திருக் கிறீர்களா? ஏனைய பல மதங்களின் தொழுகைகள் போன்று நமது தொழுகைகளும் ஏன் ஒரே வடிவத்திலும் ஒரே அளவிலும் அமையவில்லை? ஏன் இந்த வகைப்பாடும் 'சிக்கல்களும்' 'சிரமங்களும்' 'குழப்பங்களும்'? ஃபஜ்ரு, ளுஹர், அஸர், மஃரிப், இஷா ஆகிய தொழுகைகளின் 'றக்அத்' எண்ணிக்கை வேறு பட்டிருப்பது ஏன்? ஃபர்ழு, ஸுன்னத், வித்ரு தொழுகைக்களுக்கிடையிலும் இந்த வேறுபாடு ஏன்? முன்னைய ஸுன்னத், பின்னைய ஸுன்னத், வற்புறுத்தப் பட்டது, வற்புறுத்தப்படாதது, பகலில் தொழப்படுவது, இரவில் தொழப்படு வது, அந்தரங்கமானது, பகிரங்கமானது, கூட்டாகத் தொழப்படுவது, தனியாகத் தொழப்படுவது... என்றவாறான பாகு பாடுகள் எதற்கு?

மொத்தத்தில், இவையனைத்தும் மிகக் கடினமான, உயர்ந்த தரத்திலானதொரு பாடநெறி போன்றும், ஒருவர் எவ்வாறு தொழு வது என்பதை அறிந்து கொள்ள இப்பாடநெறியை முழுமையாக வும் திறம்படவும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பது போலவும்

தோற்றமளிப்பது ஏன்? இது சிறுவர்களுக்கும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் பாமரர்களுக்கும் சிரமம் இல்லையா? வாசிக்கவோ எழுதவோ தெரியாதிருந்த ஒரு சமூகத்தின் மீது இஸ்லாம் இறங்கியிருக்க, இது நிகழ்ந்தது எப்படி?

இந்தக் கேள்விகளுக்குப் பின்னால் மறைந் திருக்கும் மிகப் பெரிய தெய்வீக நோக்கத்தை நமது குறையறிவினால் முழுமை யாகப் புரிந்துகொள்ள முடியாது. எனினும், அல்லாஹ் நமக்கு நாடியிருப்பதில் மறைந்துள்ள தீர்க்கமான நோக்கங்கள் பற்றி 'சிந்திக்கவும்' 'ஆராயவும்' 'நல்லறிவு பெறவும்' முஸ்லிம்களாகிய நாம் ஏவப்பட்டிருக்கிறோம். இதன் மூலம், அந்த நோக்கங்களில் சிலவற்றையேனும் நாம் கண்டு கொள்ளக் கூடும்.

அன்றிருந்த அறபிகள் ஒரு கடிதத்தின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு அதனை வாசிக்கத் தெரிந்த ஒருவரை பிரயாணம் செய்து கண்டுபிடிக்க வேண்டிய நிலையிலேயே இருந்தனர். அத் தகைய நிலையிலிருந்த சமூகம் இன் றைய கணினி யுகப் புரட்சி யை விட வேகமாக மொழி, இலக்கணம், உருபனியல் (Morpho logy), அகராதியியல், அணியிலக்கணம், இலக்கியத் திறனாய்வு, அல்குர்ஆன் விளக்கவுரை, அல் குர்ஆன் பாராயன முறைகள், ஹதீஸ், சட்ட விளக்கம், நபிகள் சரிதை, ஹதீஸ் அறிவிப்பாளர் திறனாய்வு, நிலவியல், வரலாறு, புவியியல், மெய்யியல், தர்க்கம், மருத்துவம், வானியல், கணக்கியல், கணிதவியல் என ஏராளமான கலைகளை உருவாக்கும் நிலைக்கு மாறியது. எப்படி இஸ்லாம் இரண்டு அல்லது மூன்று தசாப்த காலம் கழிவதற்கு முன்பே அவர்களில் இந்த ராட்சத மாற்றத்தை ஏற்படுத்தியது என -முஸ்லிம்கள் உட்பட- உலகமே இன்று வியந்து நிற்கிறது.

நாகரிகங்களின் வரலாறு முன்னரோ பின்னரோ கண்டிராத அதிசய வேகத்தில் இஸ்லாமிய நாகரிகம் இவ்வாறு பரிணமித்த தில் தொழுகை என்ற வணக்கம் வகித்த பாத்திரம் மிக முக்கிய மானது எனலாம்.

தொழுகையின் அசைவுகள், அவற்றில் கூறப்படும் வசனங்கள், மொழிதல் முறைகள், நேரங்கள், வடிவங்கள், 'றக்அத்' எண்ணிக் கைகள், அவற்றின் வகைகள் என்பவற்றின் சவால் மிகுந்த வகைப்பாடுகள் முஸ்லிம் குழந்தையின் மூளை பயிற்றுவிக்கப் படும் முதல் பாடசாலையாக அமைகிறது. சிந்தித்தல், மனன மிடல், பகுப்பாய்தல், புத்தாக்கம் என்பவற்றுக்கு மூளையின் 'ஸெல்'களை விரிவுபடுத்தித் தயார்செய்யும் வகையிலான தூய அப்பியாசங்களை தொழுகை வழங்குகிறது. சிந்தனைகளை எவ் வாறு ஒழுங்கமைப்பது? அவற்றின் உட்பிரிவுகளை எவ்வாறு கிளை பிரிப்பது? விடயதானங்களை தலைப்பு வாரியாக எவ்வாறு நிரற்படுத்துவது? அவற்றின் உள்ளடக்கத்தை எப்படி பகுப்பாய்வு செய்வது? அதன் தொடராக புதிய கலைகளையும் நாகரிகத்தின் புதிய திசைவழிகளையும் எங்கனம் கண்டடைவது?... என் பதை யெல்லாம் நமது குழந்தைகளின் மூளை இந்தப் பாடசாலை யிலிருந்தே கற்றுக் கொள்கிறது.

இத்தகைய கற்பித்தல் பொறிமுறையினூடாகத்தான் இஸ்லாம் எழுத்தறிவற்றிருந்த அந்தச் சமூகத்தை சிந்தனையிலும், கலாசாரத் திலும், அறிவியல் கலைகளிலும், விழுமியங்களிலும் பரிபூரண மான நாகரிகமொன்றை நோக்கி நகர்த்தியது. அந்த நாகரிகத்தை 'சாம்ராஜ்யம்' என்ற பெயர் கொண்டு அழைக்க நான் விரும்ப வில்லை. ஏனெனில், மங்கோலியர்கள், தாத்தாரியர்கள் போன்ற எத்தனையோ சாம்ராஜ்யப் பேரரசுகள் தெரிந்து வைத்திருந்ததெல் லாம் படையெடுப்பையும் போரையும் கொலையையும்தான்!

மேற்குலகில் ஒரு மாணவன் ஐந்து வயதில் பாடசாலையில் நுழைகிறான். பெரும்பாலான அறபு, இஸ்லாமிய நாடுகளில் அந்த வயதெல்லை ஆறு. ஆனால் இஸ்லாத்தின் பாடசா லை யிலோ அவன் ஏழு வயதில் நுழைகிறான். நமது குழந்தைகளை தொழும்படி ஏவுமாறு நமக்குக் கூறப்பட்டுள்ள வயது அதுதான்.

அறிவு, சிந்தனை, கலாசாரம், நாகரிகம், கட்டுமானம் என்ப வற்றுக்கான அந்தப் பாடசாலையில் ஒவ்வொரு முஸ்லிமும்

அத்தகைய ஆரம்ப வயதிலேயே நுழைந்து விட வேண்டும் என்பதுதான் பல்வகைத் தன்மை கொண்ட தொழுகை உணர்த் தும் பொருளாகும். பாடசாலை என்ற பதம் தருகின்ற பொறுப் புணர்வு, புரிதல், மனனம், தயார்நிலை, உயர் சித்திக்கும் புத்தாக்கத்துக்குமான திட்டமிடல் முதலிய அனைத்துப் பொரு ளிலும் அது நிகழ வேண்டும். அந்த வகையில், இதற்கு மேலும் அங்கு பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டு வந்த அறியா மையோ படிப்பறிவின்மையோ சோம்பலோ தளர்வோ பின் னடைவோ அறிவீனத்திடம் சரணாகதி அடையும் பலவீனமோ இருக்கக் கூடாது. நீங்கள் முஸ்லிம் எனில், நீங்கள் கற்ற மனிதர்; நீங்கள் முஸ்லிம் எனில், நீங்கள் நாகரிமடைந்த மனிதர்.

இஸ்லாத்தின் பாடசாலையில் நீங்கள் திறம்படக் கற்று, சித்தி யடைந்து, அப்பியாசம் செய்து வாழ்வில் கடைப்பிடிக்க வேண் டிய முதல் பாடம் தொழுகையே. அந்தத் தொழுகையின் எண் ணிக்கைகள், வேளைகள், பெயர்கள், வகைகள், வடிவங்கள், அசைவுகள், வசனங்கள், நிபந்தனைகள், அதில் அனுமதிக்கப் பட்டவை, தடுக்கப்பட்டவை முதலிய அனைத்தையும் நீங்கள் மனனமிட்டிருக்க வேண்டும்; அப்பால் -ஓர் உண்மை முஸ்லிமாக இருக்கத் தக்க வகையில்- அதனை வாழ்வில் செயற்படுத்தவும் வேண்டும். இத்தகு நடைமுறையானது இன்று நமது பாடசாலை களிலும் பல்கலைக்கழகங்களிலும் நிகழ்வதற்கு மாற்றமானது என்பது வெளிப்படை. ஏனெனில், இக்கலா நிலையங்களில் இன்று மாணவன் மேற்கொள்ளும் கல்வியும் படிப்பும் மனனமும் அந்தக் கட்டத்தி லிருந்து வெளியேறிய மாத்திரத்திலேயே நடை முறை வாழ்விலிருந்து -அனேகமாக- காணாமல் போய் விடுகின் றன. அக்கல்வியால் அவன் பெற்ற சான்றிதழ் ஒரு வேலையை அல்லது வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்வதற்கு உதவும் சாதனம் என்ற எல்லையுடன் நின்று விடுகிறது.

இஸ்லாத்தின் பாடசாலையில் முதல் பாடமான தொழுகை யானது அல்குர்ஆன், அதன் திருத்தமான பாராயனம், மனனம்,

நபியவர்களது ஹதீஸ்களை மனனமிடல் முதலிய பாடங்களுடன் ஒன்றாக இணைந்து செல்லும் பண்புடையது. இந்நிலை ஒரு முஸ்லிம் குழந்தையை சுயாதீனமாகவே பிற இஸ்லாமியக் கலைகளைக் கற்கும் நிலைக்குக் கொண்டு செல்கிறது; புரிந்து கொள்ள வேண்டியதை புரிந்துகொள்ளவும், மனனமிட்டுப் பாது காக்க வேண்டியதை மனனமிடவும் வழி காட்டுகிறது. அதன் பிறகு அவன் வாழ்வியல் கலைகளை கற்கவும், அதில் ஆழ்ந்து செல்ல வும், அதன் ரகசியங்களைக் கண்டடையவும் வழிபிறக்கிறது.

தொழுகை என்பது முஸ்லிமைப் பொறுத்த வரை ஒரு கலாசா ரம்; அறிவியல்; நாகரிகம். இல்லையெனில், தொழுகையின் மீது கட்டமைந்த குடும்பத்தில் வளர்ந்த மாணவர்கள் -அநேக சந்தர்ப் பங்களில்- தொழுகையற்ற குடும்பத்தில் வளர்ந்த மாணவர்களை விட உயர் சித்தி பெறுகின்ற வெளிப்படையான உண்மையை எப்படி வியாக்கியானப்படுத்த முடியும்?

ஆயினும், தொழுகையிலுள்ள இப்பல்வகைத் தன்மைக்கு நாகரிகப் பணி தவிர்ந்த மற்றோர் அடிப்படையான பணியும் உண்டு. மிக முக்கியமான பணியும் அதுவே. உள்ளச்சத்தை ஏற் படுத்துதல் என்பதே அப்பணி!

## உள்ளச்சத்தை ஏற்படுத்தும் பல்வகைத் தன்மை

ஒரே விதமாக திரும்பத் திரும்ப செய்தல், சகட ஓட்டம், இயந்திரத் தனமான இயக்கம் என்பன நாளடைவில் கவனக் குவிவை இழக்கச் செய்து, சிந்தனையைச் சிதறடித்து விடுகின்றன; சிலபோது உறக்க நிலைக்கும் கொண்டு செல்கின்றன.

அகன்றும், நேர்கோட்டில் நீண்டும் கிடக்கும் சாலைகளில் மாறாத வேகத்தில் வெகுநேரம் வாகனத்தைச் செலுத்தும் போது எவ்வாறு தூக்கமும் சலிப்பு நிலையும் உங்களை ஆட்கொள்கின் றன என்பதைக் கவனித்திருக்கிறீர்களா? தொழுகையில் உள்ளச் சம், ஆழ்ந்த ஈடுபாடு, தொழுகை உணர்த்தும் பொருள்கள் பற்றிய உணர்வார்ந்த சிந்தனை என்பவற்றினூடாக அல்லாஹ்வைச் சென்றடைவதற்குத் தடையாக இருக்கும் முதல் எதிரி, பரிச்சயத் துக்கும் பழக்கத்துக்கும் அடிமையாகிப் போவதும் தொழுகை யின் பன்முகத் தன்மையை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளாமையும்தான். பல்வேறு வளைவுகளும் அடிக்கடி ஏற் படும் திருப்பங்களும் கொண்ட உயிரோட்டமான தெருக்களை விடுத்து, 'செப்பனிடப்பட்ட நேர்பாதையில்' மாத்திரமே பிடி வாதமாகப் பயணம் செய்வது இலக்கை நோக்கிய அடைவைத் தடுத்து விடுகிறது.

ஐவேளைத் தொழுகைகளிலுள்ள 'றக்அத்'களின் எண்ணிக்கை வேறுபாடு, அந்தத் தொழுகைகளின் நேர வித்தியாசம், பாராயனம் செய்யப்படும் முறையிலுள்ள வேறுபாடு, உடல் அவயவங்களின் வேறுபட்ட நிலைகளும் அசைவுகளும், ஒவ்வோர் அசைவுக்கும் ஏற்ற வகையில் வித்தியாசமான வாசகங்கள்... முதலிய இந்த அனைத்து மாறுபட்ட அப்பியாசங்களும் சேர்ந்து நமது கவனச் சி தறலையும், என்ன சொல்கிறோம் என்பதை உணராது எங்கோ பார்வை வெறித்த படி இயங்குவதையும் தடுக்க வல்லவை; சகட ஓட்டத் தன்மையையும் உயிர்ப்பின்றிப் போகும் நிலையையும் நமது உள்ளங்களிலிருந்து விலக்க வல்லவை.

அந்த வகையில், தொழுகையில் நாம் மொழிவதை உணர்ந்து மொழியவும், உள்ளச்சத்தையும் அல்லாஹ்வுடனான தொடர்பு பற்றிய உணர்வையும் இன்னும் அதிகமாக ஈட்டவும் அவை கார ணமாகின்றன. மட்டுமன்றி, -முன்னர் குறிப்பிட்டது போன்று- மானிட நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் பாடங்களை மேலும் மேலும் கற்பதற்கு நமது சிந்தையை தயார்படுத்தும் அற்புதமான பயிற்சியாகவும் அவை உள்ளன.

தனித்துவமான பன்முகத்தன்மை கொண்ட தொழுகை தரும் இப்பாடம் இலகுவானதொரு பாடமல்ல. மனிதனைக் கட்டியெ ழுப்பும் பணி எப்போதுதான் இலகுவாக நிகழ்ந்திருக்கிறது? நாகரிகங்களை உருவாக்கும் செயற்பாடு எப்போது சாதாரணமாக நடந்தேறியிருக்கிறது? தேசங்களை நிர்மாணிக்கும் முனைப்பு இந்த உயிர்ப்பும் உயர்ந்த ஈடுபாடும் உறுதியும் இன்றி எப்போது கைகூடியிருக்கிறது?

இத்தகு 'கடினமான பாடத்தை' வழங்கு வதற்காகத்தானோ பேரண்டங்களின் ரட்சகன் தனது மகத்தான நபியை 'ஸித்ரதுல் முன்தஹா' விற்கு 'வரவழைக்க' நாடினான்? ஒரு முஸ்லிம் குழந்தை ஏழு வயதை எட்டியது முதல் படிக்க வேண்டிய இஸ் லாத்தின் மிக முக்கியமான, கடினமான, நீண்ட பாடத்தை

அன்னாருக்குப் போதிப்பதற்காகத்தானோ ஏனைய பாடங்களைப் போன்று ஜிப்ரீல் (அலை) வாயிலாக அனுப்பி வைக்கும் வழக் கத்தை இங்கு மட்டும் மாற்றியமைத்தான்? நமது சன்மார்க்கத் தின் இரண்டாவது பெரும் தூணிலுள்ள அற்புதமான பன்முகத் தன்மையை புரிய வைப்பதற்கா இந்த ஏற்பாடு?

பன்மைத்துவம் என்பது நெகிழ்வுத் தன்மையையும் பிறரை அங்கீகரிக்கும் மனப்பாங் கையும் கற்றுத் தரும் பள்ளி. நபித்துவப் போதனைகள் தொழுகையிலும் பிறவற்றிலும் இந்த நெகிழ்வுப் பண்பு பற்றியும் பன்மைத் தன்மை பற்றியும் மறக்க முடியாத பாடங்களை நமக்கு கற்றுத் தருகின்றன. குறிப்பாக 'நஃபில்' ஆன மேலதிக வணக்கங்களில் இந்தப் பாடங்கள் பட்டவர்த்தனம். உண்மையில் இந்த நெகிழ்வுப் பண்பே பல்வேறு கால சூழ்நிலை களுக்கும் சூழமைவு வேறுபாடுகளுக்கும் ஏற்ப இயல்பாகவே தகவமையக் கூடிய, நடுநிலையான, தாராளத் தன்மை கொண்ட இஸ்லாத்தின் ஆன்மாவை பிரதிநிதித்துவம் செய்கிறது எனலாம்.

# தொழுகையில் வேறுபட்ட நிலைமாற்றங்கள் ஏன்?

தொழுகையின் பல்வேறு அங்கநிலை மாற்றங்களும் அசைவு களும் காரணமற்ற வெற்றுச் செயற்பாடுகள் அல்ல. அப்படி இருந்திருப்பின், அதன் அனைத்துப் பாராயனங்களையும் எந்த இயக்கமுமின்றி உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ, சாய்ந்து அமர்ந்த நிலையிலோ, மல்லாக்கப் படுத்த நிலையிலோ -நோயாளியின் அல்லது உடல் பலவீனம் கொண்டவரின் தொழுகை போன்று- நிறைவேற்றி விட முடியும்.

தொழுகையில் மேற்கொள்ளப்படும் வேறுபட்ட அசைவுகள் அதற்கு ‘பன்முகத் தன்மை’யை வழங்கி, இயந்திரத்தனமான இயக்கம், சகட ஓட்டம், கவனச் சிதறல் என்பவற்றைத் தடுக்கின் றன என்பதற்கு அப்பால், இப்படியும் நாம் கேட்க முடியும்:

தொழுகையின் அங்க நிலை மாற்றத்திற் கேற்ப பாராயன வாச கங்களும் மாறிச் செல்வது எதற்காக? ஒவ்வொரு நிலைக்கும் தனித் தனியான வாசகங்கள் ஏன்? உதாரணமாக, ‘ஸுப்ஹான றப்பீ அல்-அழீம்’ என்ற துதி வாசகம் ‘ஸுஜுது’ நிலையிலன்றி ‘றுகூஉ’ நிலையில் மாத்திரம் ஏன் கூறப்படுகிறது? ‘ஸுஜுது’ நிலையில் அந்த வாசகம் ‘ஸுப்ஹான றப்பீ அல்-அஃலா’ என

*மாற்றமடைவது ஏன்? நிற்கும் நிலையில் அல்குர்ஆன் வசனங் களும், அமர்ந்திருக்கும் நிலையில் நபித்துவ வாசகங்களும் ('அத்தஹிய்யாத்' மற்றும் 'அஸ்-ஸலவாத்துல் இப்றாஹீமிய்யா') என ஏன் வேறுபடுத்தி அமைக்கப்பட்டுள்ளன? ஏன்... ஏன்... ஏன்... என இப்படி எத்தனையோ கேள்விகள்.*

*உண்மையில், தொழுகையின் நிலைகள் ஒன்றிலிருந்து ஒன் றுக்கு நகர்வதானது தொடர்ச்சியான விழிப்பு நிலைக்கும், யாரை நோக்கி நின்று நாம் உரையாட ஆரம்பித்தோமோ அவனுடன் பூரண ஈடுபாடு கொள்வதற்கும் உதவியாக அமைகிறது. மட்டு மன்றி, பாராயனம் செய்யப்படும் வாசக மாற்றங்களுடன் இணைந்த வகையில் அங்க நிலைகளும் மாற்றமடைவதானது நாம் சொல்வதை எவ்வாறு பூரணமாக உணர்ந்து சொல்வது என்பதற்கான பயிற்சியாக அமைவதுடன், வாய் வார்த்தைகளை செயற்பாடுகளால் உண்மைப்படுத்துவதற்கான பயிற்சியாகவும் அமைகிறது. நமது சொல்லும் செயலும் ஒருங்கமைவதையும், சொல்வதை திடமாகவும் முழு விசுவாசத்தோடும் சொல்வதையும் அது உறுதி செய்கிறது.*

*தொழுகையின் நிலை மாற்றங்கள் பற்றிய நமது இந்தப் புரி தலுக்கும் தத்துவார்த்த வியாக்கியானத்துக்கும் அப்பால் (நமது புரிதல் உண்மையான பரிபூரண தெய்வீக வியாக்கியானத்தை விட எவ்வளவோ குறைந்தது என்பது வேறு விடயம்!), தொழுகையின் அசைவுகள் அதன் வார்த்தைகளோடு ஒத்திசைந்து செல்லும் பண்பைப் பாதுகாக்கின்றன என்பது தெளிவான உண்மை. தொழு கையில் நாம் யாருடன் உரையாடுகிறோமோ அவனை நோக்கி உண்மையோடும் இதய சுத்தியோடும்தான் உரையாடுகிறோம் என்பதை ருசுப்படுத்துகின்ற மிக முக்கிய விடயம் இது எனலாம்.*

*நம்மை நோக்கி 'பிறரது' கவனத்தை ஈர்ப்பவை நமது அசைவு கள் மட்டுமல்ல; அசையா நிலைகளும்தான். தொழுகை முழு வதும் 'கிப்லா'வை முழுமையாக நோக்கியிருத்தல், 'ஸுஜூது'*

செய்வதற்காக சிரசை பூமியில் வைக்கும் இடத்தையே எப்போதும் நோக்கியிருத்தல், வலப்புறமாகவோ இடப்புறமாகவோ திரும்புவதை கண்டிப்பாக தவிர்ந்திருத்தல், நம்முடன் எவராவது பேசினாலும் எக்காரணம் கொண்டும் மறுமொழி கூறாதிருப்பது மட்டுமன்றி அவரை திரும்பிக் கூட பார்க்காதிருத்தல், -அனைத்துக்கும் மேலாக- நமக்கும் 'கிப்லா'வுக்கும் இடையில் ஒரு சிறிய இடத்தை எவரும் குறுக்கிட முடியாத புனித வெளியாக ஆக்கிக் கொள்ளல்... முதலிய எல்லாமே 'பிறரை' ஆச்சர்யத்துடன் கவனிக்கச் செய்பவைதான். தொழுகையில் நாம் 'தனித்துவமான நிலையொன்றினை' கடந்து செல்கிறோம் என்பதையும், உலகியல் சார்ந்த எந்த விடயமும் அதில் குறுக்கீடு செய்யவோ பங்கு பெறவோ அனுமதி கிடையாது என்பதையும் இவற்றின் மூலமாக அவர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

## ‘அதான்’ ஒலியும் பத்து அதிசயங்களும்

*அல்லாஹுு அக்பர்; அல்லாஹுு அக்பர்; அல்லாஹுு அக்பர்; அல்லாஹுு அக்பர்...*

*அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்; அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்...*

*அஷ்ஹது அன்ன முஹம்மதன் றஸூ லுல்லாஹ்; அஷ்ஹது அன்ன முஹம்மதன் றஸூலுல்லாஹ்...*

*ஹய்ய அலஸ் ஸகாஹ்; ஹய்ய அலஸ் ஸகாஹ்... (ஸகாத்தை நோக்கி விரைந்து வாருங் கள்; ஸகாத்தை நோக்கி விரைந்து வாருங்கள்...!)*

*இப்படியான ஓர் ‘அதானை’ இதற்கு முன்பு கேட்டிருக்கிறீர்களா?*

*நானும் கேட்டதில்லை!*

இது நானாக உருவாக்கிக் கொண்ட வாசகமே அன்றி உண் மையானதன்று. முதல் தடவை பிலால் (றழி) செவிமடுத்துச் சொன்னது போல் ‘அதான்’ வாசகங்களை செவிமடுக்கவோ பாராயனம் செய்யவோ நம்மைத் தடுக்கின்ற ‘பரிச்சய’ நிலை யிலிருந்து என்னையும் உங்களையும் வெளியே கொண்டு வரவே இங்கு இப்படிச் செய்தேன்.

'அதானு'ம் 'இகாமத்'தும் தமது வாக்கிய அமைப்பிலும் வகி பாத்திரத்திலும் பல அதிசயங்களைக் கொண்டிருந்த போதிலும், இன்று அவை 'பரிச்சயம்' என்பதற்கு பலியாகியிருக்கின்றன. அந்த அதிசயங்களை -எனது மனித இயலுமைக்கு உட்பட்ட வகையில்- பத்து என்ற எண்ணிக்கையில் இங்கு முன்வைக்க முயல்கிறேன். அவை பத்தை விட அதிகமாகவும் இருக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

***ஒன்று:*** நாம் யாராவது இப்படிச் சிந்தித்திருக்கிறோமா: இஸ் லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் தொழுகை மாத்திரம் ஏன் அது நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இத்தகைய 'அழைப்பை' கொண்டிருக்கிறது? இஸ்லாமியப் பெரும் கடமைகளுள் முக் கியமானதொரு கடமையான தொழுகை நிறைவேற்றப்படும் நேரம் நெருங்குவதை அறிவிப்புச் செய்வதற்கான ஒலி மூலமான அழைப்பல்லவா 'அதான்'! அப்படியாயின், நோன்புக்காக நாம் ஏன் இவ்வாறு அழைப்பு விடுப்பதில்லை? தொழுகையை ஆரம் பிக்க 'இகாமத்' சொல்வது போன்று (மேலே நான் கற்பனை செய்தவாறு) நோன்புக்கு அல்லது ஸகாத்துக்கு நாம் ஏன் 'இகாமத்' சொல்வதில்லை?

தொழுகைக்கு மாத்திரம் -அதானும் இகாமத்தும் என்ற- இப்பீடிகை ஏற்படுத்தப்பட்ட மைக்குப் பின்னாலுள்ள தெய்வீக நோக்கம் எது என்பதை நமது மானிட அனுமானங்களால் முழு மையாகப் புரிந்து கொள்ள முடியாது. ஆயினும், 'அதான்' அழைப்பின் பொருள் சார் முக்கியத்துவம் என்ன என்பதை நம் மால் எடுத்த மாத்திரத்திலேயே புரிந்துகொள்ள முடிகிறது. தொழுகை என்ற கடமை ஒரு மனிதன் பிறரிலிருந்து விலகி தனியாக ஈடுபடும் செயற்பாடன்றி, பிறருடன் இணைந்து கூட் டாக மேற்கொள்ள வேண்டிய முதல் தர செயற்பாடு என்பதை தொழுகையாளிக்கு நினைவூட்டி வலியுறுத்தும் பணியை 'அதான்' செய்கிறது. (இந்த உண்மையை நாம் எவ்வளவு மறந்து போகி றோம்!)

இந்த வகையில், 'அதான்' என்பது தொழு கைக்கு 'கூட்டுப் பண்பை' இணைத்து, அக்கூட்டுச் செயற்பாட்டின் பங்காளர்களை ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் ஒரே நபருக்குப் பின்னால் ஒன் றிணையுமாறு அழைக்கும் ஏற்பாடேயன்றி வேறில்லை. தொழு கையின் வகி பாத்திரம் அடியானுக்கும் அவனது ரட்சகனுக்கும் இடையிலான தொடர்புடன் மாத்திரம் சுருங்கி விடுவதல்ல என் பதையும், அதனைத் தாண்டி முஹம்மத் (ஸல்) அவர்களது 'உம்மா'வின் அங்கத்தவர்களுக்கு இடையிலான சந்திப்பாகவும் நெருக்கமாகவும் ஒட்டுறவாகவும் புரிந்துணர்வாகவும் பரஸ்பர நேசமாகவும் இருப்பதையும் 'அதான்' உறுதி செய்கிறது.

இதனால்தான், வழக்கமாக தனிநபராக நின்று நிறைவேற்றப் படும் 'ஸுன்னத்' மற்றும் 'நஃபில்' தொழுகைகளுக்கு 'அதானு'ம் 'இகாமத்'தும் வேண்டப்படவில்லை.

தொழுகையின் நாகரிகம் தொடர்பான அம் சங்களுள் இது ஒரு முக்கிய பகுதியெனலாம். இந்த அனைத்து அம்சங்கள் பற்றியும் நாம் 'கூட்டுத் தொழுகை நாகரிக முன்னேற்றத்தின் ரகசியம்' என்ற தலைப்பில் விரிவாக விளக்க உள்ளோம்.

***இரண்டு:*** 'அதானு'ம் 'இகாமத்'தும் எப்படிப் பிறந்தன என்ப தைக் காட்டுகின்ற அற்புதமான சம்பவமொன்று நபியவர்களது வாழ்வியலில் காணக் கிடைக்கிறது. அவையிரண்டும் வேத வெளிப்பாடாக அமையாவிடினும் வேதவெளிப்பாட்டுக்கு அண் மித்த அந்தஸ்தைப் பெறுமளவுக்கு குறித்த சம்பவம் அவற்றை உயர்த்திக் காட்டுகிறது. பிறந்த முறையினாலும் நபர்களாலும் மட்டுமே வேத வெளிப்பாட்டிலிருந்து அவை வேறுபட்டு நிற்கின் றன. ஏனெனில், இரண்டுக்குமுரிய வாசகங்கள் விழிப்பு நிலை யிலன்றி கனவிலேயே தோன்றின; அந்தக் கனவு கூட இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கன்றி அன்னாரது தோழர்களுக்கே தோன்றியது.

குறித்த கனவை இரு நபித்தோழர்கள் ஒரே வாசகங்களுடன் ஒரே இரவில் கண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் ஃகுலபாஉர்

ராஷிதீன்களில் இரண்டாமவரான உமர் (றழி) என்பது மிக முக்கிய மானதும் சுவாரஷ்யமானதுமான தகவல்.

தொழுகையின் தனித்துவமான பிறப்புக்கு சமாந்தரமாக 'அதானி'ன் இத்தனித்துவமான பிறப்பு அமைகிறது. மட்டுமன்றி தொழுகையின் தனித்தன்மை அதானின் இத்தனித்தன்மைக்கு இன்னும் மெருகேற்றுகிறது. அல்-குர்ஆனும் ஸுன்னாவுமாகிய இஸ்லாம் முழுமையாக வேதவெளிப்பாட்டின் வழியேதான் இறங்கியது; தொழுகையைத் தவிர! தொழுகையை ('அதான்' தவிர்ந்த) முழு விபரங்களோடு அகிலங்களின் ரட்சகனிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விஷேட மாகவும் புனிதத் தன்மையோடும் அற்புதமான வகையிலும் வானுலகுக்கு வரவழைக்கப்பட்டார்கள். 'அதான்' மாத்திரம் இரு நபித்தோழர்கள் வாயிலாக ஏக காலத்திலும் தனித்துவமான வழி முறையிலும் அல்லாஹ் வினால் பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

***மூன்று:*** 'அதான்' என்பது யதார்த்தத்திலும் அமைப்பிலும் பொருளிலும் தொழுகையின் சுருக்கமான முன்னோட்டம் போன் றது. பின்னால் ஈடுபட இருக்கும் நீண்ட தொழுகைக்காக ஒரு விசு வாசியை அது தயார் செய்கிறது. குழந்தை பிறந்ததும் காதில் 'அதான்' கூறப்படுவது நபிவழி. பின்னர் முழு வாழ்வையும் ஆட்கொள்ள இருக்கும் நீண்ட தொழுகைக்காக குழந்தையைத் தயார்படுத்துகின்ற சிறு முன்னோட்டமாகவே 'அதான்' அங்கு கூறப்படுகிறது. அந்த வகையில், ஒவ்வொரு குழந்தையின் காதிலும் கூறுப்படுவது இதுதான் போலும்: 'மனிதா! இப்போது நீ வாழ்வுக்குள் நுழைந்து விட்டாய். எனவே, தொழுகையையும் வணக்கத்தையும் அல்லாஹ்வுடனான ஆன்மீகத் தொடர்பையும் ஆரம்பிக்க தயாராகு! இந்த வாழ்விலிருந்து நீ வெளியேறும் போதுதான் அனைத்தும் இனி முடிவுக்கு வரும். ஆனால் வெளி யேறிய மாத்திரத்திலேயே அல்லாஹ்வுடனான உனது நீண்ட மறுமைப் பயணம் ஆரம்பித்து விடும். அது உனது குறுகிய உலகப் பயணத்திலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கும்...'.

*நிச்சயமாக நமது வாழ்வு -அதன் முழு விபரங்களோடும்- ஒரு விதத் தொழுகைதான்; வேறுபட்ட முறைகளில் அதனை நிறை வேற்றிக் கொண்டிருக்கிறோம். பிறப்பு முதல் இறப்பு வரை யிலான முழு வாழ்வும் அல்லாஹ்வுக்காக நாம் மேற்கொள்ளும் வணக்கமே என புனித அல்குர்ஆன் குறிப்பிடவில்லையா:*

> *''ஜின் வர்க்கத்தையும் மனு வர்க்கத்தையும் என்னை வணங் கவே படைத்தேன்'' (அல்-தாரியாத்: 56)*

*அந்த வகையில்- நீங்கள் கல்வி கற்கிறீர்கள் எனில், தொழுகை யில் இருக்கிறீர்கள்; உங்களையும் குடும்பத்தையும் போஷிப்ப தற்காக தொழில் செய்கிறீர்கள் எனில், தொழுகையில் இருக்கி றீர்கள்; மனிதர்களுக்கும் சமூகத்துக்கும் பணிவிடை செய்கிறீர்கள் எனில், தொழுகையில் இருக்கிறீர்கள்; உயிர் வாழவும் சக்தி பெறவும் சாப்பிடுகிறீர்கள் எனில், தொழுகையில் இருக்கிறீர் கள்; உடலாரோக்கியத்தில் கவனம் செலுத்துகிறீர்கள் எனில், தொழுகையில் இருக்கிறீர்கள்.*

*நமது வாழ்வு -ஆரம்பம் முதல் இறுதி வரை- வணக்கமும் தொழுகையும்தான்!*

*'அதான்' உள்ளடக்கியிருக்கும் வார்த்தைகளை கூர்ந்து கவனித் துப் பாருங்கள்; முழுமையான தொழுகைக்கான பாதையை உங்களுக்குத் தயார்படுத்தி தருகின்ற சுருக்கமானதொரு தொழு கையே அது என்பதை அப்போது கண்டுகொள்வீர்கள்.*

***நான்கு:*** *அதானையோ அதன் வார்த்தைகளையோ ஒருபோதும் நீங்கள் கேட்டதில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். 'அல்லாஹு அக்பர்' என்ற வாசகத்தை முதல் தடவையாக இப்போதுதான் கேட்கிறீர்கள் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். (இந்த வாசகம் அதானை விடவும் பழமையானது என்பதும், நபியவர்கள் மிஃறாஜ் இரவில் தமது ரட்சனிடமிருந்து தொழு கையை பெற்றுக் கொண்டது முதலே முஸ்லிம்கள் அதனை அறிந்திருந்தார்கள் என்பதும் வேறு சங்கதி).*

இப்போது அந்த வாசகத்தின் பொருளையும், அதன் தனித் துவமான மொழியமைப்பையும் சிந்தித்துப் பாருங்கள். உண்மை யில் அது இலக்கண ரீதியாக முற்றுப் பெறாத வாக்கியம்; பல் வேறு இடம்பாடுகளுக்கு வாய்ப்பளிக்கின்ற 'திறந்த நிலை' வாச கம். கற்பனை மூலமாகவோ யதார்த்த வாழ்வு மூலமாகவோ அதனை நீங்கள் பூரணப்படுத்திக் கொள்ள முடியும்.

என் கவனத்தைச் சிதறடிக்கும் இந்த உலகத்தை விட... அல்லாஹ் பெரியவன்!

என்னிடமுள்ள செல்வங்களை விட... அல்லாஹ் பெரியவன்!

என் வாழ்வின் அமைதியை அலைக்கழிக்கும் வேலைகளை விட... அல்லாஹ் பெரியவன்!

என்னுடன் விரோதம் பாராட்டும் எதிரியை விட... அல்லாஹ் பெரியவன்!

என்னைச் சித்திரவதை செய்யும் அடக்கு முறையாளர்களை விட... அல்லாஹ் பெரிய வன்!...

(அற்புதமான இந்த வாசகம் பற்றி தனியான பகுதியொன்றில் விரிவாகப் பேச இருக்கிறோம்.)

'அல்லாஹு அக்பர்' என்பது உண்மையிலேயே முழு அதா னையும் சுருக்கிய வாசகம்; ஏனெனில் இஸ்லாத்துக்கு மட்டுமே உரிய அதிசயமான அந்த அழைப்பின் கடையாணியே இந்த வாச கம்தான்; முழு இஸ்லாத்தையும் சேகரமாக்கி வைத்திருக்கும் வாசகமும் கூட.

நாம் 'முஸ்லிம்கள்' (முற்றாகப் பணிந்தவர்கள்) எனப் பெயர் பெற்றிருப்பது, பிற அனைத்தையும் விட மகத்தான ஒருவன் இருப் பதை ஏற்று அவனுக்கு நமது முற்று முழுதான 'அடிபணிதலை' பிரகடனப்படுத்தியிருப்பதால் தான். அவனுக்கு பூரணமாகப் பணிந்து சரணாகதி அடைந்தவர்கள் நாம். அந்த வகையில், 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ் -அனைத்தையும் விட- பெரியவன்) என்பது இஸ்லாத்தின் ரத்தினச் சுருக்கமான வாசகம்.

***ஐந்து:*** *'அதான்' அழைப்பானது வரையறுக் கப்பட்ட சொற்ப வார்த்தைகளில், தனித்துவமான மொழியமைப்பில், அன்றைய அறபிகளுக்கும் பிற சமூகங்களுக்கும் அறிமுகமற்ற புதிய வடிவத்தில் அமலுக்கு வந்தது. அந்த மொழியமைப்பு தனக்கே உரிய காலத்தை விட பல நூற்றாண்டுகள் முந்திப் பிறந்து விட்டது என்றால் கூட பொருந்தும். துண்டு துண்டான சிறிய வார்த்தைகள்; இடையிடையே நாம் வழக்கமாகப் பயன்படுத்துகின்ற 'மேலும்', 'எனவே', '...உம்' முதலிய இணைப்புச் சொற்கள் எதுவுமில்லை. இன்றைய அலை பேசிகளில் நாம் பயன்படுத்துகின்ற அவசர குறுஞ் செய்திப் பரிமாற்ற மொழியமைப்பை இது உங்களுக்கு நினைவூட்டவில்லையா?*

*அறபிகள் எந்தப் புதிய அழைப்புக்காக தங்களது விக்கிரகங்களையும் நம்பிக்கைகளையும் 'ஜாஹிலிய்யா'வையும் விட்டு வந்தார்களோ அந்த அழைப்பின் ஆன்மாவை இச்சொற்பமான, நேரடியான, பட்டவர்த்தனமான வார்த்தைகளில் சாரமாக வடித்து வழங்கியது 'அதான்'.*

***ஆறு:*** குறுகிய இந்தத் 'தொழுகை' தனது மின்னஞ்சல் மொழி மூலமாக நமது பெரிய தொழுகையின் அதி முக்கிய பாகமான 'அல்-ஃபாத்திஹா'வின் மொழியோடு ஒத்திசைந்திருப்பது இன்னும் அதிசயமானது. 'அல்-ஃபாத்திஹா'வும் தனது குறுகிய மின்னஞ்சல் வாக்கிய அமைப்பு மூலமாக அறபிகள் தமது மொழியமைப்பில் வழக்கமாகக் கொண்டிருக்கும் இணைப்புச் சொற்களிலிருந்து விடுபட்டு நிற்பதைக் கவனித்தீர்களா?

*எனது எண்ணப்படி, 'அல்-ஃபாத்திஹா'வின் மொழியமைப்பு நமது வழக்கமான மானிட மொழியமைப்புக்கு விடப்பட்டிருந்தால், அது பின்வருவது போன்றதோர் அமைப்பையே பெற்றிருக்கும்:*

*''சர்வ புகழும் அகிலங்களின் ரட்சகன் ஆகிய அல்லாஹ்வுக்கே உரியது என நாங்கள் ஏற்றிப் போற்றுகிறோம். மேலும் அவன் அளவற்ற அருளுடையவன் ஆகவும், நிகரற்ற கிருபை கொண்ட*

வன் ஆகவும் இருக்கிறான். இன்னும், தீர்ப்பு நாளின் அதிபதியும் அவன் மட்டுமே. எங்கள் ரட்சகனே! உன்னையே வணங்கி, எல்லா வாழ்வியல் விவகாரங்களிலும் உன்னிடமே உதவி கேட்கி றோம். எனவே, எங்களை நேர்வழியில் செலுத்துவாயாக!... என்று கெஞ்சி மன்றாடுகிறோம்...''

***ஏழு:*** நமது வணக்கங்களில் 'அதான்' பெற்றிருக்கின்ற இந்த அந்தஸ்தின் காரணமாகத் தான் அதற்கென்று தனியான ஒழுங்கு களும் நியமங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன. -நபிவழியின் படி- அந்த அதானின் ஒவ்வொரு வார்த்தையோடும் ஒத்திசைந்து, அதன் எதிரொலி போன்று பதில் வார்த்தை மொழிவது நமது கடமை. மட்டுமன்றி 'அதான்' முடிந்த பிறகும் கூட நாம் கூறவேண்டிய வாசகங்களையும் நபியவர்கள் காட்டித் தந்திருக்கிறார்கள்.

கணினியின் 'உள்ளார்ந்த செயல்விளைவு ஒழுங்குகள்' (Intera ctive Systems) பற்றியும், அக்கோட்பாட்டின் வழியே இன்று பிறந்திருக்கும் அதிசயமான கருவிகள் பற்றியும் நாம் அறிவோம். பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர், கணினியும் வேறெந்த செயல்விளைவு ஒழுங்கும் தோன்றுவதற்கு முன்னர், இறைத் தூதர் (ஸல்) காட்டிய 'அதானு'க்கும் நமக்கும் இடையிலான தொடர்பு இத்தகைய 'செயல் விளைவுத் தொடர்பு'தான். 'முஅத் தின்' கூறுகின்ற ஒவ்வொரு வாசகத்தையும் செவிமடுப்பவர் அதன் எதிரொலி போன்று நிகர வாசகமொன்றைக் கூறுவதன் மூலமாக 'இச்செயல் விளைவுத் தொடர்பு' பேணப்படுகிறது.

***எட்டு:*** ஒவ்வொரு வாசகமும் இரண்டு முறை உச்சரிக்கப்படும் இந்த இரட்டை மொழி அமைப்புக் கூட அதானுக்கும் தொழு கைக்கும் இடையிலான அற்புதமான மொழி ஒத்திசைவுக் கூறு களுள் ஒன்றெனலாம். இந்த இரட்டை மொழியமைப்பு ஒரு புறத்தில் அதானின் தனித் துவமான மொழியாளுமையைப் பலப்படுத்துவதுடன், மறுபுறத்தில் -இன்னும் ஆச்சர்யமான வகை யில்- அது தொழுகையின் பொதுவான கட்டமைப்புடன் கொண் டிருக்கும் ஒத்திசைவைப் புலப்படுத்துவதாயும் உள்ளது.

‘இரண்டு’ என்ற எண்ணிக்கை இஸ்லாமிய வணக்கங்களிலும் துதி வாசகங்களிலும் பரவலான பயன்பாட்டில் உள்ளதன்று. மூன்று, ஏழு, பத்து, இருபத்தேழு, முப்பத்து மூன்று, தொண் ணூற்றொன்பது, நூறு முதலிய எண்ணிக்கைகளே பெரிதும் பயன்பாட்டில் இருப்பவை. ஆனால், அதானின் வாசகங்கள் இரு முறை மட்டுமே மீட்டப்படுகின்றன. இந்த இரட்டை அமைப்பு தொழுகையின் கட்டமைப்புடன் பொதுவாக இயைந்து செல்வ தாய் உள்ளது: தொழுகையின் ஆரம்பத் தக்பீரில் இரு கைகளையும் உயர்த்துகிறோம்; தொழுகையின் ஒவ்வொரு இரண்டு ‘றக்அத்’ துகளுக்குப் பிறகும் அமர்கிறோம்; ஒவ்வொரு ‘றக்அத்‘திலும் இரண்டு ‘ஸுஜூது’ செய்கிறோம்; தொழுகையின் இறுதியில் இரு முறை ஸலாம் கூறுகிறோம். அதானை நாம் மீட்டி மீட்டிக் கூறும்போது யதார்த்தத்தில் ஒரு குறுந்தொழுகையை உயர்ந்த குரலில் நிறைவேற்றுகிறோம் என்ற உணர்வே மேலெழுகிறது.

***ஒன்பது:*** அதானின் வாசகங்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை முதலிய மூவிடப் பெயர்களோ, எண், பால் வேறுபாடு களோ அற்ற பொதுமொழியில் அமைந்திருப்பதை கவனித்தீர் களா? இத்தகு பொதுமொழியில் அமைந்த மற்றொரு வாசகம் ‘இரு ஷஹாதாக்கள்’ மட்டுமே; தனிமனித பொறுப்பேற்பை வற்புறுத்தவும், மொழிவோரின் வாய் வழியாக அப்பொறுப்பின் கனதியை வலியுறுத்தவுமே இந்த ஏற்பாடு. ‘ஹய்ய’ (வாருங்கள்) என்ற பதத்தில் கூட ஒருமை, பன்மை, ஆண்பால், பெண்பால் முதலிய நிலைகளைக் காட்டுகின்ற எந்த வேறுபாடும் கிடையாது.

அறபு மொழியமைப்பில் இத்தகைய பொது மொழிப் பிரயோ கங்கள் அரிது. பொதுவாக இவை தஸ்பீஹ், ஸலவாத், திக்ரு போன்றவற்றிலேயே பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மறுபடியும் இப் பொதுமொழி அமைப்பின் மூலமாக தொழு கையின் முதுகெலும்பாகிய ‘அல்ஃபாத்திஹா’வுடன் ‘அதான்’ இயைந்து நிற்கிறது; ‘ஸூறதுல் ஃபாத்திஹா’வின் முதல் அரைப் பகுதி இந்த அரிதான மொழியமைப்பைக் கொண்டிருப்பதைக்

*கவனித்தீர்களா? அப்பகுதி காலப் பரிமாணங்களிலிருந்து முற்றாக விடுபட்டு நிற்கிறது. நமது அனேகமான சொல்லாடல்களிலும் எழுத்துகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்ற மூவிடப் பிரதிப் பெயர்கள் அதில் அறவே இல்லை.*

***பத்து:*** *'அதான்' என்பது தொழுகையின் அளவுக்கு முக்கியத்துவம் வழங்கத் தேவை யற்றதோர் உபரியான மொழிச் செயற்பாடு என இன்று சிலர் கருதக் கூடும்; தொழுகைக்கு முன்னர் அதைக் கூறாமல் அசட்டை செய்யவும் கூடும். ஆனால், நம்மீது அதீத அக்கறையாளராகவும், தனது தூதின் மீது நம்பிக்கை மிக்க பாதுகாவலராகவும் இருந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுவதோ வேறொன்று:*

*''மூவர் ஓரிடத்தில் இருந்தும் அதான் கூறப்படாமலும், தொழுகைக்காக 'இகாமத்' கூறப்படாமலும் இருக்கும் நிலை காணப்படுமாயின், ஷெய்த்தான் அவர்களை ஆட்கொண்டு விடுவான்''.*[1]

*அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் பின் அபீ ஸஅஸஆ அவரது தந்தையான அப்துர் ரஹ்மானிடமிருந்து அறிவிக்கிறார்: அபூ ஸஈத் அல்ஃகுத்ரி என்ற நபித்தோழர் அப்துர் ரஹ்மானைப் பார்த்து இப்படிக் கூறினார்: 'ஆடுகளையும், பாலைவனத்தையும் விரும்புபவராக உம்மை நான் காண்கிறேன். அவ்வாறு ஆடு மேய்த்துக் கொண்டோ அல்லது பாலைவனப் பகுதியில் இருந்து கொண்டோ தொழுகைக்காக 'அதான்' கூற நேரிட்டால், குரலை உயர்த்திக் கூறுவீராக; ஏனெனில் அதான் ஒலியை ஜின்கள், மனிதர்கள், பிற படைப்புகள் முதலிய யார்/எது செவிமடுத்தாலும், அதான் கூறுபவருக்காக அவர்/அது மறுமையில் சாட்சி கூறும்.'' (புஹாரி)*

---

1) அறிவிப்பவர்: அபூ தர்தா. பதிவு செய்தவர்: அஹ்மத்.

*'என்ன இது? அதான் என்பது தொழுகை பற்றி நினைவூட்டு கின்ற வெறும் ஊடகம்தான் என்றிருப்பின், ஆடுகளுக்கும் பாலை நிலத்துக்கும் உயிரற்ற சடப்பொருட்களுக்கும் அது எதற்கு? அதான் கூறப்படாத நிலையில் இருப்போரை ஷெய்த்தான் எப் படி ஆட்கொள்வான்..?' என்ற கேள்விகள் இங்கு எழ முடியும்.*

*அவை எப்படி நிகழ்கின்றன என்பது துல்லியமாக நமக்குப் புலப்படா விட்டாலும், கண்ணியம் பொருந்திய ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு 'அதான்' மற்றும் 'இகாமத்'தின் பெறுமதியை யும், அவையிரண்டும் பெற்றிருக்கின்ற வணக்கம் சார் பாத்தி ரத்தையும் எடுத்துக் காட்டும் வகையில் வழங்கப்பட்ட வழிகாட் டல்கள் இவை என்பது தெளிவு. எனவே அந்த வணக்கம் உங்கள் கரங்களிலிருந்து நழுவி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!*

*'தொழுகையின் வகைகள் என்ன?' என என்னிடம் கேட்கப் பட்டால், மௌனமாகத் தொழப்படுவது, குரலுயர்த்தித் தொழப் படுவது, பகிரங்கமாகத் தொழப்படுவது ஆகிய மூன்று வகை என்றுதான் கூறுவேன். மூன்றாவது வகையாக நான் குறிப்பது 'அதானை'யே. நமது வாழ்வை நிர்வகிப்பதிலும், விவகாரங்களை சீரமைப்பதிலும் இம்மூன்று தொழுகைகளும் வேறுபட்ட, முக்கிய மான, ஒன்றையொன்று பூரணப்படுத்துகின்ற பாத்திரத்தை ஏற்றி ருக்கின்றன.*

*'அதான்' என்பது ஒரு சுருக்கமான முதலீட்டுத் திட்டம்; தொழுகை என்ற மாபெரும் இறுதி நிலைக்கூட்டு முதலீட்டுத் திட்டத்திற்கு அது நம்மைத் தயார் செய்கிறது.*

# இரு 'வுழூ'க்கள்

*''எனது சமுதாயத்திற்கு சிரமம் கொடுக்க வில்லை என்றிருப் பின், ஒவ்வொரு தொழுகையின் போதும் 'வுழூ' செய்து கொள்ளு மாறும், ஒவ்வொரு 'வுழூ'வுடனும் பல் துலக்கிக் கொள்ளுமாறும் பணித்திருப்பேன்.''*[1]

*பல முறை இந்த ஹதீஸின் முன்னால் நின்று நான் இப்படிக் கேட்டிருக்கிறேன்:*

*ஒவ்வொரு தொழுகையின் போதும் ஏன்? நாம் 'வுழூ'வுடனும் சுத்தமாகவும் இருக்கின்ற நிலையிலும் மீண்டும் 'வுழூ' செய்து கொள்ள வேண்டும் என இறைத்தூதர் (ஸல்) ஆசைப்படுவது ஏன்? அவ்வாறு இன்னொரு முறை வுழூ செய்வது தண்ணீரை விரயம் செய்வதாகாதா? இந்த உபதேசம் பெரும் நீர் நிலைகளோ 'நயாகரா'வின் நீர்வீழ்ச்சிகளோ அற்ற பாலைவனத்தின் இருதயப் பிரதேசத்திலிருந்து வெளிக் கிளம்பிய ஒன்று என்பது இங்கு மனங் கொள்ளத் தக்கது.*

---

1) அறிவிப்பவர்: அபூ ஹுரைரா. பதிவு செய்தவர்: அஹ்மத். அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

அல்லாஹ்வின் உதவியால், மூன்று தெய்வீக மதங்களின் புனித நூல்களையும் நான் படித்திருக்கிறேன். ஹதீஸ் தொகுப்புகளையும் முடிந்தளவு வாசித்திருக்கிறேன். நம்பிக்கைக் கோட்பாட்டையும், தொழுகையையும், இதர வணக்கங்களையும், நாகரிகத்தையும் சுத்தத்துடனும் குளிப்புடனும் வுழூவுடனும் இஸ்லாம் பிணைத்தது போன்று வேறெந்த மதமும் பிணைத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. முஹம்மத் (ஸல்) தனது சமுதாயத்தினருக்கு சுத்தம், அழகு, நாகரிகமான தோற்றம் என்பவற்றை உபதேசித்த அளவுக்கு வேறொரு தீர்க்கதரிசி உபதேசித்திருப்பதாகவும் தெரியவில்லை. ஆன போதிலும், இஸ்லாத்தின் இப்போதனைகளோடு ஒப்பிட்டால் முஸ்லிம் சமுதாயம் இன்று எங்கே இருக்கிறது?

சுத்தம் என்பது ஆரோக்கியமான, நாகரிகம் சார்ந்த வெளிப்பாடு என்பதற்காக மாத்திரம் திரும்பத் திரும்ப 'வுழூ' செய்யுமாறு வலியுறுத்தப்படவில்லை. மாறாக, அது ஷரீஆவினால் தெளிவாக வேண்டப்பட்ட அதியுன்னத இலக்குகளுள் ஒன்று. மட்டுமன்றி, உள்ளார்ந்த ஆன்மீகப் பரிசுத்தத்தினையும் 'வுழூ' என்ற செயற்பாடு உள்ளடக்குகிறது.

ஒருவர் தனது உடலையும் உடையையும் அழுக்காக்குகின்ற அனைத்திலிருந்தும் முழுமையாக புறச் சுத்தம் பெறுதல் என்பது அவரது அகச் சுத்தத்தின் இயல்பான பெறுபேறாகவும் உண்மையான பிரதிபலிப்பாகவும் அமையக் கூடியது. அதனால்தான் சில சட்ட நியாயவியல் பள்ளிகள் 'புறம்பேசுதல்' என்பதை வுழூவை முறிக்கும் செயல்களுள் ஒன்றாகக் கருதின.

இந்த தர்க்கத்தின் படி, 'வுழூ' என்பது அக வயப்பட்டது, புறவயப்பட்டது என இரு வகையானது என்று நாம் கூறலாம். முதல் வகையே அதீத முக்கியத்துவம் உடையது; அது இல்லாமல் இரண்டாவதில் எந்தப் பயனும் இல்லை. அழுக்குகளின் குழியில் மூழ்கியிருப்பவர் 'வுழூ' செய்வது எங்கனம்?

ஆக- ஒருவர் தனது புற உறுப்புகளை சுத்தப்படுத்தும் செயலில் ஈடுபடும் போதே அக உறுப்புகளின் பரிசுத்தத்தையும் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். அந்த அகச் சுத்தம் தண்ணீரினாலோ 'தயம்மும்' மூலமாகவோ நிறை வேறுவதில்லை. உள்ளே குவிந் திருக்கும் மன அழுக்குகளிலிருந்து அவர் தூய்மையடைய வேண் டும். பொறாமை, வஞ்சகம், கோபம், புறம், சுயநலம், பொய், ஏமாற்று, பெற்றோருக்கு மாறுசெய்தல், நன்றியின்மை, தீங்கு செய்தல், வெஞ்சொல், இழிந்த எண்ணம், பாவம், தப்பெண்ணம், குரோதம்... முதலிய அழுக்குகளை அவர் களைய வேண்டும்.

கட்டம் கட்டமாகவேனும் இந்த அழுக்குகளிலிருந்து விடுபடு வதற்கு தூய எண்ணம் கொள்ளுங்கள். அப்போதுதான், முழுமை யாக உங்கள் முகத்தையும் உள்ளத்தையும் ஆன்மாவையும் வார்த் தைகளையும் அல்லாஹ்வை நோக்கித் திசைப்படுத்த முடியும். அப்படி நீங்கள் திசைப்படுத்தும் போதே அவனும் அவற்றை ஏற்றுக் கொள்வான்; உங்கள் மன்றாட்டத்திற்கு செவி சாய்ப்பான்; பாவமீட்சியை அங்கீகரிப்பான்.

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'இன்ன மனிதர் இரவில் தொழுகையில் ஈடுபடுகிறார்; ஆனால், காலையானதும் திருட்டில் ஈடுபடுகிறார்' எனக் கூறினார். அதற்கு அன்னார், 'அவரது தொழுகை அவரது திருட்டுப் பழக்கத்தை தடுக்க வேண்டும்!' என நவின்றார்கள்.(2)

''வங்குரோத்து அடைபவரை உங்களுக்குத் தெரியுமா?'' என நபியவர்கள் வினவியபோது, 'எங்களில் வங்குரோத்து அடைந்தவர் பணமோ சொத்துகளோ அற்றிருப்பவர்தான்!' என தோழர்கள் பதிலளித்தனர். அப்போது அன்னார் இப்படிக் கூறினார்கள்: 'எனது சமுதாயத்தவருள் வங்குரோத்து அடைந்தவர் யாரெனில், மறுமை

2) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. 'மிஷ்காதுல் மஸாபீஹ்' இல் இடம்பெறும் இந்த ஹதீஸ் 'ஸஹீஹ்' என அல்பானீ கூறுகிறார்.

*யில் அவர் தொழுகை, நோன்பு, ஸகாத் போன்ற அமல்களை கொண்டு வந்திருப்பார். ஆனால் அவர் ஒருவரை ஏசியிருப்பார்; மற்றொருவர் மீது அபாண்டம் சுமத்தியிருப்பார்; இன்னொருவரது செல்வத்தை நியாயமின்றி சாப்பிட்டிருப்பார்; பிறிதொருவரை காயப்படுத்தியிருப்பார்; வேறொரு மனிதரை அடித்திருப்பார்... அந்நிலையில் இவர்களுக்கெல்லாம் அவரது நன்மைகளிலிருந்து பெற்றுக் கொடுக்கப்படும். கடன்கள் அடைக்கப்பட முன்பு அவரது நன்மைகள் தீர்ந்து விட்டால், இவர்களது பாவங்கள் பெறப்பட்டு அவர் மீது போடப்படும். பின்னர் அவர் நரகில் வீசப்படுவார்.'*[3]

நம் மத்தியில்தான் எத்தனை வங்குரோத்துக் காரர்கள்?

நடைமுறை வாழ்வை விட்டுத் தொடர்பறுந்த வணக்கங்களைக் கொண்டோர்தான் எத்தனை பேர்?

'றுகூஉ' செய்தவர்களாகவும் 'ஸுஜூது' செய்தவர்களாகவும் அவர்களை நீங்கள் காண்பீர்கள். அவர்களது நெற்றிகளில் ஸுஜூ தின் கருவளையமும் இருக்கும். ஆனால் பழகிப் பார்த்தால் அவர்களது செயற்பாடு என்ற நெற்றியில் அந்த அடையாளத்தின் தாக்கமே இருக்காது!

> *''நிச்சயமாக தொழுகை மானக்கேடான செயலையும் தீமையையும் தடுக்கவல்லது''. (அன்கபூத்: 45)*

முஸ்லிம்களின் வணக்கங்களுக்கும் நடைமுறைக்கும் இடையில் விழுந்திருக்கும் இந்தப் பிரிகோடுதான் இன்று உலகத்தின் பார்வையில் இஸ்லாத்தின் பிரதிமையை விகாரப்படுத்திக் காட்டும் மிக அபாயகரமான தோற்றப்பாடாக மாறியிருக்கிறது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமக்கு இறக்கப்பட்ட வேதவெளிப்பாட்டை மக்களுக்குக் கற்றுக் கொடுத்தபோது அல்குர்ஆனையும் அதன் வழியில் செயற்படுவதையும் பிரித்து நோக்கவில்லை:

---

3) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. பதிவுசெய்தவர்: முஸ்லிம்.

உஸ்மான், இப்னு மஸ்ஊத், உபை இப்னு கஅப் ஆகியோர் கூறியதாக அபூ அப்திர் ரஹ்மான் அஸ்-ஸுலமியிடமிருந்து இவ் வாறு அறிவிக்கப்படுகிறது:

'இறைத்தூதர் (ஸல்) தமது தோழர்களுக்கு பத்து வசனங்களைக் கற்றுக் கொடுப்பார்கள். அவ்வசனங்களின் செயன்முறையைக் கற்றுக் கொள்ளும் வரை தோழர்கள் வேறு பத்து வசனங்களை நோக்கிச் செல்ல மாட்டார்கள். இப்படித்தான் நாங்கள் அல்-குர் ஆனையும் செயன் முறையையும் ஒருசேர கற்றுக் கொண்டோம்.[4]

நமது வணக்கங்களை மீண்டும் நாம் கண்டடைய வேண்டும்; தொழுகையையும் வுழூ வையும் மீண்டும் தேடிப் பெறவேண்டும்; பிற மதங்கள் எவற்றிலும் இல்லாத இந்த தனித்துவமான இஸ் லாமியக் கிரியை பற்றிய மகோன்னத உணர்வை 'பழக்க தோஷம்' என்ற உயிர்கொல்லி சாகடித்து விட யத்தனிக்கும் போதெல்லாம் இந்தத் தேடலை நாம் மேற் கொள்ள வேண்டும்.

'வுழூ' என்ற கிரியை பற்றி அப்போதுதான் முதல் தடவையாக கேள்விப்பட்டவர் போன்ற மனநிலையில் வுழூ செய்து பார்த்தி ருக்கிறீர் களா? அப்படி ஒருநாள் செய்துபாருங்கள். பிறகு 'இதில் நான் கண்டடைந்தது என்ன?' என்று உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்.

இன்னும் ஆழ்ந்து சிந்திப்பீர்களாயின், வுழூ என்பது -தொழுகை போன்றே- ஒரு வாழ் வொழுங்காக அமைந்திருக்கும் உண் மையை கண்டுகொள்வீர்கள்.

முதலாவதாக, அது சுத்தம்; கற்றறிந்தோரை பிரித்துக் காட்டும் அடையாளம். இரண்டாவதாக, அது அக்கறை; தொடர் கவனிப்பு; நுணுக்கம்; வெற்றியாளர்களின் முகவரி.

---

4) அல்-குர்துபீ. பாகம் 1. பக் 39.

மூன்றாவதாக, அது ஒழுங்கு; நேர முகாமை; நிபந்தனை பேணல்; நாகரிகமான நடத்தையின் வெளிப்பாடு.

நான்காவதாக... ஐந்தாவதாக... பத்தாவதாக... அது விடாப் பிடியான சுயவிசாரணை; முன்னைய வுழூவுக்கும் பின்னைய வுழூவுக்கும் இடையில் ஆன்மாவில் ஒட்டிக் கொண்ட அன்றாட வாழ்வின் அழுக்குகளைச் சுத்தி செய்யும் முயற்சி.

அதன் மூலமாக- இறைவிசுவாசம் அற்றவர்களிலிருந்து விசு வாசிகள் வேறு பிரிகிறார்கள்; அல்லாஹ்விடமிருந்து விலகித் தொலைந்து போகும் அவப்பேராளர்களிடமிருந்து அவனை நோக்கி மீண்டு வருவோர் இனம் பிரிகிறார்கள்.

வுழூ செய்திருப்பவரின் முகத்தை வுழூ செய்யாதிருப்பவரின் முகத்திலிருந்து கூட சிலபோது நம்மால் வேறுபடுத்திப் பார்க்க முடிகிறது.

'தயம்மும்' என்பது 'வயர்லெஸ்' செய்தி போன்றது; அது உள்ளத்துக்கு நீர்த் தொடர்பற்ற செய்தியை அனுப்புகிறது: 'மனமே! அல்லாஹ்வைச் சந்திக்கத் தயாராகு; அந்தச் சந்திப்பைப் பாழ்படுத்தும் அனைத்தையும் விட்டொதுக்கு. அவன் உனது அந்தரங்கங்களைக் கூட அறிந்தவன்; நீ மறைப்பதையும் வெளிப் படுத்துவதையும் பார்க்கும் சக்தி கொண்டவன்'.

'வுழூ'வைப் பொறுத்தவரையிலோ அது தண் ணீரை ஊடக மாகக் கொண்ட செய்தி. அதுவும் இதே சமிக்ஞைகளையும் செய்தி களையுமே உள்ளத்துக்குச் சுமந்து செல்கிறது. வேறுபடுவது ஊடகம் மட்டும்தான்.

'வுழூ' என்ற அறபுப் பதம் 'ஒளி' என்ற பொருள் கொண்ட 'ழவ்உ' என்ற பதத்திலிருந்தே பெறப்பட்டுள்ளது; ஏனெனில் 'வுழூ' ஏக காலத்தில் அகத்திலும் முகத்திலும் ஒளியைத் தூண்டு கிறது. முகத்தின் பிரகாசம் என்பது உண்மையில் ஆன்மாவில் விகசிக்கும் அகமிய ஒளியின் பிரதிபலிப்பேயன்றி வேறில்லை.

*அன்றாட வாழ்வில் எப்போதும் 'வுழூ' செய்த நிலையிலேயே இருக்க முயலுங்கள். அப்படி இருப்பீர்களாயின், உழைக்கச் செல் லும் போது காற்றில் பறப்பது போன்று உணர்வீர்கள்; மக்களுக்கு ஸலாம் கூறும்போது வானவர்களுக்கு கைலாகு கொடுக்கும் ஸ்பரிசத்தை உணர்வீர்கள்; செய்யும் பணியின் வெற்றி குறித்த முழு நம்பிக்கையோடு அதில் ஈடுபடுவீர்கள்; தூங்குவதற்காக படுக்கையில் சாயும்போது கூட அன்றைய உங்கள் பொறுப்பு களை உரிய முறையில் நிறைவேற்றியதாகவும், இறுதியாக உங் கள் ஆன்மாவை மிக நம்பிக்கைக்குரிய, தயாளமும் மன்னிப்பும் கருணையும் மிகுந்த ஏகனின் கரங்களில் ஒப்படைத்து விட்ட தாகவும் உணர்வீர்கள்.*

# கூட்டுத் தொழுகை: நாகரிக முன்னேற்றத்தின் ரகசியம்

'நாகரிகம் என்பதன் வரைவிலக்கணம் என்ன?' என்று என்னை நானே கேட்டுக் கொண்டது போன்று நீங்களும் கேட்டுப் பார்த்தி ருக்கிறீர்களா?

நாகரிகம் என்பது கருவிகளும் தொழிற்சாலைகளும் கணினி யும் ஏவுகணைகளும் கப் பல்களும் விமானங்களும் விண்கலங் களும் அணுகுண்டுகளும்தானா? உண்மையில் இவை யெல்லாம் நாகரிகத்தின் அறுவடைகள். இவற்றை விளைவித்த நாகரிகம் கருக்கொண்டிருப்பதோ பின்வரும் பத்து விதைகளில்தான்:

1. சுத்தம்.
2. துல்லியமும் தேர்ச்சியும்.
3. நேரம் தவறாமை.
4. ஒழுங்கமைப்பும் கட்டுக்கோப்பும்.
5. வாய்மையும் நேர்மையும்.
6. கூட்டுச் செயற்பாடு.
7. சகிப்புத்தன்மையும் பணிவும் பிறரை அங்கீகரித்தலும்.
8. சிறப்புத் தேர்ச்சியும் தனிநபர் பொறுப்புணர்வும்.

9. பொறுமையும் திடவுறுதியும் விடா முயற்சியும்.

10. நீதியும் சமத்துவமும்.

'கூட்டுத் தொழுகை ஏற்படுத்தப்பட்டது ஏன்?' என என்னைப் போலவே நீங்களும் கேட்டுப் பார்த்திருக்கிறீர்களா?

ஐந்து நிமிடம் தாமதித்தாலும் தவறி விடக் கூடிய வகையில் நுணுக்கமாக வரையறுக்கப்பட்ட நேரங்களில், தினமும் ஐந்து தடவை வீடுகளிலிருந்தும் அலுவலகங்களிலிருந்தும் வர்த்தக நிலையங்களிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் நாம் ஏன் வெளியேறிச் செல்ல வேண்டும்? மஸ்ஜிதுக்குச் செல்லும் போதெல்லாம் நம்மை ஏன் அழகுபடுத்திக் கொள்ள வேண்டும்? அதற்கு முன் சுத்தம் எதற்கு? 'வுழூ' எதற்கு? அது வெறுமனே அல்லாஹ்வின் இல்லத்தை கண்ணியப்படுத்துவதற்கும், அல் லாஹ்வுக்கு முன்னால் நிற்க நம்மை தகுதிப்படுத்து வதற்கும் மட்டுமா? அல்லது கிரியை சார்ந்த இந்நோக்கங்களுக்குச் சமாந் தரமாக, சுத்தம், தூய்மை, அழகு, ஒழுங்கு என்பவற்றின் நாகரிகம் சார்ந்த தொழிற்பாடுகளோடும் அது தொடர்புபடுகிறதா?

நேரம் தவறாமை (Punctuality) என்பதைப் பொறுத்தவரை, நாகரிகத்தின் முன்னோடியாக ஒரு முஸ்லிம் கற்றுத் தேறத் தகுந்த சிறந்த பள்ளியாக கூட்டுத் தொழுகை உள்ளதெனலாம். கூட்டுத் தொழுகைக்கு வெறும் ஐந்து நிமிடம் தாமதமாய்ப் போனால் கூட அதனை இழந்து விடுவோம்; அதற்கான கூலியைக் கோரும் உரிமையும் இல்லாது போய் விடும். நிமிட நேரத்தின் பெறுமதி யையும், பிறருடன் மேற்கொள்ளும் சந்திப்புக்கான நேரங்களை நுணுக்கமாகக் கடைப்பிடிக்காத போது ஏற்படும் நஷ்டத்தின் அளவையும் புரிந்து கொள்ளும் வகையில் முஸ்லிமை பயிற்று விப்பதற்கு தினமும் ஐந்து தடவை நிகழ்த்தப்படும் இந்த அற்புத அப்பியாசத்தை விட வேறென்ன வேண்டும்?

நான் இளைஞனாக இருந்த போது எங்களது ஆசிரியர் அல்பானீ (ரஹ்) அவர்களுடன் கருத்துப் பரிமாற்றமொன்றில்

ஈடுபட்டிருந்தேன். கிரமமாக தொழுகை நடாத்துகின்ற இமாமைக் கொண்ட ஒரு மஸ்ஜிதில் ஒரு தொழுகை பல முறை கூட்டாகத் தொழப்படுவதை அங்கீகரிக்கலாம் என்ற கருத்தை ஆதரிப்பதாய் அப்போது எனது நிலைப்பாடு அமைந்திருந்தது. 'முதலாவது ஜமாஅத் தொழுகையை தவற விட்டவர்கள் தங்களுக்குள் ஓர் இமாமைத் தெரிவு செய்து இரண்டாவது ஜமாஅத் அல்லது மூன்றாவது ஜமாஅத் அல்லது நான்காவது ஜமாஅத் என தொழுகை நடாத்த ஏன் அனுமதிக்கப்படக் கூடாது?' என்பது என் ஆதங்கமாக இருந்தது.

ஆனால் கிரமமாக 'ஜமாஅத்' நடாத்துகின்ற இமாமிருக்கும் மஸ்ஜிதொன்றில் அவ்வாறு பலமுறை ஜமாஅத் தொழுகை நடாத்தப்படுவதை மிகக் கடுமையாக மறுதலிக்கும் நிலைப் பாட்டையே ஷெய்ஃக் அல்பானீ கொண்டிருந் தார். அந்த மறுப் பின் பின்னாலிருந்த ஆழ்ந்த அர்த்தத்தை -கவலைக்குரிய வகையில்- மிகப் பிற்பட்ட நாட்களிலேயே நான் புரிந்து கொண் டேன். ஏனெனில், ஒரே மஸ்ஜிதினுள் பல ஜமாஅத்கள் இடம் பெறுதல் என்பது பல குழுக்களும், வேறுபட்ட பிரிவுகளும், மஸ்ஜிதுக்கு வெளியே முரண்பட்டுப் பிரிந்து செல்லும் உள்ளங் களும் உருவாவதன் பிரதிபலிப்பேயன்றி வேறில்லை. ஒரே ஜமாஅத் மூலமாக மேற் கொள்ளப்படும் தொழுகையோ ஒரே நேரம், ஒரே அணி, ஒரே உள்ளம், ஒரே 'உம்மா' என்ற கருத் தாக்கத்தை பேணிக் கடைப்பிடிப்பதற்கு அன்றாடம் தொடர்ச்சி யாக வழங்கப்படும் தெய்வீகப் பயிற்சியாக அமைகிறது.

மஸ்ஜிதில் நுழைந்து அல்லாஹ்வின் முன்னால் நிற்க நம்மைத் தயார்படுத்துகின்ற அதே சுத்தமும் தூய்மையும் அழகும்தான் அறியாமையின் அழுக்கிலிருந்தும், மௌட்டீகத்தின் இருளிலிருந் தும், கேளிக்கை, பொடுபோக்கு, அக்கறையின்மை, தாமதம் முதலிய குப்பைகளிலிருந்தும் வெளியேறி, நாகரிகம் என்ற கழகத்தினுள் நுழைவதற்கு நம்மைத் தயார் செய்கின்றன. அந்தக் கழகமோ சுத்தம், அழகிய தோற்றம், ஒழுங்கு, வசீகரம் முதலிய

அடிப்படையான நாகரிக நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத எவருக்கும் தன் கதவுகளைத் திறப்பதில்லை. இந்த ஒழுங்கும் சுத்தமும் நேர்த்தியும் வசீகரமும் உடையிலும் உடலிலும் மட்டு மன்றி, வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனை கள், சேவைகள், வீதிகள், ஆன்மாக்கள், பல்வேறு வாழ்வியல் துறைகள் முதலிய அனைத்திலும் பிரதிபலிக்க வேண்டும்.

இதோ நாம் மஸ்ஜிதில் இருக்கிறோம். அல்லாஹ்வை வணங் கும் இல்லத்துக்கு இஸ்லாம் நமது மொழி அகராதியில் ஏற்படுத் தித் தந்த ('மஸ்ஜித்' என்ற) இப் புதுப் பெயர் ஓர் அடியான் தனது ரட்சகனை மிக நெருங்கியிருக்கும் 'ஸுஜூது' என்ற நிலையை தொடர்ச்சியாக நினைவூட்டுகிறது. 'ஸுஜூது' என்பது சிரசும் நெற்றியும் மூக்கும் பூமி மட்டத்துக்குத் தாழ்ந்திருக்கும் நிலை. பணிவையும், உடைந்து நெக்குருகி நிற்பதையும் ஆத்மார்த் தமாய் காட்டு கின்ற நிலை அது. எவ்வளவுக்கெவ்வளவு சிரசை யும் நெற்றியையும் தாழ்த்தி அல்லாஹ்வுக்கு முன்னால் நிலத்தில் பணிகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அவனை நீங்கள் நெருங்கு கிறீர்கள்; வானுலகில் உங்களது அந்தஸ்து உயர்வடைகிறது.

''அவர்கள் அவனுக்கு அடிபணிய மறுத்து பெருமை கொள்வ தில்லை'' (அல்அஃராப்: 206) என அல்லாஹ் தனது அடியார்களை யும் வானவர்களையும் வர்ணிக்கிறான். அன்றாடம் இரவிலும் பகலிலும் சில மணித்தியால இடை வெளிகளில் இறைவிசுவாசி கள் இப்பணிவை தங்களது மகத்தான படைப்பாளனுக்கு முன் னால் அப்பியாசம் செய்கின்றனர். இவ்வாறு தொழுகையை அவர்கள் அதற்கேயுரிய உள்ளச் சத்துடன் நிறைவேற்றும் போது, அந்தப் பணிவு பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் பாகமாக அவர் களது இயல்பில் ஆழப் பதிந்து விடுகிறது; பெருமைக்கோ அதன் விளைவான முரண்பாடு களுக்கோ அவர்களது வாழ்வில் இட மில்லாது போகிறது. ''இறைவிசுவாசிகளிடம் பணிவாக நடந்து கொள்வார்கள்'' (அல் மாயிதா: 54) என அல்லாஹ் தனது வேதத்தில் வர்ணித்தது போன்று அவர்கள் மாறி விடுகிறார்கள். ''விசுவாசி

*களுக்கு (பணிவு எனும்) உமது இறக்கையை தாழ்த்திக் கொடுப் பீராக!'' (அல் ஹிஜ்ர்: 88)* என அவன் தனது நம்பிக்கை மிகு தூதருக்கு உபதேசித்ததும் இதனைத்தான். இப்படி மாறுகின்ற போதுதான் 'நாகரிக'த்தின் ராஜபாட்டைக்குள் அவர்கள் முதல் எட்டை எடுத்து வைத்தோராகின்றனர்.

மஸ்ஜிதில் நுழையும் போதே 'ஸுஜூது'க்குரிய பள்ளியில் நுழைவதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். பணிவை யும், நெக்குருகி நிற்கும் நிலையையும், சக மனிதர்கள் மீதான மென்னுணர்வையும் கற்றுத்தரும் பள்ளி அது.

'ஒன்றிணைப்பது' என்ற பொருளிலான 'அல்-ஜாமிஉ' என்ற பெயரும் அதற்குண்டு. அது நம் எல்லோரையும் ஒன்று சேர்க் கிறது; சமப்படுத்துகிறது; நம் உள்ளங்களை ஐக்கியப் படுத்து கிறது; வெறுப்பையும் குரோதத்தையும் அகற்றுகிறது. காழ்ப்பு ணர்வுக்கோ பகை மைக்கோ அங்கு இடமில்லை; பெரியவர், சிறியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், அதிகாரி, சாமானியர், அநியா யம் இழைத்தவர், அநியாயம் இழைக்கப்பட்டவர் என்ற வேறு பாடுகளும் இல்லை.

*'அணிகளைச் சீர்செய்யுங்கள். நீங்கள் அணிகளில் நிற்கும் போது வானவர்களுடன் அணி வகுத்து நிற்கிறீர்கள். தோளோடு தோள் சேர நில்லுங்கள். இடைவெளிகளை நிரப்புங்கள். உங்கள் சகோதரர்களுடன் மென்மையைப் பேணுங்கள். இடையில் ஷெய்த் தான் நுழைய இடமளிக்காதீர்கள். எவர் அணியில் தொடர்பறாது நெருங்கி நிற்கிறாரோ அவருக்கு அல் லாஹ்வும் நெருக்கமாகி றான்; எவர் தொடர் பறுந்து தூரமாகி நிற்கிறாரோ அவரை அல்லாஹ்வும் துண்டித்துக் கொள்கிறான்.'*[1]

---

1) அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர். 'ஸஹீஹுல் ஜாமிஇ' அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

சங்கை மிக்க இந்த நபித்துவப் போதனையை எத்தனை தடவைதான் படித்திருப்போம்! எத் தனை தடவைதான் உரை களிலும் உபதேசங் களிலும் ஜும்ஆ பிரசங்கங்களிலும் கேட்டி ருப்போம்! இமாம்கள் மஸ்ஜிதில் தொழுகை நடாத்த முற்படும் போது எத்தனை தடவைதான் இதனைக் கூறியிருப்பார்கள்!

ஆனால் அதிலுள்ள ஒவ்வொரு வாசகத்தையும் அந்த வாசகத் துக்குப் பின்னாலுள்ள பொருளையும் நின்று கவனித்தவர் நம்மில் எத்தனை பேர்? அப்படி நாம் செய்திருந்தால், இந்நபிமொழி தொழுகையின் அணிகளைச் சீர்செய்கின்ற வெறும் வழிமுறை மட்டுமல்ல என்பது நமக்குப் புரிந்திருக்கும்; அது உள்ளங் களைச் சீரமைப்பதற்கான யாப்பு என்பதும், யாரும் யார் மீதும் மேலாண்மை செலுத்த முடியாத சமத்துவமான, நாகரிக சமுதாய மொன்றை நிலை நிறுத்துவதற்கான பூரண ஒழுங்கு என்பதும் புரிந்திருக்கும்.

மேற்குறித்த நபிமொழியை வாசிக்கும் நாம் முதலில் இப்படி கேட்டுப் பார்ப்போம்: ''அணிகளைச் சீர்செய்யுங்கள்!'' என்றும், ''தோளோடு தோள் சேர நில்லுங்கள்!'' என்றும் கூறப்பட்டது எதற்காக? அணிகள் சீர்செய்யப்படுவதற்கும், தோள்களும் பாதங் களும் சமாந்தரமாக இணை ந்து நிற்பதற்கும் அவ்வளவு பெரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது ஏன்?

பதில் மிக எளிமையானது; ஏனெனில், நாகரிகம் ஆரம்பிப்பது இங்கிருந்துதான். நாகரி கத்தின் மூல விதைகளுள் இதுவும் ஒன்று.

தொழுகையின் கூட்டுச் சந்திப்புக்கு சமூக மளிக்குமாறு நாம் அழைக்கப்படுகிறோம்; ஏனெனில் நாகரிகம் என்பது கூட்டுத் தொழிற்பாடு; கூட்டுணர்வு; தன்னலம் துறந்த நிலை. நாகரிகம் என்பதே முதல் நிலையில் ஒரு சமூகம்தான்.

இரண்டாவதாக, தொழுகையின் நுணுக்கமான நேர ஒழுங் கைப் பேணுமாறு அழைக்கப்படுகிறோம்; தினமும் ஒரு தடவை யன்றி, ஐவேளை நாமும் நமது சகோதரர்களும் அழைக்கப்

படுகிறோம். விளைவாக, நுணுக்கமும் நேரத்தைப் பேணும் பாங்கும் நாடி நரம்பெங்கும் பரவி, நமது இயல்பின் பிரிக்க முடியாத பாகமாக மாறுகின்றன. நாகரிகம் என்பதே இந்த நுணுக்கமும், கட்டுக் கோப்பும், நமது நேரத்தையும் பிறரது நேரத்தையும் மதிப்பதும்தான்.

மூன்றாவதாக, இந்தச் சந்திப்பில் பிறருடன் இணைந்து வரிசைகளை அமைக்குமாறு கேட்கப்படுகிறோம்; ஏனெனில், நமது இந்த ஒழுங்கும் நிரலும் சுயாதீனமாகவே நமது ஆன்மாக்களில் ஒழுங்கமைப்பையும், சிந்தனையில் நேர்த்தியையும், செயற்பாட்டில் தேர்ச்சியையும், உள்ளங்களில் பிணைப்பையும் பிரதி பிம்பம் செய்து, வெற்றிகரமான, பரஸ்பரம் ஒத்துழைக்கின்ற, பரிபூரண நாகரிக சமுதாயமொன்று கட்டமைய வழியமைக்கின்றன. கூட்டுப் பணி, ஒருங்கிணைப்பு, ஒழுங்கு, நேர்த்தி, தேர்ச்சி, பொறுமை, பணிவு, சகிப்புத் தன்மை, மற்றமையை அங்கீகரித்தல், நோக்கங்களாலும் வழிகளாலும் உள்ளங்களாலும் ஆன்மாக்களாலும் ஒன்றுபடுதல் முதலியவற்றி லிருந்தே நாகரிகம் பிறக்கிறது.

ஆயினும், இந்த வழிகாட்டல் நமது பல வீனங்களாலும் தளர்வுகளாலும் மானிடக் குறைபாடுகளாலும் பந்தாடப்பட்டு விடலாம் என்பதால் இஸ்லாம் அதனை வானுலகுடன் தொடர்பு படுத்தி வைத்திருக்கிறது; அப்போதுதான் எவரும் அதனைக் கைவிடவோ திரிக்கவோ மாற்றியமைக்கவோ நினைக்க மாட்டார்கள். 'அல்லாஹ்வுக்கு முன்னால் தொழுகைக்காக அணி வகுத்து நிற்கும் போது வானவர்களுடன் அணிவகுத்து நிற்கிறீர்கள்'' என்று அது நினைவுபடுத்துவது இதனால்தான்.

பூமியில் கட்டியெழுப்பப்படும் நாகரிகத்தின் அடிப்படைகளுக்கும் வானுலகின் நியமங்களுக்கும் இடையிலான அதிசயமான, பொருள் பொதிந்த தொடர்பு இது. 'சரியான வணக்கம் என்பது சரியான நாகரிகம்' என சுருக்கமாக இதனை நபிமொழி நமக்கு உணர்த்துகிறது; அது வானுலகில் நிகழ்வது போன்றுதான் பூவுலகிலும் நிகழ வேண்டும்!

பிறகு மற்றொரு நிபந்தனையைப் பேணுமாறும் அழைக் கப்படுகிறோம்: ''இடைவெளிகளை நிரப்புங்கள்; இடையில் ஷெய்த்தான் நுழைய இடமளிக்காதீர்கள்!'' நாகரிகத்தைக் கட்டி யெழுப்புவதில் தனிநபர் பொறுப்புணர்வும் நம்பகத் தன்மை யும் வகிக்கும் பாத்திரம் குறித்து நபியவர்கள் இங்கு கவனயீர்ப்புச் செய்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் நமது சிறப்புத் துறைக்குத் தக்கவாறு 'உம்மா'வின் முன்னரங்கு எல்லையில் நிற்கிறோம். 'உம்மா'வின் நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் ஒவ்வொரு வருக் கும் தனித்தனியான பாத்திரமும் செயற்பாடும் ஆற்றல் களும் உள்ளன. எவராவது தனது பொறுப்பிலிருந்து விலகி விடுவாராயின், அவர் ஷெய்த்தான் நுழைவதற்கு இடம் விடுகிறார் என்பதே அதன் பொருள். அது 'உம்மா' தாக்கப்பட இடமேற் படுத்திக் கொடுக்கும் துரோகச் செயலாகவும் காட்டிக் கொடுப் பாகவுமே கருதப்படும். நாகரிகம் என்பது சிறப்புத் தேர்ச்சி, தனிநபர் பொறுப்பு, ஒத்துழைப்பு, ஆக்கபூர்வ மான உழைப்பு என்பவற்றின் மீதே கட்டி யெழுப்பப்பட முடியும்.

பூமி சார்ந்த இவ்வழிகாட்டலை நபியவர்கள் மீண்டுமொரு முறை வானுலகுடன் இணைக்கி றார்கள்: ''எவர் அணியில் தொடர்பறாது நெருங்கி நிற்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வும் நெருக்கமாகின்றான்; எவர் தொடர்பறுந்து, தூரமாகி நிற்கிறாரோ அவரை அல்லாஹ்வும் துண்டித்துக் கொள்கிறான்''.

'அல்லாஹ்வின் அடியானே, எச்சரிக்கை! நீ இங்கு அணியுடன் இணைந்து நின்றால் அங்கு அல்லாஹ் உன்னுடன் சேர்ந்து நிற்கிறான்; இங்கு நீ துண்டித்துக் கொண்டால் அங்கு அல்லாஹ் வும் துண்டித்துக் கொள்கிறான்!' என்பது போல் உள்ளது இந்த நபி வாசகம்.

பூமியின் நாகரிக உருவாக்கத்துக்கான முன் நிபந்தனைகளுக் கும் வானுலக நிகழ்வுகளுக்கும் இடையிலான இப்பிணைப்பை விட தெளிவான பிணைப்பு வேறெங்கு இருக்க முடியும்? உண்

*மையில், வணக்கத்தின் முன் நிபந்தனைகளுக்கும் நாகரிகத்தை கட்டுருவாக்கம் செய்வதற்கான முன் நிபந்தனைகளுக்கும் இடை யிலான பிணைப்பல்லவா இது!*

அனைத்துக்கும் மேலாக, கடினப்போக்கை கைவிடுமாறு கேட் கப்படுகிறோம்; தொழுகையில் / சமூகத்தில் / அன்றாட வாழ்வில் பிறருடன் மென்மையாக நடந்து கொள்ளுமாறு வேண்டப்படு கிறோம்: ''உங்கள் சகோதரர்களுடன் மிருதுவாக நடந்து கொள் ளுங்கள்!''. அணியை முற்படுத்தியோ பிற்படுத்தியோ இடை வெளிகளை நிரப்பியோ பிற சகோதரர்கள் அணியைச் சீர்செய்ய முயலும் போது அவர்களுடன் நாம் மென்மையாக ஒத்துழைக்க வேண்டும். இப்பண்பு நிச்சயமாக இறுதியில் நமது உள்ளங்க ளிலும் இயல்புகளிலும் பிரதிபலிப்பொன்றை ஏற்படுத்தும்; பிற ருடன் கடுமையாக நடந்து கொள்ளாதிருக்க நம்மைத் தூண்டும். சிந்தனையிலும் நடத்தையிலும் மட்டுமன்றி, அபிப்பிராய முரண் பாடு கொள்வோருடன் (அது இறையியல் நம்பிக்கை சார்ந்த விடயங்களிலாயினும்) நடந்துகொள்ளும் முறையிலும் கூட கடும் போக்கோ தீவிரமோ வன்முறையோ வெளிப்படாமல் அது நம்மைப் பாதுகாக்கும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் இப்படித்தான் நடந்து கொண்டார்கள்.

விசுவாசிகளின் அன்னை ஆயிஷா (றழி) கூறுகிறார்கள்:

''...இறைத்தூதர் (ஸல்) எந்தவொரு பணியாளரையோ பெண் ணையோ அடித்ததில்லை; அல்லாஹ்வின் பாதையில் போராடும் போது தவிர வேறெந்த நிலையிலும் தமது கையால் எதற்கும் அடித்ததில்லை. இரு விடயங்கள் அன்னாரிடம் தெரிவுக்கு விடப் பட்டால் மிக இலகுவானதைத் தேர்ந்தெடுக்கவே -அது பாவ மாக இல்லாத பட்சத்தில்- விரும்பினார்கள். பாவமாக இருக்கு மெனில், அனைவரையும் விட தூர விலகி நிற்பவராக அன்னார் இருந்தார்கள். எதிலும் எக்காரணம் கொண்டும் தனக்காக அன்னார்

பழிதீர்த்துக் கொண்டதில்லை. அல்லாஹ்வின் புனிதக் கட்ட ளைகள் மீறப்படும்போது மாத்திரம் அல்லாஹ்வுக்காக பழி வாங்கினார்கள்.''[(2)]

ஸுப்ஹானல்லாஹ்..!

நாம் பணிவாக நடந்துகொள்ள வேண்டும் என்பதில் இறைத் தூதர் (ஸல்) ஆர்வம் காட்டி னார்கள்; நாமோ பெருமை கொண்டோம்!

நம்மை மென்மைப்படுத்த அன்னார் விரும்பினார்கள்; நாமோ கடின சித்தம் கொண்டோம்!

நடுநிலையோடும் விட்டுக் கொடுத்தும் நடக்க வேண்டும் என நம்மிடம் எதிர்பார்த்தார்கள்; ஆனால் கடும்போக்கையும் தீவிரப் பண்பையும் எடுத்துக் கொண்டோம் நாம்!

பரஸ்பரம் புரிந்து கொண்டு நெருங்கி வர வழி காட்டினார்கள்; ஆனால் முரண்பட்டுத் தூர விலகினோம் நாம்!

ஐக்கியப்பட்டுப் பலமடைய கற்றுத் தந்தார்கள்; ஆனால் பிரிவினை பாராட்டிப் பலமிழந்தோம் நாம்!

ஸுன்னாவுக்கும் ஷீஆவுக்கும் இடையில் முஸ்லிம்கள் நம்பிக் கையிலும் நடைமுறையிலும் ஏராளமாக முரண்பட்டார்கள். ஆனால் -கால, தேச வர்த்தமானங்கள் எவ்வளவு மாறு பட்ட போதிலும்- தொழுகையின் அடிப்படைக் கூறுகளிலோ எண்ணிக் கைகளிலோ அசைவுகளிலோ நேரங்களிலோ அவர்கள் முரண்பட வில்லை. தொழுகை கூட்டாக நிறைவேற்றப்படும் அமைப்பைக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம்.

---

2) அறிவிப்பவர்: ஆயிஷா (றழி). 'அஸ்-ஸில்ஸிலா அஸ்- ஸஹீஹா' வில் அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

நமது அனேக வணக்கங்களின் கூட்டுக் கட்டமைப்பே அவற்றை திரிபுகளிலிருந்து பாதுகாத்து வந்திருக்கிறது. அல்-குர் ஆனின் வசனங்கள் தொடர்பாக முஸ்லிம்கள் முரண்படாததற்கும் காரணம், அவற்றை தினமும் (குரலெழுப்பி ஓதப்படும்) மூன்று தொழுகைகளில் கூட்டாக ஓதி தொடர்ச்சியாக உறுதிப்படுத்தி வருமாறு இஸ்லாம் அவர்களைப் பணித்திருப்பதே. இது ஒவ் வொரு மஸ்ஜிதிலும், ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வொரு நாட்டி லும், ஒவ்வொரு வீட்டிலும் தினமும் நிகழ்கிறது. இமாம் வசனங்களை ஓத, பின்னால் தொழுபவர்கள் அவரை நுணுக்க மாகச் செவிமடுத்து உறுதி செய்கிறார்கள். முஸ்லிம்கள் முரண் பட்டதெல்லாம் அவ்வசனங்களின் விளக்கத்திலும் பொருள் கோடலிலும்தான்; ஏனெனில் அது ஒரு கூட்டுச் செயற்பாடன்று. அவ்வாறே, தொழுகையின் வடிவத்திலும் முஸ்லிம்கள் அபிப் பிராய பேதம் கொள்ளவில்லை; ஏனெனில், அது தினமும் ஐந்து தடவை மஸ்ஜிதுகளில் பலரும் இணைந்து நிறைவேற்றும் கூட்டு வணக்கம். அவர்கள் வேறுபட்டதெல்லாம் தொழுகையில் உள் ளங்கள் யாரை நோக்கி முதல் நிலையில் திரும்புவது என்பதில் தான்; ஏனெனில் உள்ளங்களைப் பார்ப்பவன் அல்லாஹ் மாத்திரமே. ஹஜ்ஜின் அமைப்பிலும் அதன் அடிப்படை அம்சங் களிலும் கூட முஸ்லிம்கள் முரண்படவில்லை; ஏனெனில், அதுவும் பலரது அவதானிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் கூட்டு வணக்கம். ஆயினும் எந்த அடிப்படைகளை விட எந்த அடிப் படைகளுக்கு அதிக கவனம் கொடுக்க வேண்டும் என்பதிலும், எத்தகைய கிளையம் சங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் வேறுபட்டார்கள்.

இன்று பூமியில் வாழும் சமூகங்களில் நாகரிக முன்னேற்றம் கண்டவை எவை, பின்னடைந்திருப்பவை எவை என கவனித்து, இரு பிரிவினதும் பிரதான பண்புகளை கூர்ந்து படிக்க நாம் முயல வேண்டும். அவ்வாறு பார்த்தோமாயின், நாகரிக முன்னேற்றம் கண்டவர்கள் பணிவு, சகிப்புத் தன்மை, கூட்டுழைப்பு, ஒற்றுமை,

*சிறப்புத் தேர்ச்சி முதலிய பண்புகளைக் கொண்டிருப்பதையும், தங்களது தேசத் தைக் கட்டியெழுப்புவதில் ஒரே அணியாக, ஒரே கரமாக, ஒரே உள்ளமாக நின்று உறுதியோடும் விடாமுயற்சி யோடும் நாட்டத்தோடும் உழைத்திருப்பதையும் கண்டுகொள்ள முடியும். அதே போன்று, பின்னடைந்து நிற்பவர் களெல்லாம் பெருமை, கடும்போக்கு, அநீதி, அலட்சியம், புறக்கணிப்பு முத லிய பண்புகளைக் கொண்டிருப்பதையும், ஒவ்வொருவரும் சக மனிதர்களை விளிம்பு நிலைக்கு புறம் தள்ளி தான் மட்டும் தனி வழியில் செல்ல முனை வதையும் காண முடியும்; அவர்களுள் இரு சாரார் சந்தித்துக் கொள்வதாயினும் கூட முரண்படுவதற் காக அல்லது போர் நெருப்பை மூட்டிக் கொள்வதற்காகவே சந்தித்துக் கொள்வர். கவலைக்குரிய வகையில், இன்று முஸ்லிம் களது தேசங்களும் நிலைமைகளும் இதுவன்றோ!*

பின்வரும் நபிமொழியை கண்முன் நிறுத்தி, அதன் வார்த் தைகளைக் கூர்ந்து கவனித்து, தனக்கும் தன்னைச் சார்ந்தோருக் கும் சூழ இருப்போருக்கும் பிரயோகித்துப் பார்க்கும் ஒருவர், அண்ணலார் அவர்கள் அதில் கூட்டுத் தொழுகையை வலியுறுத் தியதோடு அதிலுள்ள ரகசியம் என்ன என்பதை தெளிவுபடுத்தி யிருப்ப தையும் கண்டுகொள்ளலாம்: ஐக்கியம், ஒற் றுமை, பலம்... இதுதான் அந்த ரகசியம். இது இல்லையெனில், மந் தையை விட்டுப் பிரிந்து தனித்தலைந்து, ஓநாயின் வாயில் அகப்பட்டுக் கொள்ளும் ஆடு போன்று நாம் ஆகி விடுவோம். இந்த உலகில் நம்மைச் சுற்றி நிற்கும் ஓநாய்கள்தான் எத்தனை!

*''ஓர் ஊரில் அல்லது ஊருக்கு வெளியில் மூவர் ஒன்றாக இருந்தும் அவர்களுக்கு மத்தியில் தொழுகை கூட்டாக நிலை நாட்டப்பட வில்லையெனில், ஷெய்த்தானின் ஆதிக்கம் அவர்கள் மீது விழுந்து விடும். கூட்டத்துடன் இணைந்திருங்கள்; தனித் தலையும் ஆட்டைத் தான் ஓநாய் வேட்டையாடுகிறது.''*[3]

3) அறிவிப்பவர்: அபூதர்தா. பதிவுசெய்தவர்: அபூ தாவூத்.

கூட்டுத் தொழுகையில் உடல்கள் மாத்திர மன்றி உள்ளங்களும் ஒன்றிணையும் போது, அன்றாட வாழ்விலும் சிந்தனையிலும் அது பிரதிபலிக்கும். அந்நிலையில் நாம் கூட்டாகவே செயற்பட முற்படுவோம்; நமது தெரிவுகள் தனிநபர் விருப்பு-வெறுப்புக் களால் அன்றி சமூக நலன்களால் இயக்கப்படும்; ஒன்றை ஏற்ப தாயினும் நிராகரிப்பதாயினும் தனிப்பட்ட மனச்சாய்வின்றி சமூக நோக்கிலேயே அதனைச் செய்வோம்; நமது சிந்தனை, செயல், கட்டு மானப் பணி, மகிழ்ச்சி, சோகம் முதலிய அனைத்தும் சமூக மயப்பட்டதாக இருக்கும்.

இப்படித்தான் அன்றைய முஸ்லிம்கள் ஜாஹிலிய்ய மௌட்டீ கத்திலிருந்தும் பின்னடைவிலிருந்தும் வீழ்ச்சியிலிருந்தும் விடு பட்டு, இஸ்லாத்தின் நாகரிகம், விழுமியங்கள், சிந்தனை, அறி வியல், நில ஐக்கியம், சகோதர வாஞ்சை என்பவற்றை நோக்கி விரைந்தார்கள்; மாற்றம் கண்டார்கள். அவர்கள் சுவன வாழ்வை நாடி ஒன்றிணைந்தபோது, வானமும் பூமியும் ஒன் றாக இணைத்து அவர்களுக்கு வழங்கப்பட்டது.

''கூட்டத்துடன் இணைந்திருங்கள்; தனியாக நிற்பது குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்; ஏனெனில் தனியொருவரோடு ஷெய்த் தானும் இருக்கிறான்; இருவர் இருக்கும் போது அவன் தூரமா கின்றான். பரந்து விரிந்த சுவனத்தின் வாழ்வை விரும்புபவர் கூட்டத்துடன் இருக்கட்டும்!''[4]

நாகரிகம் என்பது கூட்டிணைவு; ஒருமைப்பாடு; ஐக்கியம்; திறம்படச் செய்தல்; நுணுக்கம்; பணிவு; மென்மை; விட்டுக் கொடுப்பு; மற்றமையை அங்கீகரித்தல்; நெருக்கம்; விடா முயற்சி; நாட்ட சக்தி; பொறுமை.

---

4) அறிவிப்பவர்: உமர் இப்னுல் ஃகத்தாப். அல்பானீ இதனை 'தஃக்ரீஜு கிதாப் அஸ்-ஸுன்னா' வில் 'ஸஹீஹ்' என்கிறார்.

# வெள்ளிப் பிரசங்கம்: அபிவிருத்திக் கற்கை நெறி

ஒரு வெள்ளிக்கிழமை ஆக்ஸ்ஃபோர்ட் நகர மஸ்ஜிதொன்றின் ஜும்ஆப் பிரசங்கத்தை இமாம் ஓர் அறபு வார்த்தை கூட மொழி யாமல் ஆங்கி லத்தில் நிகழ்த்தி முடித்தபோது, தொழ வந்தி ருந்தோருக்கு மத்தியில் சலசலப்பும் சந்தடியும் தோன்றி விட்டது. அந்த 'ஃகுத்பா' செல்லுபடி யாகாது என்பது மட்டுமல்லாது, அறபு மொழி யின்றி 'ஃகுத்பா' நிகழ்த்தப்பட்டதால் முழு ஜும்ஆவும் செல்லுபடியற்றதாகி விடும் என அவர்கள் அங்கலாய்த்தனர்.

இது போன்ற நிகழ்வுகளைப் பார்த்து பிரித்தானியாவில் வாழும் நாங்கள் வியப்பும் மலைப்பும் அடைகிறோம். ஏனெனில் எமது சில சகோதரர்கள், அறபு மொழி தமது தாய்மொழியாக இல்லாத போதும், அறபிகளாகிய நாங் களே கொடுக்கத் தவறிய மதிப்பை யும் அன்பையும் புனிதத் தன்மையையும் அதற்குக் கொடுப்பதை காணும்போது, அவர்கள் மீது ஏற்படும் மரியாதை கலந்த வியப்பு அது. அறபு மொழிக்கு அவர்கள் வழங்கும் கண்ணியம் நம்மை வெட்கித் தலைகுனியச் செய்ய வேண்டும்; கொஞ்சமாவது விழிப் படையச் செய்ய வேண்டும்; அறபு மொழி மீதான நமது அன்பை யும் மதிப்பையும் கொன்று விட்ட 'பழக்கம்' என்ற தோஷத்தி லிருந்து விடுபட அது நம்மைத் தூண்ட வேண்டும்; அந்த

மொழியையும், அதன் பெறுமதியையும், அந்தஸ்தையும் மீண்டும் கண்டடைய அது நமக்கு உதவ வேண்டும்.

அந்தச் சகோதரர்களிடம் காணப்படுகின்ற இப்பண்பு உண்மை யிலேயே ஒரு பிரகாசமான பாகம். அறபிகளாகிய நம்மை அது குற்ற உணர்வு கொள்ளச் செய்கிறது; தாய்மொழிக்கு நாம் செய்ய மறந்த புனிதக் கடமையை நினைவூட்டுகிறது. எவ்வாறிருப்பி னும், அவர்களது இப்பண்புக்கு மற்றோர் இருண்ட பக்கம் இருப்பதையும் இங்கு மறுப்பதற்கில்லை.

அறபு மொழியைப் புரிந்து கொள்ள முடியாத போதும் ஜும்ஆ உரை அறபு மொழியில்தான் நிகழ்த்தப்பட வேண்டும் என பிடி வாதமாகக் கூறும் அவர்களைப் பார்க்கும்போது, ஜும்ஆ உரை யின் அடிப்படையானதும் உயிர்ப்பு மிக்கதுமான பாத்திரம் குறித்து சில முஸ்லிம்கள் கொண்டிருக்கும் குறை மதியும் விகாரமான புரிதலும் நமக்குப் பிரத்தியட்சமாகின்றன. அவ்வாறே, முஸ்லிம் கள் மதத்தையும் அன்றாட வாழ்வையும் வேறு வேறாகக் கூறு படுத்தி வைத்திருக்கும் அபாயமும் தெளிவாகிறது: ‘உங்களது உரையை உங்கள் குர்ஆனினதும் நபியினதும் மொழியில் நிகழ்த் துங்கள்; அதில் நீங்கள் என்ன சொன்னாலும், சொல்லா விட்டா லும் எங்களுக்குக் கவலையில்லை. ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றி விட்டீர்களானால் போதும்; அப்பால் நீங்கள் திருடி னாலும், ஏமாற்றினாலும், பொய் கூறினாலும், விபச்சாரம் புரிந் தாலும் பாதகமில்லை. பன்றி இறைச்சி சாப்பிடாதீர்கள்; ‘ஹலால்’ இறைச்சி மட்டுமே சாப்பிடுங்கள். அப்பால் விரும்பிய பாவத்தைச் செய்து கொள்ளலாம்..!’ என்று கூறுவது போல் உள்ளது இது.

மேற்கத்தியரின் முன்னால் இஸ்லாம் பற்றிய பிம்பம் சிதை வடைவது இப்படித்தான். இஸ்லாம் பற்றிய முஸ்லிம்களது விகாரமான புரிதலால் ஒரு புறமும், மார்க்கத்தின் அடிப்படை களைத் தொலைத்து விட்டு கிளையம்சங்களில் கவனம் குவிப்ப தால் மறுபுறமும் இந்நிலை தோன்றுகிறது. இஸ்லாம் பற்றிய

புரிதல் முஸ்லிம்களிடமே இல்லாது போனதால் நேர்ந்த அநியாயங்கள்தான் எத்தனை? அது முகம்கொடுத்த சோதனை கள்தான் எத்தனை?

இமாம் 'ஃகுத்பா'வை உள்ளூர் மொழியில் அல்லது புரிந்து கொள்ள முடியுமான வேறொரு மொழியில் நிகழ்த்தாமல், அறபு மொழியில் தான் நிகழ்த்த வேண்டும் என்பது இவர்களது நிலைப் பாடு. வழக்கமாக அத்தகைய உரையில் சில அல்குர்ஆன் வசனங் களையும் ஹதீஸ்களையும் தவிர எதுவும் இருப்பதில்லை. சில போது இமாம் அதில் சில செறிவான முதுமொழிகளையோ வசனங்களையோ சேர்த்துக் கொள்வதுண்டு. அவை கூட ஒவ் வொரு 'ஃகுத்பா'விலும் சொல்லிச் சொல்லி பழகிப் போனவை யாகத்தான் இருக்கும். பிறகு மக்கள் 'ஜும்ஆ'வுக்குள் நுழைந்தது போன்றே வெளியேறி வருவார்கள்; புதிதாக எதுவுமில்லை. புரிதல், படிப்பினை, பயன், நல்லுணர்வு, சட்டத் தெளிவு, சமகால விவகாரங்கள் என்ற எதுவும் அங்கில்லை. இப்படித்தான் நாம் ஜும்ஆ பிரசங்கத்தின் ஆன்மாவை மிகச் சாதுரியமாகக் கொன்றி ருக்கிறோம்; எஞ்சியிருப்பது அதன் மொழி என்ற உடல் மட்டுமே!

மிக முக்கியமான இவ்வாராந்த விளக்க வகுப்பை அதன் உண்மைப் பொருளிலிருந்து விலக்கி, வெறும் இயந்திரத்தனமான உச்சாட னக் கிரியையாக நாம் மாற்றி விட்டோம். பல முஸ்லிம் கள் தங்களது வணக்கங்களை அவற்றின் யதார்த்தமான பொருளி லிருந்து தூரமாக்கி, அவற்றுக்கும் அன்றாட வாழ்வுக்கும் இடை யிலான தொடர்பை அறுத்து விட்டிருப்பது போன்றதே இதுவும். அவர்கள் தொழுது கொண்டே திருடுகிறார்கள்; நோன்பிருந்து கொண்டே பொய் சொல்கிறார்கள்; 'ஹஜ்' செய்து கொண்டே மோசடியிலும், அநியாயங் களிலும், புறம் பேசுவதிலும், தாம் பழக்கப்பட்ட எல்லாப் பாவங்களிலும் ஈடுபடுகிறார்கள்; இப்ப டியே சென்று, மதத்துக்கும் உலக வாழ்வுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட அந்த வினோதமான பிரிகோட்டை இன்னும் அடர்த்தி யாக்கி விடுகிறார்கள்!

இந்நிலையில்தான், 'ஹலால்' இறைச்சியின் நிபந்தனைகள் பற்றியும், அவற்றைக் கடைப் பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பாட போதனை செய்கின்ற 'தற்குறிகளை' நாம் சந்திக்க நேரிடுகிறது. 'ஹலால்' இறைச்சியின் நிபந்தனைகள் பற்றி நம்மிடம் மிகச் சரியான மாற்றுப் புரிதல் இருந்தாலும், அவரது போத னையை நாம் கேட்க வேண்டும்! அந்த நபர் -ரகசிய மாகவோ வெளிப்படையாகவோ- ஓர் ஏமாற்றுப் பேர்வழியாக வும், பொய்யனாகவும், மோசடிக்காரனாகவும், திருடனாகவும், சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்படுபவனாகவும், சிலபோது போதைப் பொருள் பாவனையாளனாகவும் கூட இருக்க முடியும். ஆயினும் இந்த எல்லா நிலையிலும் உண்மையான முஸ்லிம் நானே என அவர் பிடிவாதமாக கூறிக் கொண்டிருப்பார். அது கூடப் பரவாயில்லை! ஹலால் இறைச்சி தொடர்பான அவரது நிபந்தனைகளை -அவை சரியாயினும் பிழையாயினும்- நீங்கள் ஏற்கவில்லையெனில், இஸ்லாத்தை விட்டே உங்களை வெளி யேற்றி விடுவார்!

கவலைக்குரிய வகையில், இன்றைய முஸ்லிம்களில் பெரும் பரப்பினர் வந்து சேர்ந்திருக்கும் இடம் இதுதான்: தொழு; அதன் பிறகு விரும்பியதைச் செய்! 'ஃகுத்பா'வில் விரும்பியவாறு பேசு; அது அறபு மொழியில் அமைந் திருக்க வேண்டும் என்பதே முக்கியமானது! அன்றாட வாழ்விலும் பிறருடனான தொடர்பு களிலும் விரும்பிய படி நடந்துகொள்; 'ஹலால்' இறைச்சியைத் தவிர எதனையும் சாப்பிடாதிருப்பதே முக்கியம்; அதுவும் ஹலால் இறைச்சி பற்றிய குறுகிய, 'உள்ளூர்' புரிதலுக்கேற்ற வகையில் அது கடைப்பிடிக்கப்பட வேண்டும்!

முஸ்லிம் சமூகத்தின் வாழ்விலும் முன்னேற்றத்திலும் வளர்ச்சி யிலும் ஜூம்ஆ உரை வகிக்கக் கூடிய அடிப்படையான பாத்தி ரத்தை பலர் அறிவதில்லை. அவர்களைப் பொறுத்த வரை ஜூம்ஆ தொழுகையும் உரையும் வெறும் கிரியை சார்ந்த கடமையாகவே கடந்து செல்கிறது; அதனை நிறைவேற்றி, கடமையிலிருந்து

விடுபடுவதோடு சரி! குறித்த நேரத்திற்கு அவர்கள் மஸ்ஜிதை வந்தடைவார்கள்; இமாமின் உரைக்கு செவி மடுப்பார்கள்; சீராக அணி வகுத்து நின்று தொழுகையை நிறைவேற்றுவார்கள்; 'அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்ம துல்லாஹ்... அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹ்...' எல்லாம் முடிந்தாயிற்று!

இத்தகு நிலையில் நாம் இப்படி கேட்டுப் பார்க்க வேண்டி யுள்ளது:

'ஜும்ஆ உரையை செவிதாழ்த்திக் கேட்ப தும், அதன்போது அமைதி பேணுவதும் 'ஸுன்னத்' ஆக்கப்பட்டிருப்பது இமாமுக்கு முன்னால் ஒழுக்கமாக நடந்துகொள்வதற்கும் அவரை மதிப்பதற் கும் மட்டுமா? அவ்வாறாயின், ஜும்ஆ உரை என்பது வெறும் மதச் சம்பிரதாயம் சார்ந்த கிரியையும் அப்பியாசமும் மட்டும்தானா? உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவமோ பொருளோ இல்லையா?'

தொழுகை என்பது ஒரு வணக்கம்; ஃகுத்பா உரை ஒரு செயல் திட்டம். அது ஜும்ஆ தொழுகையின் பிரிக்க இயலாத அங்கம். 'ஃகுத்பாவை தவற விட்டவர் ஜும்ஆவையே தவற விட்டவர் போன்றவர்' என நபிமொழி குறிப்பிடுகின்றது:

''ஜும்ஆ தினத்தில் வானவர்கள் மஸ்ஜிதுகளின் வாயிலருகே நின்று உள்ளே வரும் மனிதர்களது அந்தஸ்துகளை பதிவு செய் கின்றனர். இன்ன நபர் இன்ன நேரத்துக்கு வந்தார்... இன்ன நபர் இன்ன நேரத்துக்கு வந்தார்... இன்ன நபர் இமாம் உரை நிகழ்த்தும் போது வந்தார்... இன்ன நபர் தொழுகையை அடைந்து கொண் டார்; ஆனால் ஜும்ஆவை தவற விட்டார்... என்றெல்லாம் எழுதிக் கொள்வார்கள்''.(1)

எனவேதான், இமாம் தனது உரையிலிருந்து மக்கள் பயனுள்ள எதையாவது எடுத்துச் செல்ல வேண்டும் என விரும்பினால்,

1) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா, பதிவு செய்தவர்: அஹ்மத்.

தொழ வந்திருக்கும் வெகுஜனங்களின் அளவுக்கும், அவர்களது அறிவுத் தரத்துக்கும், சூழ்நிலைக்கும், தேவைகளுக்கும் ஏற்ற வகையில் பிரசங்கத்தைத் தகவமைத்துக் கொள்ள வேண்டிய வராகிறார். பாட்டாளி மக்களுக்கு நிகழ்த்தப்பட வேண்டிய பிரசங் கமும், படித்தவர்கள் நிறைந்திருக்கும் இடத்தில் நிகழ்த்தப்பட வேண்டிய உரையும் வேறு வேறான தன்மை கொண்டவை. பாட சாலை மாணவர்களுக்கு முன்னால் நிகழ்த்தப்பட வேண்டிய உரையும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முன்னால் நிகழ்த்தப்பட வேண்டிய உரையும், புதிதாக இஸ்லாத் தில் நுழைந்தோருக்கு முன்னால் நிகழ்த்தப்பட வேண்டிய உரை யும் வெவ்வேறானவை.

நமது பல இமாம்கள் செய்வது போன்று நபி (ஸல்) அவர்கள் தமது பிரசங்கங்களில் -பொருத்தமாக இருந்தாலும் இல்லாவிட்டா லும்- குறிப்பிட்ட சில வசனங்களையே கூறிக் கொண்டிருக்க வில்லை. பலரது உரைகள் இன்று சில அல்-குர்ஆன் வசனங்க ளுக்கும் ஹதீஸ் களுக்கும் அப்பால் நகராதிருப்பதை அவதானிக்க முடிகிறது. காலத்தாலும் இடத்தாலும் யதார்த்த நிலத்தின் நிகழ்வு களோடு தொடர்புபடுத்தும் எந்த யத்தனமும் இன்றி, வெறும் கிளிப்பிள்ளைப் பாடமாக அவற்றை நம்முன் அவர்கள் திரும்பத் திரும்ப ஒப்புவிக்கிறார்கள்.

பொருத்தம் இருந்தாலும் இல்லா விட்டாலும், அல்குர்ஆனின் ஒரே வகையான வசனங்களை மக்கள் முன் திரும்பத் திரும்ப நாம் கூறுவதன் மூலம் அந்த வசனங்களுக்கு அநீத மிழைத்து விடுகிறோம். ஏனெனில் அத்தகைய நெட்டுருப்போடல் தொழுகை யாளிகளின் உள்ளத்தில் எதிர்மறை மனப்பாங்கையே வளர்க் கிறது; குறித்த வசனங்கள் மீதும் நபிமொழிகள் மீதும் அவர்கள் கொண்டிருந்த நேசம் வெறுப்பாகவும் புறக்கணிப்பாகவும் மாறு வது மட்டுமன்றி, சிலபோது அல்-குர்ஆனின் எல்லா வசனங்கள் தொடர்பாகவும் அத்தகைய மனப்பாங்கு கட்டமைய அது காரண மாகி விடுகிறது.

ஃகுத்பாவின் மொழி அதன் உள்ளடக்கத்துக்கு முந்திய விவகாரமாக அன்றி, பிந்திய விவகாரமாக மாறும் நிலை எப்போது தோன்றும்? ஹலால் இறைச்சி விவகாரம் இஸ்லாத்தில் அடிப்படையான, நிலையான, விழுமியம் சார்ந்த போதனைகளைக் கட்டமைக்கும் விவகாரமாக அல்லாமல், அவற்றின் பின்னால் வரும் கிளையம்சமாக எப்போது மாறும்? நமது வாழ்வு நமது வணக்கங்களையும் இதர மார்க்கக் கிரியைகளையும் நிதர்சனப் படுத்தும் ஸ்தூலமாக வடிவம் பெறுவது எப்போது?

முஸ்லிம்களுக்கு அவர்களது மார்க்கத்தை புனர் நிர்மாணித்துக் கொடுக்கும் மனிதர்களை ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் அல்லாஹ் அனுப்பி வைப்பதாக சங்கை நபி (ஸல்) அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். ஜும்ஆவின் 'ஃகதீப்' ஒவ்வொரு ஜும்ஆவிலும் முஸ்லிம்களது மார்க்க விவகாரங்களை -வாராந்தம் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் ஏற்ப- புனர்நிர்மாணிக்கும் கடமைப்பாடு கொண்டவர்; அப்போது தான் வாழ்வுச் சக்கரத்தோடு இயைந்து சுழலவும், அதனுடனான தங்கள் உறவைப் பேணி அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் பங்காற்றவும் அவர்களால் முடியும்.

எந்தவொரு நிறுவனத்திலும் அதன் ஊழியர்களைப் பயிற்றுவித்து முன்னேற்றக் கூடிய கட்டாய செயல் வரைவுத் திட்டங்கள் இருப்பது போல், ஒரு முஸ்லிமின் வாழ்வைப் பயிற்றுவித்து, வழிகாட்டி, முன்னேற்றுகின்ற கட்டாய நிகழ்ச்சித் திட்டமாக ஜும்ஆ உரை அமைகிறது. இஸ்லாம் என்ற நிறுவனத்தையும், வாழ்வு என்ற நிறுவனத்தையும் அறிவார்ந்த முறையிலும் செயல்பூர்வமாகவும் பிணைக்கின்ற உத்தியோகபூர்வ இணைப்பாக அது தொழிற்படுகிறது.

# இங்கிருந்து ஆரம்பிப்போம்

வழக்கமாக என்னுடன் மஸ்ஜிதில் தொழுது கொண்டிருந்த ஒரு சகோதரர் திடீரென்று வராமல் நின்று விட்டார். அவர் பற்றி விசாரித்த போது, அவர் இப்போது எங்களோடு தொழுவதில்லை எனவும், இங்கு தொழுகின்ற மற்றொரு நபருடன் பிணக்குற்றதால் வேறு மஸ்ஜிதில் தொழுது வருகிறார் எனவும் அறிய முடிந்தது.

பிறகு இன்னுமொரு சகோதரரை நீண்ட நாட்களுக்குப் பின் சந்திக்க நேர்ந்தது. 'எங்களது மஸ்ஜிதில் இப்போது ஏன் உங்களை காண முடிவதில்லை?' என அவரிடம் கேட்டேன். அதற்கவர் கூறிய பதில் இதுதான்: 'மனிதன் ஓர் இழிந்த இந்திரியத் துளி யிலிருந்து படைக்கப்பட்டவன்' என்று கூறுவதற்காகவே பிரசங்க மேடையில் ஏறுகின்ற ஃகதீப் இருக்கும் மஸ்ஜிதில் நான் தொழுவ தில்லை; இந்திரியத்தை எப்படி அவர் பழித்துரைக்க முடியும்?'

பிறிதொரு சந்தர்ப்பத்தில், நான் மஸ்ஜிதுக்கு சென்று கொண்டி ருக்கும் வழியில் முஸ்லிம் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். மஸ்ஜித் வரை பேசிக் கொண்டே வந்த அவர், மஸ்ஜிதை அடைந்ததும் திரும்பி நின்று எனக்கு விடை கொடுத்தார். திகைத்த நான், ''நீர் எங்களுடன் தொழவில்லையா?'' எனக் கேட்டேன். அவர் சுற்று முற்றும் பார்வையை ஓட விட்டவாறே, ''ஸலஃபீக்கள் தொழும் பள்ளியில் நான் தொழுவதில்லை'' என்றார்.

முழு முஸ்லிம் 'உம்மா'வும் இப்படி மூன்று பிரிவுகளாக கூறுபட்டுக் கிடந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். மூன்றிலொரு பகுதியினர் தங்கள் விரோதி தொழும் மஸ்ஜிதில் தொழுவதில்லை; மற்றொரு பகுதியினர் ஓர் இமாம் அல்லது ஃகதீப் விடக் கூடிய மனிதத் தவறைக் கூட (அது தவறு தான் என நாம் வைத்துக் கொண்டால்) மன்னிக்காதவர்கள்; மூன்றாம் தொகுதியினர் தம்முடன் அபிப்பிராயத்தில் அல்லது இஜ்தி ஹாதில் மாற்று நிலைப்பாடு கொண்டவர் தொழும் மஸ் ஜிதில் தொழுவதில்லை. இத்தகு நிலையிலுள்ள ஒரு சமூகம் என்றாவது உலகை ஆளும் தகுதி பெறும் என்று நினைக்கிறீர் களா? அல்லது தன்னைத் தானே ஆளத்தான் அதனால் முடியுமா?

மஸ்ஜிதின் நியமங்களையும், அதில் கூட்டாகத் தொழுவதற் கான ஒழுக்கங்களையும் நிபந்தனைகளையும், அதன் வரலாற்றுப் பாத்திரத்தையும் நாம் என்ன செய்து விட்டோம்? அந்த மஸ்ஜி திலிருந்தல்லவா பெரும் இஸ்லாமியப் படைகள் புறப்பட்டு, முழு உலகிலும் இஸ்லாத்தையும் அதன் நாகரிகத்தையும் விழு மியங்களையும் -மானிட நாகரிகங்கள் என்றுமே கண்டிராத- குறுகிய காலப் பிரிவுக்குள் பரப்பின?

2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், 'சமகாலப் பிரசாரகர்களுக்கான அகாடமி' என்ற நிறுவனம் கெய்ரோவில் நடாத்திய பாடநெறி யொன்றில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டேன். ''அல்-அஸ்ஹர் பட்டதாரிகளுள் அறிவிலும் நடத்தையிலும் முன்மாதிரி யான மாணவர்களை வெளிக்கொணர்ந்து இளைய தலைமுறை யினருடன் தொடர்பாடச் செய்தலும், இஸ்லாத்தின் சமநிலைத் தூதை எத்திவைத்தலும்'' என்பதே நிகழ்வின் உள்ளடக்கமாக இருந்தது.

'பல்கலைக் கழகங்கள் மற்றும் கலாநிலை யங்களை அங்கீ கரிப்பதற்கான பிரித்தானிய சபை'யில் (The British Accreditation Council - BAC) சுமார் இரு தசாப்த காலம் பரிசோதகராக அங்கம்

வகித்த அனுபவத்திலிருந்தும், அந்த சபையின் பணியை அண்மையில் பிரித்தானியாவுக்கு வெளியிலுள்ள பல்கலைக்கழ கங்களுக்கும் கலாநிலையங்களுக்கும் விரிவுபடுத்தி பிரித்தானிய அனுபவங்களை நகர்த்திய அனுபவத்திலிருந்தும், ''சர்வதேச இஸ் லாமிய அங்கீகார சபை'' என்ற பெயரிலான நிறுவனமொன்றை ஆரம்பிக்குமாறு அந்த அகாடமிக்கு நான் ஆலோசனை கூறினேன். குறித்த சபையின் நிபந்தனைகளுக்கு அமைவாக எகிப்திலும், பல்வேறு அறபு, இஸ்லாமிய நாடுகளிலும் கலாசார நிலையங் களை அமைப்பதே இப்புதிய சபையின் நோக்கமாக இருக்கும். முதலில் எகிப்தில் ஆரம்பித்து வைக்கப்படும் இக்கலாசார நிலை யங்களின் பணி பல்கலைக்கழகங்களோடும் கலாநிலையங்க ளோடும் மாத்திரம் சுருங்காமல் தேசத்தின் பிற பாரிய மற்றும் சிறிய நிறுவனங்களையும் தழுவியதாக அமைந்திருக்கும். கம்பனி கள், அரச அமைப்புகள், வீதிகள், குடியிருப்புகள், தொடர்மாடிக் குடியிருப்புகள், மருத்துவமனைகள், சிகிச்சை நிலையங்கள், பாட சாலைகள், கழகங்கள், விற்பனை நிலையங்கள், மஸ்ஜிதுகள், தேவாலயங்கள், பொதுப் பூங்காக்கள், சிறுவர் பூங்காக்கள், பொதுக் குளியலறைகள், கட்டட நிர்மாணப் பட்டறைகள் முதலிய அனைத்தும் இவற்றுள் அடங்கும். ‘சமகாலப் பிரசாரகர்களுக்கான அகாடமி’யின் பாடநெறியில் கலந்து கொள்ளும் -எகிப்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த- ஐம்பது மாணவர்களும் இச்சிந்தனையின் மூலக் கருவாக அமைந்திருப்பர். அங்கீகார சபையை மையமாகக் கொண்டு அமைக்கப் படும் சிறிய பிராந் திய அமைப்புகளூடாக அவர்களது செயற்பாடு அமைந்திருக்கும். குறித்த பிராந்தியங்களிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் மத-கலாசார மட்டத்தில் மத்திய அங்கீகார சபையின் அங்கீகாரத் தைப் பெறும் நோக்குடன் போட்டி போட்டுச் செயற்படும் சூழ லொன்றை இப்பிராந்திய அமைப்புகள் உருவாக்கும். போட்டித் தன்மை முன்னேற்ற மடையும்போது, குறித்த அங்கீகாரத்தைப் பெற முயலாத நிறுவனங்கள் தமது சூழமைவில் தனிமைப்பட்டு நிற்கும் நிலையொன்று தோன்றும்.

*மாதங்களும் வருடங்களும் கழியும் போது, எகிப்தின் பல்வேறு வாழ்வியல் முகங்களில் இக்கலாசார நிலையங்களின் தாக்கமும் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்லும். ஓரிரு தசாப்த காலத்தினுள் இச்செயல்திட்டத்தினால் செயல் நேர்த்தி, ஒழுங்கு, கட்டுக்கோப்பு, சுத்தம், அழகிய புறத்தோற்றம், உற்பத்தித் தரம், பணித்தலங்களின் பொதுப் பாதுகாப்புத் தரம், கல்வித் தரம், பிறருடனான உறவுகள் முதலியவற்றில் எகிப்து ஐரோப்பிய நாடுகளுக்கு நிகரான தரத்தைப் பெறும். மட்டுமன்றி, இந்த அனைத்தும் இணைந்து அது முன்னர் தவற விட்ட மதப் பெறுமானங்களின் மீது மீளவும் அதனை நிலைப்படுத்தும். இரு அம்சங்களும் ஒன்றையொன்று ஸ்திரப்படுத்தும் நிலையும் உருவாகும்.*

*ஆயினும், 2011 ஜனவரி 25 புரட்சியைத் தொடர்ந்த துன்பியல் நிகழ்வுகளால் இன்று வரை இச்சிந்தனை நடைமுறைக்கு வராமல் எழுத்து வடிவிலேயே உள்ளது. அதேவேளை, இந்நிலை நம்மை மறுமுனையிலிருந்து கட்டம் கட்டமாகச் சிந்திக்கவும் தூண்டுகிறது: இத்தகைய பாரிய இயக்கம் இஸ்லாமிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான மிகச் சிறு கலாசார அலகிலிருந்து ஏன் ஆரம்பிக்கப்படக் கூடாது? மஸ்ஜிதின் ஜமாஅத்தினர், மஸ்ஜிதின் சூழமைவு என ஆரம்பித்து, வீதி வீதியாக, கிராமம் கிராமமாக ஏன் விரிவடையக் கூடாது?*

*உண்மையில் ஒவ்வொரு மஸ்ஜிதும் தனது அடிப்படையான பணியுடன் சேர்த்து, இமாம் மற்றும் இளைஞர்களையும் முதியோர்களையும் உள்ளிட்ட பிரதானிகளது தலைமையில் அந்த வட்டாரத்திலுள்ள நிறுவனங்களுக்கான உள்ளூர் அங்கீகார சபையாக தொழிற்பட முடியும். 'கூட்டுத் தொழுகை' பற்றிய உரையாடலில் நாகரிகம் தொடர்பாக நாம் குறிப்பிட்ட பத்து அடிப்படைகளையும் பிரதான நிபந்தனைகளாகக் கொண்டு இதனை அது ஆரம்பிக்கலாம்.*

*தவிரவும், 'பிரித்தானிய அங்கீகார சபை' தான் அங்கீகரிக்கும் நிறுவனங்களிடம் எதிர் பார்க்கின்ற நிபந்தனைகளை (பல்கலைக்*

கழகங்களுக்கு என உள்ள பிரத்தியேக நிபந்தனைகளைத் தவிர்த்து) நோக்கினால், அவை நாட்டில் இயங்கும் எந்த நிறுவனத்துக்கும் பொருந்த முடியும். சுருக்கமாக அவை பின்வருமாறு:

1. நிறுவனக் கட்டிடத்தின் உட்புற, வெளிப்புற தோற்றங்கள்.
2. நிறுவனத்தின் சுகாதாரக் கொள்கைகளும், சுத்தமும், அதன் ஊழியர்களதும் பயனாளிகளதும் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளும்.
3. நிறுவனம் வழங்குகின்ற சேவைகளின் தன்மைக்கேற்ற வகையில் அதன் கட்டிடமும் அறைகளும் அலுவலகங்களும் எவ்வளவு பொருத்தமாயும் தயார் நிலையிலும் உள்ளன?
4. ஊழியர்களுக்கும் பயனாளிகளுக்கும் அவசி யமான காப்பீடுகள் நிறைவாக உள்ளனவா?
5. நிறுவனத்தை நடாத்திச் செல்வதிலும், அதன் நோக்கங்களை எய்துவதிலும் நிர்வாகம் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளது?
6. ஊழியர்களின் தகைமையும், அவர்கள் பெற்றிருக்கும் உறுதிப் படுத்தப்பட்ட சான்றிதழ்களும், துறைசார் அனுபவமும்.
7. தொடர்ச்சியாக ஊழியர்களுக்கான பயிற்சிநெறிகளை ஒழுங்கு செய்தல்.
8. நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்குமான கிரமமான பணி ஒப்பந்தங்களும், நியாயமான, பாரபட்சமற்ற சம்பளத் திட்டமும்.
9. ஊழியர்களது தனிப்பட்ட முன்னெடுப்புகளை உற்சாகப் படுத்தவும், ஊக்குவிக்கவும், அவர்களது திறமைகளை வளர்க்கவுமான ஒழுங்கு.
10. ஊழியர்களுக்கும் பயனாளிகளுக்குமான நுணுக்கமானதும் நவீன மயமானதுமான பதிவு மற்றும் கோப்பு ஒழுங்குகள் காணப் படல்.

11. நிறுவனம் தனது ஒழுங்குகள், கொள்கைகள், திட்டங்கள், ஒவ்வொரு ஊழியரதும் பணிகள் முதலிய அனைத்தையும் தெளி வாகவும் எழுத்து வடிவிலும் வைத்திருத்தல்.

12. நிறுவனத்தினால் வெளியிடப்படும் விளம்பரங்களதும் வெளி யீடுகளதும் நம்பகத் தன்மை.

13. நிறுவனம் பிறருடன் பரிமாறும் மொழியும், எழுத்திலும் பேச்சிலும் அது கையாளும் மொழியின் பண்பாடும்.

14. பணியாளர்களோடும் பயனாளர்களோடும் நிர்வாகம் பேணும் தொடர்பாடலும், அவர்களது கருத்துகளையும் கோரிக்கை களையும் பரிசீலித்தலும்.

15. பணியாளர்களுக்கும் பயனாளர்களுக்கும் -குறிப்பாக விஷேட தேவை கொண்டோருக்கு- நிறுவனம் ஏற்படுத்தித் தரும் வசதிகள்.

16. அவர்களுக்கிடையில் சமத்துவம் பேணலும், இனம், கோத் திரம், கட்சி, கருத்தியல் முகாம் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமையும்.

17. நிறுவனத்தின் பணிகளையும் சேவைகளையும் வருடாந்தம் மதிப்பீடு செய்வதற்கு வெளி மதிப்பீட்டாளர்களது பங்களிப் பைப் பெறல்.

18. ஒவ்வொரு பருவ காலத்தின் அல்லது ஆண்டின் அல்லது கட்டத்தின் முடிவிலும் கிடைக்கப் பெறுகின்ற பெறுபேறு களை மதிப்பீடு செய்தல்.

'பிரித்தானிய அங்கீகார சபை'யின் பரிசோதகர் எந்தவொரு நிறுவனத்துக்கு விஜயம் செய்யும் போதும் தனது கைப்பையில் எடுத்துச் செல்லும் கோப்புகளின் சுருக்கம் இதுதான். அடிப்படை யில் இவை நாம் ஏலவே நாகரிகம் தொடர்பாக முன்வைத்த பத்து அடிப்படைகளுக்கு அப்பால் செல்லாதவை. கூட்டுத் தொழுகை தூண்டுவதும் உறுதிப்படுத்துவதும் கூட இவற்றைத்தான்.

எனவே, கூட்டுத் தொழுகையிலிருந்து பிறக்கும் இயக்கம் -நாம் தவற விட்ட நாகரிக உருவாக்கக் காரணிகளை மீண்டும் அடைந்து கொள்வதற்கு- இவற்றை பின்பற்ற முடியும்.

அந்த இயக்கம் இங்கொரு மஸ்ஜிதிலும் அங்கொரு மஸ்ஜிதிலுமாக ஆரம்பிக்கப்படலாம். தனது அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு நிறுவனமும் கொண்டிருக்க வேண்டியவை என கருதத்தக்க விதிமுறைகளை -பத்து அடிப்படைகளுக்கு அமைவாக- ஒவ்வொரு மஸ்ஜிதும் வகுத்துக் கொள்ளலாம். அடுத்த கட்டமாக, குறித்த மஸ்ஜித் சபைகள் ஒன்றிணைந்து தமது விதிமுறைகளை இன்னும் நன்கு வரையறுப்பதுடன் ஒருங்கிணைந்த சபையொன்றையும் உருவாக்கலாம். விதிமுறைகள் மேலும் ஸ்திரமடைந்து, ‘அங்கீகாரத்துக்கான தேசிய சபை’ ஒன்றுக்கான யாப்பாகவும் விரிவடையலாம்.

எனினும் இத்தகைய கட்டத்துக்கு மஸ்ஜிதுகள் சென்றடைய முன்னர், அவற்றின் இமாம்களிடம் தீர்க்கமான திட்டமொன்று காணப்படுதல் அவசியம். கூட்டுத் தொழுகையின் உண்மையான பணியையும், பொதுவாக தொழுகை மனித வாழ்விலும் சமூக சீர்திருத்தத்திலும் வகிக்கின்ற பாத்திரம் பற்றியும் பிரக்ஞை கொண்ட ‘தொழுகையாளர் குழுமம்’ ஒன்றை கட்டமைக்கும் முனைப்புடன் அவர்கள் செயற்பட வேண்டும். பிராந்தியத்திலுள்ள பிற மஸ்ஜிதுகளையும் உள்ளடக்கிய விரிந்த குழுமமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப நிறுவனமாக இச் சிறு குழுமம் அமைய முடியும். இவ்வாறு படிப்படியாக விரிவடைந்து, ‘அங்கீகாரத்துக்கான உயர் சபை’ என்ற மிக விரிந்த சமூகம் தோன்றும் வரை பயணம் தொடர வேண்டும்.

எகிப்திலிருந்தோ வேறு நாடொன்றிலி ருந்தோ ஆரம்பிக்கப்படும் இவ்வியக்கம், பிறகு இஸ்லாமிய உலகின் நாலா திசைகளுக்குப் பரவிச் செல்ல முடியும்.

இத்தகையதொரு சபை அழகிய திட்டமிட லோடு உருவாக்கப்படுமாயின், இஸ்லாமிய உலகு இழந்த முன்னைய நாகரிக

அந்தஸ்தை சில தசாப்தங்களுக்குள்ளாகவே மீட்டெடுத்து விட முடியும். மட்டுமன்றி, அறபு மற்றும் இஸ்லாமிய தேசங்களில் ஆரோக்கியமான மதச் சிந்தனை மீண்டும் உயிர் பெறவும் அது வழிவகுக்கும். இஸ்லாம் மார்க்கத்தின் செயன் முறைப் பகுதியை உயிர்ப்பித்து, தொழுகை உள்ளிட்ட வணக்க வழிபாடுகளை பொதுவாழ்வுடன் பிணைப்பதனூடாக இது சாத்தியப்படுத்தப் படலாம். இஸ்லாத்தின் உண்மையான நாகரிக முகத்தை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கும் இது அவசியம்.

நிச்சயமாக இது ஒரு ராட்சதப் பணி. ஆனால் எந்தப் பயணமும் ஓர் எட்டு எடுத்து வைப்பதிலிருந்தே ஆரம்பிக்கிறது. போதிய வினைமையுடன் இம்முயற்சியில் இறங்குவோமாயின், இன்று வரை பல அரசாங்கங்களாலும் புலமையாளர்களாலும் சாதிக்க முடியாது போனதை நிச்சயம் நாம் சாதிக்க முடியும்.

# தொழுகையின் ஐந்து கோடுகள்

*‘‘விசுவாசிகளே! நீங்கள் கூறுவது என்ன வென்று நீங்களே புரிந்து கொள்ள வேண்டும் என்பதால், போதையில் தொழ முற்படாதீர்கள்.’’ (அந்-நிஸாஉ: 43)*

*இந்த வசனத்தின் பின்னாலிருக்கும் பாடங்களைப் படிக்காமல் எத்தனை முறைதான் மேலோட்டமாக பாராயனம் செய்திருப்போம்!*

*ஒரு மனிதன் வீதியில் தனியாக நடந்து கொண்டே தனது தலையையும் கைகளையும் அசைத்து பேசிக் கொண்டு செல்வதைக் காணும் போது என்ன நினைப்பீர்கள்?*

*அவர் தனது காதுகளில் அலைபேசியின் தலையணி கேட்பொறி* (Mobile Headphone) *ஒன்றை அணிந்திருக்கலாம் என்றுதான் முதலில் நினைப்பீர்கள். ஆனால் அவரை உற்றுக் கவனித்து, அவரது வாயில் ஒலி வாங்கியோ காதில் கேட்பொறியோ கையில் அலைபேசியோ இல்லை என ஊர்ஜிதமாகி விட்டால் -அதன் பிறகு- அவர் மனநிலை பாதிக்கப்பட் டவர் என்றோ, போதையிலிருப்பவர் என்றோ முடிவுக்கு வருவதைத் தவிர உங்களுக்கு வேறு தெரிவு இருக்காது. நான் கூறுவதில் மிகைப்படுத்தல் ஏதும் தெரிகிறதா?*

*பல தொழுகையாளர்களது நிலை முற்றிலும் இது போன்றதுதான். ஆனால் இரு நிலைகளுக்கும் ஒரு முக்கியமான*

வேறுபாடுண்டு: அவர்களுக்கு அருகிலிருந்து உரையாடும் எவரையும் காண முடியாது; அவர்களது கையில் அலைபேசியும் இருக்காது. ஆனால், முன்னையவரை விட வினோதமான வகையில், இத் தொழுகையாளர்களது பேச்சமைப்பு இன்னொருவருடன் உரையாடுவது போன்று மொத்தமாகவே அமைந்திருக்காது. அல்லது -மேற்குறித்த வசனம் சொல்வது போன்று- தாம் கூறுவது என்னவென்று புரிந்துதான் கூறுகிறார்கள் என்ற மெய்ப்பாடே அவர்களிடம் தென்படாது.

ஏதோ ஒன்றை மனதில் நிறுத்தி மற்றொருவருடன் உரையாடுகிறீர்கள் என்ற தோரணை உங்கள் முகத்திலும் அமைப்பிலும் வெளிப்படும் வகையில் பேசுவதற்கும், இன்னொருவருடன் பேசுகிறீர்கள் என்பதோ, ஏதோ ஒன்றை மனதில் நிறுத்தித்தான் பேசுகிறீர்கள் என்பதோ வெளிப்படாத வகையில் வெறுமனே நாவையும் உதடுகளையும் அசைத்துக் கொண்டிருப்பதற்கும் இடையில் மிகப் பாரிய வேறுபாடு உள்ளது. இந்த இரண்டாவது நிலை மிக அதிசயமானதும் அபாயமானதுமான நோய்ப் பாதிப்பு நிலையாகும்.

இத்தகையோரது பேச்சு சில வார்த்தைகளை மிக விரைவாக மொழிந்து முடிப்பதாகவே அமைந்திருக்கும். அந்த வார்த்தைகளுக்குக் கூட அடிப்படையில் பொருள் இருக்கும்; ஆனால் அவர்கள் மொழியும் போது தோற்றத்திலோ, முகபாவனையிலோ, உதடுகளிலிருந்து வார்த்தை பிரியும் முறையிலோ அவை அர்த்தம் பொதிந்த வார்த்தைகள்தான் என்பது தெரியாது. ஏனெனில் நேரடியாகவோ தொலைபேசியிலோ பிறருடன் நிகழ்த்தப்படும் எந்த உரையாடலும் கொண்டிருக்கக் கூடிய முகபாவனை, பேசுபொருள் மாறுபடும்போது ஏற்படும் தொனி மாற்றம் முதலிய எந்த மெய்ப்பாடும் அவர்களிடம் வெளிப்படாது.

வேண்டுமானால் இப்போதே பரீட்சித்துப் பாருங்கள்: தொலைபேசியை எடுத்து உங்கள் நண்பர் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். அதேவேளை, உரையாடலின் இடையில் உங்கள் முகபாவனையும், தொனியும், பேசும் முறையும் எத்தனை தடவை

மாறுபடுகின்றன என்பதை பதிவு செய்யுமாறு உங்கள் மனைவி யிடமோ அல்லது குடும்ப அங்கத்தவர் ஒரு வரிடமோ கூறுங்கள்.

சாதாரண தொலைபேசி உரையாடல் ஒன்றில் கூட அதன் உள்ளடக்கத்திற்கு இசைவாக நமது பாவனையும், தொனியும், குரலும், சிலபோது கைகளும் உடலமைப்பும் ஏராளமான தடவை கள் மாற்றமடைகின்றன. செவியேற்றல், பதிலளித்தல், வேண்டு கோள், வற்புறுத் தல், எதிர்பார்ப்பு, ஏமாற்றம், கண்டனம், திடுக்கிடல், அங்கீகரித்தல், மறுப்புக்காட்டல், கண்டிப்பு, எச்ச ரிக்கை, கோரிக்கை, மன்றாட்டம், மெச்சுதல், மதித்தல், கேள்வி, விடை, ஆச்சரியம், அச்சம், பயம், ஆசை, தீர்ப்பு, உறுதிப்படுத்தல், நிராகரித்தல், விதிவிலக்களித்தல், நிறுத்துதல், தொடர்தல், விட்ட இடத்தி லிருந்து தொடர்தல், தயங்குதல்... என்று எத்தனை மெய்ப்பாட்டு மாற்றங்கள்! இவை நிகழவில்லையெனில் நாம் வெறும் இயந்திர மனிதனேயன்றி வேறில்லை.

தொழுகையில் ஈடுபடும்போது நீங்கள் இயந்திர மனிதனோ போதையடைந்தவரோ புத்தி பேதலித்தவரோ இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றிருக்கிறீர்களா? ஒருவர் தனது நண்பரோடு அல்லது ஆசிரிய ரோடு அல்லது மேலதிகாரியோடு தொடர்பாடுவது போன்று தொழுகையில் மற்றொருவரோடு உரையாடுகிறோம் என்ற உணர்வைப் பெறவும், மறுமுனையில் உயிருள்ள மற்றொரு தரப்பு உள்ளது என்ற பிரக்ஞையைப் பெறவும், நாம் தனியாகப் பேசவில்லை என்றும், இயந்திரம் என்றோ புத்தி பேதலித்தவர் என்றோ பிறரால் நோக்கப்பட முடியாத நிலையில் உள்ளோம் என்றும் உறுதிப்படுத்திக் கொள்ள நீங்கள் முயற்சித்ததுண்டா?

இணைப்பின் மறுமுனையில் அல்லாஹ் இருந்து நீங்கள் சொல்வதைக் கேட்கிறான் என்றும், நீங்கள் அவனை நினைவு கூரும்போது அவனும் உங்களை நினைவு கூர்கிறான் என்றும், நீங்கள் இறைஞ்சிக் கேட்பதற்கு அவன் பதில் தருகிறான் என்றும் உண்மையாக விசுவாசித்து திருப்தி காண்பவராக நீங்கள் இருந் தால், உங்களைக் கவனிப்போர் அதனைப் புரிந்து கொள்ளும்

வகையில் தோன்றக் கூடிய மெய்ப்பாடுதான் என்ன? மட்டுமன்றி, உங்கள் குரலுக்குச் செவி சாய்ப்பவனும், உங்கள் இதயத் துடிப் பையும் அதன் ரகசியங்களையும் கூட நன்கறிந்தவனுமாகிய அல்லாஹ்வுக்கே நீங்கள் அவனிடம்தான் பேசுகிறீர்கள் என்பதை யும், 'எவருமற்ற' சூன்யத்தை நோக்கி உரையாடவில்லை என்ப தையும் எப்படி உறுதிப்படுத்துவீர்கள்?

> *''தங்கள் தொழுகையில் உள்ளச்சத்துடன் ஈடுபடும் இறை விசுவாசிகள் வெற்றியடைந்து விட்டார்கள்''*
> *(அல்-முஃமினூன்: 1-2)*

> *''தங்கள் தொழுகையில் கவனமற்று ஈடுபடும் தொழுகை யாளிகளுக்குக் கேடுதான்''. (அல்-மாஊன்: 4-5)*

வார்த்தைகளே அற்ற மௌனத்திலாயினும் அல்லாஹ்வுடன் மேற்கொள்ளப்படும் நொடி நேரத் தொடர்பாடல், எந்தத் தொடர் பாடலும் இன்றி பல பக்கங்களை பாராயனம் செய்வதை விடச் சிறந்தது. மகத்தான அல்லாஹ் நம் உள்ளங்களை நோக்குகின் றானே தவிர நாவுகளை அல்ல. எனவே, வார்த்தைகளே இன்றி மனதார அவனுடன் நாம் சம்பாஷிக்கும் ஒரு கணப் பொழுது, உள்ளத்தை தொலைத்து வெற்று வார்த்தைகளால் ஒரு யுகம் சம்பாஷிப்பதை விட உன்னதமானது. அல்லாஹ்வின் தொடர் பைப் பெறவும், அந்தத் தொடர்பின் மூலமாக நம்மை மீள்நிரப் படுத்திக் கொள்ளவும், அவனது ஒளியிலும் அருளிலும் நமது சுபீட்சத்தின் பாதையைக் கண்டுகொள்ளவும், தொழுகையின் நன்மைகளால் -அவன் வாக்களித்தது போன்று- உள்ளத்தின் அழுக்குகளையும் ஆன்மாவின் பாவக் கறைகளையும் துடைக்க வும் உண்மையாகவே நாம் விரும்புவதாயின் இத்தகு தொடர் பாடல்தான் நமக்குத் தேவை.

> *''பகலின் இரு முனைகளிலும், இரவின் நாழிகைகளிலும் தொழுகையை நிலை நிறுத்துவீராக! நிச்சயமாக நன்மைகள் தீமைகளைப் போக்கி விடுகின்றன''. (ஹூத்: 114)*

தொழுகையில் உடலுக்கு அப்பியாசம் கிடைத்தாலும், அது ஓர் உடற்பயிற்சியல்ல. தொழுகையை நிறைவேற்றுவதற்கு நமக்கு நேரம் அவசியமாயினும், அது அனாயாசமாகக் கடந்து அப்பால் நகரும் சாதாரண நேரம் அல்ல. உதடசைத்து உச்சரிக்கும் வார்த்தைகளும் தொழுகையில் ஓர் அங்கமாயினும், அந்த வெற்று வார்த்தைகளே தொழுகையல்ல. ஓர் அடியான் நிறைவேற்றுகின்ற தொழுகை ஐந்து கோடுகளால் ஆனது. அந்தக் கோடுகள் ஏக காலத்தில் வரையப்படுபவை; ஒன்றோடொன்று தொடர்புற்றவை; ஒன்றையொன்று முழுமை செய்பவை. தொழுகையானது அல்லாஹ்வுடனான உண்மையான தொடர்பாடலாக அமைய வேண்டும் என நாம் விரும்பினால், இவற்றுள் எந்தக் கோடும் தனியாகப் பிரிந்து செல்ல முடியாது. இக்கோடுகள் தொழுகையின் அடிப்படைத் தூண்களாக குறிப்பிடப்படுவதை எங்குமே நாம் காண முடியாது. ஆனால் அனைத்துத் தூண்களதும் தாங்கு தூண் இவைதான். இவை இல்லையெனில் தொழுகை தொழுகையாகவே இருக்காது:

***1- நேரம்:***

ஐந்து அல்லது ஆறு நிமிடத்துக்குள் 'ளுஹர்' கடமையை அல்லது 'அஸர்' கடமையை அல்லது வேறொரு தொழுகையை நிறைவேற்றி விட்டதாக என்னை அல்லது உங்களை நீங்களே நம்பச் செய்ய முயலாதீர்கள். தொழுகைக்காக நீங்கள் ஒதுக்கும் நேரமானது தொழுகை அல்லது அதில் அல்லாஹ்வுடனான தொடர்பாடல் உண்மையாகவே நிகழ்ந்ததா இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதில் அடிப்படையான முக்கியத்துவம் உடையது. தொழுகையில் ஓதப்படும் இரு வசனங்களுக்கிடையில் -மட்டுமன்றி இரு வார்த்தைகளுக்கிடையில்- பேணப்படுகின்ற மௌனமான கணங்கள் தொழுகைக்காக ஒதுக்கப்படும் நேரத்தில் அதி முக்கியமான பாகம் என்றே கூறலாம்.

எனவே, வார்த்தைகள் நாவில் முண்டியடித்து ஒன்றையொன்று முந்திச்செல்ல இடமளிக்காதீர்கள்; வார்த்தைகளின்

சுவை அறியுங்கள்; தேனின் தரத்தைக் கண்டறிய வாயினுள் வைத்து நாவினால் புரட்டிப் பார்ப்பது போன்று அதனைச் செய் யுங்கள்; தொழுகையின் ஒவ்வொரு வாசகத்துக்கும், ஒவ்வொரு வசனத்துக்கும், ஏன் ஒவ்வொரு வார்த்தைக்கும் கூட சிறு மௌன இடைவெளி வழங்குங்கள்; அந்த இடைவெளியில் அவற்றை சிந்தையில் புரட்டுங்கள்; பொருளுணருங்கள்; சுவையுங்கள்; அவற்றை விட்டு உங்கள் கவனம் சிதறவில்லை என்பதையும், அவற்றின் பொருளை நன்கு கிரகித்துக் கொண் டீர்கள் என்பதை யும் உறுதி செய்யுங்கள்; தொழுகையின் பாதி நேரத்தை மௌன மாகவும், மீதிப் பாதியை உண்மையும் அமைதியும் நிறைந்த சம்பாஷணையாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். அந்த சம்பாஷ ணையின் வார்த்தைகள் ஒரே யொரு மூலத்திலிருந்தே பிறக்க வேண்டும்: அது உள்ளம்; ஒரேயொரு திசையை நோக்கியே பயணப்பட வேண்டும்: அது அல்லாஹ்!

**2- நாவு:**

இறைத்தூதர் (ஸல்) காட்டித் தந்த வார்த்தைகளை முடிந்தளவு நாம் நாவினால் மொழிய வேண்டும்; ஒவ்வொரு வார்த்தைக்கும் பொருளுக்கும் உரிய ஒலி வேறுபாட்டையும் ஏற்ற இறக்கங்களை யும் வழங்க வேண்டும். ஏனெனில் இந்த அனைத்துக்கும் இடை யில் பேணப்படும் ஒத்திசைவின் மூலமாகத்தான் தொழுகையாளி உள்ளச்சத்தையும் பயபக்தியையும் அனுபவிக்க முடியும்.

**3- உடல்:**

நமது உடலும் தோற்றமும் முகபாவனையும் நமது நாவு மொழி யும் வார்த்தைகளுக்கான தத்ரூப மொழிபெயர்ப்பாக அமைதல் அவசியம். உடலும் முகமும் கண்களும் நாவில் புரளும் சொற் களின் பொருளை வெளிப்படுத்த வேண்டும். பேசும் ஆற்றலை இழந்த ஒருவர் எப்படி தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவார் என்று கவனித்திருக்கிறீர்களா? தனது அனைத்து மெய்ப்பாட்டு ஆற்றல்களையும் கண்களிலும் முகத்திலும் உடலிலுமே -நாவுக்கு

ஈடாக- அவர் தேக்கி வைத்திருப்பார். ஓர் ஊமையைப் போன்று தொழுகையில் ஈடுபட கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் தொழுகை பேச்சாற்றலை இழந்தவரின் தொழுகை போன்று முதல் நிலையில் அமையட்டும்; பிறகு அந்த உடல் மொழியை அல்லாஹ் உங்களுக்களித்த 'மொழிதல்' என்ற ஆற்றலால் பலப்படுத்துங்கள்.

**4- உள்ளம்:**

நமது நாவின் அசைவுக்கேற்ப உள்ளமும் துடிக்க வேண்டும்; இரண்டும் ஒன்றையொன்று உண்மைப்படுத்தும் வகையில் அமைதல் வேண்டும்; உள்ளமும் சிந்தனையும் ஒரு பள்ளத்தாக்கிலும், நாவு வேறொரு பள்ளத்தாக்கிலும் அலைய விடலாகாது. இந்த செயலெதிர்ச் செயல் தொடர்பின் விளைவாக உடலில் சிலிர்ப்பும், முகத்தில் வெளிறலும், குரலில் தளுதளுப்பும், விழி விளிம்பில் கண்ணீரும் வெளிப்படுமானால் அது எத்துணை உன்னத நிலை!

**5- செயற்பாடு:**

நமது அன்றாட வாழ்வியல் செயற்பாடுகள் தொழுகையில் நமது நாவும் உள்ளமும் மொழிந்த வார்த்தைகளின் செயல் வடிவமாக அமைய வேண்டும் என்ற சங்கற்பமும் உறுதியும் தொழுகையில் ஈடுபட்டிருக்கும் போதே தோன்ற வேண்டும். அப்போதுதான் தொழுகை நமது அன்றாடச் செயற்பாடுகளிலிருந்தும், அல்லாஹ்வுடனும் பிறருடனுமான தொடர்புகளிலிருந்தும் விலகிய வெற்றுச் சடங்காக மாறும் அவலம் தவிர்க்கப்படும். 'வுழூ' செயற்பாட்டை அகச் சுத்தம், புறச் சுத்தம் என இரு 'வுழூ'க்களாக நாம் அமைத்துக் கொண்டது போன்று, தொழுகையையும் அகத் தொழுகை, புறத் தொழுகை என அமைத்துக் கொள்வோம். அல்-குர்ஆனிலும் ஹதீஸிலும் தொழுகை பற்றிய குறிப்பு எப்போதும் செயற்பாடு, நடைமுறைப்படுத்தல், நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல் என்பவற்றுடன் தொடர்புபட்டே வந்திருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்:

*''மகனே! தொழுகையை நிலைநாட்டு; நன்மையை ஏவு; தீமையைத் தடு!'' (லுக்மான்: 17)*

*''அவர்களுக்குப் பிறகு ஒரு சந்ததியினர் வந்தனர். அவர்கள் தொழுகையைத் தொலைத்து, உடலிச்சைகளின் பின்னால் சென்றனர்!'' (மர்யம்: 59)*

*''உங்கள் தொழுகை தீமைகளையும் மானக்கேடான செயல் களையும் விட்டு உங்களை விலக்கவில்லை எனில், நீங்கள் அல்லாஹ்வை விட்டுத் தூரமாவதைத் தவிர வேறொன்றும் அதன் மூலமாக நிகழப் போவதில்லை.''*[1]

*ஆதலால்...*

- *உங்களுக்கு முகமே இல்லாதது போன்று உடல் அவய வங்களால் தொழுங்கள்!*
- *நாவே இல்லாதது போன்று முகபாவனையால் தொழுங்கள்!*
- *உடலே இல்லாதது போன்று குரலின் தொனியால் தொழுங்கள்!*
- *அதுதான் உங்களது இதயத்தின் கடைசித் துடிப்பு என்பது போன்று உள்ளத்தால் தொழுங்கள்!*
- *அதுதான் உங்களது கடைசித் தொழுகை என்பது போன்று நீண்ட நேரம் தொழுங்கள்!*

*தூர இடமொன்றில் நிகழும் பெருவிழா ஒன்றில் கலந்து கொள் வதற்காக அழைக்கப் பட்ட ஒரு மனிதர் பற்றி கேள்விப்பட்டி ருக்கிறீர்களா? அந்த மனிதர் தன்னிடமிருந்த மிகச் சிறந்த ஆடைகளை அணிந்து கொண்டார்; நீண்ட பயணத்தின் கஷ்டங் களை சகித்துக் கொண்டார்; நிறைய நேரத்தையும் பணத்தையும் அந்தப் பயணத்துக்காக செலவிட்டார்; தனது வேறு பல நல் வாய்ப்புகளை விட்டுக் கொடுத்தார்; உரிய இடத்தை வந்த*

---

1) அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அப்பாஸ். பதிவு செய்தவர்: அல்-ஸஃபாரீனி அல்-ஹன்பலீ. நூல்: ஷர்ஹு கிதாப் அஷ்-ஷிஹாப்.

டைந்ததும் அழைப்பு அட்டையைக் காண்பித்து மண்டபத்தினுள் நுழைந்தார்; விழாவின் தொடக்கத்தை எதிர்பார்த்து அங்கு சமூகமளித்திருந்தோருக்கு மத்தியில் ஆசனமொன்றில் அமர்ந்து கொண் டார்.

விழா மேடையின் திரை கூட இன்னும் உயர்த்தப்படாதிருந்த நிலையில், உட்கார்ந்த சில நிமிடங்களிலேயே நிஷ்டையில் ஆழ்ந்து விட்டார் அந்த மனிதர். நேரம் கடந்தது. பிறகு துப்புரவுப் பணியாளர்களது குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். தங்களது பணியை மேற்கொள்ள இடமளிக்கும் வகையில் அங்கிருந்து செல்லுமாறு அவரை அவர்கள் கேட்டுக் கொண்டனர். விழாவின் காட்சிகள் ஆரம்பித்து, நிறைவடைந்து, அழைக்கப்பட்டிருந்தவர்கள் வீடுகளுக்கும் திரும்பி விட்டார்கள்; தூங்கிய நமது தோழரைத் தவிர வேறெவரும் அங்கில்லை!

தொழுகைக்குத் தயாராகும் ஒருவரின் நிலையும் இதேபோல் அமைந்து விட முடியும். உயர் தெய்வீக அழைப்பை ஏற்று அவர் 'வுழூ' செய்கிறார்; மஸ்ஜிதுக்கும் செல்கிறார்; தனது நேரத்தை -சிலபோது மஸ்ஜிதுக்கு சென்றடைவதற்காக பணத்தையும் கூட- செலவிடுகிறார்; பிறகு குறுகியதாகவோ நீண்டதாகவோ ஒரு நேரத்தை மஸ்ஜிதில் செலவிடுகிறார். ஆயினும், இந்த அனைத்துக்குப் பிறகும் பயனெதுவும் பெறாமலே தொழுகையிலிருந்து வெளியேறுகிறார். தொழுகையின் ஆன்மீகக் காட்சிகளை அவர் அனுபவிக்கவில்லை; அதன் உயர்ந்த நிலைகளோடும் அர்த்தங்களோடும் உறவாடவில்லை; படைப்பாளனின் நெருக்கத்தை உணரவில்லை; பெறவேண்டிய கூலியையும் பெறவில்லை!

இறைத்தூதர் (ஸல்) அவர்களால் சகோதரர்களாக இணைக்கப்பட்ட இரு முஸ்லிம்களுள் ஒருவர் போரொன்றில் கொல்லப்பட்டார். ஒரு வாரத்தின் பிறகு மற்றவரும் கொல்லப்பட்டார். அப்போது சில முஸ்லிம்கள், 'யா அல்லாஹ், இவரை மன்னித்து இவரது தோழருடன் (சுவ னத்தில்) சேர்த்து விடுவாயாக!' என பிரார்த்தித்தனர். இதனைச் செவியுற்ற நபியவர்கள் கூறினார்கள்:

''அவர் மரணித்த பிறகு இவர் தொழுத தொழுகைகள் எங்கே போய் விடும்? அவருக்குப் பிறகு இவர் செய்த செயல்கள் எங்கே போய் விடும்? இருவருக்கும் இடையிலான வேறுபாடு வானத்துக்கும் பூமிக்கும் இடையிலான தூரம் போன்றது!''(2)

சிந்தித்துப் பாருங்கள்; ஒரு வாரத் தொழுகை ஒரு மனிதரது அந்தஸ்தை வானத்துக்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரத்தின் அளவுக்கு உயர்த்துமெனில், கற்பனைக்கு எட்டாத இந்த அந்தஸ்தில் ஒரு நேரத் தொழுகையின் அளவு என்னவாக இருக்கும்? ஹதீஸை மீண்டும் ஒரு தடவை நுணுக்கமாக கவனியுங்கள்: ''அவருக்குப் பிறகு இவர் தொழுத தொழுகைகள் எங்கே போய் விடும்?'' என்று கேட்பதுடன் நபியவர்கள் நின்று விடவில்லை. அதன் இணை பிரியாத மற்றொரு விடயம் பற்றியும் தொடர்ந்து கேள்வி எழுப்புகிறார்கள்: ''அவருக்குப் பிறகு இவர் செய்த செயல்கள் எங்கே போய் விடும்?'' தொழுகைக்கும் செயற்பாட்டுக்கும் இடையிலான அத்தியந்த உறவை இங்கு அன்னார் நினைவுபடுத்துகிறார்கள்; ஒன்றிலிருந்து ஒன்று எவ்வகையிலும் பிரிந்து நிற்கலாகாது.

ஒவ்வொரு தொழுகைக்கும் பிறகு உங்களை நீங்களே இப்படிக் கேளுங்கள்: 'எனது தொழுகை என்னை எவ்வளவு தூரத்துக்கு உயர்த்தியது? வானங்களுக்கு மேல்? சந்திரனுக்கு அப்பால்? மேகங்களுக்கு அப்பால்? எனது வீட்டுக் கூரைக்கு அப்பால்? என் தலைக்கு மேல் ஒரு சாணளவு? விரலளவு?... அல்லது உயர்த்தவே இல்லையா?'

ஒவ்வொரு முறை மஸ்ஜிதிலிருந்து வெளியேறும் போதும், சில நிமிடங்களுக்கு முன்னர் நுழைந்த என்னை விட இப்போது நான் வேறுபட்டிருக்கிறேனா என்பதை உறுதி செய்யாமல் வெளியேறாதீர்கள்!

2) அறிவிப்பவர்: ஃகாலித் அஸ்-ஸுலமி. பதிவு செய்தவர்: அபூ தாவூத். அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

# சிவப்பு விசை இலக்கம் 1: ‘அல்லாஹு அக்பர்’

அடிப்படையிலேயே ‘அல்லாஹு அக்பர்’ (அல்லாஹ்... பெரியவன்) என்ற வாசகத்தில் ஒரு தனித்தன்மையும், பூமி கடந்து நம்மைக் கொண்டு செல்லும் அதிசய ஆற்றலும் காணப்பட்ட போதிலும், தொழுகையின் முதல் தக்பீராகிய ‘தக்பீரதுல் இஹ்றாம்’ இன்னும் அதிக சிறப்புக் கொண்டது; ஏனெனில் பெயரைப் போலவே அது ‘இஹ்றாமி’ன் தக்பீர். ஒரு ஹாஜி தனது ஹஜ்ஜை ஆரம்பிக்கும்போது ‘இஹ்றாம்’ என்ற கட்டத்தினுள் நுழைவது போன்று, ‘அசூயைகள் தடுக்கப்பட்ட புனித’ கால எல்லைக்குள் தொழுகையாளி நுழைவதை அது குறிக்கிறது.

‘எதிரிப்படை.... பலமானதன்று’ என ஒருவர் கூறுவதாக வைத்துக் கொள்வோம். இரு வார்த்தைகளுக்கும் நடுவில் அவர் விட்ட மௌன இடைவெளிக்கு என்ன அர்த்தமாக இருக்கும்? ஏன் அவ்வாறு இடைவெளி விட்டார்? பேச்சின் இடையே ஏதோ ஒன்று ஞாபகம் வந்ததால் நிறுத்தித் தொடர்ந்தாரா? அல்லது தொடங்கிய பேச்சை ஏதோ காரணத்துக்காக திசை மாற்றினாரா? அல்லது பேச்சினிடையே ஏதும் உபாதைக்கு உட்பட்டாரா?... இப்படியெல்லாம் பலவாறு நமக்கு கேள்வி கள் எழ முடியும்; ஏனெனில் நாம் பொருள் முற்றுப் பெற்ற வாக்கியத்தையே எப்போதும் எதிர் பார்க்கிறோம்.

‘எதிரிப்படை நம்மை வெல்லும் அளவுக்குப் பலமானதன்று’ என்றோ, ‘எதிரிப்படை நம்மைத் தாக்கும் அளவுக்குப் பலமான தன்று’ என்றோ, ‘எதிரிப்படை இதுவரை நாம் எதிர்கொண்ட படைகளை விட பலமானதன்று’ என்றோ... பூரணமாக பொருள் தரும் வகையில் அந்த வாக்கியம் அமைய வேண்டும் என்றே பொதுவாக நாம் எதிர்பார்ப்போம். ஏனெனில் ‘பலமானதன்று’ என்பது போன்ற பண்பு விவரணப் பதங்களைக் கையாளும் போது ஏதோ ஒன்றுடன் ஒப்பிட்டுச் சொல்வதே சாதாரணமாக மொழி யின் இயல்பு.

ஆனால் ‘அல்லாஹு அக்பர்...’ (அல்லாஹ் பெரியவன்) என்ற அதிசய வாக்கியத்தில் இத்தகைய எதுவும் இல்லை. எனவே அது அல்லாஹ் நமக்கு ’திறந்த நிலையில்’ விட்டு வைத்திருக்கும் வாக்கியமாக அமைந்துள்ளது எனலாம். அவ்வாறன்றி, வழக்கமான வசனம் போன்று முழுமையான வடிவில் அது அமைக்கப் பட்டிருக்குமானால், அது தருகின்ற கற்பனை நீட்சியை நாம் இழந்திருப்போம்; ‘அல்லாஹ் எதனை விட பெரியவன்?’ என்ற கேள்விக்கு அவசியமற்ற சாதாரண ‘மூடுண்ட’ வாசகமாக வும் மாறியிருக்கும்.

‘அல்லாஹு அக்பர்...’ என்பது பின்னால் ஏராளமான இடம் பாடுகளுக்கு வழி விடுகின்ற ஒரு ‘திறந்தநிலை’ வாசகம்; உச்சரிப்பவரோ செவிமடுப்பவரோ மனதில் பலநூறு சாத்தியப் பாடுகளை எண்ணிப் பார்க்க இடமளிக்கின்ற செறிவான வாசகம்: ‘ஷெய்த்தானே... உன்னை விட அல்லாஹ் பெரியவன்! அநியாயக் காரனே... உன்னை விட, துன்பமே... உன்னை விட, இன்பமே... உன்னை விட... அல்லாஹ் பெரியவன்! அல்லாஹ்வுடன் சம்பாஷிப்பதை விட்டு என்னைத் திசை திருப்ப முயலும் அனைத்தையும் விட அல்லாஹ் பெரியவன்!’

உண்மையில் இங்கு ‘அக்பர்’ என்ற அறபுப் பதத்தின் பொருள் ‘பெரியவன்’ (Great) என்பதோ, முற்று நிலைப் பொருளிலான ‘மிக மிகப் பெரியவன்’ (The Greatest) என்பதோ அன்று; மாறாக,

ஒப்பீட்டுப் பொருளிலான Greater என்ற அர்த்தத்திலேயே அது பயன்படுத்தப்பட்டுள்ளது. பழக்கம், திரும்பத் திரும்ப கூறல் முதலிய தூசுப்படலங்களால் மூடப்பட்டு, அறபிகளுக்கே இப் பிரயோகத்தின் மிகச் சரியான அர்த்தம் தெளிவற்றுப் போயிருக்கும் போது, அவர்களல்லாதோர் குழப்பமடைவதும், தங்கள் மொழி களில் அதனை Great என்றோ The Greatest என்றோ மொழி மாற்றம் செய்து கொள்வதும் ஆச்சர்யமான தன்று. இப்படித்தான் அப்பதம் திரிக்கப்பட்டு, மற்றெல்லா சாதாரண 'மூடிய நிலை' வாசகங்கள் போன்று மாற்றப்பட்டிருக்கிறது.

இன்று நம் மத்தியில் கூறப்படும் 'அதான்'களையும், 'இகாமத்' களையும் செவிமடுத்துப் பாருங்கள்! பலர் இரு 'தக்பீர்'களும் ஒரே 'தக்பீர்'தான் என்பது போன்று, 'அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர்' என சேர்த்துக் கூறுவதை உங்களால் அவதானிக்க முடி யும். இப்படி இணைத்துக் கூறுவதன் மூலமாக முதலாவது தக்பீரின் தனித்தன்மையை அவர்கள் தொலைத்து விடுகிறார்கள். 'அல்லாஹு அக்பர்...' என -மீதியை நாம் கற்பனையால் நிரப்பிக் கொள்ள இடமளித்து- திறந்த அமைப்பில் விடுவதே அதன் உண்மையான வடிவமாகும்.

இரண்டு 'தக்பீர்'களையும் இணைத்துக் கூறுவதானது, அந்த வாசகத்தின் தனித்துவமான மொழியமைப்பை உணரும் தன் மையை பழக்க தோஷத்தினால் நாம் இழந்து விட்டோம் என் பதை நிதர்சனப்படுத்துகிறது. அதனால்தான், பிற வாசகங்களி லிருந்து தனித்து நிற்கும் 'திறந்த நிலைப்பண்பு' அற்ற சாதாரண மூடுண்ட வாசகமாக அதனை மாற்றி விட்டோம். இந்நிலையில் 'அல்லாஹ் பெரியவன்' (Great) என்றோ, 'அல்லாஹ் மிக மிகப் பெரியவன்' (The Greatest) என்றோ மொழி மாற்றம் செய்வோரை கண்ட னம் செய்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

முதல் அதான் கூறப்பட்ட போது அதனைச் செவியேற்ற மதீனா வாசிகளுக்கு மத்தியில் இப்போது நீங்கள் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள்:

*அல்லாஹு அக்பர்...*

*அல்லாஹு அக்பர்...*

*அல்லாஹு அக்பர்...*

*அல்லாஹு அக்பர்...*

பாரம்பர்ய மொழி அடிப்படையிலான அவர்களது நினை வாற்றல் எதிர்பார்க்கக் கூடிய வாக்கிய முற்றுத் தாகத்தை தீர்க்காமல், இப்படி ஒவ்வொன்றாக இடைவிட்டுக் கூறப்பட்ட வாசகங்கள் எத்தகைய அதிர்வை அவர்களில் ஏற்படுத்தியிருக்கக் கூடும்?

'அல்லாஹு அக்பர்' என்பது தொழுகையை ஆரம்பிக்கும் முதல் சிவப்பு விசை; வானுலகம் நோக்கி உங்களைச் சுமந்து செல்லும் தொழுகை என்ற விண்கலத்தில் தட்டிவிடப்படும் முதல் விசை!

அப்பால் இன்னும் பல சிவப்பு விசைகளும் சிவப்பல்லாத விசைகளும் கூட உண்டு.

# மனன வாசிப்பும் முறையான பாராயனமும்

*ஒரு சகோதரர் என்னிடம் இப்படிக் கேட்டார்:*

*'தொழுகையில் நாம் ஓதும் வசனங்களை ஏன் திட்டமிட்டு அமைத்துக் கொள்ள கூடாது? தொழுகையில் நாம் ஓதக்கூடிய ''விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள் தங்களுக்கு மூன்று மாத விடாய் கழியும் வரை பொறுத்திருக்க வேண்டும்'' (2:228) என்பது போன்ற வசனங்கள் அல்லாஹ்வுடன் தொடர்பாடுவதற்கும், அவனுக்கு முன்னால் உள்ளச்சத்துடன் நிற்பதற்கும் நமக்கு எவ்வகையில் உதவப் போகின்றன?'*

*அல்லாஹ்வின் வசனங்களை ஓத ஆரம்பிக்கும்போது நீங்கள் சாதாரண மனித உரையொன்றை மனன வாசிப்புச் செய்யவில்லை என்பதையும், அவை தெய்வீக வசனங்கள் என்பதையும் நினைவுபடுத்திக் கொள்வது அவசியம். மட்டுமன்றி, அது வெறுமனே மனனத்தில் வாசிக்கும் செயன்முறை அன்று; மாறாக, முறையாகப் பாராயனம் செய்வதை அது குறிக்கிறது. அல்-குர்ஆனுக்கு மாத்திரமே உரிய தனியான செயன்முறை இது.*

*அல்-குர்ஆன் இறங்க முன்னர் அறபிகள் 'ஓதுதல்' (திலாவா)*[1]

1) 'தலா - யத்லூ' என்ற வினை வடிவம்.

என்ற பதத்திற்கு இப்புதிய குர்ஆனிய அர்த்தத்தை அறிந்திருக்க வில்லை. '(ஒன்றை/ஒருவரை) பின் தொடர்தல்' என்ற ஸ்தூல அர்த்தத்தைத் தவிர இப்பதத்திற்கு அவர்களிடம் வேறெந்தப் பொருளும் இருக்கவில்லை. ஆனால் அல்-குர்ஆன் இப்பழைய பொருளை எடுத்து, 'அல்-குர்ஆன் வசனங்களை பாராயனம் செய்வதில் முன்னையவரைப் பின்பற்றுதல்' என்ற புதிய அர்த்தத் தில் பிரயோகித்தது. அல்-குர்ஆனின் வார்த்தை கள் முதன் முத லாக அகிலங்களின் ரட்சகனிடமிருந்து வெளியாயின. பிறகு ஜிப்ரீல் அவற்றைப் பாராயனம் செய்தார். அவரைத் தொடர்ந்து இறைத் தூதர் (ஸல்) பாராயனம் செய்தார்கள். இன்று நாம் அல்லாஹ்வின் வசனங்களை ஓதும்போது நபிகளாரைப் 'பின்பற் றியே' ஓதுகிறோம்; நபிகளார் அவற்றை ஜிப்ரீல் (அலை) ஓதிய ஒழுங்கைப் 'பின்பற்றி' ஓதினார்கள்; ஜிப்ரீல் (அலை) அவற்றை மகத்துவம் நிறைந்த அல்லாஹ்வைப் 'பின்பற்றி' ஓதினார்கள்.

இக்கருத்தாக்கத்தின் முக்கியத்துவம் உங்களுக்கு புரிகிறதா? அல்-குர்ஆனை பாராயனம் செய்வதில் கண்ணியம் மிக்க அல் லாஹ்வை 'பின் தொடரும்' செயற்பாட்டில் நாம் ஈடுபட்டிருக்கி றோம் என்பதே இதன் பொருள். எனவே ஒரு வசனத்தைப் பாராயனம் செய்யும் போது, அது நமக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் நேரடியான, இறுக்கமான, கதகதப்பான தொடர்பை உணரச் செய்ய வேண்டும். ஒரு வசனத்தை ஓதுபவர் அதன் மூலமாக தெய்வீக சங்கிலித் தொடரின் வளையமொன்றை பிரதி நிதித்துவம் செய்கிறார். அல்-குர்ஆனை ஓதும்போது கண்ணியமான அந்தத் தொடரில் நீங்கள் நிற்கும் வளையம் எது என்பதை மனக் கண்ணில் நிறுத்துங்கள்!

இந்த 'நகர்த்தல்' செயற்பாட்டை அதீத நுணுக்கத்துடன் பேணிப் பாதுகாப்பதில் 'தஜ்வீத்' விதிமுறைகளுக்கு பிரதான பாத்திரம் உள்ளது; கண்ணியம் பொருந்திய அந்த சங்கிலித் தொடரில் நமக்கு முந்தியிருப்பவரைப் பூரணமாகப் 'பின்பற்றி' ஓதுவதற்கு அவை நம்மைப் பயிற்றுவிக்கின்றன. அட்சரங்களின்

ஒலிப்பிணைப்பு, நீட்டல், குறுக்கல், பிரித்தல், இணைத்தல், நிறுத்தல் என்பவை தொடர்பான இவ் விதிமுறைகள் இறை வசனங்களை எவ்வாறு அதியுச்ச நுணுக்கத்தோடும் நேர்மை யோடும் கையாள வேண்டும் என நமக்கு கற்றுத் தருகின்றன. இதன் மூலமாக நமது பாராயனமானது அடிப்படை பாராயனப் பிரதியுடன் முழுமையாக ஒத்திசையும் நிலை பேணப்படுகிறது. ஜிப்ரீல் (அலை) அதனை தனது ரட்சகனிடமிருந்து பெற்று அதே வடிவில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு வழங்கினார்; இறைத்தூதர் (ஸல்) ஜிப்ரீலிடமிருந்து பெற்ற அதே வடிவில் நமக்கு வழங்கினார்கள்.

மட்டுமன்றி, சாதாரணமாக வாசிப்பதற்கு வழங்கப்படும் நேரத்தை விட அதிக நேரத்தை அல்-குர்ஆன் பாராயனத்துக்கு வழங்குவது எப்படி என்பதையும் தஜ்வீத் விதிமுறைகள் கற்றுத் தருகின்றன. பாராயனத்துக்காக எடுக்கப்படும் இந்த அதிக நேரம் அல்லாஹ்வின் வசனங்களை நிதானமாகப் பொருளுணர் வதற்கு உதவுகின்றன. நாவு மற்றும் உதடுகளின் அசைவும், கற்பனை மற்றும் சிந்தனையின் அசைவும் பின்னிக் கலக்காமல் கடுகதியாக ஓதி முடித்து விடும் நிலை இதனால் தவிர்க்கப் படுகிறது. 'அந்-நாஸ்' என்ற அத்தியாயத்தை 'தஜ்வீத்' பேணாமல் ஒரு முறையும், 'தஜ்வீத்' பேணி மறு முறையும் ஓதிப் பாருங்கள்; இரண்டுக்கும் இடையிலான நேர வேறுபாட்டை இலகுவாகப் புரிந்து கொள்வீர்கள்!

எனவே தொழுகையில் அல்லாஹ்வின் வசனங்களை 'மனன வாசிப்புச்' செய்யாமல், முறைப்படி ஓத -முடிந்த வரை- முய லுங்கள்; அப்போதுதான் உங்கள் மீதுள்ள தனிநபர் பொறுப்பை உணர்வீர்கள்; இன்னும் அதிக உள்ளச்சத்தோடும் கண்ணியத் தோடும் அந்தப் பொறுப்புணர்வை வெளிப்படுத்துவீர்கள்; அல் லாஹ்வின் வசனங்களை ஜிப்ரீல் (அலை) எப்படி நகர்த்தினாரோ அதே நேர்மையுடன் அவற்றைப் பாதுகாக்கும் அக்கறை உங்க ளிடம் அதிகரிக்கும்.

# அல்-குர்ஆனின் புதிய மொழி

அல்-குர்ஆன் பற்றிய முக்கியமான உண்மை யொன்றைப் புரிந்துகொள்வது சாதாரண மனன வாசிப்பு நிலையிலிருந்து முறையாகப் பாராயனம் செய்யும் நிலைக்கு உயர உங்களுக்கு உதவக் கூடும். அல்-குர்ஆனில் நீங்கள் பாராயனம் செய்வது மரபு வழிப்பட்ட சாதாரண மனித மொழியை ஒத்த அறபு மொழியல்ல என்பதே அந்த உண்மை. அறபிகள் அல்-குர்ஆனை முதன் முதலில் நபிகளிடமிருந்து செவிமடுத்த போது அவர்களை அதிகம் உலுக்கியது தனியாக அதன் மொழியழகோ, அணியழகோ, தெளிந்த நடையோ, பொருளோ, நுணுக்கமோ, விளக்கும் பாங்கோ, சந்தமோ அன்று. மாறாக, இப்பண்புகள் அனைத்தும் ஒன்றாகத் திரண்டு இன்னொரு புதுமையை வெளிப்படுத்தின. கவித்துவ ஆற்றலிலும் இலக்கியப் புலமையிலும் ஆழமும் பெருமையும் கொண்டவர்களாக அறபிகள் இருந்த போதிலும், முன்னெப்போதும் அவர்கள் அறிந்திராத புதுமை அது. அல்-குர்ஆன் கையாண்ட தனித்துவமான மொழி வடிவமே அப்புதுமை. இறைத்தூதர் (ஸல்) உட்பட எந்த அரேபியரும் முன்னர் அறிந்திராத வடிவமாக அது வேறுபட்டு நின்றது.

அல்-குர்ஆனை தங்களிடம் சுமந்து வந்த மனிதரது மொழியை 'வஹி' இறங்க முன்னரே அறபிகள் அறிந்திருந்தனர்; அவரது

மொழி அவர்களது மொழியிலிருந்து சற்றும் வேறுபட்டிருக்க வில்லை. இவ்வாறிருக்க, திடீரென்று ஒருநாள் காலை அந்த மனிதர் தங்களது மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மொழி யொன்றுடன் வெளிக் கிளம்பிய போது அவர்கள் அதிர்ந்துதான் போனார்கள். அந்த மொழி எல்லா விதத்திலும் வேறுபட்டிருந்தது. அது பயன்படுத்திய உத்திகள், சொற்கள், வசன வார்ப்புகள், இணைப்புச் சொற்கள், கலா உத்திகள், அணியழகுகள் முதலிய அனைத்தும் புதுமையாய் இருந்தன. ஆயினும் -எல்லாவற்றுக்கும் மேலாக- அறபு மொழியின் மாறாத இலக்கண விதிகளை மீறாத தூய மொழியமைப் பொன்றைக் கொண்டிருந்ததே அதன் அதி யுன்னத அற்புதமாகவும், மொழிப் புலமையாளர்களைத் திணற டித்த அம்சமாகவும் இருந்தது. எத்தனையோ புதிய கருத்தாக்கங் களையும் மரபுகளையும் புகுத்தி, புத்தாக்கத்துக்கும் முன்னேற் றத்துக்குமான எல்லையற்ற புதிய திசைவழிகளை திறந்து கொண்டே இலக்கணக் கட்டுக்கோப்பையும் கட்டிக் காத்ததுதான் அல்-குர்ஆனின் மொழிவடிவம் செய்து காட்டிய அதீத சாதனை எனலாம்.

ஒரு புறத்தில் மொழியின் அடிப்படை விதிகள் சிதையாமல் பாதுகாத்துக் கொண்டே மறுபுறத்தில் மொழி மரபுகள் மீது இவ்வளவு அடர்த்தியாகவும் தனித்துவமான பாணியிலும் 'மீறல்' செய்வதென்பது நிச்சயமாக ஒரு புது மைதான். தொழுகையில் அல்லாஹ்வின் வார்த்தைகளை உச்சரிக்கும் போது உள்ளச்சம் கொண்டு நடுங்கவும் அதிர்வுக்குள்ளாகவும் இந்த அற்புதமே போதுமானது. அவ்வாறே அல்-குர்ஆனின் ஒவ்வோர் அத்தியா யமும் 'ஸூறா' என்ற தனித்துவமான புதிய நாமத்தை தாங்குவ தற்கும் இந்த அற்புதத் தன்மை போது மானதாக இருந்தது. ஏனெனில், 'ஸூறா' என்பது எதனாலும் ஊடறுத்துச் செல்ல முடி யாமல் வேலியிட்டுப் பாதுகாக்கப்படுவதைக் குறிக்கும் பதம். எத்தகைய போலிப் புனைவையும் ஏற்காத வகையில் அல்லாஹ் அவற்றுக்கு பலமான 'வேலி' அமைத்திருக்கிறான். 'ஸூறா' என்ற

அந்த ஒவ்வொரு கோட்டைக்குள்ளும் அடங்கியிருக்கும் வசனங்கள் ‘ஆயத்’ என்ற பெயர் பெறுவதற்கும் மேற்சொன்ன அற்புதத் தன்மையே காரணம். ‘ஆயத்’ என்ற பதம் முன்னரும் மொழியில் காணப்பட்டிருந்தாலும், இந்தப்புதிய பொருளில் அறபிகள் அதனை அறிந்திருக்கவில்லை. மறுமை வரை இந்த இறை வசனங்கள் எவராலும் போலியாகப் பிரதி செய்யவோ முறியடிக்கவோ முடியாத ‘அற்புதமாக’ அல்லது ‘அடையாளச் சின்னமாக’ விளங்கிக் கொண்டிருப்பதை உறுதி செய்யும் தனித்துவமான பெயர் அது.

# திறந்த மொழியும் பசுமை வெளியும்

*அனேக சந்தர்ப்பங்களில் சில வார்த்தைகள் அல்லது வாசகங்கள் நமது செவிகளைத் தழுவிச் செல்கின்றன; அல்லது அன்றாட வாழ்வில் எதிர்ப்படுகின்றன. யதார்த்தத்தில் அவை சாதாரண வார்த்தைகளோ வசனங்களோ அல்லாத போதும், நாம் அவற்றை சாதாரணமாக கேட்டு விட்டு அல்லது மொழிந்து விட்டு அப்பால் நகர்ந்து விடுகிறோம். பழக்கம் அல்லது பரிச்சயம் என்ற நிலை யிலிருந்து நமது மனவெளியை தூசு தட்டி, சற்று நிதானமாக அவற்றை கவனிக்கும் போதே இந்த உண்மை நமக்கு புலனாகிறது. உதாரணத்துக்கு பின்வரும் நபிமொழியை எடுத்துக் கொள்வோம்:*

*‘‘நபி (ஸல்) அவர்கள் தமது ‘றுகூஇ’ல் அல்லது ‘ஸஜூதி’ல் ‘‘ஸுப்பூஹுன் குத்தூஸுன் றப்புல் மலாஇகதி வர்-ரூஹ்’’ என கூறுபவராக இருந்தார்கள்.’’* (ஆதாரம்: முஸ்லிம், அறிவிப்பவர்: ஆயிஷா (றழி)

*‘ஸுப்பூஹுன்’ (மிகத் தூயவன்) என்ற பதமும் ‘ஸுப்ஹான’ என்பது போன்றதே. இஸ் லாத்துக்கு முன்னர் இப்பதப் பிரயோ கங்ளை அறபிகள் அறிந்திருக்கவில்லை. இரண்டுமே ‘அல்லாஹு அக்பர்’ போன்று ‘திறந்த நிலை’யிலுள்ள பதங்கள்தான். அந்த வகையில், இவற்றைத் தொடர்ந்து வரும் மௌன இடை வெளியை ‘பசுமைவெளி’ என நாம் சொல்லிக் கொள்ளலாம்.*

ஏனெனில் 'தூய்மை' என்ற பதம் தரும் அர்த்தங்களை கற்பனை யால் நிரப்பிக் கொள்ள வசதியளிக்கும் இடைவெளியை நமக்கு இவை திறந்து விடுகின்றன.

'புஃலான்' என்னும் சொல்லாக்க வடிவத்தில் (Morphological pattern) அமைந்த 'ஸுப்ஹான' என்ற பதமும், 'ஸுப்பூஹுன்' என்பது போன்றே ஓர் அசாதாரண 'தொழிற் பெயர்' (Verbal noun) வடிவமாகும். நாம் யாரைப் பற்றி பேசுகிறோமோ அவரை ஏதோ ஒரு பண்பில் 'உயர்த்துதல்', 'தூய்மைப்படுத்துதல்' என்ற பொருள் கோடலை அது தரும். எனவே 'ஸுப்ஹான றப்பீ' என்று கூறும் போது, 'எனது ரட்சகனை தூய்மைப்படுத்துகிறேன்...' என்றுதான் நாம் கூறுகின்றோம். ஆனால் எதிலிருந்து அல்லது எந்தப் பண்பி லிருந்து தூய்மைப்படுத்துகின் றோம்? இக் கேள்விக்கான விடை அந்த இரு வாசகங்களிலும் இல்லை. இப்படித்தான் அவை திறந்த நிலையில் விடப்பட்டுள்ளன; மொழி அடிப்படையில் பூரணப் படுத்தப்படாமல், ஒரு கற்பனை வெளியை அவை திறந்து விடு கின்றன; ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளால் அதனை நாம் நிரப்பிக் கொள்ளலாம். இல்லையெனில், 'எனது மாட்சிமை மிக்க ரட்சகன் குறைபாடுகளிலிருந்து தூயவன்' என்றவாறான மூடிய வசன அமைப்பில் அவை இடம்பெற்றிருக்க முடியும்; அல்லது களைப்பு, அநீதி, தவறு, பலவீனம், தூக்கம், நோய்... முதலிய பண்புகளைக் குறிப்பிட்டு, அவற்றிலிருந்து எனது மகத்தான/ உயர்ந்த ரட்சகன் தூயவன் என அமைக்கப்பட்டிருக்க முடியும்.

மொழி அடிப்படையில் பூரணமடையாத இத்தகைய பல வாச கங்கள் தொழுகையில் உள்ளன. அவையனைத்தும் பல்வேறு இடம்பாடுகளுக்கு இயைபான பசுமை வெளிகளை நமக்கு திறந்து விடுகின்றன. ஆயினும் மொழி அடிப்படையில் பூரணமான வேறு பல வாசகங்களோடும் வார்த்தைகளோடும் அருகருகே இணைந்த வகையில் இவை வந்திருப்பது வினோதமானதுதான். 'ஸூறதுல் ஃபாத்திஹா'விலும், வேறு ஸூறாக்களிலும், 'அத்-தஹிய்யாத்' எனப்படும் வாழ்த்திலும், 'ஸலவாத்'திலும் இதனை நாம் அவ

*தானிக்க முடியும். இதற்கான காரணம் என்ன என்பதை சற்றுப் பின்னர் கவனிப்போம்.*

*உண்மையில் ஒவ்வோர் இரட்டை 'றக்அத்' தொழுகையிலும் இத்தகைய முற்றுப் பெறாத வாக்கியங்களை குறைந்தது முப்பத்து மூன்று தடவை நாம் மொழிகிறோம். அதாவது, கற்ப னையால் நிரப்பிக் கொள்ளத்தக்க 33 பசுமை வெளிகள் வழங்கப்பட்டுள்ள தையும், முற்றாகப் பொருளுணர்ந்து அவற்றை கூறுவதற்கு போதிய நேர அவகாசம் வழங்கப்பட்டுள்ளதையும் இது உணர்த்து கிறது. 33 என்ற இந்த எண்ணிக்கையினுள் ஸூறதுல் ஃபாத்திஹா, அத்தஹிய்யாத், இப்றாஹீமிய ஸலவாத் முதலியனவோ, தொழு கையில் ஓதப்படும் வேறு பல வசனங்களோ பிரார்த்தனைகளோ அடங்குவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த 33 வாசகங்களின் விபரம் வருமாறு:*

1. *'அல்லாஹு அக்பர்' 11 தடவை. ('அல்லாஹ்... பெரியவன்.' எதனை விட?)*
2. *'சமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்' 2 தடவை. ('தன்னைப் புகழ்வோரை அல்லாஹ் செவிமடுக்கிறான். அவனைப் புகழ்வோர் யார்? எதற்காக?)*
3. *'றப்பனா வலகல் ஹம்து' 2 தடவை. ('ரட்சகா! எல்லாப் புகழும் உனக்கே உரியவை'. எதற்கான புகழ்?)*
4. *'ஸப்ஹான றப்பீ அல்-அழீம்' 6 தடவை. ('மாட்சிமை மிக்க எனது ரட்சகன் தூயவன்'. எதனை விட? எவ்வளவு தூயவன்/மாட்சிமை மிக்கவன்?)*
5. *'ஸுப்ஹான றப்பீ அல்-அஃலா' 12 தடவை. ('உயர்வு மிக்க எனது ரட்சகன் தூயவன்'. எதனை விட? எவ்வளவு உயர்ந்தவன்/தூயவன்?)*

*தொழுகையின் பல்வகைச் செயற்பாடுகளை செழுமைப் படுத்துவதிலும், அதன் விளைவாக உள்ளச்சத்தைப் பேணி,*

பொருளுணர்ந்து, வானுலகத் தொடர்பாடலை சாத்தியப்படுத்து வதிலும் கற்பனை சார்ந்த மனவெளிக் காட்சிகள் பெறுகின்ற முக்கியத்துவத்தை இத்திறந்த நிலை வாசகங்களின் அதிகரித்த பிரயோகம் சுட்டி நிற்கிறது.

எனினும், 'மொழி ரீதியாக முழுமையடைந்த திறந்த நிலை' வாசகத்திற்கும், 'மொழி ரீதியாக முழுமையடையாத திறந்த நிலை' வாசகத்திற்கும் இடையில் நாம் பிரித்தறிவது இங்கு முக்கியமானது. ஏனெனில், மொழி ரீதியாக முழுமையடையாத எல்லா வாசகங்களும் திறந்த நிலை வாசகங்களே ஆயினும், திறந்த நிலை வாசகங்கள் அனைத்தும் மொழி ரீதியாக முழுமை பெறாத வாசகங்களாக இருக்க வேண்டியதில்லை.

'ஸுப்ஹான றப்பீ', 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்', 'றப்பனா வலகல் ஹம்து' முதலிய வாசகங்கள் மொழி ரீதியாக முற்றுப் பெறாத வாசகங்கள். அந்த வகையில், இவை பல்வேறு மொழி ரீதியான தெரிவுகளால் நிரப்பிக் கொள்ளக் கூடிய கிடைநிலையான (Horizontal) பசுமை வெளிகளைத் திறந்து விடுகின்றன. ஆனால், 'ஸூறதுல் ஃபாத்திஹா'வில் நாம் காணக் கூடிய திறந்த நிலை வாசகங்கள் அல்லது வார்த்தைகள் மொழி யியல் ரீதியாகவும் இலக்கண ரீதியாகவும் முற்றுப் பெற்றவை. எனவே பின்னால் கிடை நிலையான எந்தச் சேர்ப்பும் அவற்றுக்கு அவசியமில்லை. எனினும் அவை கூட ஒன்றுக்கு மேற்பட்ட வியாக்கியானங்களை ஏற்கக் கூடியவை; இலக்கண ரீதியாக முற்றுப் பெற்ற போதிலும், பொருளார்ந்த செங்குத்தான (Vertical) சேர்ப்புகளுக்கு இடமளிக்கக் கூடியவை. இக்கருத்தாக்கத்தின் படி, திறந்த நிலை வார்த்தை அல்லது வாசகம் என்பது பல அடுக்குமாடிகளைக் கொண்ட கட்டடம் போன்றது; ஒவ்வோர் அடுக்கின் நிறமும், கலா ரசனையும், உள்ளடக்கமும் வெவ்வே றானவையாய் அமைந்திருக்க முடியும்.

# ‘அல்-ஃபாத்திஹா’வின் பாத்திரம் என்ன?

*மகத்துவம் மிகுந்த இந்த அத்தியாயம் அல்-குர்ஆனின் திறவு கோலாக மட்டுமன்றி தொழுகையின் திறவுகோலாகவும் இருப் பதை கவனித்தீர்களா? பின்வரும் ‘ஹதீஸ் குத்ஸீ’ குறிப்பிடுவது போன்று தொழுகை என்பதே இந்த ‘ஃபாத்திஹா’தான்:*

*‘மாட்சிமை மிக்க அல்லாஹ் கூறுகின்றான்: ‘தொழுகையை -அதாவது ஃபாத்திஹாவை- நான் இரு பாதிகளாகப் பிரித்தி ருக்கிறேன்: ஒன்று எனக்கு; மற்றொன்று எனது அடியானுக்கு. எனது அடியான் கேட்பது அவனுக்கு கிடைக்கும்’. எனவே அடியான் ‘அல்-ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்’ என்று கூறினால், ‘எனது அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான்!’ என அல்லாஹ் கூறுவான்; ‘அர் ரஹ்மானிர் ரஹீம்’ என்று கூறினால், ‘எனது அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான்’ என அவன் கூறுவான்; ‘மாலிகி யவ்மித்தீன்’ என்று கூறினால், ‘எனது அடியான் எனது கீர்த்தியை இயம்பி விட்டான்’ எனக் கூறுவான்; ‘இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன்’ என்று கூறினால், இது எனக்கும் எனது அடியானுக்கும் இடையிலானது; என் அடியான் கேட்டது அவனுக்கு கிடைக்கும்’ எனக் கூறுவான்; ‘இஹ்தினஸ் ஸிறாதல் முஸ்தகீம். ஸிறாதல்லதீன அன்அம்த அலைஹிம். அய்ரில் மஃழூபி*

*அலைஹிம் வலழ் ழாலீன்' என்று கூறினால், 'எனது அடியான் கேட்டது அவனுக்கு கிடைக்கும்' எனக் கூறுவான்.''*[1]

*வணங்குபவன், வணங்கப்படுபவன் என்ற இரு தரப்புகளுக் கிடையில் நிகழும் புனித ஒப்பந்தமாக இந்த அத்தியாயம் அமைந்திருப்பது பற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா? இதில் முதல் தரப்பு இரண்டாம் தரப்புக்கு பின்வரும் வாக்குறுதிகளை வழங்கு கின்றது: தொடர்ச்சியான நன்றியும் புகழ்ச்சியும் (அல்-ஹம்து லில்லாஹி); அவனது இறைமையையும் ரட்சணியப் பண்பையும் ஏற்றல் (றப்பில் ஆலமீன்); அவனிடமிருந்து தற்போது இறங்கிக் கொண்டி ருக்கும் கிருபையையும் (அர்-ரஹ்மான்), ஆதியந்த மற்றுத் தொடரும் அவனது கருணையையும் (அர்-ரஹீம்) நன்றி யோடு நினைத்தல்; மறுமையில் அனைத்து அகிலங்கள் மீதும் அவனது எல்லையற்ற ஆட்சியும் அதிகாரமும் நீக்கமற நிறைந் திருக்கும் என்பதை ஏற்றல் (மாலிகி யவ்மித்தீன்); அவனை மட்டுமே ஒருமைப்படுத்தி, முழுமையாக அவனையே வணங்கிப் பணிதல் (இய்யாக்க நஃபுது).*

*இவ்வாக்குறுதிகளை முதலாம் தரப்பு நிறைவேற்றும் பட்சத் தில், அதற்குப் பகரமாக இரண்டாம் தரப்பு பின்வரும் உதவிகளை வழங்கும்: உலக, மறுமை விவகாரங்களில் உதவுதல் (இய்யாக்க நஸ்தஈன்); தான் வழிநடாத்திய நேசகர்களின் நேர்பாதையை நோக்கி அவரை ஆற்றுப்படுத்தல்; தனது கோபத்தை சம்பாதித்துக் கொண்டவர்களது (அல்-மஃழூபி அலைஹிம்) பாதையையும், தன்னை வணங்கு வதிலும் ஏகத்துவப் படுத்துவதிலும் தவறிப் பிறழ்ந்து சென்றவர்களது (ழால்லீன்) பாதையையும் விட்டு அவரை விலக்குதல்.*

*'அல்-ஃபாத்திஹா'வை ஓதும்போது, அது அறபிகளின் சாதார ணமான மொழிநடை போன்றதல்ல என்பதைக் கவனியுங்கள்.*

---

1) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. பதிவு செய்தவர்: முஸ்லிம்.

*மகத்தான தூதரது வாக்குகளிலும் கூட அந்த மொழிநடையை நாம் காண முடியாது.*

*இருபத்தொன்பது சொற்களைக் கொண்ட இந்த அத்தியாயத் தில், அல்-குர்ஆன் இறங்குவதற்கு முன்னர் வழங்கிய அறபு மொழிக்குப் பரிச்சயமற்ற ஐம்பத்தெட்டு புதிய மொழியியல் கூறுகள் இடம்பெற்றிருந்தன என நான் கூறினால் நம்புவீர்களா? இறைத்தூதர் (ஸல்) பயன்படுத்திய மொழி கூட அக்கூறுகளுக்கு பரிச்சயப் பட்டிருக்கவில்லை என்பதை அன்னாரது வாக்குகளி லிருந்து நாம் அறிய முடிகிறது. அல்குர்ஆனின் ஏதாவதொரு வசனத்தை அல்லது வசனத்தின் பகுதியை அன்னார் தெளிவாக எடுத்தாளும் சந்தர்ப்பத்தில் அல்லது அதற்கு வியாக்கியானம் வழங்க முற்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே அக்கூறுகளை அன்னாரது பொன் மொழிகளில் அவதானிக்க முடிகிறது.*[1]

*அறபு மொழியில் 'ஃபஈல்' என்ற வடிவத்தில் அமையும் எந்தப் பதமும் நிலையான அல்லது தொடர் நிகழ் பண்பை உணர்த்துவது வழக்கம். 'பஃகீல்' (கஞ்சன்), 'கரீம்' (வள்ளல்), 'கபீர்' (பெரியவன்) முதலிய பல சொற்களை இதற்கு எடுத்துக் காட்டாக குறிப்பிடலாம். அவ்வாறே 'ஃபஃலான்' என்ற வடிவம் தற்போது நிகழ் கின்ற அல்லது தற்காலிகமாக ஏற்படுகின்ற பண்பை குறிக்கும். 'ஜவ்ஆன்' (பசித்தவன்) 'அத்ஷான்' (தாகித்தவன்), 'ஸக்றான்' (போதை யடைந்தவன்) முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.*

*இந்த வகையில், 'அர்-ரஹ்மான்' எனும் பண்பு அல்லாஹ் தற்போது சொரிந்து கொண்டிருக்கும் அருளையும் கிருபையையும் குறிக்கும்; 'அர்-ரஹீம்' என்பது ஆதியந்தமற்ற அவனது கருணை யையும் கிருபையையும் குறிக்கும்.*

---

1) 'அல் முஃஜிஸா' என்ற எமது நூலின் இரண்டாம் பாகத்தின் ஆரம்பத்தில் 'அல் ஃபாத்திஹா' பற்றிய கலந்துரையாடலில் இது பற்றி விரிவாகக் காணலாம். வெளியீடு: இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம், வாஷிங்டன் 2015.

தொழுகையில் 'அல்-ஃபாத்திஹா'வை ஓதும்போது இந்த அனைத்தையும் நினைவில் நிறுத்த முயலுங்கள். அதிலுள்ள வார்த்தைகளின் பொருள்களையும் உயிரோட்டத்தையும் இன்னும் அதிகமாக மனக் கண்ணில் நிறுத்த வேண்டுமாயின், அவ்வார்த் தைகளை நீங்களே வடிவமைப்பதாக கற்பனை செய்து கொள் ளுங்கள். அவை அல்லாஹ்வின் அற்புதமான வார்த்தைகள் என்ப தையோ, அவற்றுக்கு நிகராக எந்த வார்த்தையும் உலகில் கிடை யாது என்பதையோ மறந்து விடாத அதேவேளை, அவை உங்கள் சிந்தனையிலிருந்து பிறந்து உங்களது சொந்த வசனங்களால் வார்க்கப்பட்டவை என்பது போன்று பாவனை செய்து கொள் ளுங்கள். அப்போது அவை உங்களுக்குள்ளிருந்தே ஊற்றெடுப்ப தாக உணரத் தொடங்குவீர்கள்; அவற்றுடன் உங்கள் இதயத் துடிப்பு சங்கமமாகும்; அர்த்த புஷ்டியுள்ள வார்த்தைகளை அப் போது மொழிவீர்கள்; நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்கும் வசனங்களை ஓதுவீர்கள்; வெறுமனே வேறு யாரோ சொன்ன வார்த்தைகள் போன்று எந்த மெய்ப்பாடோ சிந்தனையோ இன்றி நாவினால் உச்சாடனம் செய்யும் அவலம் இதனால் தவிர்க்கப்படும்.

இந்தப் பரீட்சையில் நீங்கள் சித்தியடைந்து விட்டால், 'அல் ஃபாத்திஹா'வின் ஒவ்வொரு வார்த்தையின் பெறுமதியையும், ஒவ்வொரு வசனத்தின் மகிமையையும், அவை சுமந்திருக்கும் அற்புத அர்த்தங்களையும் உயிரோட்டத் தையும் உய்த்துணரும் ஆற்றலில் முதல் எட்டினை எடுத்து வைத்து விட்டீர்கள் என்பதே அதன் பொருள்.

அல்குர்ஆனின் பிற அத்தியாயங்களுக்கு இல்லாத தனித்துவ மானதொரு முக்கியத்துவம் இந்த அத்தியாயத்திற்கு உள்ளது என் பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். தொழுகையில் நீங் கள் விரும்பிய வசனங்களை அல்லது அத்தியாயங்களை ஓத முடியும். ஆனால் 'அல் ஃபாத்திஹா'வை ஓதியே ஆக வேண்டும். அதனை ஓதாமல் முழு அல்குர்ஆனையும் ஓதினாலும், நீங்கள் தொழவில்லை என்றே கொள்ளப்படும். சிலவேளை அங்கு

*அல்-குர் ஆனை ஓதியதற்கான கூலி கிடைக்கலாம்; ஆனால் தொழுகை நிறைவேறாது:*

*''அல் குர்ஆனின் தோற்றுவாயை (அல்- ஃபாத்திஹா) ஓதாத வரது தொழுகை தொழுகையன்று.''*[1]

**'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்'**

**(இப்போதும் எப்போதும் அன்பும் அருளும் உடைய அல்லாஹ்வின் பெயரால்!)**

அல்-குர்ஆனின் மிக அழகிய வசனங்களுள் இதுவும் ஒன்று. ஆனால் நமது பழக்கமும் பரிச்சயமும் இதன் தனித்தன்மையை மறைத்து விட்டன. ஆதலால் அதனை வெறுமனே 'நன்றி', 'மன்னிக்கவும்', 'போய் வருகிறேன்' என்பவை போன்ற 'முகமன்' வார்த்தை போன்று கூறுவதற்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம். 'தொழுகையில் உச்சரிக்கப்படும் முதல் வசனமாக அகிலங்களின் நாயகன் இதனை ஏன் தெரிவு செய்தான்?' என நாம் கேட்டுப் பார்த் திருக்கிறோமா? ஏறத்தாழ எல்லா அத்தியாயங்களுக்குமான நுழைவாயிலாக இந்த வசனம் இருப்பது ஏன்? 'ஸூறத்துல் ஃபாத்திஹா'வின் பாகமாக இது ஏன் அமைந்தது?

'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்ற இந்த வசனத்தை தொழுகையைத் தொடங்கும் போதும், ஒவ்வோர் அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் மட்டுமன்றி, வாழ்வில் எந்தச் செயலைத் தொடங் கும் போதும் திரும்பத் திரும்ப நாம் உச்சரிப்பதால் அது எந்த வொரு செயலை ஆரம் பிக்கும் போதும் கூறப்படும் வசன மொன்றே தவிர வேறில்லை என்பதான பிரமை நமக்கு ஏற்பட்டி ருக்கிறது. அறபுமொழி இலக்கண வல்லுனர்கள் கூட இந்த மாயை யிலிருந்து தப்பவில்லை. எனவேதான் அவர்கள் பிற எல்லா வச னங்களையும் தங்களது நுணுக்கமான இலக்கணப் பகுப்பாய்வுக்கு

1) அறிவிப்பவர்: உபாதா பின் ஸாமித். பதிவு செய்தவர்: புஹாரி.

*உட்படுத்தியது போன்று இவ்வசனத்தை குறிப்பிடத்தக்களவு அலட்டிக் கொள்ளவில்லை. 'பிஸ்மில்லாஹி' (பி + இஸ்மி + அல்லாஹ்) என்பதிலுள்ள 'ஆல்' அல்லது 'கொண்டு' என்ற உருபுப் பொருளில் அமைந்த 'பி' என்ற இடைச்சொல்லில் மறைந்திருக்கும் வினைச் சொல் அல்லது 'காரியம்' எது என விளக்குவதற்கு அதிகம் பிரயாசை எடுத்துக் கொள்ளாமல், 'அல்லாஹ்வின் பெயரால் (ஆரம்பிக்கிறேன்)' என பொருள் கொள்வதோடு அவர்கள் போதுமாக்கிக் கொண்டார்கள்; அத் துடன் தங்களது 'இலக்கணப் புதிரை' அவிழ்த்து விட்டதாயும் அமைதியடைந்து விட்டார்கள். ஆனால் வசனத்தின் அதி முக்கிய மான பொருள் தெளிவுபடுத்தப்படாமலே தேங்கி விட்டது.*

*'பிஸ்மில்லாஹ்' என்பதன் மொழிப் பொருள் கருதி, அது ஒவ்வோர் அத்தியாயத்தின் தொடக் கத்திலும் ஒவ்வொரு செய லின் ஆரம்பத்திலும் இடம் பெற்றிருப்பதே நம்மையும் இலக் கணவாதிகளையும் இத்தகைய பிரமைக்கு இழுத்துச் சென்றி ருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், அது வெறுமனே ஆரம் பிப்பதற்கான வசனம் என்பதைத் தாண்டி மிக ஆழ்ந்த பொரு ளுடையது.*

*'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்ற வசனத்துக்குப் பின்னால் நாம் பாராயனம் செய்கின்ற எந்த ஏவலும், விலக்கலும், வாக்கு றுதியும், எச்சரிக்கையும், வர்ணனையும், செய்தியும், உபதேசமும், நினைவூட்டலும்... அவனது அதியுயர் அதிகாரத்தின் பிரதிநிதியாக பூமியில் நின்று நாம் செய்கின்ற பிரகடனமே என்பதுதான் அந்த வசனம் உணர்த்துகின்ற மிக முக்கியமான செய்தி.*

> *''உமது ரட்சகன் வானவர்களை நோக்கி, 'பூமியில் நான் ஒரு பிரதிநிதியை ஏற்படுத் தப்போகிறேன்' எனக் கூறினான்''. (அல்-பகறா: 30)*

*மனிதன் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியெனில், அந்த அல்லாஹ்வின் வார்த்தைகளை அதே வடிவில் பூமியில்*

பிரகடனப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் போது அவனது அதியுயர் அதிகாரத்தின் பிரதிநிதியாக நின்று அவனை நினைவு படுத்துவதும், கேட்போருக்கு நினைவூட்டுவதும் அவசியம்.

நீதிபதி தீர்ப்பொன்றை வாசிக்க ஆரம்பிக்கும் போது 'மக்களின் பெயரால்...' எனக் கூறி ஆரம்பித்தால், 'மக்களின் பெயரால் ஆரம்பிக் கிறேன்!' என்பதா அதன் பொருள்? அல்லது 'மக்களின் பெயரால் இதனை மொழிகிறேன்!' என்பதுதான் அதன் சரியான பொருளா? தான் வாசிக்கும் தீர்ப்பு 'மக்கள் சார்பாகவே' வாசிக் கப்படுகிறது என அந்த வாசகத்தின் மூலமாக அவர் உறுதிப் படுத்துகிறார். ஏனெனில் அவர் மக்களை பிரதிநிதித்துவம் செய்ப வர்; மக்களால் அதிகாரம் வழங்கப்பட்டவர்; அவரால் வெளி யிடப்படும் தீர்ப்புகள் மக்கள் அவருக்கு வழங்கிய அதிகாரத்தி லிருந்து பிறப்பவை. உறவினர் ஒருவரிடம் தேவையொன்றைப் பெற முற்படும் போது, 'நமது குடும்ப உறவின் பெயரால் கேட்கிறேன்!' என நீங்கள் கூறினால், 'குடும்ப உறவு தரும் அதி காரத்தினால் கேட்கிறேன்' என்பதுதானே அதன் பொருள்!

ஆக, 'அல்-ஃபாத்திஹா' அல்லது மற்றோர் அத்தியாயம் 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என ஆரம்பிப்பதானது, பின்னால் வரும் வானகப் போதனைகளை 'அல்லாஹ்வின் அதி காரத்தின் பேரில்தான்' ஓதப் போகிறோம் என்ற நினைவூட்டலை ஓதுபவருக்கு வழங்குகின்றது. இவ்வாறன்றி, -இலக்கணவாதிகள் கூறியது போன்று- 'பிஸ்மில்லாஹ்' என்பதிலுள்ள 'பி' என்ற இடைச் சொல் 'அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு (ஆரம்பிக் கிறேன்)' என்று குறிப்பதாக மாத்திரம் பொருள் கொள்ளும் போது, மேலதிக தேடலுக்கான ஆயாசம் நமக்கு மீதமாயினும், அதன் மூலமாக பரந்த பொருளொன்றைக் குறுகச் செய்து, குறித்த வார்த்தையின் அடிப்படையான, முக்கியமான, அற்புதமான அர்த் தத்தைத் தொலைத்து விடுகிறோம்.

'பிஸ்மில்லாஹ்'வைக் கொண்டு தொழுகையை ஆரம்பிக்கும் போது அது நமக்கு ஓர் எச்சரிக்கை மணியாக அமைகிறது. நாம்

மேற் கொள்ளப் போகும் செயற்பாடு வெறும் தன்னியக்க அசைவுகளோ, இதயத்தை தொடாமல் வெறுமனே நாவில் உருண்டோடும் மனன வார்த்தைகளோ அன்றி, அல்லாஹ்வுடன் நிகழும் உண்மையான தொடர்பாடல் என்பதை அது நினைவூட்டுகிறது. மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடு நமக்கும் அவனுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் செயல் வடிவம் என்பதையும், பூமியில் அவனது பிரதிநிதியாக இருத்தல் என்ற பாத்திரத்தை இன்னும் விசுவா சத்துடன் காப்பாற்றுகிறோம் என்பதையும் அந்த 'பிஸ்மில்லாஹ்' மூலமாக நாம் உறுதி செய்கிறோம்.

இந்நூலின் முதல் பக்கத்தை 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்ற வாக்கியத்தால் அலங்கரிக்கும்போது கூட, அது அகிலங்களின் நாயகனால் எனக்கு அளிக்கப்பட்ட நினைவூட்டலாகவும், அவனுக்கு நான் வழங்கும் உறுதிப்படுத்தலாகவுமே அமைகிறது. நூலின் முதல் வார்த்தையிலிருந்து இறுதி வார்த்தை வரையான அனைத்தும் எனக்கும் எனது ரட்சகனுக்கும் இடையிலான ஒப்பந்தத்திற்கு அமைவானவை என்ற உறுதிப்படுத்தல் அது. அவனது திருப்தியை எதிர்பார்த்தும், அவனது விதிமுறைகளைப் பேணியும், அவனது வரையறைகளைத் தாண்டாமலும், பூமியில் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் நிபந்தனைகளை மனதில் கொண்டும் என் பணியை நிறைவேற்றுவேன் என அந்த வாசகத்தின் மூலமாக நான் உறுதி செய்கிறேன்.

'பிஸ்மில்லாஹ்' என்பது உங்களுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலான உறுதிப் பிரமாணம். பூமியில் நீங்கள் அவனது முகவர் மட்டுமே என்ற பிரமாணம். எனவே, ஆட்சி என்பது அவனது ஆட்சியே; அதிகாரம் என்பது அவனது அதிகாரமே; செல்வம் என்பது அவனது செல்வமே; சொத்தும் சுகங்களும் உணவும் குடிப்பும் அவன் தந்தவையே!

பிரபஞ்சம் என்ற முடிவிலா பெருவெளியில் பேரண்ட நாயகன் தூவி விட்டிருக்கும் பில்லியன் கணக்கான சிறிய, பெரிய நிலபுலன்களுள் சிறியதொன்றான 'பூமி' என்ற நிலத்திற்கு வானுலகிலிருந்து இறக்கப்பட்டிருக்கும் அனைத்தும் அதன்

*உரிமையாளனுக்கு முகவராய் நீ நின்று அதன் விவகாரங்களை நிர்வகிப்பதற்காகவே என்பதை மனிதா மனம் கொள்! அதற்கான நிபந்தனைகளை குறுகிய கால ஒப்பந்த மொன்றுக்கு அமைவாக நீ செயற்படுத்த வேண்டும்; அந்தக் காலமோ விரைவில் முடிந்து விடும்; பயணத்துக்கு நீ தயாரா? கணக்கறிக்கையோடு உரிமை யாளனின் சபையில் பிரசன்னமாவதற்கு உன்னை ஆயத்தம் செய்து கொண்டாயா?*

*ஆனால் கதை இத்தோடு முடிந்து விடவில்லை. உண்மையில், இந்த 'அனுமதி' அல்லது 'முகவர் பதவி' அல்லது 'பிரதிநிதித்துவ ஒப்பந்தம்' 'பிஸ்மில்லாஹ்' என்பதோடு மாத்திரம் நின்றிருக்கவும் முடியும். ஆனால் அந்த 'ஒப்பந்தத்துடன்' ஒட்டிய 'பின்னிணைப்பு' ஒன்றையும் அல்லாஹ் செய்திருக்கிறான். 'அர் ரஹ்மானிர் ரஹீம்' என்பதே அப்பின்னிணைப்பு.*

*ஒரே வினையடியிலிருந்து பிறந்த 'அர்-ரஹ் மான்', 'அர்-ரஹீம்' ஆகிய இவ்விரு பதங்களும் இங்கு ஒன்றிணைந்துள்ளன. மட்டு மன்றி, அல் லாஹ்வின் பல பண்புகளுள் இவ்விரு பண்புகள் மாத்திரம் அல்லாஹ்வுக்கும் நமக்கும் இடையிலான 'பிரதிநிதித் துவ ஒப்பந்தம்' என்ற அந்தஸ்திலுள்ள 'பிஸ்மில்லாஹ்'வுடன் பிடிவாதமாக இணைக்கப்பட்டுள்ளன. ஒரு முஸ்லிம் தனது ரட்ச கனுடன் தொடர்பாடுவதற்கான இரு பிரதான வழிகளான தொழு கையையும் அல்-குர்ஆனையும் திறந்து வைக்கும் இடத்தில் அந்த 'பிஸ்மில்லாஹ்' இடப்பட்டும் உள்ளது. இவையனைத்தும் சேர்ந்து நமக்கும் சூழவுள்ள உலகுக்கும் பல செய்திகளைச் சொல்கின்றன:*

***ஒன்று:*** *'ஹதீஸ் குத்ஸீ'யில் கூறப்பட்டிருப்பது போன்று, 'அல்லாஹ்வின் கிருபை அவனது கோபத்தை முந்தியது'. எனவே தான், அல்-குர்ஆனின் 113 ஸூறாக்கள் அவனது கருணையை எடுத்துக் காட்டும் இவ்விரு பண்புகளதும் சேர்மானத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என அவன் வற்புறுத்தி யுள்ளான். இவ்வளவுக்கும் இரண்டும் (தெளிவான பொருள்*

வேறுபாடு கொண்டவையாய் இருந்தாலும்) ஒன்றுக்கொன்று நெருக்கமானவை; ஒரே வினையடியிலிருந்து பிறந்தவை. அவனது பிற பல திருநாமங்களிலிருந்து வேறு சொற்கூட்டுகளை ஒவ் வொரு ஸூறாவின் ஆரம்பத்திலும் அவன் மாற்றி மாற்றிப் பயன்டுத்தவில்லை என்பதை இங்கு கவனியுங்கள். மட்டுமன்றி -நமது மனிதப் புரிதலின் படி- இரக்கம், கண்டிப்பு ஆகிய இரு பண்புகளுக்கிடையில் சமநிலை பேணத்தக்க வகையில், (அல்-குர்ஆனின் வேறு சில இடங்களில் வந்திருப்பது போன்று) ''அல் அஸீஸ் அர் ரஹீம்'' (சக்திமிக்கவன்; கருணை மிக்கவன்) என்றோ, ''அல் அஸீஸ் அல் ஃகபூர்'' (சக்தி மிக்கவன்; மன்னிப்பு மிக்கவன்) என்றோ கூட ஸூறாக்களின் ஆரம்பத்தில் அவன் ஏற் படுத்தி வைக்கவில்லை.

***இரண்டு:*** அல்லாஹ்வின் 'அர்-ரஹ்மான்', 'அர்-ரஹீம்' ஆகிய இவ்விரு பண்புகளும் இத்துணை முக்கியத்துவம் பெறுவதும், நமது தொழுகையில் பிரதான இடமொன்றைப் பிடித்திருப்பதும், நமது அனைத்துப் பாராயனங்களதும் தோற்றுவாயாக அமைந்தி ருப்பதும்... அவை நமது நம்பிக்கைக் கோட்பாட்டினதும் 'பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதி' என்ற நமது பதவி யினதும் பிரிக்க முடியாத அங்கமாக இருப்பதை உணர்த்துகின்றன.

***மூன்று:*** 'இப்போதும் எப்போதும் அன்பும் அருளும் கொண்ட' அல்லாஹ்வின் பிரதிநிதியாக நாம் தெரிவு செய்யப்பட்டிருப்ப தனாலும், அவனே இவ்விரு பண்புகளையும் முன்னுரிமை கொடுத்து தெரிவு செய்திருப்பதனாலும், இவ் விரு பண்புகளை யும் பேணிக் காக்கின்ற மிகச் சிறந்த பிரதிநிதியாக இருக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். எனவே, இவ்விரு பண்புகளுக்கும் அல்-குர்ஆன் தொடர்ச்சியாக கொடுத்திருக்கும் அழுத்தத்திற்கு இயைபான வகையில், 'கருணை' என்ற பொறுப்பின் தரத்திற்கு நாம் உயர வேண்டும்.

நாம் முஸ்லிம்கள். நமது முகத்தின் மலர்ச்சியிலும், உதட்டின் புன்னகையிலும், உள்ளத்தின் மென்மையிலும், அருகிலிருப்பவர்,

தூரத்தி லிருப்பவர் ஆகிய அனைவர் மீதும் நாம் காட்டும் அக் கறையிலும், எல்லோர் மீதும் பாராட்டும் நேசத்திலும், நண்ப னோடும் எதிரியோடும் காக்கும் பொறுமையிலும் 'அர்-ரஹ்மான்', 'அர்-ரஹீம்' ஆகிய இவ்விரு பண்புகளையும் உலகம் காண வேண்டும். பிறரை மதித்தல், மன்னித்தல், அன்பு பாராட்டுதல், மனித நேயம், மென்மை, பணிவு முதலிய பண்புகளாக அவை நம்மிலிருந்து வெளிப்பட வேண்டும்.

உலகம் இன்று முஸ்லிம்களிடம் காணும் பிம்பம் இத்தகை யதுதானா?

## 'அர்-ரஹ்மான் அர்-ரஹீம்'

## (இப்போதும் அருளுடையவன்; எப்போதும் அருளுடையவன்)

இந்த இரு பதங்களும் 'அர் ரஹ்மஹ்'[1] என்ற ஒரே வினையடி யிலிருந்து பிறந்தாலும், 'ஃபலான்', 'ஃபஈல்' என்ற இரு வேறுபட்ட சொல் அச்சுகளில் அமைந்தவை. இரு பதங்களும் முற்றிலும் தனித்தனியான பொருள் வீச்சு கொண்டவை என்பதை அவற்றின் மொழி யியல் யதார்த்தம் இயம்புகிறது. ஏனெனில் 'ரஹ்மான்' என்ற பதம் 'பஃலான்' என்ற அச்சில் அமைந்துள்ளது. வழக்கமாக இந்த அமைப்பு 'தற்போது' நிகழ்வதைச் சுட்டுகின்ற பிரயோக மாகும். 'ளம்ஆன்' (தாகம் கொண்டவன்), 'அழ்பான்' (கோப முற்றிருப்பவன்), 'ஸஹ்றான்' (தூங்காமல் விழித்திருப்பவன்), 'ஃபர்ஹான்' (மகிழ்ந்திருப்பவன்) முதலிய பதங்களை இங்கு எடுத்துக் காட்டாக கூறலாம். இப்பதங்கள் தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் பண்புகளை சுட்டுபவை. 'தாகித்திருப்பவன்' தற்போது அந்த நிலையில் இருக்கிறான்; அவனது தாகம் பின்னர் அகன்று விடும். 'கோபமுற்றிருப்பவன்' என்பதும் அப்படித்தான்; சற்றுக் கழிந்ததும் அவனது கோபம் தணிந்து விடும்.

1) அருள், அன்பு, கருணை, கிருபை...

*ஆக, 'அர்-ரஹ்மான்' என்பது 'தற்போது' வானகத்திலிருந்து அவனது 'கிருபை' நம்மீது இறங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த் தும் பதம். அதாவது இந்த வார்த்தையை மொழியும் சமயத்தில் நம் மீது அவனது கருணை பொழிந்து கொண்டிருக் கிறது. அந்த வகையில், வானிலிருந்து பூமியை நோக்கிய 'செங்குத்தான'* (Vertical) *பொருளை அது உணர்த்துகிறது. எனவே, குளிர்ந்த நீர்வீழ்ச்சி போன்று அவனது 'கிருபை' நம்மீது இறங்கி கேசாதி பாதம் கழுவி விடுவது போன்ற உணர்வு நிலையை அடைய அதனை மொழியும் சமயம் நாம் முயல வேண்டும்.*

*'அர்-ரஹீம்' என்ற பதம் 'ஃபஈல்' என்ற அச்சில் அமைந்தது. வழக்கமாக அது நிரந்தரத் தன்மையையும் நீட்சியையும் தொடர் நிகழ்வை யும் குறிக்கும் பிரயோகம். அந்த வகையில், 'அல்-கரீம்' (வள்ளல்) என்பவன் எப்போதும் வள்ளல்தான்; 'அல்-பஃகீல்' (கஞ்சன்) என்பவன் எப்போதும் கஞ்சன்தான். ஆக, அல்லாஹ் 'அர்-ரஹீம்' எனில், அவன் எப்போதும் அருள் கூர்ந்தவனாக இருக்கிறான் என்பதே அதன் பொருள். அவனது கிருபை முக் கால நீட்சி கொண்டது; ஆதியந்தமற்று கிடைக்கோடாக* (Horizontal) *நீண்டு செல்லும் பண்புடையது.*

*இந்த வகையில் இரு பண்புகளும் இணைந்து பரிபூரண பொருள் கோடலொன்றை நமக்குத் தருகிறது. இரு பதங்களதும் பொருள் வீச்சிலுள்ள இந்த வேறுபடுத்தல் சரியானதுதான் என்பதை இறைத் தூதர் (ஸல்) அவற்றை ஓதிய முறையிலிருந்தும் நாம் புரிந்துகொள்கிறோம்:*

*''இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எவ்வாறு பாராயனம் செய்தார்கள்?'' என அனஸ் (றழி) வினவப்பட்டபோது, ''நீட்டி ஓதுபவராக இருந் தார்கள்'' என பதிலளித்தார். பிறகு இவ் வாறு ஓதிக் காட்டினார்: ''பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்: 'பிஸ் மில்லாஹ்' என்பதை நீட்டுவார்கள்; 'அர்-ரஹ்மான்' என்பதையும் நீட்டுவார்கள்; 'அர்-ரஹீம்' என்பதையும் நீட்டுவார்கள்.''*[1]

---

1) அறிவிப்பவர்: கதாதா. பதிவு செய்தவர்: புஹாரி.

'அர்-ரஹ்மான்', 'அர்-ரஹீம்' ஆகிய இரு பதங்களிலும் 'தஜ்வீத்' சட்டங்களின் 'நீட்டல்' (அல்-மத்து) நிபந்தனையேதும் இல்லாத போதும், ஒவ்வொன்றும் நீட்டப் படுவதன் மூலமாக ஒவ்வொன்றுக்குமுரிய தனித் தன்மையும் சுயாதீனப் பண்பும் பேணப்படுகிறது. 'மத்து' என்பது காலம். குறித்ததொரு விவரணம் பின்னால் வரும் மற்றொரு விவரணத்திலிருந்து பொருளிலும் போக்கிலும் வேறுபட்டு நிற்பதை அது உணர்த்துகிறது.

## சிவப்பு விசை இலக்கம் 2:

### ‘இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தஈன்’

### (உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம்)

உரிமை பறிக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்ட ஒரு மனிதர் அதனை மீளப் பெறுவதற்காக அரச அலுவலகம் செல்வதாக கற்பனை செய்து கொள்வோம். அலுவலகத்தில் உள்ள உத்தியோ கத்தரிடம் சென்று அது பற்றி முறையிடுகிறார். உத்தியோகத்தர் அவரிடம் அது பற்றி மனு எழுதி, உரிய முத்திரை ஒட்டி, அலுவலகப் பெட்டியில் இடுமாறு கேட்கிறார்; அப்போது தான் அது வழக்கமான ஒழுங்கில் உயரதிகாரியைச் சென்றடையும்; அதனைப் பரிசீலித்து -சரியாகவோ, தவறாகவோ- அவர் ஒரு தீர்மானத் திற்கு வருவதும் சாத்தியமாகும்.

இம்மனிதரது நிலையையும் மற்றொரு அதிஷ்டக்கார மனித ரையும் ஒப்பிட்டுப் பாருங்கள்: அவருக்கு அந்த அலுவலகத்தின் உயரதி காரியுடன் நெருங்கிய தொடர்பும் நட்பும் உண்டு. -சரியாகவோ பிழையாகவோ- குறித்த வேண்டுகோள் தொடர் பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் அந்த அதிகா ரிக்கே முழு மையாக உண்டு. ஆனால் அந்த அதிகாரி நேர்மை யானவர்; அறிவுத் திறம் படைத்தவர்; ஒருபோதும் அநீதி இழைக்காதவர்; தவறாக முடிவெடுக்காதவர்.

'இய்யாக்க நஸ்தஈன்' (உன்னிடமே உதவி தேடுகிறோம்) என்பதை இலகுவாக விளக்கவே இந்த உதாரணத்தை குறிப்பிட்டோம். அனைத்து வகையான ஒப்பீட்டிலிருந்தும் அல்லாஹ் உயர்ந்தவன்!

அவனது சன்னிதானத்தில் உங்களது உத்தியோகபூர்வ வேண்டுகோளை முன்வைக்க சிற்றூழியரோ உத்தியோகத்தரோ அவசியமில்லை. மட்டுமன்றி, அவனே உங்களிடம் கேட்கிறான்; நீங்களாகவே அவனிடம் நேரடியாக உரையாடி உங்களது தேவையைக் கேட்குமாறு கட்டளையிடுகிறான். அனைத்துக்கும் மேலாக, உங்கள் தேவையை அவனிடம் எப்படிக் கேட்பது என்பதையும் அவனே சொல்லித் தருகிறான்; தனக்கென அவன் ஏற்படுத்திக் கொண்ட பண்புகளை 'அல்-ஃபாத்திஹா'வின் ஆரம்பத்தில் இட்டு, உங்கள் நாவினால் மொழியச் செய்கிறான்; தொடர்ந்து நீங்கள் அவனது அடிமை என்பதையும், அவன் உங்கள் ரட்சகன் என்பதையும், உங்கள் நலன் காக்கும் கடவுள் என்பதையும் நீங்களாகவே உறுதிப்படுத்தச் செய்கிறான்: ''இய்யாக்க நஃபுது...''

இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்:

'மாட்சிமை மிக்க அல்லாஹ் கூறுகின்றான்: 'தொழுகையை -அதாவது ஃபாத்திஹாவை- நான் இரு பாதிகளாகப் பிரித்திருக்கிறேன்: ஒன்று எனக்கு; மற்றொன்று எனது அடியானுக்கு. எனது அடியான் கேட்பது அவனுக்கு கிடைக்கும்'. எனவே அடியான் 'அல்-ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்' என்று கூறினால், 'எனது அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான்!' என அல்லாஹ் கூறுவான்; 'அர் ரஹ்மானிர் ரஹீம்' என்று கூறினால், 'எனது அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான்' என அவன் கூறுவான்; 'மாலிகி யவ்மித்தீன்' என்று கூறினால், 'எனது அடியான் எனது கீர்த்தியை இயம்பி விட்டான்' எனக் கூறுவான்; 'இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன்' என்று கூறினால், இது எனக்கும் எனது அடியானுக்கும் இடையிலானது; என் அடியான் கேட்டது அவனுக்கு கிடைக்கும்' எனக் கூறுவான்; 'இஹ்தினஸ் ஸிறாதல்

முஸ்தகீம். ஸிறாதல்லதீன அன்அம்த அலைஹிம். அய்ரில் மஃழூபி அலைஹிம் வலழ் ழால்லீன்' என்று கூறினால், 'எனது அடியான் கேட்டது அவனுக்கு கிடைக்கும்' எனக் கூறுவான்''.(1)

ஆக, இப்போது நாம் 'அல்-ஃபாத்திஹா' என்ற அத்தியாயத்தின் சரி பாதியிலுள்ள ஒரு வசனத்துடன் நிற்கிறோம். மட்டுமன்றி, இந்த வசனத்தின் நடுப்பாதியே அத்தியாயத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கும் இடமாகவும் அமைந்துள்ளது. 'ஸூறா'வின் முதல் அரைப் பாதி அல்லாஹ்வை போற்றித் துதித்து அவனது மாட்சி மையை உறுதிப்படுத்துகிறது: 'இய்யாக்க நஃபுது' (உன்னையே நாங்கள் வணங்குகிறோம்!). பிறகு அதே வசனத்தின் மறுபாதி 'ஸூறா'வின் இரண்டாம் பகுதியாக ஆரம்பிக்கிறது. முன்னைய பாதியிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, நமது தேவைகளைக் கேட்டு மன்றாடும் பகுதியாக அது அமைகிறது: ''இய்யாக்க நஸ்தஈன்'' (உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம்!).

ஏக வசனத்தினால் இணைக்கப்படும் இந்த இரு வேறுபட்ட நிலைகளின் அதிசய சந்திப்பை நாம் அடையும் போது, வசனத்தின் முதல் பகுதியாகிய ''இய்யாக்க நஃபுது''வில் சற்றுத் தரித்தே அப்பால் 'வஇய்யாக்க நஸ்தஈன்' என தொடர வேண்டும் என்ற உணர்வு தோன்றுவது இயல்பானது. மட்டுமன்றி, அலீ பின் அபீ தாலிப் (றழி) அவர்கள் 'நஃபுது' என்ற வார்த்தையை உச்சரிக்கும் போது அதன் இறுதி எழுத்தை 'உகர'மாக நீட்டி ஓதியதாக அறிவிக் கப்பட்டுள்ளது. இது 'அல்-ஃபாத்திஹா'வின் இரு பகுதிகளும் கொண்டிருக்கின்ற தனித்தனியான 'ஆளுமை' வீச்சுகளையும் சுயாதீனத் தன்மையையும் இன்னும் உறுதி செய்கிறது.

ஒரே வசனத்தில் இடம்பெற்றுள்ள இந்த இரு வாசகங்களை யும் தொழுகையில் ஓதும்போது இத்தகு இரு வேறுபட்ட நிலை களுக்கு முன்னால் நிற்பதாக நீங்கள் உணர்ந்ததுண்டா? முதல் வாசகமாகிய 'இய்யாக நஃபுது'வை ஓதும் தொனியையும், இரண்

1) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. பதிவு செய்தவர்: முஸ்லிம்.

*டாவது வாசக மாகிய 'இய்யாக்க நஸ்தஈன்' ஐ ஓதும் தொனி யையும் வேறுபடுத்த முயன்றிருக்கிறீர்களா? இந்த வசனத்தை ஓதும் போது, ஒப்பந்தத்தின் முதல் தரப்புக்குரிய பகுதியிலிருந்து இரண்டாம் தரப்புக்குரிய பகுதிக்கு நகர்வதாக நினைவில் கொள்ள ஒருபோதும் தவறாதீர்கள்!*

*அப்படிச் செய்வீர்களாயின், 'இய்யாக்க நஃபுது' (உன்னையே நாங்கள் வணங்குகிறோம்!) என்ற முதல் பகுதியை ஓதும்போது அதில் பணிவும் அச்சமும் கண்ணியமும் தொனிக்கும்; ஏனெனில் உங்களது வாழ்வையும் விதியையும் தன் கைவசம் வைத்திருப் பவனை நோக்கி அதனை நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் மறு பகுதியாகிய 'வஇய்யாக்க நஸ்தஈன்' (உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம்!) என்பதைக் கூறும்போது அதில் பலவீனமும் இறைஞ்சுதலும் மன்றாட்டமும் எதிர்பார்ப்பும் தொனிக்கும்; பலம் மிக்க அந்த உதவியாளனின் (அல்-முஈன்) புறத்திலிருந்து தெய்வீகக் கருணையின் பிரவாகம் பீறிடப் போவதான உணர்வு உங்களை ஆகர்ஷிக்கும். ஏன் இருக்காது? அவனோ இப்போது உங்கள் முன்னால் இருக்கிறான்; நீங்கள் அவனோடு சம்பாஷிக் கிறீர்கள்; அவன் உங்கள் பேச்சைக் கேட்கிறான். அப்படிப்பட்ட வனே உங்களுக்கு விரோதமாக இருந்தால் பிறகு யார்தான் உங்களுக்கு உதவ முடியும்? அவன் உங்கள் பக்கம் இருந்தால், பிறகு யார்தான் உங்களுக்கெதிராக நிற்க முடியும்?*

*இது அல்லாஹ் தனக்கும் தனது அடியானுக்கும் இடையில் பங்கு போட்டுக் கொண்ட வசனம். தொழுகின்ற அடியானுக்கு வாய்மை மிக்க அல்லாஹ்விடமிருந்து மிக அழகிய வாக்குறுதி யும் வந்தாயிற்று: ''எனது அடியானுக்கு அவன் கேட்டது கிடைக்கும்!''*

*எனவே, அவனது உதவி குறித்த திடமான நம்பிக்கையோடு 'இய்யாக்க நஸ்தஈன்' என்று கூறுங்கள்; வெயில் கொளுத்தும் நாளொன்றில் மழை தேடித் தொழுவதற்காய் மக்கள் வெளியேறிய போது, கட்கத்தில் குடையை இடுக்கிக் கொண்டு வெளியேறிய அந்த ஒரேயொரு மனிதரின் நம்பிக்கையோடு கூறுங்கள்!*

## 'இஹ்தினஸ் ஸிறாத்தல் முஸ்தகீம்...'

## (எங்களை நேரிய பாதையில் செலுத்துவாயாக..!)

*புகழ்ச்சியின் அருள்வாசல் திறக்கப்பட்டு அல்லாஹ்வைப் புகழ்ந்தாயிற்று; கிருபா கடாட் சத்தின் கதவுகளும் திறக்கப் பட்டாயிற்று; தேவைகளையும் கேட்டாயிற்று. இப்போது நமது நாவினால் மிகப் பெரும் வேண்டுதலொன்றை பேரண்ட ரட்சகன் முன்வைக்கச் செய்கிறான். இந்த வாழ்வில் ஒரு மனிதன் முன் வைக்கக் கூடிய மகத்தான வேண்டுகோள் அது: 'நேரிய பாதையை நோக்கிய வழிகாட்டல்'.*

*பாதை தவறுவதை விட அச்சம் கொள்ளக் கூடிய வேறோர் அனர்த்தம் நமக்கு இருக்க முடியுமா?*

*கொடிகட்டிப் பறக்கும் செல்வந்தர்களாக நாம் இருக்கலாம்; அதீத புத்திசாலிகளாய் இருக்கலாம்; பூரண சுகதேகிகளாய் இருக்கலாம்; பரிபூரண சுபீட்சத்தில் திளைத்திருக்கலாம்... ஆனால் ஏகத்துவக் கொள்கையும் நேரிய வழியும் நமக்கு அருளப்பட வில்லையெனில், இந்த அனைத்திலும் பயன் என்ன? உலக வாழ்வின் சுபீட்சமா? மறுமையின் சுபீட்சம் நமக்கு மறுக்கப்படு மாயின், உலக சுபீட்சம் எம்மாத்திரம்? சுவர்க்கமோ... நரகமோ... அந்த மறுமையின் சாஸ்வத வாழ்வின் ஒரு கணப்பொழுதுக்கு முன்னால் இந்த உலக வாழ்வின் நூறு வருடங்கள், அல்லது ஆயிரம் வருடங்கள், அல்லது நூறாயிரம் வருடங்கள்... ஏன் லட் சோப லட்சம் வருடங்களாகத்தான் இருந்தா லும் ஈடாகுமா?*

> *''நிராகரித்தவர்களின் (நற்)செயல்கள் பொட்டல் வெளியில் தெரியும் கானல் போன்றவை. தாகம் கொண்டவன் அதனை தண்ணீர் என நினைக்கிறான். அருகில் வந்து பார்த்தால் அங்கு எதுவுமிருக்காது. ஆனால் அங்கு அல்லாஹ் இருந்து அவனது கணக்கை மொத்தமாகத் தீர்ப்பதை கண்டு கொள்வான்''. (அந்-நூர்: 39)*

*''உலகத்தின் அதி சொகுசு வாழ்வில் திளைத்த ஒரு நிராகரிப் பாளர் மறுமையில் கொண்டு வரப்படுவார். 'இவரை நரக நெருப்பில் ஒரு முறை அமிழ்த்தி எடுங்கள்!' என அப்போது கூறப்படும். அவ்வாறு அமிழ்த்தி எடுக்கப்பட்டதும், 'ஏ மனிதா! நீ எப்போதாகிலும் இன்ப வாழ்வைக் கண்டதுண்டா?' என்று கேட்கப்படும். அதற்கவர், 'இல்லை; என்றுமே எந்த இன்பமும் எனக்குக் கிட்டியதில்லை!' என்பார். பின்னர், உலக வாழ்வில் மிக அதிகமாக துன்பத்தினால் சோதிக்கப்பட்ட ஒரு விசுவாசி கொண்டு வரப்படுவார். 'இவரை சுவனத்தில் ஒரு முறை அமிழ்த்தி எடுங்கள்!' என அப்போது கூறப்படும். அவ்வாறு செய்யப்பட்ட பிறகு அவரிடம், 'ஏ மனிதா! எப்போதாகிலும் துன்பமோ சோத னையோ உன்னை பீடித்ததுண்டா?' என்று வினவப்படும். அதற்கவர், 'இல்லை; என்றுமே என்னை எந்தத் துன்பமோ சோத னையோ பீடித்ததில்லை!' என்பார்.''*(1)

*'இஹ்தினஸ் ஸிறாதல் முஸ்தகீம்' (எங்களை நேர்வழியில் செலுத்துவாயாக!) என்று கூறும் போது நாம் அடையும் உணர்வு நிலை அதற்கு முன்னர் 'வ இய்யாக்க நஸ்தஈன்' (உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்) என்று கூறும்போது அடையும் உணர்வு நிலையிலிருந்து வேறானது. ஏனெனில் முன்னைய பிரார்த்தனை உலகுக் கானது; பின்னைய பிரார்த்தனை மறுமைக் கானது. ஆயினும் இந்த இரண்டாவது பிரார்த் தனையையும் உலகப் பொருளில் கொள்ளத் தக்க சாத்தியப்பாட்டை மறுப்ப தற்கில்லை. ஏனெனில் 'நேரிய பாதை' (அஸ் ஸிறாத் அல் முஸ்தகீம்) என்பது ஒரு 'திறந்த நிலை' வாசகம்; ஏகத்துவமும் நேர்வழியும் என்பதோடு சேர்த்து அனைத்து விடயங்களிலும் கிட்டக் கூடிய நல்லறிவையும் ஞானத்தையும் சீரிய கருத்தையும் கூட அது குறிக்க முடியும். வாழ்வியல் விவகாரங்களில் தனக்கும் பிறருக்கும் சகாயமாக அமையத்தக்க நேரறிவு அருளப்படுவதை விட பெரிய உலக இன்பம் ஒரு மனிதனுக்கு கிட்ட முடியுமா?*

---

1) அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக். பதிவு செய்தவர்: இப்னு மாஜா. அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

'ஸூறத்துல் ஃபாத்திஹா'விலுள்ள 'அஸ்- ஸிறாத்' என்ற பதத்தின் இத் 'திறந்த நிலை' அதனோடு மட்டும் சுருங்கி விட வில்லை; அத்தியாயத்தின் இறுதி வரை அது தொடர்கிறது. ''நீ அருள் புரிந்தவர்களின் பாதை'' என்பதனால் குறிக்கப்படுவோர் யார்? 'கோபத்திற்கு உட் பட்டோர்' யார்? 'வழி தவறியோர்' யார்? அல்-குர்ஆனின் பல விரிவுரையாளர்கள் கூறியது போன்று, அவர்கள் முறையே முஃமின்களும், யூதர்களும், கிறிஸ்தவர் களுமா? சில நபிமொழிகளிலும் அப்படித்தான் வந்திருக்கிறது:

''... 'கோபத்திற்கு உட்பட்டோர்' என்பது யூதர்களையும், 'வழி தவறியோர்' என்பது கிறிஸ்தவர்களையும் குறிக்கும்.''[2]

இம் மூன்று வாசகங்களும் மொழி ரீதியாக முழுமையானவை; பின்னால் எடுகோள் அடிப்படையிலான எந்த மொழியியல் இடைவெளிகளுக்கும் இடமளிக்காதவை. எனினும், வேறு சில மானிட வாசகங்களை கவனித்துப் பார்ப் போமாயின், அல்-குர் ஆனின் இம் மூன்று வாசகங்களும் கொண்டிருக்கின்ற 'திறந்த நிலைப் பண்பு' எப்படிப்பட்டது என்பதைப் புரிந்து கொண்டு விடலாம்.

குறித்த வசனத்தை என்னுடன் சேர்ந்து மீண்டும் படியுங்கள். ஆனால் அல்-குர்ஆனின் இத் 'திறந்த நிலை' வாசகங்களை பின்வருமாறு 'மூடிய நிலை' வாசகங்களாக மாற்றி படித்துப் பாருங்கள்; அப்போதுதான் இருவகை வசனப் போக்குகளுக்கும் இடையிலான வேறுபாட்டை புரிந்து கொள்வீர்கள்:

'எங்களை நேர் பாதையில் செலுத்துவாயாக! அது முஸ்லிம் களின் பாதை; யூதர்களின் பாதையோ கிறிஸ்தவர்களின் பாதையோ அன்று!'

---

2) அறிவிப்போர்: உதை பின் ஹாத்திம் அல் தாஈ மற்றும் அபூதர் அல் கிஃபாரீ. 'அஸ் ஸில்ஸியா அஸ் ஸஹீஹா' வில் அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என குறிக்கிறார்.

*அல்-குர்ஆனின் 'திறந்த நிலை' பிரயோகம் எவ்வளவு 'செழுமையானது' என்பது இப்போது உங்களுக்குப் புரிகிறதா? ''நீ அருள்பாலித்தவர்களின் பாதை'' என்பது 'அல்லாஹ்வினால் அருள்பாலிக்கப்பட்ட அனைவரதும் பாதை' என்ற பரந்து விரிந்த பொருளை கொடுக்கிறது; ''கோபத்துக்குள்ளானவர்கள்'' என்பது எவர் மீதெல்லாம் அல்லாஹ் கோபடைந்தானோ அவர்கள் அனைவரையும் உள்ளடக்குகிறது; ''வழி தவறியவர்கள்'' என்பது சரியான பாதையை விட்டுப் பிறழ்ந்த அனைவரையும் உள்ளடக்கிய பொருள் கோடலுக்கு இடமளிக்கிறது. குறித்த வசனத்திற்கு நபியவர்கள் வழங்கிய விளக்கத்தை இது ரத்துச் செய்வதாகாது. மறுபுறுத்தில், மூன்று வாசகங்களில் ஒவ்வொன்றும் வரையறுத்த தொரு குழுவினரை மாத்திரமே சுட்டுகிறது என மட்டுப்படுத்த வேண்டியதில்லை என்பதையும் இங்கு மறுப்பதற்கில்லை.*

*''இஹ்தினஸ் ஸிறாத்தல் முஸ்தகீம்'' (எங்களை நேரான பாதையில் செலுத்துவாயாக!) என்ற வசனத்தை ஓதும்போது, -தொழுகையின் வேறு பல வார்த்தைகளையும் வாசகங்களையும் போன்று- 'நாங்கள்' என்ற 'திறந்த நிலைப்' பன்மையில் அமைந்திருப்பதை மிக முக்கியமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய பன்மைப் பிரயோகத்தை பூமிப் பந்தில் வாழும் அனைவரையும் உள்ளடக்குகின்ற பரந்த பிரயோகமாகவும் நாம் கொள்ள முடியும்; ஓதுபவராகிய 'என்னை' மாத்திரம் கருத்தில் கொள்ள வும் முடியும். அது ஒருமை வடிவத்தில் அமையாமல் பன்மை வடிவம் பெற்றிருப்பதால், சுற்றியிருக்கும் அனைவரையம் நாம் மனதில் கொள்ளல் சிறந்தது. இந்த வகையில், மனைவி, மக்கள், உறவினர், அயலவர், அறிமுகமானோர் முதலியோரை மட்டுமன்றி, நண்பர்கள், பகைவர்கள், முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் முதலிய அனைவரையும் நமது பிரார்த்தனை உள்ளடக்க முடியும். நண்பர்களுக்கும், எதிரிகளுக்கும், மானிட வர்க்கம் முழுமைக்கும் சத்தியம், நீதி, நேர்வழி என்பவற்றை நோக்கி வழிகாட்டுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதை விட அற்புதமான, பெறுமதி வாய்ந்த, மகத்தான வேறொன்று இருக்க முடியுமா?*

இப்படி -விதிவிலக்கின்றி- அனைவரையும் ''எங்களை'' என்ற சொல்லுக்குள் அடக்குவத னூடாக நமக்கும் 'பிறருக்கும்' இடை யிலான வெறுப்பு, காழ்ப்புணர்பு முதலிய தடைகளைத் தகர்க்கி றோம். ''முஸ்லிம்களாக இருக்க விரும்பினால் 'பிறர்' மீது வெறுப் பும் காழ்ப்புணர்வும் கொள்வது அவசியம்'' என தங்கள் குழந்தை களுக்கு தாய்ப்பாலுடன் சேர்த்து ஊட்டி வளர்க்கும் சிலர் போன் றல்லாது, அன்பும் சகிப்புத் தன்மையும் நமது உள்ளத்தில் தொடர்ச்சியாக உயர்ந்து செல்வதற்குரிய பிரகடனமாகவும் திடசங் கற்பமாகவும் பயிற்சியாகவும் இது அமைகிறது. இந்த உன்னத விதியை எப்போதும் மனம் கொள்ளுங்கள்:

''நாம் முஸ்லிம்கள்! எனவே, நாம் நேசிப்ப வர்கள்; தாராள மனம் படைத்தவர்கள்''.

அல்லாஹ் கூறுகின்றான்:

'மன்னிப்பையே எடுத்துக் கொள்வீராக; நன்மையை ஏவுவீராக; அறிவீனர்களை புறமொதுக்கி விடுவீராக!'' (அஃராப்: 199)

''எனினும் எவர் மன்னித்து, சமாதானம் செய்து கொள்கிறாரோ அவருக்குரிய நற்கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது'' (ஷூறா: 40)

'நீங்கள் மன்னித்து, பொறுமை காத்து, சகித்துக் கொள்வீர் களாயின் நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவனாகவும் கிருபை கூர்ந்தவனாகவும் இருக்கிறான்''. (தகாபுன்: 14)

## 'ஸூறத்துல் ஃபாத்திஹா'வில் நீட்டப்படும் இடங்கள்

'அல்-மத்து' என்பது இலேசான நிறுத்தலுக் குச் சமமானது. அந்த வகையில், குறித்த சொல்லுக்கு அல்லது வாசகத்துக்கு அது -இம் மேலதிக சுவாச இடைவெளி மூலமாக- தனித்துவமான ஆளுமை வீச்சையும் சுயாதீனத் தன்மையையும் கொடுக்கிறது; அந்த வார்த்தை யின் அல்லது வாசகத்தின் பொருள் பற்றிச் சிந்திப் பதற்கும் மனக்கண்ணில் நிறுத்துவதற்கும் அவகாசம் வழங்குகிறது.

அல்-குர்ஆனை ஓதும்போது இடம்பெறும் 'முழுமையான நிறுத்த'த்திற்கும், 'அல்-மத்து' எனப்படும் 'நீட்ட'லுக்கும் இடையிலான வேறு பாட்டை இங்கு நாம் புரிந்துகொள்வது அவசியம். 'அல்-மத்து' என்பது ஒரு வித தற்காலிக நிறுத்தம் அல்லது 'அரை நிறுத்தம்' எனச் சொல்லலாம். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் 'அல் ஃபாத்திஹா'வை ஓத ஆரம்பிக்க முன்பும், ஓதி முடித்த பின்பும் 'பூரணமான நிறுத்த'ங்களை கடைப்பிடித்திருக்கிறார்கள். அவ்வாறே ஒவ்வொரு வசனத்தின் (ஆயத்) முடிவிலும் அத்தகைய பூரண நிறுத்தத்தை கடைப்பிடித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வசனத்திற்கும் மறு வசனத்திற்கும் இடையில் ஒரு 'பசுமை இடைவெளி' இருப்பதை இது உணர்த்துகிறது.

ஆனால் 'அல்-மத்து' மூலமான நிறுத்தங்களை (அல்லது அரை நிறுத்தங்களை) பொறுத்தவரை, அவை வசனங்களின் நடுவே வருபவை; தற்காலிகமான -மேலதிக- நேர நீட்சிகளை கொண்டிருப்பவை. இத்தகைய நேர நீட்சிகள் நாம் ஓதுவதை மனக் கண்ணில் நிறுத்துவதற்கும், பொருள் புரிந்து உள்ளச்சம் கொள்வதற்குமான மேலதிக சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. முன்னைய வாசகத்தின் அர்த்தம் பற்றிச் சிந்திப்பதற்கு போதிய நேர அவகாசத்தை இவை வழங்குவதோடு, அடுத்து வரும் வாசகத்தின் பொருளை எதிர்கொள்வதற்கும் நம்மைத் தயார் செய்கின்றன. 'ஸூறத்துல் ஃபாத்திஹா'வின் இருபத்தொன்பது வார்த்தைகளிலும் இத்த கைய இருபத்தொரு தற்காலிக நீட்டல்கள் (அல்-மத்து) இருப்பதை என்னால் கணக்கிட முடிந்தது. இவை ஒவ்வொரு வசனத்தின் முடிவிலும் ஏற்படும் இயல்பான ஏழு நிறுத்தங்களுக்கு மேலதிகமானவை. 'அல் ஃபாத்திஹா' விலுள்ள இந்த -'அல்-மத்து' மூலமான- தற் காலிக நிறுத்தங்களின் செறிவையும் வீச்சையும் நமது சாதாரண பேச்சு மொழியிலோ, எழுத்து மொழியிலோ கண்டுகொள்ள இயலாது. அல்-குர்ஆனின் அனேகமான பிற அத்தியாயங்களில் கூட இதனை நாம் காண்பது அரிது.

'அல்-ஃபாத்திஹா'வில் அடுத்தடுத்து இடம்பெறும் இந்த நீட்டலானது 'தஜ்வீத்' விதிமுறைகளுக்கு பெரும்பாலும் மாற்றமானது.

மட்டுமன்றி, இந்த 'ஸூறா' அடிப்படையிலேயே அத்தகைய விதிமுறைகளை விட்டு ஏறக்குறைய முழுவதுமாக விடுபட்டே நிற்கிறது எனலாம். தொழுபவர் ஆழ்ந்த சிந்தனையோடு தனது ரட்சகனுக்குப் பணிந்து சரணடைவதற்கு இத்தனித்தன்மை உதவு கிறது.

அல்குர்ஆனின் மிகச் சிறிய அத்தியாயங்களுள் 'அல்-கவ்தர்' மற்றும் 'அல்-இஃக்லாஸ்' ஆகிய இரண்டையும் இங்கு உதார ணத்திற்கு எடுத்துக் கொள்வோம். முதல் அத்தியாயமாகிய 'அல்-கவ்தர்' கொண்டிருக்கும் பத்து வார்த்தைகளிலும் அதிகபட்சமாக இத்தகைய மூன்று நீட்டல்களே உள்ளன: 'இன்னா', 'அஃதய் னாக்க', ''ஷானிஅக்க' என்பனவே அவை. இரண்டாவது அத்தி யாயமான 'அல் இஃக்லாஸ்' கொண்டிருக்கும் பதினைந்து வார்த் தைகளில் நான்கு நீட்டல்களே உள்ளன: 'அல்லாஹு', 'அல் லாஹு', 'யூலத்', 'லஹூ' என்பனவே அவை.

இங்கு ஒரு விடயத்தை மீண்டும் நினைவு படுத்திக் கொள்வது அவசியம். அல்-குர்ஆன் தொடர்பான எந்தச் சிந்தனையும், பகுப் பாய்வும், ஆலோசனையும் யதார்த்தத்தில் 'மனித சிந்தனைகள்' என்ற நிலைக்குட்பட்டவை; மாற்றுக் கருத்துக்கும் மீள்வாசிப் புக்கும் உட்படக் கூடியவை. எனவே இங்கு முன்வைக்கப்படும் சிந்தனைகளுக்கு மாற்றமான சான்றுகள் நிரூபணமாகும் பட்சத் தில் நாம் எப்போதும் சான்றுகளோடும் தெளிவான வசனங்க ளோடுமே நிற்போம். ஒரு முஸ்லிம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கும் அதுதான்!

# ‘றுகூஉ’ம் ‘ஸுஜூது’ம் பெறும் மைய முக்கியத்துவம்

*நாற்பது வயதில் முதன் முதலாக நான் ‘ஹஜ்’ செய்தவேளை, உடலில் எளிமையான இரு துண்டுத் துணிகளோடு ‘கஅபா’வைச் சுற்றி ஒரு சிறுவனைப் போல் விரைந்து கொண்டிருந்தேன். அப்போது ஷெய்த்தான் எனது சிந்தனையை குழப்ப ஆரம்பித்தான்:*

*‘‘உன்னை இந்த நிலையில் உனது பல்கலைக் கழக மாணவர்கள் பார்த்தால் எப்படியிருக்கும்? முஸ்லிம் மாணவர்களும் முஸ்லிமல்லாத மாணவர்களும் என்ன சொல்வார்கள்? ‘நமது ஆசிரியருக்கு என்ன நடந்தது? எப்போதும் நமக்கு முன்னால் கண்ணியமான தோற்றத்தோடும், மிடுக்கான நடையோடும், நிதானமான செயற்பாடுகளோடும் தோன்றுகின்ற அந்த ஆசிரியரா இவர்?’ என்றுதானே பேசிக் கொள்வார்கள்?’’*

*ஆயினும் -அல்லாஹ்வின் அருளால்- எனது ஈமானிய ஆத்மாவும், அல்லாஹ்வின் அடிமை என்ற தூய எண்ணமும் விரைவாகவே விழித்துக் கொண்டன; ஷெய்த்தானிய ஊசலாட்டங்களை ஊதி அணைத்து, நான் ஒரு ‘முஸ்லிம்’ என்பதை அவை நினைவூட்டின.*

*ஆம்; நான் ஒரு ‘முஸ்லிம்’. அதாவது அல்லாஹ்வுக்கு பணிந்தவன்; கட்டுப்பட்டவன்; சரணாகதி அடைந்தவன்; பலவீனமான*

*அடிமை. சக்தியும் பலமும் பெருமையும் கொண்டு அடக்கியாளும் அவனுக்கு முன்னால் நான் எதுவுமே இல்லை. வானங்களையும் பூமியையும் தன்வசம் வைத்திருப்பவன் அவன்; உயிர் கொடுப்ப வனும் மரணிக்கச் செய்பவனும் அவன்; எல்லாவற்றின் மீதும் ஆற்றல் படைத்தவன் அவன்!*

*பிறகு -இதர வணக்கங்களில்- அல்லாஹ்வுக்கு முன் எளிய அடியானாய் தாழ்ந்த போதெல்லாம் அந்த ஆன்மீகத் தென்றல் என்மீது வீசலானது; 'றுகூஇ'ல் குனிந்து 'ஸுப்ஹான றப்பீ அல் அழீம்' எனக் கூறி, பலவீனம், அநீதி, குறைபாடு, சோர்வு, கவனயீனம்... முதலிய அனைத்துப் பண்புகளிலிருந்தும் அவனை தூய் மைப்படுத்தித் துதித்த போதெல்லாம் அது என்னைத் தழுவியது; மீண்டும் நிலைக்கு வந்து, 'தன்னைப் புகழ்வோருக்கு அல்லாஹ் செவிசாய்க்கிறான்' (ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்) என்ற உன்னத விதியை நினைவுகூர்ந்து, '(என்னைப் படைத்து வழிகாட்டி இன்னோரன்ன அருள்களெல்லாம் சொரிந்தமைக்காக) ரட்சகா, உனக்கே புகழனைத்தும்!' (றப்பனா வலகல்ஹம்து) என்று கூறும் தருணமெல்லாம் அந்த ஆகர்ஷணம் என்னை கடந்து சென்றது.*

*ஸுஜூதில் சிரம் தாழ்த்தி 'ஸுப்ஹான றப்பீ அல் அஃலா' எனக் கூறி, அனைத்து விதமான குறைபாடுகளிலிருந்தும் அவனைத் தூய்மைப்படுத்தித் துதித்த போதெல்லாம் அந்த ஆன்மீகத் தென்றல் என்னை ஸ்பரிசித்தது.*

*இப்படி சொல்லாலும் செயலாலும் அந்த உணர்வு என்னை ஆட்கொண்ட வண்ணமே இருந்தது. அல்லாஹ்வுக்கு முன் எவ்வளவுக்கு எவ்வளவு சிரசு தாழ்ந்து பணிந்ததோ அவ்வளவுக்கு அவ்வளவு வானுலகில் அவனுக்கு நெருங்கியிருப்பதாய் உணர்ந் தேன்.*

- *மஅதான் பின் தல்ஹா கூறுகிறார்: இறைத் தூதர் (ஸல்) அவர் களது அடிமையாக இருந்து விடுவிக்கப்பட்ட தவ்பானைச் சந்தித்த நான், 'எந்த நற்செயலைப் புரிந்தால் அல்லாஹ்*

*என்னை சுவனத்தில் நுழையச் செய்வானோ அதனை எனக்குக் கூறும்!' எனக் கேட்டேன். ஆனால் அவர் எதுவும் கூறவில்லை. மீண்டும் கேட்டேன். அப்போதும் அவர் மௌனமாகவே இருந்தார். மூன்றாம் முறையும் கேட்டபோது அவர் இப்படிக் கூறினார்: 'அது பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் நானும் வினவினேன். அதற்கு அன்னார் கூறினார்கள்: ''அல் லாஹ்வுக்கு அதிகமதிகம் 'ஸுஜூது' செய்வீராக; ஏனெனில் அல்லாஹ்வுக்கு நீர் ஒவ்வொரு முறை 'ஸுஜூது' செய்யும் போதும் அவன் உம்மை ஓர் அந்தஸ்தினால் உயர்த்துகிறான்; பாவமொன்றை மன்னிக்கிறான்...''* (புஹாரி, முஸ்லிம்)

தொழுது கொண்டிருக்கும் போதே திருட்டில் ஈடுபடும் தொழு கையாளர்கள் பற்றி எண்ணிப் பார்த்திருக்கிறீர்களா? ஒவ்வொரு 'றக்அத்'துக்கு இடையிலும்... ஒவ்வொரு 'ஸுஜூது'க்கு இடை யிலும் அவர்கள் திருடுவார்கள். அவர்கள் திருடுவது பிறரிடம் இருந்தல்ல; தங்களிட மிருந்து தாங்களே திருடுவதுதான் அவர் களது திருட்டிலுள்ள வினோதம்:

- *''மது அருந்துபவர், விபச்சாரம் செய்பவர், திருடுபவர் என் போர் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?'' என நபிகளார் ('ஹுதூத்' தண்டனை விதியாக முன்னர்) தோழர்களிடம் வினவினார்கள். அதற்கவர்கள், 'அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கறிவர்' எனப் பதிலளித்தனர். அப்போது நபியவர்கள் கூறினார்கள்: ''அவை மானக்கேடான பாவங்கள். அவற்றுக்குத் தண்டனையும் உண்டு. மிக மோசமான திருடன் தனது தொழுகையைத் திருடுபவரே!'' இதனைக் கேட்ட தோழர்கள், 'ஒருவர் தனது தொழுகையை எப்படித் திருட முடியும்?' என வினவினர். அதற்கு அன்னார், ''றுகூஐயும் ஸுஜூதையும் பூரணப்படுத்தாதிருப்பதே அந்தத் திருட்டு'' என விளக்கினார்கள்.*[2]

2) அறிவிப்பவர்: அந்-நுஃமான் பின் முர்ரா. 'ஸஹீஹ் அத் தர்ஈப்'இல் அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

ஏன் இருக்க முடியாது? தொழுகை என்பது அல்லாஹ்விடமிருந்து நமக்கு இறங்கிய பரி சல்லவா! 'நேரம் குறிக்கப்பட்ட' வணக்க மல்லவா! அக்குறிப்பிட்ட நேரங்களில்தானே அன்றாட வேதனங்கள் நமது கணக்குகளில் வைப்புச் செய்யப்படுகின்றன! ஆனால் அந்தத் தொழுகை இன்று நம்மில் பலருக்கு கேளிக் கையாகவும், பொழுது போக்காகவும் மாறி யிருக்கிறது; உரிமையாக இருந்தது கடமையாக மாறி, உடல் அவயவங்களையும் உதடுகளை யும் வேக வேகமாக அசைத்து விரைவாக முடிவைத் தொடும் பந்தயமாக மாறியிருக்கிறது.

''தொழுகை என்பது மூன்று பகுதிகள்: 'தூய்மை' அதன் ஒரு பகுதி; 'றுகூஉ' மற்றொரு பகுதி; 'ஸுஜூது' மூன்றாம் பகுதி. எவர் தொழு கையை உரிய முறையில் மேற்கொள்கிறாரோ அவரிடமிருந்து அதுவும் பிற 'அமல்'களும் ஏற்கப்படும்; எவரது தொழுகை நிராகரிக்கப் படுகிறதோ அவரது பிற 'அமல்'களும் நிராகரிக் கப்படும்''.[3]

'றுகூஉ' மூன்றிலொன்றாகவும், 'ஸுஜூது' மூன்றிலொன்றாகவும் இருந்தால் எஞ்சியிருப் பது என்ன? தொழுகையில் நமக்குக் கடமை யாக்கப்பட்ட அசைவுகள் றுகூஉ, ஸுஜூது ஆகிய இரு அசைவுகளும்தான் என்பதைக் கவ னித்தீர்களா? நிற்கும் நிலையில் தொழுகையை நாம் ஆரம்பிக்கிறோம்; அமர்ந்த நிலையில் நிறைவு செய்கிறோம். இந்த இரு நிலைகளுக்கும் இடையில் உள்ள இயக்கம் 'றுகூஉ'ம் 'ஸுஜூ தும்தான்.

இந்த ஒவ்வோர் அசைவுடனும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் 'திறந்த நிலை' வாசகம் ஒன்றையும், அதன் பின்னரான சில வினாடி 'மௌனம்' ஒன்றையும் காட்டித் தந்திருப்பதைக் கவனியுங்கள்!

---

3) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. 'ஸஹீஹ் அல் தர்ஃப்'இல் அல்பானீ இதனை 'ஸஹீஹ்' என்கிறார்.

'அல்லாஹு அக்பர்' என நாம் கூறும்போது அதன் 'திறந்த நிலை' இயல்பு பின்னால் கடைப்பிடிக்க வேண்டிய சிறு மௌனத்தையும் சிந்தனையையும் உணர்த்துகிறது: 'எதனை விட அல்லாஹ் பெரியவன்?' என அங்கு நாம் சிந்திக்க வேண்டும்.

'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்' என்று கூறும் போதும், 'றப்பனா வலகல் ஹம்து' என்று கூறும் போதும் அவற்றின் பின்னாலுள்ள 'திறந்த நிலை' சிறு மௌனத்தையும் சிந்தனையை யும் வேண்டி நிற்கிறது: 'எதற்காக அவனை நாம் புகழ்கிறோம்?'

'ஸுப்ஹான றப்பீ அல் அழீம்' என்று கூறும்போதும், 'ஸுப்ஹான றப்பீ அல் அஃலா' என்று கூறும் போதும் கூட அதே 'மௌன வெளிகள்' பின் தொடர்கின்றன: 'எதில் அவனை துதிக்கி றோம்?' 'எதிலிருந்து அவனை தூய்மைப் படுத்துகிறோம்?'

இந்த வகையில்தான், 'றுகூஉம்' 'ஸுஜூது'ம் தொழுகையின் மூன்றில் இரண்டு பங்கை எடுக் கின்றன. எனவே 'ஸுப்ஹான றப்பீ அல் அழீம்' என்று கூறும் போதும், 'ஸுப்ஹான றப்பீ அல் அஃலா' என்று கூறும் போதும் அல்லாஹ்வின் மாட்சிமையை நினைவுபடுத்த உதவும் அனைத் தையும் மனக் கண்ணில் நிறுத்துங்கள்!

உங்களது ஒவ்வொரு துதியையும், தொழு கையின் ஒவ்வோர் அங்கத்தையும் அன்றாடப் பழக்கமாக அன்றி வணக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள்!

'அல்லாஹு அக்பர்' என்ற வாசகம் வாழ்வின் கஷ்டங்களை யும் சோதனைகளையும் எதிர்கொள்வதற்கான 'பொறுமையை' தருகிறது.

'அல் ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்' என்பதும், 'றப்பனா வலகல் ஹம்து' என்பதும் அல்லாஹ்வின் அருளையும் கொடை களையும் 'நினைத்துப் பார்க்கும்' சந்தர்ப்பத்தைத் தருகின்றன.

அவ்வாறுதான், 'ஸுப்ஹான றப்பீ அல் அழீம்' என்பதும், 'ஸுப்ஹான றப்பீ அல் அஃலா' என்பதும் அல்லாஹ்வின் மாட்சி

மை, படைப்பு, தற்புதுமை என்பவை பற்றி ஆழ்ந்து ‘சிந்திப்ப தற்கான’ வாய்ப்பை அளிக்கின்றன.

எனவே, தொழுகையை உலக வாழ்வுக்கும் மறுமை வாழ்வுக் குமான முதலீடாக்கிக் கொள்வோம்; ஸுஜூது செய்யும் போதும், உதடுகள் துதிக்கும் போதும் அவயவங்கள், உள்ளம், ஆன்மா, சிந்தனை முதலிய அனைத்தும் சேர்ந்தே ஸுஜூது செய்து துதிக்கின்ற தொழுகை யாளர்களாக மாறுவோம்!

# சிவப்பு விசை இலக்கம் 3:

## ‘அத் தஹிய்யாத்து லில்லாஹ்...’

## (அல்லாஹ்வுக்கு அருள் வாழ்த்துக்கள்)

‘அல்லாஹ்வுக்கு வாழ்த்துக் கூறுதல்’ என்பதன் பொருளை உங்களால் முழுமையாக கிரகிக்க முடிகிறதா? அகன்று விரிந்த பேரண்டத்தின் கோடியில், ‘அபயமளிக்கும்’ சுவனத் துக்கருகில், தன் அர்ஷின் மீதிருந்து உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவனின் முன்றலில் அமர்ந்து, ‘யா அல்லாஹ், உன்னை வாழ்த்திப் போற்றுகிறேன்!’ என்று கூறுவது எத்துணை பெறுமதி வாய்ந்தது என்பதை அறிவீர்களா?

தொழுகையில் முன்பு கடந்து வந்த அத்தனை படிநிலைகளும் தற்போது வந்தடைந்திருக்கும் இப்பெருங் கணத்தை வெல்வதற் காக உங்களைத் தயார்படுத்தும் கட்டங்களே. முடிவற்ற அண்ட அடுக்குகளின் அத்தனை தூரத்தையும் கடந்து, இத்தகு அசாதாரண நிலையை எட்டி, ‘அல்லாஹ்வை வாழ்த்திப் போற்றுதல்’ என்ற அசாதாரணப் பரிசைப் பெறுவதற்குத் தேவையான ஆன்மீக விசை யையும், சக்தியையும், தயார் நிலையையும் வழங்குகின்ற கட் டங்கள் அவை. எத்துணை மகத்தான நிலை இது!

இந்தக் கணத்தை அதற்கேயுரிய எல்லாப் பரிமாணங்களோடும் அனுபவிப்பீர்களாயின், எவ்வளவு உன்னதமான நிலை அது!

*அல்லாஹ்வை வாழ்த்திப் போற்றுவதாயும் அவனோடு சம்பா ஷிப்பதாயும் உண்மையாகவே உணருங்கள்; ஏனெனில் இப் போது நீங்கள் நேரடி அலைவரிசையில், எந்த ஏற்பாட்டாளரும் இன்றி, மாட்சிமையும் உயர்வும் மிக்க அவனுடன் தொடர்பில் இருக்கிறீர்கள்!*

*இந்தச் சந்திப்பின் பின்னால் பாரியதொரு வெகுமதி கிடைக்கா விட்டால் கூட (உண்மையில் அத்தகு வெகுமதி கிடைக்கத்தான் போகிறது என்பது வேறு விடயம்) 'சந்திப்பு' என்பதே தன்னளவில் ஒரு பரிசுதான். சந்திப்பின் சுவை யை உண்மையாகவே உணர் வீர்களாயின், அந்த இன்பத்திற்கு ஈடான இன்பமும் பரிசும் எதுவு மிருக்காது.*

*உண்மையில் 'அத்-தஹிய்யாத்' என்ற வாழ்த் துரையின் போது நாம் ஒற்றை வாழ்த்துரையுடன் அன்றி, நான்கு வேறுபட்ட மகத்தான வாழ்த்து களோடு நிற்கிறோம்.*

*முதலில் இதோ நாம் தனித்துவமானதும் இன்பகரமானதுமான வாழ்த்துரை ஒன்றுடன் நமது படைப்பாளனுக்கு முன்னால் நிற்கிறோம்:*

*''அத்-தஹிய்யாத்து லில்லாஹ்...'' (வாழ்த்துகள் அல்லாஹ் வுக்கே!)*

*பிறகு அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதான வாழ்த்துரையோடு நிற்கிறோம்:*

*''அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு...'' (நபியே உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் கிருபையும் அருளும் உண்டாவதாக!)*

*மூன்றாவதாக நமக்கு நாமே வாழ்த்துச் சொல்லுகிறோம்:*

*''அஸ்ஸலாமு அலைனா...'' (நம் மீது சாந்தி உண்டாகட்டும்!)*

*இறுதியாக, ''அல்லாஹ்வின் நல்லடியார்கள்'' அனைவர் மீதும் வாழ்த்துக் கூறி, வாழ்த்துரைகளின் புனித ஊர்வலத்தை நிறைவு செய்கிறோம்.*

இந்நான்கு வாழ்த்துகளுக்கும் இடையில் கூட பல 'பசுமை வெளிகள்' பரந்து கிடக்கின்றன. முன்னர் நாம் கூறியது போன்று, தொழுகையில் இத்தகைய வெளிகள் அதீத முக்கியத்துவம் கொண்ட மொழியியல் கூறாக உள்ளன. வசனங்களின் அல்லது வார்த்தைகளின் 'திறந்த நிலை' அமைப்புக்கு நிகரான பாத்தி ரத்தை இப்பசுமை வெளிகள் வகிக்கின்றன. நான்கு வாழ்த்து களிலும் இடம்பெற்றிருக்கும் செழுமையான வார்த்தைகளின் உச்சரிப்பு எடுக்கும் நீண்ட நேர இடைவெளிகள் அவற்றின் நுட்ப மான பொருள் வேறுபாடுகளை நிதானமாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றன.

உதாரணமாக, இவ்வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும் எவ்வித நேர இடைவெளியும் இன்றி ஒன்றையொன்று விரைவாகத் தொடரும் சந்த அமைப்பில் பின்வருமாறு இடம்பெற்றிருப்பதாக வைத்துக் கொள்வோம்:

'அத்-தஹிய்யாத்து லில்லாஹ்; அஸ்-ஸலாமு அலன் நபி; வ அலைனா; வ அலஸ் ஸாலிஹீன்...'

(அல்லாஹ்வுக்கு வாழ்த்துக்கள்; நபியின் மீதும், நம் மீதும், நன்மக்கள் மீதும் சாந்தி உண்டாகட்டும்...)

அல்லது இன்னும் விரைவான அமைப்பில் பின்வருமாறு அமைந்திருப்பதாக வைத்துக் கொள்வோம்:

'அத்-தஹிய்யாத்து லில்லாஹி வலிறஸூலிஹி வலனா வலிஸ்ஸாலிஹீன்...'

(அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும், நமக்கும், நல்லடி யார்களுக்கும் வாழ்த்துக்கள்!)

இந்த இரு வசன அமைப்புகளும் பொருள் அளவில் எதனை யும் இழந்து விடவில்லை என்பது தெளிவு. ஆயினும், அடிப் படையான வசன அமைப்பு கொண்டிருக்கின்ற பொருள் வீச்சை யும் பரிமாணங்களையும் இவற்றில் காண முடியாது.

இத்தகு சுருக்கமான வாக்கிய அமைப்பு தொழுகையாளிக்கு இந்த அற்புதமான நிலையின் சுவையையும் முக்கியத்துவத்தையும் மகத் துவத்தையும் உய்த்துணர போதிய அவகாசம் தராது; தன் மீது வாழ்த்துக் கூறும் தொழுகையாளிக்கு அல்லாஹ் உடனே மறு மொழி கூறுவது போன்ற உணர்வையும், அவனது அருள் மழை தன்மீது பொழிந்து கேசாதிபாதம் தழுவுகின்ற உணர்வையும் தொழுகையாளி அடைவதற்கான நேர அவகாசத்தையும் அது தராது. ஒரு விசுவாசி தொழுகையில் தனக்குக் கூறும் வாழ்த்து செழுமையானதாகவும், அலையலையாய் நீண்டு செல்வதாயும் அமைய வேண்டும் என அல்லாஹ் நாடியிருக்கிறான். இப் பிரார்த்தனையில் இடம்பெறும் ஒவ்வொரு வார்த்தையின் முடி வையும் 'ஒலி முற்றாக' (ஸுகூன்) அமைத்துக் கொள்வதன் மூலம் அந்த நீண்ட அவகாசம் தொழுகையாளிக்கு கிட்டுகிறது:

''அத்-தஹிய்யாத்து... லில்லாஹ்... வஸ்- ஸலவாத்... அத்-தய்யிபாத்... அஸ்-ஸாகியாத்... அல்-முபாறகாத்....''

ஒன்றை எண்ணிப் பாருங்கள்: உங்கள் இளைய மகனை வாழ்த் தும் அதே தொனியிலா உங்கள் சகோதரரையும் வாழ்த்துவீர்கள்? உங்கள் சகோதரரை வாழ்த்தும் அதே தொனியிலா மேலதிகாரியை வாழ்த்துவீர்கள்? மேலதிகாரியை வாழ்த்தும் அதே தொனியிலா அமைச் சரை வாழ்த்துவீர்கள்? அமைச்சரை வாழ்த்தும் அதே தொனியிலா மன்னரை அல்லது தேசத் தலைவரை வாழ்த்துவீர்கள்?

அப்படியாயின், 'அரசர்களுக்கெல்லாம் மேலான பேரரசனை... அண்ட சராசரங்களின் ரட்சகனை வாழ்த்தும் போது நமது தொனி எப்படி இருக்க வேண்டும்?' என 'அத்-தஹிய் யாத்' ஓத முற்படும் போது உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

அடுத்து வரும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதான வாழ்த் துக்கும் இது ஓரளவு பொருந்தும்:

''அஸ்-ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு...!''

*அல்லாஹ்வுக்கு மிக நேசத்துக்குரிய சிருஷ்டியும், நமக்கு மிக நேசத்திற்குரிய மனிதருமாகிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது 'ஸலாம்' கூறும்போது இரு வகையான இன்பங்கள் கிடைக்கின் றன. அந்த இன்பங்களை அனுபவித்துச் சுவைக்கும் அவகாசத்தை எடுத்துக் கொள்ளாமல் அப்பால் நகராதீர்கள்:*

*1. ரட்சகனின் முன்னால் இருப்பதான உணர்வுடன் அவனுக்கு வாழ்த்துக் கூறும் இன்பத்திலிருந்து வெளியேறிய மாத்திரத் திலேயே, இறைத்தூதரை வாழ்த்துகின்ற இன்பம்.*

*2. உங்களது வாழ்த்துக்கு அன்னார் பதிலளிக் கிறார்கள் என்றுண ரும் இன்பம். வாழ்த்துக்குப் பதிலளிப்பதற்காக அல்லாஹ் அன்னாருக்கு உயிர் கொடுத்து எழுப்புகிறான் என்ற ஆழ்ந்த நம்பிக்கை உங்களிடம் இருப்பது இங்கு அவசியம்.*

''எவரொருவர் என்மீது 'ஸலாம்' கூறினாலும், அவருக்குப் பதில் 'ஸலாம்' கூறுவதற்காக அல்லாஹ் எனக்கு உயிரளிக்கிறான்''.(1)

இதைவிட அதிசயமும் புதுமையும் இன்ப மும் யாதெனில், இறைத்தூதர் (ஸல்) இவ்வாறு உங்களுக்கு பதில் 'ஸலாம்' அல்லது 'ஸலவாத்' கூறும்போது அல்லாஹ்வும் அதில் பங்கெடுத்துக் கொள்கிறான் என்பதுதான். ஒன்றுக்கு மேற்பட்ட 'ஹதீஸ் குத்ஸீ' களில் இது நமக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது:

'வெள்ளிக் கிழமைகளில் என்மீது அதிகம் 'ஸலவாத்' கூறுங்கள்; ஏனெனில் ஜிப்ரீல் (அலை) சற்று முன்னர் என்னிடம் வந்து, அல்லாஹ் எனக்கு பின்வருமாறு கூறுவதாக அறிவித்தார்: பூமியில் ஒரு முஸ்லிம் உம்மீது -வெள்ளிக் கிழமையில்- ஒருமுறை ஸலவாத் கூறினால் அவர் மீது நானும் எனது வானவர்களும் பத்துத் தடவை ஸலவாத் கூறுவோம்''.(2)

---

1) அறிவிப்பவர்: அபூ ஹுறைறா. பதிவு செய்தோர்: இப்னு தைமியா- மஜ்மூஉல் ஃபதாவா; நவவீ.

2) அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக். 'ஸஹீஹ் அல் தர்ஙப்'இல் அல்பானீ இதனை 'ஹஸன்' தரத்திலானது என்கிறார்.

*என்ன அற்புதமான ஸலாம்.. என்ன அற்புதமான ஸலவாத்.. என்ன அற்புதமான பரிசு இது..!*

*அல்லாஹ் உங்கள் மீது கூறும் 'ஸலவாத்'தின் பெறுமதியை -எவ்வளவு கற்பனை செய்தாலும்- உங்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறதா? மட்டுமன்றி, அல்லாஹ்வின் கட்டளைப் படி கோடானு கோடி வானவர்களும் கூட உங்கள் மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். ஒரு தடவையல்ல; தொடர்ச்சியாக பத்துத் தடவைகள். தொழுகையின் 'அத்-தஹிய்யாத்' நிலையிலும் வெளியிலும் இறைத்தூதர் (ஸல்) மீது ஒவ்வொரு முறை வாழ்த்துக் கூறும்போதும், புனித வாழ்த்துகள் உங்கள் மீதும் இறங்கிக் கொண்டே இருக்கின்றன.*

## சிவப்பு விசை இலக்கம் 4:

### ***‘‘அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்’’***

### (நம் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாவதாக!)

*இது வெறும் வாழ்த்து அன்று; அல்லாஹ்வின் சன்னிதானத்தில் நுழைந்து அவனுக்கு வாழ்த்துக் கூறியதற்கும், சங்கையான அவனது தூதருக்கு வாழ்த்துக் கூறியதற்குமாக நீங்கள் பெறுகின்ற பெரும் பரிசுக்கான குறியீடு. தேசத் தலைவரை அல்லது மன்னரை தரிசிக்கச் செல்வோர் மாளிகையை விட்டு வெளியேறும் போது வாசலில் அவர்களுக்கு ராஜரீக அன்பளிப்பொன்று காத்திருக்கும். அரசரிடமிருந்து அல்லது ஆட்சியாளரிடமிருந்து வழங்கப்படுவது என்பதால் அது சாதாரண அன்பளிப்பாக அன்றி, அரச அந்தஸ்துக்குத் தகுமான பரிசாகவே இருக்கும்.*

*தலைவர்களையும் அரசர்களையும் பூமியையும் வானத்தையும் படைத்தவனை வாழ்த்த வந்த உங்களுக்கு அவன் தரும் வெகுமானம் எதுவாக இருக்க முடியும்? நீங்கள் கற்பனை செய்யக் கூடிய அனைத்தையும் விட மிகப் பிரமாண்டமானதாகவும், மகத்தானதாகவுமே அது இருக்க வேண்டும். ஆதமின் படைப்பு முதல், மறுமையில் மீண்டும் எழுப்பப்படும் வரை வானத்திலும்*

பூமியிலும் உள்ள அவனது நல்லடியார்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கோடானு கோடிப் பரிசுகள் உங்களுக்காகக் காத்திருக்கின் றன. ஏனெனில் ஒரு மனிதன் அல்லாஹ்வின் பிற அடியார்கள் மீது கூறும் ஒவ்வொரு ஸலாமுக்கும் பகரமாக நன்மைகள் உள்ளதாக இறைத்தூதர் (ஸல்) அவர்களே வாக்களித்துள்ளார்கள்:

''எவர் 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது சாந்தி உண்டா வதாக!) எனக் கூறுகிறாரோ அவருக்குப் பத்து நன்மை எழுதப் படுகிறது; எவர் அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹ்' (உங்கள் மீது சாந்தியும் அல்லாஹ்வின் கிருபையும் உண்டாவ தாக!) எனக் கூறுகிறாரோ அவருக்கு இருபது நன்மை எழுதப் படுகிறது; எவர் அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹி வபறகாதுஹூ' (உங்கள் மீது சாந்தியும், அல்லாஹ்வின் கிருபை யும், அருளும் உண்டாவதாக!) என்று கூறுகிறாரோ அவருக்கு முப்பது நன்மை எழுதப்படுகிறது''.(1)

தொழுகையில் இந்த இரட்டை வாழ்த்தை உச்சரிக்கும் போது உங்கள் மீது இரட்டைப் பரிசு இறங்குவதாய் உணருங்கள்:

1. 'அஸ்ஸலாமு அலைனா' (எங்கள் மீது சாந்தி உண்டாவதாக!) எனக் கூறும்போது எல்லையற்ற தெய்வீக சாந்தி உங்கள் மீதும் உங்கள் குடும்பத்தவர் மீதும் அன்புக்குரியவர்கள் மீதும் இறங்குவதாகவும், அல்லாஹ் தனது கருணையையும் அன்பை யும் அமைதி யையும் சாந்தியையும் உங்கள் மீதும் அவர்கள் மீதும் பொழிவதாகவும் பெறுகின்ற உணர்வு.
2. அல்லாஹ்வின் எண்ணற்ற நல்லடியார்கள் மீது நீங்கள் கூறும் ஸலாமுக்குரிய நன்மைகள் உங்கள் மீது அமைதியாகவும் சாந்தியாகவும் பொழிந்து மூழ்கடிப்பதான உணர்வு.

---

1) அறிவிப்பவர்: ஸுஹைல் பின் ஹனீஃப். இதனை அல்பானீ 'ஸஹீஹ் அல் தாஈப்' இல் 'ஸஹீஹ்' என்கிறார்.

*மறுபடியும் நினைவுபடுத்துகிறேன்: இங்கு நீங்கள் கூறுகின்ற ஸலாம் உங்களுக்கானது மட்டுமல்ல என்பதை மிக முக்கியமாக கவனத்தில் கொள்ளுங்கள்; ஏனெனில் அது 'அலைனா' (எங்கள் மீது) என பன்மை வடிவத்திலேயே வந்துள்ளது. உங்களுக்காக மட்டுமே ஸலாம் கூறிக் கொள்வதற்கும், சுற்றியிருக்கும் அனை வருக்குமாக ஸலாம் கூறுவதற்கும் இடையிலான வேறுபாடுதான் எவ்வளவு பெரியது! நேசத்துக் குரியவர்கள், நெருங்கிய உறவினர் கள், தூரத்து முஃமின்கள் முதலியோர் மீது மட்டுமன்றி, வானம், பூமி எங்குமுள்ள எண்ணற்ற இறையடியார்கள் மீதும் ஸலாம் கூறும் போது அந்த ஒவ்வொருவர் சார்பிலும் எண்ணற்ற பரிசுகள் உங்கள் மீது குவிந்து கொண்டே இருக்கும்.*

*இறுதியாக, உங்களது 'அத்-தஹிய்யாத்'தையும், 'ஷஹாதா'வை யும், 'இப்றாஹீமிய ஸலவாத்'தையும் ஓதும்போது கொடுப்ப வராக மட்டுமன்றி, எடுப்பவராகவும் இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; ஒவ்வொரு வார்த்தையை மொழிந்த பிறகும் அதற்குரிய கூலியைப் பெற்றுக் கொண்டீர்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்; ஒவ்வொரு வாக்கியத்தின் முடி விலும் நின்று நிதானித்து அப்பால் நகருங்கள்!*

*'அத்-தஹிய்யாத்து லில்லாஹ்...' (அல்லாஹ்வுக்கு வாழ்த்துக் கள்...) என்று கூறிய பிறகு சற்று நிதானித்து அதற்கான பதிலை மனதால் அனுபவியுங்கள்...!*

*'வஸ் ஸலவாத்...' என்று கூறிய பிறகு சற்று நிதானித்து அதற்கான பதிலை மனதால் அனுப வித்துணருங்கள்...*

*'அத் தய்யிபாத்' (தூய வாழ்த்துக்கள்) என்று கூறிய பிறகு நிதானித்து அதன் பதிலை அனுப வியுங்கள்..!*

*பிறகு 'அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்' (யா அல்லாஹ், முஹம்மதின் மீது ஸலவாத் அருள்வாயாக..!) என்று கூறி சற்றுத் தாமதியுங்கள்; பதிலையும் கூலியையும் நிச்சயப்படுத்திக் கொண்ட பிறகு அப்பால் நகருங்கள்..!*

*'வஅலா ஆலி முஹம்மத்...' (முஹம்மதின் குடும்பத்தவர் மீதும்...) என்று கூறிய பிறகு நிதானித்து, அதற்கான நற்கூலியையும் பதிலையும் உறுதி செய்து கொள்ளுங்கள்..!*

இப்படியே இறுதிவரை தொடருங்கள்..!

இப்போது சொல்லுங்கள்: இதற்குப் பிறகும் தொழுகைக்காக எழுந்து நிற்கும்போது, தோளில் கனத்துக் கொண்டிருக்கும் சுமையொன்றை இறக்கி வைக்கும் உணர்வுடன்தானா எழுந்து நிற்பீர்கள்? அல்லது உலகில் கிடைக்கக்கூடிய எல்லாப் பரிசுகளையும் உரிமை களையும் விட மிகப்பெரும் பரிசொன்றைப் பெற தயாராவதான உணர்வுடன் எழுந்து நிற்பீர்களா?

ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் புதிதாகப் பிறந்தது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்படவில்லையெனில், ஏராளமான நன்மைகளை இழந்து விட்டீர்கள் என்பதே அதன் அர்த்தம்!

## பிரார்த்தனைக்கான அமர்வு

பிரார்த்தனை என்பது தொழுகையின் எளிமையான வகைகளுள் ஒன்று. எனினும், அதற்கென்று தனியான விதிமுறைகள், தயாரிப்புகள், நேரங்கள், செயன்முறை நியமங்கள் என எதுவும் கிடையாது. எவ்வேளையிலும் எந்த இடத்திற்கும் இலகுவாக நகர்த்தவும் (Mobile) பயன்படுத்தவும் முடியுமான -கட்டுப்பாடுகளற்ற- தொழுகை வடிவம் அது. எந்த இடத்தில், எத்தகைய சூழ்நிலையில் உங்களுக்கு தேவை ஏற்படுகிறதோ அப்போது அதில் சங்கடம் எதுவுமின்றி நீங்கள் ஈடுபட முடியும்.

இவ்விடத்தில் நான் ஆங்கிலேயர்களின் மொழி வழக்கொன்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் தங்களது மொழியில் பிரார்த்தனை (துஆ) என்பதையும், தொழுகை (ஸலாத்) என்பதையும் வேறுபடுத்தாமல், Pray என்ற பதத்தையே இரண்டுக்கும் பயன்படுத்துகிறார்கள். பிரார்த்தனை என்பதும் அல்லாஹ்வை நோக்கிய உரையாடலாகவே இருப்பதால் அதுவும் ஒரு வகையில் தொழுகையாக கொள்ளத் தக்கதே என்பதை இந்த ஆங்கிலப் பிரயோகம் உணர்த்துகிறது.

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை நோக்கிப் பிரார்த்திக்கும் போது பயன்படுத்திய மொழியமைப்பு, சாதாரண பேச்சில் பயன்படுத்திய மொழியமைப்பிலிருந்து வேறுபட்டு நிற்பதை இந்த

வகையிலேயே நாம் புரிந்துகொள்ள வேண்டும். நபியவர்களது பிரார்த்தனையின் மொழி அன்னாரது சாதாரண மொழி நடையிலிருந்து அணியழகாலும், சந்தத்தினாலும், வசீகரத்தாலும், உணர்ச்சியாலும், தாக் கத்தினாலும் தனித்தன்மை பெற்று நிற்பதாகவே அறபு மொழிப் புலமையாளர்களும், தேர்ந்த திறனாய்வாளர்களும், அணியிலக்கண விற்பன்னர்களும் கருதுகின்றனர். அதேவேளை அன்னாரது சாதாரண மொழி வழக்கு கூட அறபு மொழியில் இதுவரை உரைத்த அனைவரது மொழிநடைகளை விடவும் அணியழகிலும் இலக்கிய நயத்திலும் மிகைத்ததாகவே உள்ளது என்பதையும் இங்கு நாம் உறுதியாக கூறிக் கொள்கிறோம். இதனை விட ஆச்சரியமான ஒன்றும் உள்ளது. 'ஹதீஸ் குத்ஸீ' எனப்படும் நபிமொழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியமைப்பு பிற நபிமொழிகளின் மொழியமைப்பிலிருந்து வேறுபட்டு நிற்கிறது என்பதுதான் அந்த ஆச்சர்யம். திறனாய்வுப் பரிச்சயம் கொண்ட எவராலும் இதனை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

நபியவர்களது பிரார்த்தனைகளின் மொழியிலும், உயிர்ப்பிலும், சந்தத்திலும் ஓர் ஆன்மீக விகசிப்பை அவதானிக்கிறோம். அவற்றை வடிவமைப்பதில் வானகமும் பங்கேற்றிருந்தது போலும்! 'ஹதீஸ் குத்ஸீ'களின் நிலையும் இதுதான். நபிகளார் இப்பிரார்த்தனைகளை வார்த்தைக்கு வார்த்தை கவனத்துடன் தோழர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றின் வசன வார்ப்பும் வார்த்தைகளும் எந்த மாற்றமுமின்றி பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தியுள்ளார்கள். ஒரு பிரார்த்தனையில் 'நபி' என்ற வார்த்தை வர வேண்டிய இடத்தில் 'றஸூல்' என்ற வார்த்தையை ஒரு தோழர் பயன்டுத்தியபோது அதனை நபிகளார் எப்படி திருத்தினார்கள் என்பதைக் கவனியுங்கள். *(இத்தனைக்கும் இவ்விரு பதங்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களையே சுட்டுகின் றன என்பது தெளிவு):*

*அல்-பறாஉ பின் ஆஸிப் அறிவிக்கிறார்: நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

''நீங்கள் படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்குச் செல் வது போன்று 'வுழூ' செய்து கொள்ளுங்கள். பிறகு உங்களது வலப் புறமாக ஒருக்களித்துப்படுத்த நிலையில் இப்படிக் கூறுங்கள்:

*'அல்லாஹும்ம இன்னீ அஸ்லம்து நஃப்ஸீ இலைக்க; வவஜ்ஜஹ்து வஜ்ஹீ இலைக்க; வ ஃபவ்வழ்து அம்ரீ இலைக்க; வ அல்ஜஃது ளஹ்ரீ இலைக்க; றக்பதன் வ றஹ்பதன் இலைக்க; லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க இல்லா இலைக்க; ஆமன்து பி கிதாபிகல்லதீ அன்ஸல்த வ பி நபிய்யிகல்லதீ அர்ஸல்த'.*

*(யா அல்லாஹ், உன்னிடம் என்னை ஒப்படைத்திருக்கிறேன்; என் முகத்தை உன் பக்கம் திருப்பியிருக்கிறேன்; என் விவகா ரங்களை உன் பொறுப்பில் விட்டிருக்கிறேன்; உன் பாதுகாப்பின் கீழ் தஞ்சம் புகுந்திருக்கிறேன்; உன் பால் கொண்ட ஆசையினா லும், உன் மீது கொண்ட அச்சத்தினாலுமே இப்படிச் செய்தேன். உன்னிடமிருந்து தப்பித்து அபயமும் பாதுகாப்பும் பெறக்கூடிய இடமும் நீ மட்டுமே. நீ இறக்கி வைத்த உனது வேதத்தையும், நீ அனுப்பி வைத்த உன் நபியையும் நான் விசுவாசம் கொண்டேன்.)*

இவ்வாறு உறங்கிய நீங்கள் அன்றிரவு மரணித்து விட்டால், எப்படி குற்றமற்ற (அல்- ஃபித்றா) நிலையில் இவ்வுலகிற்கு வந் தீர்களோ அதே நிலையில் மரணித்தவர்களாகவும் ஆவீர்கள். எனவே, இவ்வார்த்தைகளையே உங்கள் இறுதி வார்த்தைகளாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

அல்-பறாஉ தொடர்ந்து கூறுகிறார்: இவ்வார்த்தைகளை நபிய வர்களிடம் நான் திரும்பவும் கூறிக் காட்டிய வேளை, 'ஆமன்து பிகிதாபி கல்லதீ அன்ஸல்த...' என்ற இடத்தை அடைந்ததும், 'வ பிநபிய்யிக' என்பதற்குப் பதிலாக 'வ பிறஸூலிக' என மாற்றிக் கூறி விட்டேன். அப்போது அன்னார், ''இல்லை, 'வ நபிய்யிக் கல்லதீ அர்ஸல்த'' என திருத்தினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தோழர்களுக்கு அல்-குர்ஆனின் அத்தியாயங்களைக் கற்றுக் கொடுப்பது போன்று சில பிரார்த்த னைகளையும் எப்படிக் கற்றுக் கொடுத்தார்கள் என்பதை வேறு

அறிவிப்புகளும் எடுத்துக் காட்டுகின்றன. பிரார்த்தனையின் மொழி எவ்வித மாற்றமோ கூட்டலோ குறைப்போ இன்றி பேணப்பட வேண்டும் என்பதில் அன்னார் கொண்டிருந்த அக் கறையை இவை எடுத்துக் காட்டுகின்றன:

- *இப்னு அப்பாஸ் (றழி) அவர்களிடமிருந்து அறிவிக்கப் படுவ தாவது: பின்வரும் பிரார்த்தனையை அல்-குர்ஆனின் அத்தி யாய மொன்றை கற்றுக் கொடுப்பது போன்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்:*

*''கூறுங்கள்: அல்லாஹும்ம இன்னா நஊது*[(2)] *பிக மின் அதாபி ஜஹன்னம்; வ அஊது பிக மின் அதாபில் கப்ர்; வ அஊது பிக மின் ஃபித்னதில் மஸீஹ் அல் தஜ்ஜால், வ அஊது பிக மின் ஃபித்னதில் மஹ்யா வ மமாத்''.*

*(யா அல்லாஹ், நரக வேதனையிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறோம்; மண் ணறை வேதனையிலிருந்து உன்னிடம் பாது காவல் தேடுகிறேன்; தஜ்ஜாலின் சூழ்ச்சிகளி லிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்; வாழ்வு, மரணம் இரண்டினதும் துன்பத்திலி ருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.)*[(3)]

- *அப்துல்லாஹ் பின் அப்பாஸ் கூறுகிறார்: ''அல்-குர்ஆனின் அத்தியாயமொன்றை கற்றுத் தருவது போன்று இறைத்தூதர் (ஸல்) (தொழுகையின் இறுதி இருப்பில் ஓதப்படும்) 'தஷஹ்ஹுத்' ஐ எங்களுக்கு கற்றுத் தந்தார்கள்''.*[(4)] *அப்துல்லாஹ் பின் உமரின் அறிவிப்பில், ''அதில் ஓர் எழுத் தையேனும் கூட்டவோ குறைக்கவோ அன்னார் விரும்ப வில்லை'' எனவும் வந்துள்ளது.*

---

2) மற்றோர் அறிவிப்பில், 'இன்னீ அஊது' (நான் பாதுகாவல் தேடுகிறேன்) என வந்துள்ளது.

3) முஸ்லிம்

4) இப்னு மாஜா

# கையிருப்பும் கணக்கும்

தொழுகை முடித்து நாம் வெளியேறும் போது, பேனாவை எடுத்து சில கணக்குகளைப் போட்டுப் பார்த்திருக்கிறோமா? தொழுகையில் அல்லாஹ்வுடன் உரையாடியதாகவும், ஏதோ ஒரு தொடர்பாடல் நிகழ்ந்ததாகவும் உண்மையாகவே உணர்ந்த வினாடிகள் எத்தனை என்பதை எழுதிப் பார்த்திருக்கிறோமா? ஒரு முறையாவது... ஒரு கணப் பொழுதாவது... அரை வினாடி யாவது நமது உடலும் மனமும் சிலிர்த்ததா என கவனித்தி ருக்கிறோமா? அப்படிப் பார்த்தால்தான் இறைத்தூதர் (ஸல்) நமக்கு வழங்கியுள்ள அட்டவணைப் பிரகாரம் நமது தொழுகை யின் அறுவடை -ஒப்பீட்டளவிலான மனிதக் கணிப்பீட்டிலா வது- எத்தனை வினாடிகள் என்பதை அறிந்து கொள்ள முடியும்:

இறைத்தூதர் (ஸல்) கூறியதாக அம்மார் பின் யாஸிர் (றழி) அறிவிக்கிறார்:

‘‘ஒரு மனிதர் -தொழுகை முடித்து- வெளியேறும்போது அவரது தொழுகையின் பத்தி லொன்று, அல்லது ஒன்பதி லொன்று, அல்லது எட்டிலொன்று, அல்லது ஏழிலொன்று, அல்லது ஆறிலொன்று, அல்லது ஐந்திலொன்று, அல்லது நான்கி லொன்று, அல்லது மூன்றிலொன்று, அல்லது இரண்டிலொன்று

*என்றவாறாகத்தான் அவருக்கு நற்கூலி எழுதப்படுகிறது''.*[1]

எனவே தொழுகை முடித்து வெளியேறும் போது இந்தப் புள்ளி களில் ஒன்றோ அதிகமோ கிடைத்து விட்ட உணர்வை நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். முதல் 'றக்அத்'தில் உங்களுக்கு அது தவறி விட்டால், இரண்டாவதில்... மூன்றாவதில்... நான்காவதில் அடைய முயலுங்கள்; 'ஸுன்னத்' ஆன தொழுகையில் தவறி விட்டால் 'பர்ழு'த் தொழுகையில் முயலுங்கள்; ஃபஜ்ருத் தொழு கையில் தவறினால் ளுஹர், அஸர், மஃரிப், இஷா... தொழுகை களில் முயலுங்கள். அன்றைய நாள் கழியும் போது குறைந்தது ஒரு தொழுகையிலாவது நீங்கள் அழுதிருக்க வேண்டும்; அல்லது உள்ளம் நடுங்கியிருக்க வேண்டும்; அல்லது அல்லாஹ்வுடன் தொடர்பாடிய இன்பத்தையாவது உணர்ந்திருக்க வேண்டும். விசு வாசத்தின் மிகப் பலவீனமான படிநிலை இது. இன்னும் அதிக மாக உங்களுக்கு அத்தகைய நிலை சம்பவிக்குமாயின் எவ்வளவு நல்லது! மறுமை வாழ்வுக்கான சேமிப்புக்காக உலக வாழ்வில் நீங்கள் முதலீடு செய்த அழகிய செல்வமாகத்தானே அது இருக்கப் போகிறது!

சில பாரிய வணிக நிறுவனங்கள் வாடிக்கையாளர்களை ஊக்கு விக்கும் நோக்குடன் அடிக்கடி பல பெறுமதியான பரிசுத் திட்டங் களை அறிவிப்பதுண்டு. அவற்றின் விற்பனைக் களஞ்சியங்க ளுக்கு வருவோர் வெளியேறிச் செல்ல முன்னர் தங்களது முக வரியையும் தொலைபேசி எண்ணையும் பதிந்து தருமாறு ஒரு 'கூப்பனை' அவர்களுக்கு அவை வழங்குகின்றன. அவர்கள் ஏதாவது பரிசை வென்றால் அது பற்றித் தெரியப்படுத்துவதே இந்த ஏற்பாடு. நீங்கள் தொழுகையில் நுழையும் போது தெய்வீகக் களஞ்சியசாலை ஒன்றினுள் நுழைகிறீர்கள் (இது ஒப்பீடல்ல; அல்லாஹ் அனைத்து ஒப்பீடுகளை விட்டும் உயர்ந்தவன் என்பதை

1) பதிவு செய்தோர்: அபூ தாவூத்; நஸாஈ. இதனை அல்பானீ 'ஸஹீஹ்' என்கிறார்.

*மனங்கொள்க!) அங்கு பல ‘கூப்பன்’களை நிரப்புகிறீர்கள். ஒவ்வொரு கூப்பனுக்கும் தனித்தனியான பரிசுகள். வணிக நிலையங்களின் பரிசுகள். வணிக நிலையங்களின் பரிசுகளுக்கும் தெய்வீகக் களஞ்சியத்தின் பரிசுகளுக்கும் உள்ள பல வேறுபாடுகளுள் ஒன்று யாதெனில், தெய்வீக களஞ்சியசாலையில் அறிவிக்கப் பட்டுள்ள ஏராளமான பரிசுகளுள் ஒன்றைப் பெற ‘பிரேரிக்கப்படு பவராக’ நீங்கள் இருப்பதில்லை. மாறாக, அனைத்துப் பரிசுகளுமே நூறு சதவீதம் உங்களுக்குக் கிடைக்கும் உத்தரவாதம் அங்கு உள்ளது. அவற்றுக்குரிய ‘கூப்பன்’களை -கூடுதல் குறைத்தல் இன்றி- மிகச் சரியாக நீங்கள் நிரப்ப வேண்டும்; அவ்வளவுதான்!*

தொழுகைக்காக நீங்கள் நிற்கும் போது, ஏராளமான இலாப உத்தரவாதம் கொண்ட பாரிய முதலீட்டுத் திட்டமொன்றினுள் நுழைகிறீர்கள். அதேவேளை அதன் ஆரம்பச் செலவு மிகக் குறைவானது. பிரமாண்டமான இம்முத லீட்டுத் திட்டம் எந்த மூலதனத்தையும் வேண்டி நிற்பதில்லை. ‘ஸகாத்’ என்ற வணக்கத்தில் உங்கள் செல்வத்திலிருந்து குறைந்தபட்சம் இரண்டரை வீதமாவது வழங்க வேண்டியிருக்கும்; ஹஜ் வணக்கத்தில் பயணம் மற்றும் தங்கல் செலவுகளுக்காக கணிசமானதொரு தொகையை செலவிட வேண்டியிருக்கும்; நோன்பின் போது உணவு, பானம் உட்பட பல ஆகுமான செயல்களிலிருந்து தவிர்ந்திருப்பதுடன், ‘ஸதகதுல் ஃபித்ர்’ என்ற தர்மத்தையும் இறுதியில் கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால் தொழுகையைப் பொறுத்தவரை நீங்கள் செலவிடுவது ‘வுழூ’ செய்வதற்காகப் பயன்படுத்தும் தண்ணீரும் தொழுவதற்காகச் செலவிடும் நேரமும் மட்டும்தான். மேலதிக கட்டணங்களோ வரித் தொகைகளோ அங்கில்லை. ஆனால் அந்தத் தொழுகைக்குப் பகரமாக ராட்சத லாபங்கள் உங்கள் கணக்கில் உடனடியாக விழுகின்றன. மட்டுமன்றி, அவற்றுள் ஒரு பங்கு தொழுகையிலிருந்து வெளியேற முன்பே உங்கள் கைக்கு நேரடியாகக் கிடைத்தும் விடுகிறது: மன அமைதி, ஆரோக்கியம், சிந்தனைத் தெளிவு, மீண்டும் புதிதாகப் பிறந்ததான உணர்வு..!

வேறு சில பங்குகள் உறையில் இடப்பட்டு நேர்த்தியான பெட்டிகளில் உங்கள் உலக முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுகின் றன: காரிய சித்தி, கடாட்சம், பாதுகாப்பு, பல்வேறு பிரார்த்தனை களுக்கான அங்கீகாரம்..!

அல்லது உங்கள் மறுமை முகவரிக்கு அனுப்பி வைக்கப்படு கின்றன; பாவங்கள் அழிக்கப்படுவதோடு எண்ணற்ற நற்கூலிகள் உங்களுக்காக அங்கு வைப்புச் செய்யப்படுகின்றன.

இப்பேர்ப்பட்டதொரு திட்டம் அதன் லாப-நஷ்டக் கணக்கு களைப் பதிந்து கொள்வதற்கான புத்தகம் ஒன்றுக்கு தகுதி பெறாதா? இங்கு நஷ்டங்கள் என்பவை நமக்குத் தெரிந்த சாதா ரண பொருளிலான நஷ்டங்களன்று; மூலதனம் அழிவதால் ஏற் படும் நஷ்டத்தை இது குறிக்காது. மாறாக, மூலதனத்துடன் மேலும் சேர்க்க முடியுமான இலாபங்களின் அளவு குறைந்து விடுதல் என்ற நஷ்டத்தையே இது குறிக்கிறது. நமது தொழுகை நயவஞ்சகத் தனமானதாகவோ, ஏமாற்றாகவோ, முகஸ்துதியா கவோ அமையாதிருக்குமாயின் (அல்லாஹ் நம்மைக் காப்பா னாக!), நமது மூலதனத்துக்கு -மிக மோசமான நிலையில் கூட- எந்த நஷ்டமோ குறைவோ ஏற்பட்டு விடாது.

லாப-நஷ்டக் கணக்கு பற்றிய இப்புதிய கருத்தாக்கத்தின் அடிப் படையில், ஒவ்வொரு தொழுகையின் முடிவிலும் ஈட்ட முடிந்த லாபங்கள் பற்றிய சுமாரான கணிப்பீடொன்றை இப்போது உங்களால் மேற்கொள்ள முடிகிறதா? அவ்வாறே, உள்ளே சுழன்று கொண்டிருக்கும் சிந்தனைகளின் நெரிசலில் தொழுகையை விட்டு சில கணங்கள் அடிபட்டுச் சென்று விட்டதால் இழந்த லாபங்களையும் மதிப்பீடு செய்ய முடிகிறதா?

# தொழுகையில் கண்டெடுத்த வைரங்கள்

உங்கள் தொழுகையின் கணக்குகளை மீள்பார்வை செய்யும் போது ஏலவே நாம் விளக்கிய தொழுகையின் ஐந்து கோடுகளை மனதில் கொண்டு வர மறக்காதீர்கள். நேரம், நாவு, உடல், உள்ளம், இயக்கம் என்பனவே அந்த ஐந்து கோடுகள். தொழுகையில் நீங்கள் செலவிட்ட நிமிடங்களது எண்ணிக்கையின் ஒளியில் அந்த மீள் மதிப்பீட்டை மேற்கொள்ள வும் மறக்க வேண்டாம். அந்த வகையில், இரண்டு 'றக்அத்'களை இரண்டு அல்லது மூன்று நிமிடத்திற்குள் தொழுது முடித்திருப்பீர்களாயின், போய் திரும்ப வும் தொழுங்கள்; ஏனெனில் நீங்கள் தொழவேயில்லை.

அத்தகைய விரைவான தொழுகை நீங்கள் உச்சரிக்கும் வார்த்தை களுக்கு மட்டுமே போதுமானது. வார்த்தைகள் சுமந்திருக்கும் அர்த்தங்களை உள்வாங்கவும், ஏனைய நான்கு கோடுகளின் மீது அவை ஸ்தூல வடிவம் பெறவும் போதுமான நேர அவகாசம் அங்கு இல்லை.

ஒவ்வொரு முஸ்லிமிடமும் தன்னைத்தானே சுயமாக நிறுத்துப் பார்க்க முடியுமான ஒரு தராசு இருக்க வேண்டும்; ஒவ்வொரு தொழுகைக்கும் பின்னர் தான் பெற்ற அண்ணளவான மதிப்பெண் கள் எத்தனை என்பதை அதன் மூலமாக அவரே அளந்து தெரிந்து கொள்ள வேண்டும். அவரது தொழுகை எப்படி அமைந்திருந்தது

என்பதை அறிந்தவர் அவர் மட்டுமே. இந்த வகையில்தான் அதற்கான எளிய ஆரம்ப நிலையிலமைந்த மானிட அளவுகோலொன்றை இங்கே எனக்கும் உங்களுக்குமாகப் பரிந்துரை செய்கிறேன். ஒவ்வொரு தொழுகைக்கும் பிறகு அதன் அறுவடை என்ன என்பதை நமது மானிடக் கணிப்பீடுகளின் அடிப்படையில் மதிப்பிட்டுப் புரிந்துகொள்வதற்கு இந்த அளவு கோலை உதவியாகக் கொள்ளுமாறு எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். எவ்வாறாயினும், நமது தொழுகைகளின் இறுதி விளைவு என்ன என்பதை உண்மையாக அறிந்தவனும், உண்மையான தராசு கொண்டு மதிப்பீடு செய்பவனும் அல்லாஹ் மட்டுமே. யாவும் அறிந்தவனும், தேர்ச்சி மிக்கவனும், நுணுக்கமான விசாரணையாளனுமாகிய அவனை நோக்கி நாம் தொழுத தொழுகையின் அகப் பெறுமானத்தை உண்மையாய் அறிந்தவன் அவன் மட்டுமே. இந்த உண்மையை மனதில் நிறுத்தியவர்களாக, நமது மானிட அளவு கோலைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்:

1. தொழுகையின் முதல் 'தக்பீர்' சொல்லி இரு கைகளையும் உயர்த்தும் போது, பூமி சார்ந்த அனைத்தையும் பின்னால் உதறி விட்டு வேறோர் உயர்ந்த உலகினுள் நுழைவதாக உணர்ந்தேனா?

2. 'மிகப் பெரிய' ஒருவனுடன் இருக்கிறேன் என்ற வகையில், என் கவனம் சிதறாமலும், வாழ்வின் அற்பக் கவர்ச்சிகளின் பால் சிந்தனை திரும்பாமலும் 'அல்லாஹு அக்பர்' என்ற வாசகம் எத்தனை தடவை என்னை மீட்டெடுத்தது?

3. 'அர்-ரஹ்மான்' என்ற பதம் ('தற்போது அவனது கருணை என்மீது இறங்கிக் கொண்டிருக்கிறது' என்ற பொருளில்) தனது ஒளியால் செங்குத்தாக எத்தனை முறை என்னை ஆகர்ஷித்தது? 'அர்-ரஹீம்' என்ற பதம் ('ஆதியந்தமின்றி தனது கிருபையைத் தொடர்ச்சியாகப் பொழிபவன்' என்ற பொருளில்) தனது ஒளியால் கிடைநிலையாக எத்தனை முறை என்னை ஆகர்ஷித்தது? அந்த வகையில், எனது ஆன்மாவும்

*உடல் அவயவங்களும் எத்தனை தடவை பரிபூரண சுத்தி கரிப்புக்கு உள்ளாயின?*

4. *'அல்-ஃபாத்திஹா'வில் நான் ஓதிய (அல் ஹம்து லில்லாஹ் - றப்பில் ஆலமீன் - மாலிகி யவ்மித்தீன் - இய்யாக்க நஃபுது - என்பவை போன்ற) எத்தனை வாசகங்களை மனதால் பொரு ளுணர்ந்து ஓதினேன்? அல்லாஹ்வின் மாட்சிமையை முன்னிறுத்தி, எனக்குள்ளே ஏதோ ஒரு மாற்றம் நிகழ்வதான உணர்நிலை எத்தனை வாசகங்களை ஓதும் போது எனக்கு ஏற்பட்டது?*

5. *'அல்-ஃபாத்திஹா'விலோ அல்லது அதற்குப் பின்னால் ஓதிய வசனங்களிலோ எத்தனை வசனங்களுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, கூர்ந்து கவனித்து பொருளுணர்ந்தேன்?*

6. *'இஹ்தினஸ் ஸிறாதல் முஸ்தகீம்' (எங்களை நேர்வழியில் செலுத்துவாயாக!) என்ற வசனத்தை ஓதிய போது, கண்ணிய மான அந்தப் பிரார்த்தனைகளுக்குள் அடக்கும் வகையில் எனது குடும்பத்தவர், உறவினர், (முஸ்லிம்களிலும் முஸ் லிமல்லாதோரிலும் உள்ள) நண்பர்கள், (முஸ்லிம்களிலும் முஸ்லிமல்லாதோரிலும் உள்ள) எதிரிகள் முதலிய அனைவ ரையும் நினைவுபடுத்திக் கொண்டேனா? அவர்கள் தொடர் பான எனது இதய சுத்தியை உறுதிப்படுத்தியமைக்கும், அவர் களுக்கு நேர்வழி காட்டுமாறு பிரார்த்தித்தமைக்குமான பரிசு உடனடியாகவே என்மீது இறங்குகின்ற இன்பத்தை உணர்ந் தேனா?*

7. *ஒவ்வொரு முறையும் 'அல்லாஹு அக்பர்...' (அல்லாஹ்.. பெரியவன்) என்ற வாசகத்துக்குப் பின்னால், அல்லது 'றுகூஉ', 'ஸுஜூது' முதலிய நிலைகளில் கூறப்படும் துதி வாசகங்களுக் குப் பின்னால் உள்ள 'பசுமை வெளிகளை' மனதால் நிரப்பிக் கொள்ள எத்தனை முறை முயன்றேன்? அந்த ஒவ்வொரு இடைவெளியையும் பொருத்தமான சிந்தனையொன்றினால்*

நிரப்பிக் கொள்ள எத்தனை வினாடிகளை உண்மையாகவே எடுத்துக் கொண்டேன்?

8. பின்வரும் சிவப்பு விசைகளுள் எவற்றின் மின்னலை எனக்குள் ஆழமாக ஊடுரு வியதாக, அல்லது உள்ளத்தை நடுங்கச் செய்ததாக, அல்லது அழ வைத்ததாக உணர்ந்தேன்?

- ''இய்யாக்க நஸ்தஈன்'' (உன்னிடமே உதவி கேட்கிறோம்) என்ற விசை:

இந்த வாசகத்தை ஓதிய பிறகு அதில் நான் கேட்கும் உதவி எத்தகையது என்றுணர்வதற்கும், தன்னிலைப் பன்மையாக அமைந்த இப்பிரார்த் தனைக்குள் அடங்கும் மனிதர்களது பிம்பங் களை மனதில் நிறுத்துவதற்கும் எத்தனை வினாடிகளை வழங்கி னேன்?

- ''அத்-தஹிய்யாத்து லில்லாஹ்'' (வாழ்த்துகள் அல்லாஹ் வுக்கு!) என்ற விசை:

இந்த வாசகத்தின் ஒலி நீட்சியும் (அல்-மத்து), அதற்குப் பின்ன ரான தரிப்பும், பிறகு ''வஸ்-ஸலவாத்'' என்பதும், மூன்றாவதாக ''அத்- தய்யிபாத்'' என்பதும்... எத்தனை வினாடிகளை என்னிடம் எடுத்துக் கொண்டன? அல்லாஹ் வின் மாட்சிமை மிக்க சன்னி தானத்தில் நுழைந்து, அவன் கற்றுத் தந்த முறையிலேயே வாழ்த் துக் கூறி, அதன் சிலிர்ப்பை உணர்ந்து, பிறகு அவனது பதில் வாழ்த்தைப் பெறுவதான உணர்வினால் மீண்டும் சிலிர்ப் படைதல்... என்ற அந்த அற்புதமான காட்சியை என் ஆன்மா ஸ்பரிசிப்பதற்கு போதிய நேர அவகாசத்தை வழங்க முயன்றேனா?

- 'அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வறஹ்மதுல் லாஹி வ பறகா துஹுு' (நபியே, உங்கள் மீது சாந்தியும், அல்லாஹ்வின் கிருபையும் அருட் கடாட்சங்களும் உண்டா வதாக!) என்ற விசை:

இந்த வாழ்த்தைக் கூறுவதற்கு எவ்வளவு நேரம் எடுத்தேன்? குறிப்பாக 'அஸ்ஸலாமு', 'அல்லாஹ்', 'வ பறகாதுஹுு' முதலிய

*வார்த்தைகளிலுள்ள நெடிலெழுத்துகள் தரும் நேர இடைவெளியையும், வாழ்த்துக்குப் பின்னால் வரும் 'பசுமை வெளி'யையும் பயன்படுத்தி நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறும் சிலிர்ப்பையும் உற்சாகத்தையும், பிறகு அன் னாரது பதிலை நேரடியாகவே பெறுவதான உணர்வில் கிட்டும் உற்சாகத்தையும் எவ்வளவு தூரம் உணர்ந்தேன்?*

- *'அஸ்-ஸலாமு அலைனா வஅலா இபா தில்லாஹிஸ் ஸாலிஹீன்' (எங்கள் மீதும் அல்லாஹ்வின் பிற நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாவதாக!) என்ற விசை:*

*என் மீதும், சூழ வாழும் எனக்கு வேண்டிய மனிதர்கள் மீதும், பூமியிலும் வானத்திலும் வாழ்கின்ற கோடிக்கணக்கான இறையடியார்கள் மீதும் இந்த வாழ்த்தைக் கூறியபோது ஒரு வித தூய 'அமைதி' என் மீதும் அவர்கள் மீதும் பொழிவதாயும், அனைத்துத் தீங்குகளிலிருந்தும் எல்லோரது அகங்களையும் அது புனிதப் படுத்துவதாயும் உணர்ந்தேனா? நான் கூறிய ஒவ்வொரு வாழ்த்துக்கும் உடனடியாகவே வெகுமதி பெறுவதாயும், மற்றொரு அருள் மழை என் கேசாதி பாதம் பொழிந்து, எல்லா நொம்பலங்களையும் வலிகளையும் களைப்பையும் கவலையையும் கலக்கத்தையும் போக்கி விடுவதாயும் உணர்ந்தேனா?*

9. *ஃபர்ழுத் தொழுகையின் 'றக்அத்'துகளில் தவறிய அடைவுகளை 'ஸுன்னத்'தான தொழுகையின் 'றக்அத்'துகள் மூலமாகவும், மறுகிடையாகவும் ஈடுசெய்ய என்னால் முடிந்ததா?*

10. *இறுதியாக- பொறுமைக்கான இப் புதிய வகைப் பயிற்சியில் வெற்றி பெற்றேனா? பொறுமையின் புதிய கதிர்வீச்சு ஒன்று என்னுள் சேகரமாகியதாய் உணர்ந்தேனா? ஆன்மாவில், உடலில், பண்பில், நிதானத்தில், அறிவில் ஏதாவது மாற்றம் -அது எவ்வளவு அற்பமாகவேனும்- நிகழ்வதாக உணர்ந்தேனா?*

## தொழுகையில் தவற விட்ட வைரங்கள்

1. தொழுகையிலிருந்து கவனத்தைச் சிதறடிக்கும் அம்சங்களை வெற்றி கொள்வதற்கு 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ்... பெரியவன்) என்ற வாசகத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பை எத்தனை முறை தவற விட்டேன்?
2. பொருளுணர்ந்து கவனம் செலுத்தாமல் நான் அநாயாசமாக கடந்து சென்ற வசனங்கள் எத்தனை?
3. றுகூஇல் அல்லது ஸுஜூதில் ஓத வேண்டிய துதி வாசகங்களின் அல்லது வேறு வாசகங்களின் பொருளுணர்ந்து சுவைக்காம லும், இடையிடையே வரும் 'பசுமை வெளிகளை' உரிய முறையில் பயன்படுத்தாமலும் கடந்து சென்ற இடங்கள் எத்தனை?
4. ஸுஜூதுக்குச் செல்லும்போது உடையை அல்லது காற்சட் டையை அல்லது தலை முடியை ஒழுங்கு படுத்துவதற்கு எத்தனை முறை முயன்றேன்? கையை அல்லது உடலின் வேறோர் உறுப்பை எத்தனை தடவை அவசியமின்றி அசைத் தேன்?
5. தொழுகை விரிப்பில் அல்லது தொழு மிடத்தில் காணப்பட்ட கோடுகள் அல்லது நிறங்கள் அல்லது வேறு விடயங்கள்

*எத்தனை தடவை தொழுகையை விட்டு என் கவனத்தைத் திருப்பின?*

6. *உலக விவகாரங்களுள் ஏதாவதொன்று எத்தனை முறை தொழுகையை விட்டு என் கவனத்தை தூரக் கொண்டு சென்றது?*
7. *என்னுடன் மஸ்ஜிதிலோ அல்லது வேறு இடமொன்றிலோ இருப்போரது பேச்சு, அல்லது தொலைக்காட்சியின் அல்லது வானொலியின் அல்லது தொலைபேசியின் ஒலி, அல்லது கதவு தட்டும் ஓசை எத்தனை தடவை தொழுகையை விட்டு என் கவனத்தை சிதறடித்தது?*
8. *தொழுகையின் நேரம், நாவு, உடல், உள்ளம், இயக்கம் ஆகிய ஐந்து கோடுகளுள் எதனை சரியாகக் கையாளாமல் தவற விட்டேன்?*
9. *தொழுகையில் என் ரட்சகனுடன் சம்பாஷித்தவற்றுக்கு முரணாக பின்னர் செயற்படாமல் தடுக்கக்கூடிய பலம் எனக்கு வந்ததா?*
10. *திடவுறுதி, நிதானம், பொறுமை என்பவை தொடர்பாக தொழுகை தந்த 'பாடநெறி' யில் சித்தியடைந்தேனா? அல்லது தொழுகையில் எப்படி நுழைந்தேனோ அப்படியே வெளியேறினேனா?*

*இறுதியாக- அன்றைய நாளின் முடிவில் படுக்கையில் சாய்ந்து கொண்டு உறக்கத்துக்கு முன்னரான பிரார்த்தனைகளை ஓதிக் கொண்டே அன்றைய எல்லாத் தொழுகைகளிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களை விரைவாக மீள்பார்வை செய்ய ஒரு நிமிடம் எடுத்துக் கொள்ளுங்கள். குறிப்பாக சிவப்பு விசைகளுடன் தொடர்பு பட்ட அம்சங்களை கவனத்தில் கொள்ளுங்கள். அன்றையப் பெறு பேறையும் அதற்கு முந்திய தினப் பெறுபேறையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்போதுதான் உங்கள் சேமிப்பு அதிகரித் திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என அறிந்து கொள்ள முடியும். குறைந்திருந்தால் மறுநாள் அதனை ஈடுசெய்ய முயற்சிக்கலாம்.*

இவ்வாறே வார முடிவிலும் மொத்தமான மதிப்பெண் ஒன்றை உங்களுக்கு நீங்களே வழங்கிக் கொள்ளுங்கள். பிறகு அதற்கு முந்திய வாரத்தின் மதிப்பெண்ணுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்படிப் பார்க்கும் போதுதான் உங்களது முதலீட்டுக்கான இலாபம் தொடர்ந்து வளர்ந்து செல்கிறதா என்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள முடியும்.

# வாழ்வே தொழுகையாகட்டும்!

*இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வானகத்துக்கு அழைக்கப்பட்டு தொழுகை மீதான கட்டளை வழங்கப்பட்டதை விபரிக்கின்ற நபிமொழி பற்றி அடிக்கடி நான் சிந்திப்பதுண்டு. ஆரம்பமாக ஐம்பது தொழுகைகள் கடமையாக்கப்பட்டதாகவும், நபியவர்கள் திரும்பத் திரும்ப தமது ரட்சகனிடம் கேட்டு அதன் எண்ணிக் கையை ஐந்தாகக் குறைத்துக் கொண்டதாகவும் அது நமக்குக் கூறுகிறது. அந்த ஹதீஸ் என் நினைவுப் பரப்பைக் கடந்து செல் லும் போதெல்லாம் இப்படி நான் கேட்பதுண்டு (என்னைப் போலவே உங்களுக்கும் இந்தக் கேள்வி பலமுறை எழுந்திருக்கும்):*

*''அந்தோ! ஒரு நாளைக்கு ஐம்பது தொழு கைகளா? எப்படி? அத்தகு நிலையில், தொழுகையைத் தவிர வேறெதற்கும் நம்மிடம் நேரம் இருந்திருக்குமா? உண்பதும், பருகுவதும், தூங்குவதும், விழிப்பதும், வாசிப்பதும், எழுதுவதும், பேசுவதும், கற்பதும், உழைப்பதும், கட்டியெழுப்புவதும், பூமியை வளப்படுத்துவதும், வாழ்வை அனுபவிப்பதும், உறவினர்களையும் நண்பர்களையும் தரிசிப்பதும் எப்படி?*

*ஆயினும், தொழுகையின் உண்மை நிலையையும், உள்ளடக் கத்தையும், உள்ளத்தோடும் வாழ்வோடும் அது கொண்டிருக்கும் நெருங்கிய தொடர்பையும், தொழுகையாளி அதிலிருந்து*

வெளியேறும் போது பெறுகின்ற தாக்கத்தையும் சரியாகப் புரிந்து கொண்ட போது தொழுகை தான் வாழ்க்கை என்பதைப் புரிந்து கொண் டேன்; வாழ்வின் அனைத்து உட்பிரிவுகளும் பல்வேறு பட்ட தொழுகை வடிவங்களே என் பதையும் புரிந்து கொண்டேன்.

தூக்கத்திலிருந்து விழித்து, தூக்கம் என்ற சிறு மரணத்தின் பிறகு இன்னும் நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்பதைக் கண்டு கொள்ளும் போது, அந்த வாழ்வை மீண்டும் பரிசளித்தவனுக்கு நன்றி செலுத்துகிறீர்கள். அது உங்களுக்கு தொழுகை ஆகிறது!

உங்கள் குழந்தைகளின் முகங்களை அல்லது பிற குழந்தை களின் முகங்களைப் பார்க்கிறீர்கள். அவர்களது வளர்ச்சி, உருவ மாற்றங்கள், நடத்தைக் கோலங்கள், தினமும் புதிய ஆற்றல்களை யும் சொற்களையும் வாக்கியங்களையும் அவர்கள் கற்றுக்கொள் ளும் பாங்கு என்பதையெல்லாம் கண்டு பிரமித்துப் போகிறீர்கள். அதுவும் தொழுகைதான்!

குடும்பத்தவரை நன்மையை நோக்கியும் அல்லாஹ்வை நோக்கி யும் அறிவாலும் அழகிய உபதேசத்தாலும் அழைக்கிறீர்கள். அவர் கள் ஏற்றாலும் மறுத்தாலும் உங்கள் செயல் ஒரு தொழுகையே!

சகோதரர் அல்லது நண்பர் அல்லது அயலவர் உங்களுக்குத் தீமை செய்த போதும் அவரை உண்மையாகவும் மனப்பூர்வ மாகவும் மன்னிக் கிறீர்கள்; தவறிழைத்தவர் நீங்கள்தான் என்பது போல் மன்னிப்பும் கேட்கிறீர்கள். அப்போதும் தொழுகையில் தான் இருக்கிறீர்கள்!

ஒருவர் உங்களைத் திட்டுவதை காதுகளால் கேட்டும் அவருக் குப் பதிலளிக்காமல் அல் லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தி ருக்கிறீர்கள். அதுவும் ஒரு தொழுகைதான்!

நீங்கள் அமர்ந்திருக்கும் சபையொன்றில் சகோதரர் ஒருவரது ‘இறந்த மாமிசம் புசிக்கப்படுவதை’ காண்கிறீர்கள். அவருக்காகப் பரிந்து பேசவோ பேச்சின் போக்கை மாற்றவோ உங்களால்

முடியாது எனக் கண்டதும் அங்கிருந்து வெளியேறுகிறீர்கள். அதுவும் தொழுகை தான்!

இஸ்லாத்தின் கருணை, இஸ்லாத்தின் விட்டுக் கொடுப்பு, இஸ்லாத்தின் மென்மை, இஸ்லாத்தின் அன்பு, இஸ்லாத்தின் நாகரிகம், இஸ்லாத்தின் நற்பண்புகள், இஸ்லாத்தின் புன்னகை... என்பவற்றை முஸ்லிமல்லாதோருக்கு எடுத்துக் காட்டுகிறீர்கள். அப்போதும் நீங்கள் தொழுகையிலேயே இருக்கிறீர்கள்!

நீங்கள் வாழ்வது முஸ்லிமல்லாத நாடாக இருந்த போதும் அதன் ஒழுங்குகளைப் பேணி, அது வழங்கும் உபகாரங்களுக்கு நன்றி செலுத்தி, அதனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு செல்வம், வரி, பண்பாடு ஆகிய எல்லா வகையிலும் நேர்மை யாக நடந்துகொள்ளும் போதும் நீங்கள் தொழுகையில்தான் இருக்கிறீர்கள்!

நாலாபுறமும் சூழ்ந்து கொண்ட தீமைகளை கையினாலோ நாவினாலோ மாற்றியமைக்கச் சக்தியற்ற நிலையில் உள்ளத்தால் வெறுக்கி றீர்களாயின், அப்போதும் தொழுகையில்தான் இருக்கி றீர்கள்!

குடும்பத்தவர்களையும் சுற்றத்தாரையும் சந்தோஷப்படுத்த முயற்சிக்கும் போது -அந்த முயற்சியில் நீங்கள் வென்றாலும் தோற்றாலும்- அது தொழுகையே!

எவ்வளவுதான் ஷெய்த்தான் உங்களை சலனப்படுத்த முயன்ற போதும், அல்லாஹ்வின் ஏற்பாட்டில் முழு நம்பிக்கை வைத்து, அவன் நல்லதையே நாடுவான் என எண்ணும் போது, நீங்கள் தொழுது கொண்டுதான் இருக்கிறீர்கள்!

சுகவாழ்விலும் சோதனையிலும் ஒன்று போலவே அல்லாஹ் வைப் புகழ்வீர்களாயின், அதுவும் தொழுகைதான்!

சர்வ திக்கிலும் உலகக் கவர்ச்சிகளால் சூழப்பட்டிருக்கும் போது பார்வையை தாழ்த்திக் கொள்வீர்களாயின், அதுவும் தொழுகை தான்!

நோய், வறுமை, அனர்த்தம், வாழ்வியல் துன்பங்கள் முதலிய வற்றில் பொறுமையைக் கடைப்பிடிக்கும் போதும் நீங்கள் தொழுகையில்தான் இருக்கிறீர்கள்!

குறித்த ஒருவரை ரத்தம் சிந்த வைப்பது ஆகுமாகுமா என்பதில் மயிரிழை அளவு ஐயம் தோன்றினாலும் அதனை தவிர்த்துக் கொள்வீர்களாயின், அப்போதும் தொழுகையில்தான் இருக்கி றீர்கள்!

பிற நாடொன்றில் வாழும் முஸ்லிம்களது துன்பங்களிலும் வேதனைகளிலும் சோகங்களிலும் -வெறும் குரலளவில் அல்லது உணர் வளவில் அல்லது பிரார்த்தனை அளவிலாவது- பங்கு கொள்ளும் போதும் நீங்கள் தொழுகையில்தான் இருக்கிறீர்கள்!

நோயாளியை சுகம் விசாரிக்கச் செல்லும் போதும் நீங்கள் இருப்பது தொழுகையில்தான்; இத்தகைய தொழுகைக்காக அல் லவா நபிகளார் 'வுழூ' செய்து கொள்ளச் சொன்னார்கள்!

நீண்ட உழைப்பொன்றின் பிறகு உடலுக்கு ஓய்வு கொடுத்து ஒரு புதிய நாளின் ஆக்கப் பணிக்கு தயாராகும் வகையில் தூங்கச் செல்லும் போதும் நீங்கள் தொழுகையில்தான் இருக்கிறீர்கள்; இத்தகைய தொழுகைக்கும் அல்லவா நபிகளார் 'வுழூ' செய்து கொள்ளும்படி உப தேசித்தார்கள்?

கடைசியாக- உறங்க முன்னர் அன்றைய நன்மைகளின் லாப - நஷ்டக் கணக்குப் பார்க்கும் போதும் நீங்கள் தொழுகையில்தான் இருக்கி றீர்கள்.

உண்மையாகவே ஒரு தொழுகையாளியின் கண்களால் வாழ் வைப் பார்த்து, தொழுகையாளி தன் தொழுகையின் வாசகங் ளோடு உறவாடுவது போன்று வாழ்வின் பாகங்களோடு உறவாடு வீர்களாயின், உங்கள் வாழ்வு முழுவதும் ஒரு தொழுகைதான்.

எனவே வாழ்வின் ஒவ்வொரு கோணத்திலும் திருப்பத்திலும் விரவிக் கிடக்கும் வாய்ப்புகளை வீணடித்து விடாதீர்கள். ஒன்றில்

அவை படைப்பாளனின் மாட்சிமையை உச்சரிக்கும் வார்த்தைகளாக இருக்கும்; அல்லது அவனது பேராற்றல் குறித்த துதியாக இருக்கும்; அல்லது அவனது கடாட்சம் குறித்த புகழாக இருக்கும்; அல்லது அவனது அருட்கொடைகளை அறிமுகப்படுத்துவதாய் இருக்கும்; அல்லது அடியார்கள் எப் போதும் அவனை நோக்கியே இருக்க வேண்டும் என்பதையும், அவர்கள் -வுழூ செய்யாத நிலையிலும்- தொடர்ச்சியான தொழுகையில்தான் இருக்கிறார்கள் என்பதையும் நினைவூட்டுவதாய் இருக்கும்.

ஒரு மனிதர் உங்களுக்குத் தீங்கிழைத்து விட்டால் கோபப் படாதீர்கள்; அவர் மீது காழ்ப்பு கொள்ளாதீர்கள். மாறாக இப்படிக் கூறி அதனை தொழுகையாக, துதியாக ஆக்கிக் கொள்ளுங்கள்: ‘ஸுப்ஹானல்லாஹ்! அந்த மனிதரும் நானும் அல்லாஹ்வின் படைப்புகளா? வடிவத்திலும், இயல்பிலும், பண்பிலும் வேறுபட்ட கோடானுகோடி மானிடச் சித்திரங்களை வரைந்த படைப் பாளனின் தூரிகை எத்தனை அற்புதமானது?’

நீங்கள் சந்திக்கின்ற அல்லது கேட்கின்ற அல்லது பார்க்கின்ற அனைத்தையும் -உங்களால் அவற்றை சரியாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும்- அல்லாஹ்வைத் துதிக்கும் சந்தர்ப்பங்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட ஒரு காட்சியை அல்லது படைப்பை அல்லது பண்பை எப்படி நாம் இகழ்ந்துரைக்க முடியும்? கண்ணைப் பறிக்கும் மின்னலும், உள்ளத்தைக் கலங்க வைக்கும் இடியும், இயற்கை வெளிப்படுத் தும் சீற்றமும் வன்மமும் பயங்கரங்களும் கூட அல்லாஹ்விடம் நம்மை மேலும் நெருங்கச் செய்யும் துதி வாசகங்களை உச்சரிப்ப தற்கான சந்தர்ப்பங்களாகவே அமைய வேண்டும்.

உங்களது அசைவு, அமைதி, எழுதல், அமர்தல், உண்ணல், பருகல், உழைப்பு, செலவு, கேள்வி, பார்வை, பேச்சு, எண்ணம், சிந்தனை முதலிய அனைத்திலும், சதாவும் அல்லாஹ்வைப் போற்றித் துதித்துத் தொழுது கொண்டிருக்கின்ற இப்பிரபஞ்சத் தின் பாகமாக இருங்கள். உங்கள் வாழ்வு முழுவதும் தொழுகை

தான். அந்த வாழ்வை வழிநடாத்தும் நியமங்களாக பின்வரும் பொன்விதிகளை ஆக்கிக் கொள்ளுங்கள்:

- உலக வாழ்வைச் சீர்செய்து கொள்ளும் நோக்கில் வீட்டுக்கு வெளியே எடுத்து வைக்கும் எந்த எட்டின் போதும், மறுமை வாழ்வைச் சீர்செய்வதற்கான எட்டொன்றையும் மனதால் எடுத்து வையுங்கள்.
- ஒவ்வொரு மணித் துளியையும் உங்களுக்கு எஞ்சியிருக்கும் ஆயுள் அவ்வளவுதான் என எண்ணிச் செலவிடுங்கள்.
- ‘வுழூ’வில் அவயவங்களின் வெளிப்புறத்தைச் சுத்தம் செய்யும் அதேவேளை அகமிய அழுக்குகளையும் கழுவுங்கள்.
- தொழுகையின் ஒவ்வொரு வார்த்தையை உச்சரிக்கும் போதும், தொழுகைக்குப் பின்னரான உங்கள் செயற்பாடு அதனை உண் மைப்படுத்த வேண்டும் என்ற உறுதியோடு உச்சரியுங்கள்.
- தொழுகையில் சிரசு தாழ்த்தும் ஒவ்வொரு முறைக்கும் சமாந் தரமாக அன்றாட வாழ்வில் பணிவு கொள்ளுங்கள்.
- மஸ்ஜிதிலிருந்து வெளியேறும் போது சற்று முன்னர் நுழைந்த அதே நபராக வெளியேறாதீர்கள்.
- றமழான் மாதத்திற்கு விடை கொடுக்கும் போது அதனுடன் சேர்த்து ஒரு பாவத்துக்கும் விடை கொடுங்கள்; ஒரு வணக் கத்தை வரவு வைத்துக் கொள்ளுங்கள்.
- வலக் கரத்தால் நன்மையொன்றை வழங்கும் அதேவேளை, இடக் கரத்தால் தீமையொன்றையும் உங்களை விட்டு தடுத்துக் கொள்ளுங்கள்.
- ஈகைத் திருநாளில் ‘குர்பானி’ அறுத்து சுவனத்தை நெருங்க முற்படும் வேளையில், உங்களை நரகத்துக்கு நெருக்கமாக்கக் கூடிய பாவமொன்றையும் ‘குர்பானி’ கொடுங்கள்.
- பணத்தின் ஒவ்வொரு சதத்தை செலவிடும் போதும், குளிரி

லிருந்து அல்லது நோயிலிருந்து அல்லது பசியிலிருந்து தற்காத்துக் கொள்ள வசதியற்று மாண்டு போனவர்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

- கோப்பையின் அரைவாசிப் பானத்தையே அருந்தப் போகி றோம் என்று தெரிந்த நிலையிலும், விளிம்பு வரை நிரப்பிக் கொள்ளாதீர்கள்.
- ஒவ்வொரு சொட்டு நீரைப் பயன்படுத்தும் போதும், தாகத்தி னால் தினமும் மடிபவர்களை நினையுங்கள்.
- ஒவ்வொரு உணவுக் கவளத்தை வாயில் வைக்கும் போதும், அது கிடைக்காமல் இறந்தவர்களை நினையுங்கள்.
- உணவு மேஜையில் சிந்தும் பருக்கைகளை வீசும் பொழுது களில், அந்த மேஜையிலுள்ள எதுவும் உங்களுக்குக் கிடைக் காமல் தடுக்க அல்லாஹ் ஆற்றல் கொண்டவன் என்பதை மறந்து விடாதீர்கள்.
- உலகில் நீங்கள் புசிக்கும் எந்தக் கனியும் சுவனக் கனிகளின் இன்பத்தை நோக்கி உங்ளுக்கு ஆசை காட்ட வேண்டும்.
- உழைத்துச் செலவிடுதை விட தர்மம் செய்து தக்க வைத்துக் கொள்வதை இன்பமாக உணருங்கள்.
- பொருத்தமான காலணி கிடைக்கவில்லை என்று கோபம் கொள்ளாதீர்கள்; அதனை அணிவதற்கு கால்களே இல்லாத மனிதர் களும் இருக்கிறார்கள்.
- வீட்டிலுள்ள ஓர் உபகரணம் செயலிழந்ததாக சலித்துக் கொள் ளாதீர்கள்; வீடே அற்றவர்களும் உலகில் வாழ்கிறார்கள்.
- உணவில் உப்பைத் தூவிக் கொள்வது போன்று, வார்த்தை களில் இனிப்பைத் தூவுங்கள்.
- ஒரு மனிதரைப் பற்றி மோசமாகப் பேசும் போது, உங்களைப் பற்றியும் அதே போல் பிறர் பேசலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- *பெற்றோருடன் கடின வார்த்தை பேச முற்படும் வேளையில், அதே போன்ற வார்த்தையை நீங்களும் உங்கள் பிள்ளைகளிடமிருந்து கேட்க நேரிடும் என்பதை மறக்காதீர்கள்.*
- *உங்களுக்குக் கீழிருப்பவர்களை இழிவுபடுத்தும் போது, உங்களை இழிவுபடுத்த அல்லாஹ் அதிக ஆற்றல் கொண்டவன் என்பதை நினைவில் இருத்துங்கள்.*
- *செய்த தீமைக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்க முன், உங்களுக்குத் தீது செய்தவர்களை மன்னித்து விடுங்கள்.*
- *இதயத்தின் சாளரமொன்றினூடாக பிறர் மீதான சிறு வெறுப்பு நுழைந்தாலும், மற் றொரு சாளரமொன்றினூடாக அதிக அன்பு நுழைய இடமளியுங்கள்.*
- *நீங்கள் நேசிப்பவர்களுக்காக பிரார்த்திக்க முன்னர், உங்களது நேசம் அல்லது அவர்களது நேசம் உண்மையானதா என்ற சந்தேக நிலையில் இருப்போருக்காகப் பிரார்த்தி யுங்கள்.*
- *நீண்ட பொறுமையை கஷ்டமாக எண்ணாதீர்கள்; மகத்தான நற்கூலி காத்திருப்பதாகவும் நிவாரணம் அருகிலிருப்பதாகவும் நம்பு வதில் இன்பம் காணுங்கள்.*

*கடைசியாக- சங்கை மிகு நபிகளார் கூறிய இந்த உபதேசத்தை செயற்படுத்த மறக்காதீர்கள்:*

*‘‘அல்லாஹ்வை முன்னால் காண்பதான உணர்வுடன் அவனை வணங்குங்கள்; மரணித்து விட்டோருள் ஒருவராக உங்களை எண்ணிக் கொள்ளுங்கள்; ஒவ்வொரு கல்லுக்கருகிலும் மரத்துக் கருகிலும் அல்லாஹ்வை நினைவு கூருங்கள்; ஒரு தீமையைச் செய்து விட்டால் அதனை ஒட்டியதாக நன்மையொன்றையும் செய் யுங்கள்; ரகசியமான பாவத்துக்கு ரகசியமாக நன்மை செய்யுங்கள்; பகிரங்கமான பாவத்துக்கு பகிரங்கமான நன்மை செய்யுங்கள்’’.*[1]

---

1) அறிவிப்பாளர்: முஆத் பின் ஜபல். ‘ஸஹீஹ் அல்-தர்ஈப்’ இல் அல்பானீ இதனை ‘ஸஹீஹ்’ என்கிறார்.

ஆக, முழு வாழ்வும் தொழுகைதான் என்பதை ஒவ்வொரு சுவாசத்தின் போதும் நினைவில் கொள்ளுங்கள். வாழ்வின் எல்லா நிலையிலும் -தொழுகைக்குத் தயாராகும் ஒருவரது உடற் சுத்தம் போன்று- மனச்சுத்தம் பேணுங்கள். ஆன்மாவை நிர்மல மாய் வைத்திருங்கள். நாடி நரம்புகளில் ஓடும் ரத்தமும் உடலின் ஒவ்வொரு 'ஸெல்'லும் தசையும் என்புகளும் தூய்மையாக அல் லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வகையில் பார்த்துக் கொள்ளுங்கள்.

தொழுகையை சரியாக நிர்வகித்தல் என்பது உங்கள் வாழ் வையே நிர்வகிப்பதாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மறுமை வாழ்வை உத்தரவாதப் படுத்திக் கொள்வதற்காக இஸ் லாம் உங்களுக்குத் தனது முதல் தூணைப் பரிசாகத் தந்தது; உலகம், மறுமை ஆகிய இரண்டையும் உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்காக இரண்டாவது தூணைத் தந்திருக்கிறது.

இந்நூலில் உங்களுக்கு நான் தர விரும்பியது சில சிறிய சாவிகள் மட்டுமே. அவற்றைக் கொண்டு உங்கள் சிந்தனைக் கருவூலங் களைத் திறந்து கொள்ளுங்கள்; அல்லாஹ்வுடனான உங்களது மனோரதிய உலகில் சஞ்சரியுங்கள்; அல்லாஹ்வின் எண்ணிறந்த படைப்புக் கடலில் மூழ்கி கண்டுபிடிப்புகளை நிகழ்த்துங்கள்; அந்த அனைத்திலிருந்தும் உங்கள் தொழுகையையும் வாழ்வை யும் நிர்வகிக்கக் கூடிய பிரத்தியேக நூலொன்றை நீங்களாகவே தயாரித்துக் கொள்ளக் கூடும்!

ரட்சகா..!

உன்னிடம் மன்னிப்புக் கேட்ட பிறகும் அதே பாவத்தில் ஈடுபட்டதற்காய் மீண்டும் மன் னிப்புக் கேட்கிறேன்..!

நான் தந்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றாது விட்டதற்காய் உன் மன்னிப்பை இறைஞ்சுகிறேன்..!

உனது அருட்கொடைகளால் பலம்பெற்று உனக்கே மாறு செய்ததற்காய் பாவமீட்சி கேட்கிறேன்..!

உன் திருமுகத்தை நாடி நான் செய்த நற் செயல்களை களங்கப் படுத்தும் வேறு நோக் கங்களிலிருந்து என்னை கடைத்தேற்றக் கேட்கிறேன்..!

★ ★ ★




கைத்தொழில், வியாபார, விவசாய, குடியியல் துறைகள் சார்ந்த திட்டங்களை முறையாக நிர்வகிப்பதற்கும், வாழ்வுக்குப் பயன் தரக்கூடிய அம்சங்களை முதலீடு செய்வதற்குமான மிகச் சிறந்த வழிமுறைகள் எவை என ஆய்வு செய் கின்ற எத்தனையோ துறைகளும் பாடங்களும் இன்று நமது பொதுவாழ்விலும் பல்கலைக்கழக வட்டங்களிலும் நிறைந்திருக்கின்றன.

ஆனால் இந்த அனைத்துத் திட்டங்களையும் விட சிறந்ததும், பயன்மிக்கதும் நீண்டு நிலைக்கக் கூடியதும், பெறுபேற்று உத்தர வாதம் கொண்டதும், இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையளிக்கக் கூடியதுமான ஒரு துறை உள்ளது. அதுதான் 'வணக்க வழிபாடு களை நிர்வகித்தல்' என்ற துறை. பாடசாலைகளிலோ, கலாசாலை களிலோ பல்கலைக் கழகங்களிலோ இப்பகுதியை நிர்வகிப்ப தற்கும் உரிய வகையில் முதலீடு செய்வதற்கும் என தனியான கலைத்திட்டமொன்றை அல்லது சிறப்புக் கற்கையொன்றை அல்லது பாடப் பரப்பொன்றை உருவாக்குதல் குறித்து நாம் சிந்தித்ததுண்டா?

- அந்த வகையில், இந்நூல் பின்வரும் மையக் கருத்துகளில் சுழல்கிறது :பழக்கம், பரிச்சயம், இயந்திரத்தனமான இயக்கம் ஆகிய தூசு களைத் தட்டி தொழுகையை மீண்டும் கண்டடைவது எப்படி?
- 'கடமை' என்ற நிலையிலிருந்து 'உரிமை' என்ற நிலைக்கும், 'சுமை' என்ற நிலையிலிருந்து 'சுகம்' என்ற நிலைக்கும் தொழுகை மாற்றமடைவது எப்படி?
- தினசரி வாழ்வு, காலவோட்டம், பரிச்சயம் முதலிய 'வைரஸ்' கள் நமக்குள் பாழ்படுத்திய பாகங்களை தொழுகை எவ்வாறு மீள்நிரற் படுத்துகிறது?
- தொழுகை என்பது உலகம்-மறுமை ஆகிய இரண்டுக்குமான பாரிய முதலீட்டுத் திட்டமாகவும், இஸ்லாமிய நாகரிகத்தை மீள்நிலைப் படுத்துவதற்கான செயல்வரைவாகவும் அமைவது எங்ஙனம்?






*Fuzin Texts*
23/3 Market Road,
Dharga Town – 12090,
Sri Lanka.

ISBN 978-955-8398-42-5